S. மாணிக்கம் பிள்ளை,

வில்லேஜ் மாஜின்திரேட்,

சேலம் டவுன்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவகேதத்திர யாத்திரை விளக்கம்.

(இரண்டாம் பதிப்பு)

இஃது

சேலம் ஜில்லா, ஓசூர் தாலூகா,

ரெவினியூ இன்ஸ்பெக்டர்

தியாகதுருகம் சபாபதி பிள்ளையவர்கள்

குமாரர்

சேலம் டவுன் வில்லேஜ் மாஜிஸ்திரேட்

ஜ. மாணிக்கம் பிள்ளை அவர்களால்

இயற்றப்பட்டு

சேலம்

ஷண்முகவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

(1000-பிரதிகள்.)

1918

இதன் விலை] All Right Reserved [கூ 1-4-0

அட்டவணை.

எண்பர்		பக்கம்.
1.	விபூதி, ருத்திராக்ஷ மகிமை	1
2.	அனுஷ்டானவிதி	3
3.	சிவ தரிசன விதி	
4.	திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் சரித்திரம்	38
5.	திருநாவுக்கரசு நாயனார் சரித்திரம் ...	53
6.	சுந்தரமூர்த்தி நாயனார் சரித்திரம் ...	63
7.	திருப்பதிக்கோவை	88
8.	அறுபத்துமூன்று நாயன்மார்கள் உதயம்	101
9.	நவக்கிரக வணக்கம்	106
10.	அகஸ்தியர் தேவாரத்திரட்டின் வரலாறு, தேவாரத்திரட்டுள்பட...	119
11.	தேவாரத்திருப்பதிகம் பெற்ற 274-க்ஷேத்திரங்களின் வரிசைக் கிரமமாய் குறிப்பிட்டிருக்கும் ஸ்டேஷன்களிலிருந்து தரிசிக்க வேண்டிய விவரம்	187
12.	புட்பவிதி	213
13.	பிரம்மோற்சவ தத்துவார்த்தம்	225
14.	வரலக்ஷ்மி விரதம்	227
15.	விநாயக சதுர்த்தி விரதம்	230
16.	அநந்த விரதம்	235
17	சரஸ்வதி விரதம்	241
18.	கேதாரீஸ்வரர் விரதம்	245
19.	மதனத்துவாதசி விரதம்	250
20.	திருஞான சம்பந்தமூர்த்திநாயனாருளிச்செய்த பாசுரங்கள்	253
21.	திநாவுக்கரசுநாயனாருளிச்செய்த பாசுரங்கள்	258
22.	சுந்தரமூர்த்தி நாயனாருளிச்செய்த பாசுரங்கள்	262
23.	இராமலிங்கசுவாமிகள் திருவருட்பாவிற்சிலபாகம்	264
24.	இன்னும் சிலதிருஷ்டாந்தபுராணகதைகள் அடங்கியிருக்கின்றன.	
25.	திருவாசகம் (மாணிக்க சுவாமிகள் சரித்திரம்)	285

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவ கேஷத்திர யாத்திரை விளக்கம்.

முகவுரை.

நமது தேசமாகிய பரதகண்டத்திலே சிவபெருமான் திருக்கோயில்கொண்டு வீற்றிருந்தருளும் ஸ்தலங்கள் ஆயிரத் தெட்டென்று புராணங்களில் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளி லிப்போது தேவாரப்பதிகங்களை உடையனவாயிருக்கும் இருநூ றெழுபத்துநான்கு ஸ்தலங்களில் சோழநாட்டில் 190, நாடு நாட்டில் 2, பாண்டிநாட்டில் 14, மலைநாட்டில் 1, கொங்குநாட்டில் 7, நடு நாட்டில் 23, தொண்டைநாட்டில் 32, துளுவநாட்டில் 1, வடநா ட்டில் 5 ஆக 274-ம் உள்ளன. இத்தலங்களை (சென்னை) மதிரா சிலிருந்து புறப்பட்டு பிரதக்ஷணமாய் ஒவ்வொரு ஸ்டேஷனிலும் ஜங்ஷனிலுமிறங்கி சுவாமி தரிசனம் செய்துகொண்டு மறுபடி மதி ராசுக்கு வந்துசேர பல பிரதிகளைக்கொண்டும் நேரில் பார்வையிட் டும் யாத்திரை வாசகருக்கு உபயோகமாகும்பொருட்டே இச் "சிவ கேஷத்திர யாத்திரை விளக்கத்தை" இயற்றியிருப்பதால் அவைகளிலேதேனும் பாற்றுகளிருக்கின்றனவைகளைப் பக்தர்கள் க்ஷமையோடு திருத்தியும் அவைகளிற் சேர்க்கவேண்டியவை களைச் சேர்த்தும் இலிகிதமுல்யமாய்த் தெரிவிக்கும்பக்ஷத்தில் இர ண்டாவது பதிப்பிலவைகளைக் கிரமமாக வெளியிட ஏதுவாயிருப்பதைக் காத்துக்கொண்டிருக்கின்றனன்.

சேலம்
1915-ஆவது ஜனவரி 2உ
ஆனந்தவது கைமீ 19-உ

S. மாணிக்கம் பிள்ளை,
வில்லேஜ் மாஜிஸ்திரேட்,
சேலம் டவுன்.



சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிறப்புப்பாயிரம்.

சேலம் மேட்டுத்தெருவில் இருக்கும் சேலம் டி. மு. கோர்ட்டு வக்கீல் ஹர. ஷண்முக முதலியாரவர்களியற்றியது.

"மூர்த்திதலந் தீர்த்தம் முறையாற் றொடங்கினார்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கு"மென்ற திருவாக்கு
சார்த்தமிகப் பலிதமாய்ச் சபாபதி கவுத்துதித்த
சீர்த்தமிகு மாணிக்கவேள் சிவகூத்திரம் விளக்கினனே.

சேலம் செவ்வாய்ப்பேட்டையில் இருக்கும்
சேலம் டி. மு. கோர்ட்டு வக்கீல்
துரைசாமி பிள்ளை அவர்களியற்றியது.

நேரிசைவெண்பா.

1. சோர் சிவக்ஷேத்ரச் சேவை புரிவோர்க்குப்
பேரார் துணை நூலாம்பேசுங்கால்—சேராகும்
மார்க்க முதலான மற்ற விவரங்கள்
பார்க்கலா மிந்நூலின் பால்.

2. இத்தகைய நூலி யியற்றினே னுரென்னில்
நித்த னருள்பெற்ற நேர்மையால்—பத்திவளர்
சீலச் சபாபதி செய்தவத்தால் வந்துதித்தான்
சேலத் தலத்திலெனச் செப்பு.

3. 'மாணிக்கம்' பேர்பெற்றேன் மாநிலத்திற் சீருற்றேன்
ஆணிப்பொன் னம்பலத்தி லாடி தாள்—பேணிப்
பரவுங் குணமுடையோன் பாவலர்க்கு வேயன்
நிரமா மிவையென்னத் தேர்.

சேலம் சேர்ந்த அன்னதானப்பட்டியிலிருக்கும்

தமிழ்பண்டிதர்

கி. மு. மே. சி. கோவிந்த பிள்ளையவர்கள் இயற்றியது.

நிலமண்டில ஆசிரியப்பா.

திருவளர்மார்பன் தருமகன் படைத்த
சிங்கடலாடைப் பார்மிசை மீடச்
சிறப்புறு சைவ அறநெறித்திய்யத்
தெய்வத்தன்மை மெய்த்தவவண்மை
அப்பர் சுந்தார் ஒப்பில் சம்பந்தர்
மூவரருளிய தேவாரத் திருமுறை
பாடல்கள் பெற்ற ஆடல் செய் பரமன்
திருக்கோயிற் சென்று உருக்கமாய்நின்று
இறைவனை வணங்கி முறைப்படி பணிந்து
நேர்த்தியாய் நற்சிவ கோத்திர யாத்திரை
விளக்கமென் றோர்நூல் முழுக்கினுலகில்
மேழிக்கொடியுடை வேளாணற்குலத்தான்
சபாலீ சுரனருள் சபாபதி தவமே
உருவாயமைந்தவன் றருங்கொடையாளன்
ஆங்கிலந், தமிழும் பாங்குறத் தெளிந்தான்
வாணிச்சமூக மாணிக்கவேளே.

கொடிமாடச்செங்குன்றூர் எனுந் திருச்செங்கோடு

விவேகதிவாகரன் பத்திராதிபர்,

தீ. அ. முத்துசாமி கோனர் அவர்கள் இயற்றியது.

விருத்தம்.

அங்கமெங்கும் பாலறிவு மாவின்முலைக் கண்ணில்வெளி யாதல்போல
எங்குமிறை நிறைந்திடினு மிணைபில்தலத் தேகாண விலங்குமென்னப்
பொங்குமறை மொழியதனு லத்தலயாத் திரைவிளக்கம் புகன்ருன்சேலம்
கங்கைகுல சபாபதிமால் பெற்றெடுத்த மாணிக்கங் களிவுகூர்ந்தே.

சேலம் சுகவனபுரி

அழகிரிசாமி பிள்ளை அவர்களின் குமாரரும்
சேலம் ஷண்முகவிலாஸ அச்சுக்கூடத்தின்
புரொப்ரைட்டருமாகிய

அ. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் இயற்றியது.

(குளகம்.)

திங்களுஞ் கங்கை யணிமுடி பரமன்
நிசைதிசை சிரங்கரங் கொண்ட
மங்களங் கமழு மான்மிய தீர்த்த
மகிமைசேர் க்ஷேத்திரங் கொள்ள
தங்குத லிலாது சாலவே திரட்டித்
தந்தனன் மாந்தர்க ஞய்ய
நங்கடம் பெருமா னற்பத மனதி
ஞடொறுஞ் சிந்தைசெய் சால்பன்.

இன்னலி யகற்றி யின்புறச் செய்வா
னெழிலுற நற்றவம் புரிவான்
நன்னல மியற்றி நாடொறுங் கொடுக
ணலவையுரு தளிப்பவன் சேல
மன்னுற வாழ்வோன் சபாபதி பெற்ற
மைந்தன்சீ ரீகையிற் சிறந்தோன்
மன்னர்கே ரன்பன் மாணிக்க மென்னு
மருவிலா மாண்பின னவனே.

சிவமயம்.

சிவ கோத்திர யாத்திரை விளக்கம்,

காப்பு.

விநாயகர் துதி.

சத்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெய
கத்தியாகிய சொற்பொரு ணல்குக
சித்தியாணைதன் செய்ய பொற்பாதமே.

பரமசிவ வணக்கம்.

எழுசீரடியாசிரிய விருத்தம்.

அன்பெனும்பிடியு ளகப்படுமலே யன்பெனுங்குடில்புகுமாசே
யன்பெனும்வலைக்குட் படுபரம்பொருளே யன்பெனுங்கரத்தமரமுதே
யன்பெனுங்கடத்து ளடங்கிடுங்கடலே யன்பெனுமயிரொளிறிவே
யன்பெனமணுவுள் ளமைந்தபேரொளியே யன்புருவாம் பரசிவமே.

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவிய நீர்மலி வேணிய
னலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

ஸ்காநந்ஞ் செய்ய.

ஞன்றுவுலகமீனத்துமாஞர்தாமே
யூழிதோறூழியுயிர்த்தார்தாமே
நின்றுகியெங்குநிமிர்ந்தார்தாமே
நீர்வளிதீயாகாசமாஞர்தாமே
கொன்றுடுக்கூற்றையுதைத்தார்தாமே
கோலப்பழனையுடையார்தாமே
சென்றுடுதீர்த்தங்களாஞர்தாமே
திருவாலங்காடுறையுஞ்செல்வர்தாமே.

திருமூலர் திருமந்திரம்.

அறிவாரமரர்களாதிப்பிராணச்
செறிவாணுறைபதஞ்சென்றுவலங்கொண்
மறிவார்வினைக்கைவருபுனற்கங்கைப்
பொறியார்புனன்மூழ்கப்புண்ணியராமே.

விபூதி மகிமை, திருநீற்று மான்மிய

விருத்தம்.

சாதியினிற் றலையான தருமசீலர் தத்துவத்தி னெறியுணர்ந்தோர் தங்கள் கொள்கை, நீதியினிற் பிழையாது நெறியினிற்போர் நித்தநிய மத்துங்க முங்கி தன்னிற், பூதியினைப் புனையபா சனத்துக் கொண்டு புலியதளி னுடையானைப் போற்றி நீற்றை, யாதிவரு மும்மலமு மறுத்த வாய்மை யருமுனிவர் முழுவதுமெய் யணிவ ரன்றே.

வசனம்

முழுநீறு பூசிய முனிவர் கற்பம், அநுகற்பம், உபகற்பம் என மூவகைத் திருநீற்றையாவது நித்தியாக்கினி நீற்றையாவது உள்ளன்போடு மும்மலங் கழியச் சிவபிரானுக்கெதிரிலும், அக்கினிக்கெதிரிலும், வழியிலும், குருவுக்கெதிரிலும், அசுத்தமான நிலத்திலும் அணியாது, உத்தூளனமாகவும், திரிபுண்டரமாகவும், பிறை வடிவமாகவும் வட்டவடிவமாகவும், ஆகமவிதிப்படி அணிந்து பூசிக்கின்றவர்களாம்.

உருத்திராக்ஷ மான்மியம்.

1-முகமுள்ளது சிவ சொரூபம் இதை யணிந்தால், ஹத்தி தோஷ நீங்கும். 2-முகமுள்ளது சிவ சக்தி, இதை யணிந்தால் பல கோஹத்தி நீங்கும். 3-முகமுள்ளது அக்கினி சொரூபம் இதை யணிந்தால் ஸ்திரீஹத்தி நீங்கும். 4-முகமுள்ளது பிர்ம்ம தேவசொரூபம் இதையணிந்தால் தியகரகத்தினின்று நீக்கும் 5-முகமுள்ளது கால ருத்திர சொரூபம் இதை யணிந்தால் தகாதபுசிப்பும் தகாத புணர்ச்சி தோஷத்தையும் போக்கும். 6-முகமுள்ளது சுப்பிரமணிய சொரூபம் இதை யணிந்தால் ப்ரூண (கற்ப) ஹத்தி நீக்கும். 7-முகமுள்ளது ஆதிசேஷ சொரூபம் இதை யணிந்தால் கோஹத்தியையும், போர்க் களக் கொலை பாதகத்தையு நீக்கும். 8-முகமுள்ளது விநாயகர் சொரூபம் இதை யணிந்தால் பொருள்

தான முதலாகிய தானம் வாங்குதலாலான பாபத்தையும் பிறர்நைச் சோறு உண்பதால் நேரும் பாபத்தையும் பிட்சைகொடாத பாபத் தையும் நீக்கும். 9-முகமுள்ளது வயிரவ சொரூபம் இதை யணிந் தால் விஷ ஜெந்துக்களைக் கொன்ற பாபத்தை நீக்கும். 10-முகமு ள்ளது விஷ்ணு சொரூபம் இதையணிந்தால் நவக்கிரக தோஷம், நட்சத்திரதோஷம், பைசாசம், பிரம்மராட்சதர் முதலானவர்க ளால் உண்டாகும் பயம் முதலிய குற்றங்களை நீக்கும். 11-முக முள்ளது ஏகாதச ருத்திர சொரூபம் இதையணிந்தால் அஸ்வமே தயாக பலனும் லட்சூடிங் கோதானபலனும் கொடுக்கும். 12 முக முள்ளது துவாதசாதித்ய சொரூபம் இதையணிந்தால் அஸ்வமே தம், பசுமேதம், பொன், மேரு தான பலனைக் கொடுக்கும். 13-முகமுள்ளது இதை யணிந்தால் காமமல்லாத இஷ்டகாமியங்க ளையும், ரசவாத பொன்னையும், தாய் தந்தை சகோதரர் இவர்களுக் குச் சதி செய்த பாதகத்தையும் நீக்கும். 14-முகமுள்ளது சிவம், சத்தி என்று இரண்டு சொரூபம்; இதை யணிந்தால் முனி வர்களும், தேவர்களும், மற்ற யாவரும் ஆசீர்வாதம் செய்யும்படி யான பலனைக் கொடுத்து அழியாத மோட்சத்தைத் தரும்.

உருத்திராட்சம் தரிக்கவேண்டிய ஸ்தானமும் பலனும்.

சிரசா ரூறு கண்டகா லெட்டு சிகையிலொன்று
திரமார் ஐம்பது கரத்திலீ ரெட்டு சோமணிக்கட்
டிரண்டாறுந் தாழ்வட மீரைம்ப தோடெட் டிப்படியாத்
தரித்துச் சங்கரன் ருளினை தியானித்துத் தலைகொளலே.

சிகையில் ஒன்றும், சிரசில் 36-ம், கண்டத்தில் 32-ம், மார் பில் 50-ம், கரத்தில் 16-ம், கரத்தின் மணிக்கட்டில் 12-ம், தாழ் வடத்தில் 108-ம், தரித்து உமாமகேஸ்வரனைத் தியானித்து யா தொரு ஜீவராசிகளையும் மிதிக்காமல் ஓரடி எடுத்துவைக்கில் ஒரு அஸ்வமேதயாக பலன் உண்டாகும். குமியில் ருத்திராட்சம் அணியில் கோடி பலனும் காதிலணியில் ஒன்பதுகோடி பலனும் கண்டத்திலணியில் ஆயிரங் கோடி பலனுமுண்டாகும்.

யாரும் முடிவுகாலத்தில், அன்புடன் உருத்திராட்சதாரணம் செய்வார்களாகில் நமவாதனையினின்று நீங்கி மறுபிறப்பின்றி மோக்ஷமடைவர்.

அனுட்டானஞ்செய்ய.

திருநீற்றுப்பதிகம். பண்-காந்தாரம்.

மந்திரமாவதுநீறு வானவர்மேலதுநீறு
சுந்தரமாவதுநீறு துதிக்கப்படிவதுநீறு
தந்திரமாவதுநீறு சமயத்திலுள்ளதுநீறு
செந்துவர்வாயுமைபங்கன் றிருவாலவாயான்றிருநீறே

தனித்திருநேரிசை.

சந்திரன்சடையில்வைத்த சங்கரன்சாமவேதி
யந்தரத்தமரர் பெம்மானனல்வெள்ளூர்தியான்றன்
மந்திரமச்சிவாயவாக நீறணியப் பெற்றால்
வெந்தறும்வினையுநோயும் வெவ்வழல்விறகிட்டன்றே

திருவிருத்தம்.

கருவாய்க்கிடந்துன்கழலே நினையுங்கருத்துடையேன்
உருவாய்த்தெரிந்துன்றனமம் பயின்றேனுனதருளாற்
றிருவாய்ப்பொலியச்சிவாய நமவென்றுநீறணிந்தேன்
றருவாய்சிவகதிநீபா னிரிப்புலியூரானே.

ஓ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவதரிசனவிதி.

1. ஆலயத்துக்குட் சென்றவுடனே துவஜபலி பீடத்தண்டை வடமேற்குமூலையாய் சாஷ்டாங்க தண்டம் செய்து சிரசும், நெஞ்சும் பூமியிற் படும்படியா யமர்ந்திருந்தபடியே முன்னே வலது கையையும் பின்பு இடது கையையும் சிரசின்பக்கமாய் நீட்டி கீழ் படியவைத்துப் பிறகு அதேமுறையில் கைகளைப் பின்புறம் நீட்டித்

இடையோடு சேரவைத்தும் அடியார் திருவடி தூளதம் இரு புஜத்தில் படும்படியாகப் படியவைத்தும் வலதுகாதை முன்னும் இடது காதைப் பின்னும் பூமியிற் பொருந்தவைத்தும் இப்படிப் பணிந்திருப்பதில் இரண்டு முழந்தாள், நெற்றி, பூமியில் ஏககாலத்தில் படும்படியாய் வைத்தும், இவ்வாறு சாஷ்டாங்க தண்டம் செய்தவுடன், எழுந்து காமியார்த்தம் கோருவோர்கள் ஆலயத்துக்கு வலதுபக்கமாகவும், மோக்ஷார்த்தம் கோருபவர்கள் இடது பக்கமாகவும், இரண்டும் கோருகிறவர்கள் மேற்கூறிய இரண்டு விதமாகவும் பிரகாரம் வந்து, அப்படி வருவதில் பஞ்சாட்சரத்தை மனதிலேயே தியானித்துக்கொண்டு மூன்று தடவைமுதல் 7-தடவைவரையில் இம் மாதிரி பிரகாரம் வந்தவுடன் 1. கணபதி 2. கந்தி 3. திரும்பக்கணபதி 4. மூலலிங்கம் 5. நடராஜமூர்த்தி 6 சோமாஸ்கந்தர் 7 மூலஸ்தானம் (ஸ்தூபி) 8. மூலஅம்மன் 9. சண்டிகேஸ்வரர் 10. வயிரவர் இந்த வரிசைப்படிக்கே தரிசித்துவரவேண்டுமென்று ஏற்பட்டிருக்கின்றது.

2. அப்படி வருவதில் சங்கராந்தி புண்ணிய காலத்திலும், உச்சிப்பொழுதுக்கு மேற்பட்டும், சூரிய கிரகணத்தன்றும், சாஷ்டாங்க தண்டமின்றி, நின்றபடியே அஞ்சலி கூப்பித் தரிசிக்கவேண்டும். மற்ற காலங்களிலெல்லாம் மேற்கூறிய பணிபீடத்தண்டை மேற்குமுகமாய் நின்று சாஷ்டாங்கமாய்ப் படிந்து எழுந்து காமியார்த்தம் கோருவோர்கள் ஆலயத்திற்கு வலதுபக்கமாகவும் மோக்ஷார்த்தம் கோருகிறவர்கள் இடதுபக்கமாகவும் இரண்டும் கோருகிறவர்கள் இரண்டுவிதமாகவும் பிரகாரம் வந்து அந்தப்படி வருவதில் பஞ்சாட்சரத்தை மனதிலே தியானித்துக் கொண்டு மூன்றுதடவை முதல் ஏழுதடவை யிம்மாதிரி பிரகாரம் வந்தவுடன் மேற்கூறிய மூர்த்திகளே மேற்கூறிய வரிசைக் கிரமத்தில் தரிசிக்கவேண்டியதென்று விதிகளால் ஏற்பட்டிருக்கின்றன.

ஜபஞ்செய்ய.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருமுறை 3-ல்
நமச்சிவாயத்திருப்பதிகம்-பண்-கௌசிகம்.

காதலாகிக்கசிந்து கண்ணீர்மல்கி
யோதுவார்தமை நன்னெறிக்குய்ப்பது
வேதநான்கினு மெய்ப்பொருளாவது
நாதநாமநமச்சிவாயவே.

திருநாவுக்கரசு சுவாமிகள் திருமுறை 5-ல்
பலவகைத் திருத்தாண்டகம்.

தந்தையார்தாயாருடன்பிறந்தார்
தாரமார்புத்திரர்தாந்தாமாரே
வந்தவாறெங்ஙனே போமாறேதோ
மாயமாமிதற்கேதுமகிழவேண்டா
சிந்தையீருமக்கொன்று சொல்லக்கேண்மின்
றிகழ்மதியும் வாளரவுந்திளைக்குஞ்சென்னி
யெந்தையார் திருநாமநமச்சிவாய
வென்றெழுவார்க்கிருவிசும்பிலிருக்கலாமே.

திருமுறை 2-ல் திருநல்லம் பண்-திருக்குறுந்தொகை.

அல்லலாகவைம் பூதங்க ளாட்டினும்
வல்லவாறு சிவாயநமவென்று
நல்லமேவிய நாத னடிதொழ
வெல்லவந்த வினைப்பகைவீடுமே.

பூசைசெய்ய ஆரம்பிப்பதற்குமுன் தோத்திரஞ்செய்ய.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருமுறை 1-ல்
திருப்பிரமபுரம் பண்-நட்டபாடை.

தோடுடையசெவியன்விடையேறியோர்தூவெண்மதிசூடிக்
காடுடையசுடலைப்பொடிப்பூசியென்னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமலரான்முனைநாள்பணிந்தேத்தவருள்செய்த
பீடுடையபிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே.

திருநாவுக்கரசு சுவாமிகள் திருமுறை 4-ல்.
திருவதிகைவீரட்டானம் பண்-கொல்லி

கூற்றாயினவாறுவிலக்குகிலீர் கொடுமைபலசெய்தனநானறியே
னேற்றாயடிக்கேயிரவும்பகலும்பிரியாதுவணங்குவனெப்பொழுதுந்
தோற்றாதென்வயி னினைகம்படியேகுடரோடுதொடக்கிமுடக்கியிட
வாற்றேனடியேனதிகைக்கெடிலவீரட்டானத்துறையம்மானே.

சுந்தரமூர்த்திசுவாமிகள் திருமுறையில்.
திருவெண்ணெய்நல்லூர் பண்-இந்தளம்.

பித்தாபிறைசூடி பெருமானேயருளாளா
வெத்தான்மறவாதேநினைக் கின்றேன்மனத்துன்னே
வைத்தாய்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளத்தாவுனக்காளாயினி யல்லேனெனலாமே.

திருநாவுக்கரசு சுவாமிகள் திருமுறை 5 ல்.
திருவாலவாய்த்திருத்தாண்டகம்.

முனைத்தானையெல்லார்க்குமுன்னேதோன்றி
முதிருஞ்சடைமுடிமேன் முகிழ்வெண்டிங்கள்
வனைத்தானவல்லசுரர்புரங்கண்மூன்றும்
வரைசிலையாவாசுகிமாநாணுக்கோத்துத்
தனைத்தானைச்சுடுசரத்தாற்றுவளரூரத்
தாமுத்தவெண்முறுவலுமையோடாடித்
தினைத்தானைத்தென்கூடற்றிருவாலவாய்ச்
சிவனடியேசிந்திக்கப்பெற்றேனானே.

பூதசுத்திசெய்ய.

ஷே திருமுறை 3ல் திருக்கற்குடி திருத்தாண்டகம்.

மண்ணதனிலைந்தைமாரிஞான்கை
வயங்கெரியின்மூன்றைமாருதத்திரண்டை
விண்ணதனிலொன்றைவிரிகதிரைத்
தண்மதியத்தாரகைகடம்மின்மிக்க

வெண்ணதனிலெழுத்தையேழிசையைக்காம
னெழிலழியவெரியுமிழ்ந்தவிலையாநெற்றிக்
கண்ணவனைக்கற்குடியில் விழுமியானைக்
கற்பகத்தைக்கண்ணுரக்கண்டேனனே.

ஷெ திருமுறை 1ல் சிவனெனுமோசை பண் பியக்தைக்காந்தாரம்

விரிகதிர்காயிறல்லர்மதியல்லர் வேதவிதியல்லர்விண்ணுநிலனுந்
திரிதருவாயுவல்லர்செறிதீயுமல்லர்தெளிநீருமல்லர்தெரியி
லரிதருகண்ணியாளோயொருபாகமாகவருள்காரணத்தில்வருவா
ரெரியரவாரமார்வரிமையாருமல்லரிமைப்பாருமல்லரிவரே

உட்பூசைசெய்ய.

ஷெ திருமுறை 1ல் தனித்திருநேரிசை.

காயமேகோயிலாகக் கடிமன மடிமையாக
வாய்மையேதூய்மையாகமனமணியிலிங்கமாக
நேயமேகெய்யும்பாலாநிறையீரமையவாட்டிப்
பூசனையீசனார்க்குப்போற்றவிக்காட்டினேமே.

ஷெ திருமுறை 2ல் தனித்திருக்குறுந்தொகை.

தெள்ளத்தேறித்தெளிந்துதித்திப்பதோ
ருள்ளத்தேறலமுதவொளிவெளி
கள்ளத்தேன்கடியேன்கவலைக்கடல்
வெள்ளத்தேனுக்கெவ்வாறுவிளைந்ததே.

ஷெ திருமுறை 2ல் கோயிற்றிருக்குறுந்தொகை.

பனைக்கைமும்மதவேழமுரித்தவ
னினைப்பவாமனங்கோயிலாக்கொண்டவ
னனைத்தும்வேடமாமம்பலக்கூத்தனைத்
தினைத்தனைப்பொழுதும்மறந்துய்வனே.

6வது திருமுறை 1ல் தனித்திருவேரிசை.

உடம்பெனுமனையகத்துளுள்ளமதகளியாக
மடம்படுமுணர்வெய்யட்டியுயிரெனுந்திரிமயக்கி
யிடம்படுஞானத்தீயாலெரிகொளவிருந்துநோக்கிற்
கடம்பமர்காஞ்தாதைகழலடிகாணலாமே.

6வது திருமுறை 1ல் கோயில்திருவிருத்தம் பண் கொல்லி.

முடிகொண்டமத்தமுமுக்கண்ணினோக்குமுறுவலிப்புந்
துடிகொண்டகையுந்துதைந்தவெண்ணீறுஞ்சரிகுழலாள்
படிகொண்டபாகமும்பாய்புலித்தோலுமென்பாலிலெஞ்சிற்
குடிகொண்டவாதில்லையம்பலக்கூத்தன்குரைகழலே.

துவாரபூசைசெய்ய.

சுந்தரமூர்த்திசுவாமிகள்திருமுறையில்

திருப்புன்கூர்-பண்-தக்கேசி.

நற்றமிழ்வல்லஞானசம்பந்த
ஞானியுக்கரையனாளப்போவானுங்
கற்றசூதனற்சாக்கியன்சிலந்தி
கண்ணப்பன்கணம்புல்லனென்றிவர்கள்
குற்றஞ்செய்யினுங்குணமெனக்கருதுங்
கொள்கைகண்டுநின்குரைகழலடைந்தேன்
பொற்றிரண்பணிக்கமலங்கண்மலரும்
பொய்கைசூழ்திருப்புன்கூருளானே.

மூவெயில்செற்றஞான்றுய்ந்தமூவரி
லிருவர்நின்றிருக்கோயிலின்வாய்தல்
காவலாளரென்றேயியபின்னை
யொருவனீகரிகாடரங்காக
மானேநோக்கியோர்மாநடமகிழ
மணிமுழாமுழக்கவருள்செய்த
தேவதேவநின்றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே.

சிவோகம் பாவனைசெய்ய.

ஷெ. திருமுறையில்-திருவொற்றியூர்-பண்-தக்கேசி.

வழித்தலைப்படுவான்முயல்கின்றேன
னுன்னைப்போலென்னைப்பாவிக்கமாட்டேன்
சுழித்தலைப்பட்டநீரதுபோலச்
சுழல்கின்றேனன்சுழல்நின்றதென்னுள்ளங்
கழித்தலைப்பட்டகாயதுபோல
வொருவண்கோல்பற்றிக்கறவுறுமிழுக்கை
யொழித்தருளாயினைசெய்யா
யொற்றியூரெனுமூருறைவானே.

திருநாவுக்கரசுசுவாமிகள் திருமுறை 1-ல்
கோயிற்றிருகேரிசை-பண்-கொல்லி.

பத்தனுப்பாடமாட்டேன் பரமனே பரமயோகி
யெத்தினுற்பத்திசெய்கேனெண்ணிலீயிழவேண்டாம்
முத்தனேமுதல்வாதில்லையம்பலத்தாடுகின்ற
அத்தாவுன்னுடல்காண்பானடியனேனன்வந்தவாறே.

திரவியசுத்திசெய்ய.

ஷெ. திருமுறை 3-ல் நின்றதிருத்தாண்டகம்.

ஆவாகியாவினிலைந்துமாகியரிவாகியழலாகியவியுமாகி
காவாகிகாவுக்கோருரைபுமாகிவதனையேவதத்திலுள்ளானுகப்
பூவாகிப்பூவுக்கோர்நாற்றமாகிப்புக்குளால்வாசமாகிநின்றுனுகத்
தேவாகித்தேவர்முதலுமாகிச்செழுஞ்சுடராய்ச்சென்றடி.னைகின்ற
[வாறே.

மந்திரசுத்திசெய்ய.

ஷெ. திருமுறை 3-ல் திருப்புள்ளிருக்குவேளூர்
திருத்தாண்டகம்.

பேராயிரம்பரவிவாணேரேத்தும்
பெம்மானேப்பிரிவிலாவடியார்க்கென்றும்
வாராதசெல்வம்வருவிப்பானை
மந்திரமுந்தந்திரமுமருந்துமாகித்

தீராநோய்தீர்த்தருளவல்லான்றண்ணீர்த்
திரிபுரங்கடீயெழுத்திண்சிலைகைக்கொண்ட
போராணைப்புள்ளிருக்கும்வேளூராளைப்
போற்றுதேயாற்றாள்போக்கினேனே.

பெட்டகக்கோயில்திறக்க.

ஷி திருமுறை 2-ல் திருமறைக்காடு திருக்குறுந்தொகை.

பண்ணினேர்மொழிபாலுமைபங்கரோ
மண்ணினார்வலஞ்செய்மறைக்காடரோ
கண்ணினாலுமைக்காணக்கதவினைத்
திண்ணமாகத்திறந்தருள்செய்ம்மினே.

*பெட்டகக்கோயிலினின்றும்
மூர்த்தியைஎழுந்தருளப்பண்ண.

ஷி திருமுறை 3-ல் திருப்புள்ளிருக்குவேளூர்
திருத்தாண்டகம்.

ஆண்டானேயடியேனையாளக்கொண்டு
வடியோடுமுடியபன்மாலறியாவண்ணம்
நீண்டானேநெடுங்களமாகநான்றன்னை
நேமிவான்படையானீரூரேயோலுங்கும்
நிண்டாணிக்கேதாரமேயினிக்
கேடிலியைக்கிளர்பொழிலாரூரேயோடென்பு
பூண்டாணிப்புள்ளிருக்குவேளூராளைப்
போற்றுதேயாற்றாள்போக்கினேனே.

வஸ்நானவேதிகையில்
மூர்த்தியை யெழுந்தருளச்செய்தபின் சொல்ல.

ஷி திருமுறை 2-ல்
கடிவாய்க்கரைத்திருப்புத்தூர் திருக்குறுந்தொகை.

பந்தபாசமறுத்தெனையாட்கொண்ட
மைந்தனம்மணவாளனமாமலர்க்
கந்தநீர்க்கடிவாய்க்கரைத்தென்புத்தூர்
எந்தைதீசனீக்கண்டினிதாயிற்றே.

*பெட்டகம் பூசைப்பெட்டி.

இலிங்கசுத்திசெய்ய.

ஷை திருமுறை 8-ல் நின்றதிருத்தாண்டகம்.

இருநிலனாய்த்தீயாகிநீருமாகி
யியமானனெறியுங்காற்றுமாகி
யருநிலையதிங்களாய்ஞாயிருகி
யாகாசமாயட்டமூர்த்தியாகிப்
பெருகலமுங்குற்றமும்பெண்ணுமாணும்
பிறருருவுந்தம்முருவுந்தாமேயாகி
நெருநலையாயின்றுநாளையாகி
நிமிர்புன்சடையடிகணின்றவாறே.

அஷ்டபுஷ்பஞ்சாத்த.

ஷை திருமுறை 2-ல் திருமறைக்காடு திருக்குலகிதாளை.

அட்டமாமலர்சூடியடம்பொடு
வட்டப்புன்சடைமாமறைக்காடரோ
நட்டமாடியுகான்மறைபாடியு
மிட்டமாகவிருக்குமிடமதே.

தூபதீபம்.

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் திருமுறை 3-ல்
திருச்சண்பைநகர் திருவிராகம் பண் சாதாரி.

எந்தமதுசிந்தைபிரியாதபெருமானெனவிறைஞ்சியிமையோர்
வந்துதுதிசெய்யவளர்தீபமொடுதூபமலிவாய்மையதனு
லந்தியமர்சந்திபலவர்ச்சனைகள்செய்யவமர்கின்றவழகன்
சந்தமலிகொந்தளகண்மாதினெடுமேவுபதிசண்பைநகரே.

எண்ணெய்க்காப்பு.

ஷை திருமுறை 3-ல் கோயில் பண் காந்தாரபஞ்சமம்.

ஆடினுப்நறுநெய்யொடுபால்தயிர்அந்தணர்பிரியாதசிற்றம்பல
நாடினுயிடமாநறுங்கொன்றைகையந்தவனே [ண்டிங்கள்
பாடினுய்மறையோடுபல்கீதமும்பல்சடைப்பணிகால்கதிர்வில
சூடினுயருளாய்சுருக்கவெங்தொல்வினையே,

நெல்லிக்காப்பு.

திருநாவுக்கரசுசுவாமிகள் திருமுறை 4-ல்
திருநீலக்குடி- திருக்குறுந்தொகை.

செய்யமேனியன் றேமெழுகுபால தையிர்
நெய்யதாடியநீலக்குடியமர்ன்
மையலாய்மறவாமனத்தார்க்கெலா
மெய்யில்ஆமலகக்கனியொக்குமே.

பஞ்சகவ்விய அபிஷேகம்.

ஒடி திருமுறை 4-ல் பாலுகாசந்திருக்குறுந்தொகை.

பாலுமும் பழிப்பற்றறவேண்டுவீர்
ஆவினிலைஞ்சுகந்தாடுமவன்கழல
மேவராய் மிகவும் மகிழ்ந்துள்குமின்
காவலரான் கலந்தருள் செய்யுமே.

பஞ்சாமிர்த அபிஷேகம்.

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் திருமுறை
திருச்செங்காட்டங்குடி-பண்-பழந்தக்கராகம்.

பாலினானறுநெய்யாற் பழத்தினாற் பயின்றாட்டி
நாலினான் மணமாலைகொணர்ந்தடியார் புரிந்தேத்தச்
சேலினார்வயல்புடைசூழ்செங்காட்டங்குடியதனுட்
காலினாற்கூற்றுதைத்தான்கணபதீச்சரத்தானே.

நெய்யபிஷேகம்.

திருநாவுக்கரசுசுவாமிகள் திருமுறை 5-ல்
திருப்புகலூர் திருத்தாண்டகம்.

நெய்யாடி நின்மலனே நீலகண்டா
நிலாறவுடையாய் மறைவல்லாய் நீதியானே
மையாடு கண்மடவாள் பாகத்தானே
மான்மேறு வுடையாய் மகிழ்ந்து நின்றாய்

செய்யாடு கூவிளங்கொன்றைமாலை
தெண்ணடடியேனுனிட்டுக்கூறிநின்று
பொய்யாதசேவடிக்கேபோதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே

பாலபிஷேகம்.

மெட்டி திருமுறை 2-ல் திருவெண்காடு திருக்குறுந்தொகை.

பாலையாடுவர் பன்முறையோதுவர்
சேலையாடியகண்ணுமைபங்கனர்
வேலையார்விடமுண்டவெண்காடாக்கு
மாலையாவதுமாண்டவரங்கமே.

தயிரபிஷேகம்.

சுந்தரமூர்த்திசுவாமிகள் திருமுறையில்
திருவோணகாந்தன்றளி—பண்—இந்தளம்.

நெய்யும்பாலுந்தயிருங்கொண்டுநித்தம்பூசனைசெய்யலுற்றார்
கையிலொன்றுங்காணமில்லைக்கழலடிதொழுதுய்யினல்லா
லெவர்கொண்டிங்காட்டவாடியாழ்குழிபட்டழுந்துவேனுக்
குய்யுமாறன்றருளிச்செய்யீரோணகாந்தன்றளியுளீரே.

தேனபிஷேகம்.

மெட்டி திருமுறையில் திருவாவடுதுறை பண்—தக்கேசி.

வானநாடனேவழித்துணைமருந்தே
மாசிலாமணியேமறைப்பொருளே
தேனுமாவெயிறுமையுமென்பு
மீடிதாங்கியமார்புடையானே
தேனெய்பால்தயிராட்டுகந்தானே
தேவனேதிருவாவடுதுறையு
ளானேயெனையஞ்சலென்றருள்செ
யாரெனக்குறவமார்களேமே..

கருப்பஞ்சாறபிஷேகம்.

திருநாவுக்கரசுசுவாமிகள் திருமுறை 3-ல்
திருவீழிமிழலை திருத்தாண்டகம்.

ஆலைப்படுகரும்பின்சாறுபோல
வண்ணிக்குமஞ்செழுத்தினுமத்தான்காண்
சீலமுடையடியார் சிக்கெனயான்காண்
டிரிபுரமூன்றெரிபடுத்தசிலையினுண்காண்
பாலினெடுதயிர்நறுநெய்யாடினுன்காண்
பண்டரங்கவேடன்காண்பலிதேர்வான்காண்
வேலைவிடமுண்டமிடற்றினுன்காண்
விண்ணிழிதன்வீழிமிழலையானே.

பல்கனிச்சாறபிஷேகம்.

ஷே. திருமுறை 2-ல் திருவிலடமருதூர் திருக்குறுந்தொகை.

கனியிலுங்கட்டிபட்டகரும்பிலும்
பனிமலர்க்குழற்பாலவாகல்லாரிலுந்
தனிமுடிகவித்தாளுமரசிலும்
இனியன்றன்னடைந்தார்க்கிலடமருதனே

இளனீரபிஷேகம்.

ஷே. திருமுலறை 3-ல் திருவீழிமிழலை திருத்தாண்டகம்

நெய்யினெடுபாலிளநீராடினுன்கா
ணித்தன்மணவாளனெனநிற்கின்றுன்காண்
கையிண்மழுவாளொடுமானேந்தினுன்காண்
காலனுயிர்காலாற்கழுவித்தான்காண்
செய்யதிருமேனிவெண்ணீற்றினுன்காண்
செஞ்சடைமேல்வெண்மதியஞ்சேர்த்தினுன்காண்
வெய்யகனல்வீசியாட்டாடினுன்காண்
விண்ணிழிதன்வீழிமிழலையானே

சந்தனக்குழம்பபிஷேகம்.

ஷி திருமுறை 1-ல் தனித்திருகேரிசை.

தொண்டனேன்பட்டதென்னே தூயகாவிரியின்னீர்
கொண்டிருக்கோதியாட்டிச்சுக்குமச்குழப்புசாத்தி
யிண்டைகொண்டேறநோக்கியீசனெம்பிராணைக்
கண்டனேக்கண்டிராதேகாலத்தைக்கழித்தவாறே

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் திருமுறை 3-ல் திருக்கானப்பேர் பண்-கொல்லி.

வாவிவாய்த்தங்கியதுண்கிறைவண்டினங்
சாவிவாய்ப்பண்செயுங்கானப்பேரண்ணலே
நாவிவாய்ச்சாந்துளும்பூவுளுஞானநீர்
தூவிவாய்ப்பெய்துநின்றுட்டுவார்தொண்டரே.

தூபம்.

ஷி திருமுறை 1-ல் திருச்செங்காட்டங்குடி பண் பழந்தக்கராகம்.

தொங்கலுங்கமழ்சாந்துமகிற்புகையுந்தொண்டர்கொண்
டெங்கையாற்றொழுதேத்தவருச்சனைகன்றருள்செய்தான்
செங்கயல்பாய்வயலுத்தசெங்காட்டங்குடியதனுட்
கங்கைசேர்வார்சடையான்கணபதீச்சரத்தானே.

சுத்தஜல அபிஷேகம்.

ஷி திருமுறை 1-ல் திருவிடைமருதூர் பண் தக்கராகம்.

தடங்கொண்ட தோர்தாமரைப்பொன்முடிதன்மேற்
குடங்கொண்டடியார்குளிர்நீர்சமந்தாட்டப்
படங்கொண்டதோர்பாம்பரையார்த்தபரம
னிடங்கொண்டிருந்தான்றனிடைமருதீதோ.

மூர்த்தியைப்பீடத்திலெழுந்தருளப்பண்ணை.

ஷை திருமுறை 2ல் திருப்புள்ளிருக்கும்வேளூர் பண்-சீகாமரம்.

கள்ளார்ந்தபூங்கொன்றைமதமத்தக்கங்கைதிங்கள்
முள்ளார்ந்தசடைமுடியெம்பெருமானுறைபுகிடம்
தள்ளாயம்சம்பாதிசடாயென்பார்தாமிருவர்
புள்ளாலுர்க்கலாயனிடம்புள்ளிருக்குவேளூரே.

ஆவாகனஞ்செய்யுட.

திருநாவுக்கரசுசுவாமிகள் திருமுறை 2-ல் சித்தத்தொகை திருக்குறுந்தொகை.

அண்டமாரிருளுநிகடந்தும்பர்
உண்டுபோலுமோரொண்சுடரச்சுடர்
கண்டிங்காரறிவாரறிவாரெலாம்
வெண்டிங்கட்கண்ணிவேதியனென்பரே.

ஷை திருமுறை 2-ல் திருஇன்னம்பர் திருக்குறுந்தொகை.

ஏன்னிலாருமெனக்கினியாரில்லை
யென்னிலுமினியானொருவன்னுளன்
என்னுளேயுயிர்ப்பாய்ப்புறம்போந்துபுக்
கென்னுளேநிற்குமின்னம்பரீசனே.

சிவதருமோத்தரம் பரிகாரவியல் 89-ம் திருவிருத்தம்.

உச்சிமுகமீசானமொளிதெளியபளிங்கே
யுத்தரபூருவதிசையைநோக்கியுறுமுகங்தே
கிச்சயித்தமுகத்தின்கிழ்ப்பூர்வதிசைநோக்கி
நிகழுமுகந்தற்புருடங்கோங்கலர்போனிறமே
யச்சுறுத்தமகோரமுகமறக்கரிதுகராள
மவிழ்தாடிவலக்தேளிற்றென்னேக்கியமருஞ்
செச்சைநிறத்தெரிவைமுகமிடத்தோண்மேல்வாமஞ்
சிறுபுறத்தின்முகஞ்சத்தியோசாதத்திகழ்பால்.

அர்க்கியங்கொடுக்க.

திருஞான சம்பக்தமூர்த்திசுவாமிகள் திருமுறை 2-ல்

திருநனிபள்ளி பண்–பியந்தைக்காந்தாரம்.

தோடொரு காதிலங்குசுரிசங்கநின்றுபுரளக்
காடிடமாகநின்றுகளைதிமெங்கையிடமாயகாதனகர்தான்
வீடினையுவார்கள்விதியென்றுசென்றுவெறிநீர்தெளிப்பவிரலா
னூடனுதிசெம்மையொளிவெள்ளமாருகனிபள்ளிபோலுகாமர்காள்.

கோவணம்பாவனைசாத்த.

ஷை திருமுறை 3-ல் திருக்கொள்ளிக்காடு பண்–காந்தாரபஞ்சமம

பாவணமேவுசொன்மாலையிற்பல
நாவணங்கொல்லையினவின்றசெங்கைய
ராவணங்கொண்டெலையாள்வாயினுங்
கோவணங்கொள்கையர்கொள்ளிக்காடரே.

கீள்பாவனைசாத்த.

திருநாவுக்காசுசுவாமிகள் திருமுறை 2-ல்

திருப்பராய்த்துறை திருக்குறுந்தொகை.

பட்டதெற்றியர்பான்மதிக்கிற்றினர்
கட்டமாடிவர்கள்ளிருளேமழுஞ்
சிட்டனூர்தென்பராய்த்துறைச்செல்வனூர்
இட்டமாயிருப்பாரையறிவரே.

பரிவட்டஞ்சாத்த.

ஷை திருமுறை 1-ல் திருப்பருப்பதம் திருநேரிசை.

கட்டிட்டதலைகையேந்திக்கனலெரியாடிச்சீறிச்
சுட்டிட்டநீறுபூசிச்சுடுபிணைக்காடராகி
விட்டிட்டவேட்கையார்க்குவேறிருந்தருள்கள்செய்து
பட்டிட்டவுடையராகிப்பருப்பதநோக்கினாரே.

சந்தனஞ்சாத்த.

7வது திருமுறை 3-ல் திருக்கீழ்வேளூர் திருத்தாண்டகம்.

ஆனாவடியவர்கட்கன்பன்றன்னை
யானஞ்சுமாடியைகானபயப்புக்க
தானாகீனத்தன்னெப்பாரில்லாதானைச்
சந்தனமுங்குமமுஞ்சாந்துந்தோய்ந்த
தேனாகீனத்தேதாளாதமுத்தெனாப்பானைத்
தூவெளுத்தகோவணத்தையாயிலார்த்த
கீளாகீனக்கீழ்வேளூராளுங்கோவைக்
கேடிலியையாமெவர்கேடிலாமே.

திருவாபரணஞ்சாத்த.

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் திருமுறை 2-ல்
திருக்கைச்சினம் பண்-சீகாமரம்.

மங்கையோர்கூறுடையான்மன்னுமறைபயின்றான்
அங்கையோர்வெண்டலையாரழலாடரவப்பூண்டுகந்தான்
றிங்களொடுபாம்பணிந்தசீரார்திருமுடிமேற்
கங்கையினன்மேவியுறைகோயில்கைச்சினமே.

திருநாவுக்கரசுசுவாமிகள் திருமுறை 3-ல்
தனித்திருத்தாண்டகம்.

கின்னுலார்பிறரின்றிநீயேயானாய்
நினைப்பார்கண்மனத்துக்கோர்வித்துமானாய்
மன்னுலகுமன்னவர்க்கோரமுதமானாய்
மறைநான்குமானபாறங்கமானாய்
பொன்னுலகுமணியானுய்போகமானாய்
பூமிமேற்புகழ்த்தக்கபொருளேயுன்னை
யென்னுலகுயென்னுலகுயென்னினல்லா
லேனைழையேனென்சொல்லியேத்துகேனே.

பூணூல் சாத்த.

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் திருமுறை 2-ல்

திருநனை பண்-காந்தாரம்

முத்தேர்நகையாளிடமாகத்தன்மார்பில்வெண்ணூல்பூண்டு
தொத்தேர்மலர்சடையில் வைத்தாரிடம்போலுஞ்சோலைசூழ்ந்த
வத்தேனளியுண்களியாலிசைமூல்வாலத்தும்பி
தெத்தேயெனமுரலக்கேட்டார்வினைகெடுக்குந்திருநனைவே.

புஷ்பாஞ்சலி.

திருநாவுக்கரசுசுவாமிகள் திருமுறை 1-ல்

திருவையாறு திருவிருத்தம்.

நின்போலமார்கணீண்முடிசாய்த்துநிமிர்த்துகுத்த
பைம்போதுழக்கிப்பவளந்தழைப்பனபாங்கறியா
வென்போலிகள்பறித்திட்டவிலீபுமுகையுமெல்லா
மம்போதெனக்கொள்ளுமையனீயாறனடித்தலமே.

இண்டை சாத்த.

வே. திருமுறை 1-ல் திருவகம்பம் பண்-காந்தாரம்.

அண்டமாயாதியாயருமறையோடைம்பூதப்
பிண்டமாயுலகுக்கோர்பெய்பொருளாம்பிஞ்ஞகனே
தொண்டர்தாமலர்தூவிச்சொன்மாலைபுனைகின்ற
இண்டைசேர்சடையாயீயென்மனத்தேவைத்தேனே.

திருப்பள்ளித்தாமஞ்சாத்த.

வே. திருமுறை 2-ல் திருப்பராய்த்துறை திருக்குறுந்தொகை.

போதுதாதொடுகொண்டுபுனைந்துடன்
தாதவிழ்சடைச்சங்கரன்பாதத்துள்
யாதைதீர்க்கவென்றேத்திப்பராய்த்துறைச்
சோதியானைத்தொழுதெழுந்துய்மினே.

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் திருமுறை 2-ல்
திருவகம்பம் பண்-இந்தளம்.

கொச்சியேவன்னிகொன்றைமதிகூவிளம்
உச்சியேபுனைதல்வேடட்விடையூர்தியான்
கச்சியேகம்பமேயகறைக்கண்டனே
கச்சியேகதெழுமிறும்மேல்விணைகையுமே.

போகாங்கமூர்த்தி பூசைக்குத்தியானம்.

சிவதருமோத்தரம் பரிகாரவியல் 91-ம் விருத்தம்.

திருவுருவத் தெளிபளிங்குதிரியயனம்பிறையுஞ்
செஞ்சடையர்வலக்கரத்திற்றிரிசூலமவர்தங்
கருதுகமற்றையகரத்திற்செபமாலையபயங்
காருணிகர்க்கீசானக்கவர்தமக்குக்கனிட்டர்
திருவுருவங்கோங்கினலர்திரியயனங்கரமுன்
செப்பியசெந்திருகாமந்தற்புருடதேவர்
வரியரவு மிளம்பிறையுஞ் சடைமுடியின் வைத்தார்
மலரடியை மறவாதார் வல்வினையை மாய்ப்பார்.

இதுவுமது 92-ம் விருத்தம்.

கரியவுருவெறிய சடைகபால நிறைமாலை
காளமுகங் கவிழ்ந்தாடிகண்முன்றுவட்டங்
கரதலங்க ளொருநான்குங் கட்டுரைத்தபடியே
காட்டினமுன்னிருநான்கு கரமுமாமென்றே
வெருவியிடமருவலரை வெருட்டிய உக்கிரத்து
விக்கிரமாகோரமென விளம்பு பெயருடையார்
இருபதமு மொருபொழுது மறவாதே யேத்தி
யெண்ணுமவரிடர் வினையை யிடிப்பார்களென்றும்.

இதுவுமது 93-ம் விருத்தம்.

தேமொழியாளுமையெண்ணத் திருமுகமுந்தோடுங்
திலதமுதற்சிறப்புமிரு ளகவிதச்செறியும
வாமமெனுந்தேவர்க்கு வாய்த்தனவேசெம்மை
வடிவுமவர்கரதலங்கண் ணுதிதனில்வதுப்பே

சேமவுருத்திரஞ்சங்ஞ சடாமுடியிற் பிறையுங்
திரிநயனங்கரதலங்கள் செப்பியமுற்படியே
காமமதுசத்தியோ சாதமெனுமின்ற
காதற்குகயர்தவனோ கிளைக்கவினோ சம்.

இதுவுமது 14 ம் விருத்தம்.

திருவுருவமிருதயர்க்குத் தவளமெனத்தெளிக
சேடித்தவுறப்பணித்துஞ் செப்பியமுற்படியே
திருவுருவங்கனகமெனச் சிரத்திலுக்குத்தெளிக
சேடித்தவுருப்பணித்துஞ் செப்பியமுற்படியே
திருவுருவஞ்சிந்தூர மெனத்தெளிகசிகைக்குச்
சேடித்தவுறப்பணித்துஞ் செப்பியமுற்படியே
திருவுருவம்வண்டிறங்க ராளமுகங்கவசஞ்
சேடித்தவுறப்பணித்துஞ செப்பியமுற்படியே.

இதுவுமது 15 ம் விருத்தம்.

ஓவ்வொன்றேதிருமுசமு நேத்திரங்கட்குணரி
லுட்லொளியுமிரவிமதி யுதாசனமீயொக்கு
மிவ்விரண்டேகரதலமும் வரம்பையமவையு
மிவ்விரண்டேவிழியுமென வெண்ணிடுகவெழிலார்
செவ்வரத்தந்திருவுருவங் கரதலமீரைந்தும்
திருநயனமொருமூன்றுஞ் சினத்திடித்தகுரலு
மிவ்வகையெல்லாமுடைய ரத்திரனென்றியம்பு
மிவரடியையிருதயத்தினிருத்தினிடரீலியே

நிவேதனம் செய்ய

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருமுறையில்.

திருவகம்பம்–பண்-தக்கேசி.

ஆலந்தானுகந்தமுதுசெய்தானை
யாதியையமரர்தொழுதேத்துஞ்
சீலந்தான்பெரிதுமுடையானைச்
சிந்திப்பாரவர்சிந்தையுளானை

யேலவார் குழலாளுமைங்கை
யென்றுமேத்தி வழிபடப்பெற்ற
காலகாலனீக்கமபனெம்மானீக்
காணக்கண்ணடியேன்பெற்றவாறே.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருமுறை 3-ல்
திருவகம்பம் திருவிருக்குக்குறள் பண்-கொல்லி.

கலியார்கச்சிமலீயேகம்பம்
பலியார்போற்றகலியாவினீயே.

அடைக்காம்பு.

திருநாவுக்கரசு சுவாமிகள் திருமுறை 3-ல்
திருப்புறம்பயம் திருத்தாண்டகம்.

ஆகாத நஞ்சுண்டவந்திவண்ணை
ரைந்தலீயமாசுணங்கொண்டம்பொற்றோண்மே
லேகாசமாவிட்டொன்றேந்திவந்
திடிதிருவேபலிபென்றூர்க்கில்லேபுக்கேன்
பாகேதுங்கொள்ளார்பலியுங்கொள்ளார்
பாவியேன்கண்ணுள்ளே பற்றிநோக்கிப்
போகாதவேடத்தர்பூதஞ்சூழப்
புறம்பயம்மூன்றுபோயினாரே.

தூபம்.

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் திருமுறை 3-ல்
திருக்கழிப்பாலீ பண்-கௌசிகம்.

வெந்தகுல்லியப்புகையிம்மவே
கந்தநின்றுலவுங்கழிப்பாலீயார்
அந்தமும்மலவும்மறியாததோர்
சந்தமாலவர்மேவியசாந்தமே.

தீபம்.

திருநாவுக்கரசுசுவாமிகள் திருமுறை 3-ல்

திருவையாறு-திருத்தாண்டகம்.

எல்லாவுலகுமுமாஞுய்நீயே
யேகம்பமேவியிருந்தாய்நீயே
நல்லாரைநன்னெயறிவாய்நீயே
ஞாணச்சுடர்விளக்காய்நின்றாய்நீயே
பொல்லாவினைகளறுப்பாய்நீயே
புகழ்ச்சேவடியென்மேல்வைத்தாய்நீயே
செல்வாயசெல்வந்தருவாய்நீயே
திருவையாறகலாதசெம்பொற்சோதீ.

ஷெ திருமுறை 3-ல் திருமலைக்காடு திருத்தாண்டகம்.

தாண்டுசுடரினையசோதிகண்டாய்
தொல்லமர்சூளாமணிதான்கண்டாய்
காணடற்கரியகடவுள்கண்டாய்
கருதுவார்க்காற்றவெளியான்கண்டாய்
வேண்டுவார்வேண்டுவதேயீவான்கண்டாய்
மெய்ந்நெறிகண்டாய்விரதமெல்லா
மாண்டமனத்தார்மனத்தான்கண்டாய்
மறைக்காட்டுறையுமணுளன்றனே.

திருநீறுசாத்த.

ஷெ திருமுறை 1-ல் திருவாரூர் பண்-சாந்தாரம்.

நீறுமெய்பூசவல்லாணுநினைப்பவர்நெஞ்சத்துளாணும்
ஏறுகந்தேறவல்லாணுமெரிபுரைமேனியினணு
காறுகார்கையினணுகான்மலைக்கண்டத்தினணும்
ஆறுசடைக்கரந்தாணுமாரூரமர்ந்தவம்மானே.

*தர்ப்பணந் தெரிசிப்பிக்க.

ஷே திருமுறை 1-ல் திருவாரூர் திருவிருத்தம்.

பூம்படிமக்கலம்பொற்படிமக்கலம்மென்றிவற்று
வாம்படிமக்கலமாகினமாரினிதார்ந்தார்
தாம்படிமக்கலம்வேண்டுவரேற்றபிழ்மாலைகளால்
காம்படிமக்கலஞ்செய்ததொழுதுய்மடநெஞ்சுமே.

ஸ்நானம்பண்ணினபிறகு அர்க்கியங்கொடுக்க.

சுந்தரமூர்த்திசுவாமிகள் திருமுறையில்
திருப்பாண்டிக்கொடுமுடி பண்–பழம்பஞ்சுரம்.

இட்டனும்மடியேத்தவாரிகழ்ந்திட்டகாண்மறந்திட்டகாள்
கெட்டகாளிவையென்றலாற்கருதேன்கிளர்புனற்காவிரி
வட்டவாசிகைகொண்டடிதொழுதேத்துபாண்டிக்கொடுமுடி
நட்டவாவினைநான்மறக்கிலுஞ்சொல்லுநாநமச்சிவாயமே.

குருவர்ச்சனையுள் வணக்கம்.

ஷே திருமுறையில் திருக்காளத்தி பண்-நட்டராகம்.

மறிசேர்கையினனேமதமாவுரிபோர்த்தவனே
குறியேயென்னுடையகுருவேயுன்குற்றேவல்செய்வே
னெறியேநின்றடியார்நினைக்குந்திருக்காளத்தியுள்
அறிவேயுன்னையல்லாலறிந்தேத்தமாட்டேனே.

அருச்சனை செய்ய.

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் திருமுறை 1-ல்
திருப்பாம்புரம் பண்–தக்கராகம்.

கொக்கிறகோடுகூவிளமத்தங்கொன்றையொடெருக்கணிசடையர்
அக்கினொடாமைபூண்டழகாகவனலதுவாடுமெம்மடிகண்
பிக்கருவேதவேள்வியுளெங்கும்விண்ணவர்விரைமலர்தூவப்
பக்கம்பல்பூதம்பாடிடவருவார்பாம்புரநன்னகராரே.

* தர்ப்பணமென்பது-கண்ணுறி.

ஷி திருமுறை 1-ல் அச்சிறுபாக்கம் பண்-குறிஞ்சி.

வறுமொன்றேறிமீறுமெய்பூசி
யிளங்கோயரிவையோடொருங்குடனாகிக்
கூறுமொன்றருளிக்கொன்றையந்தாருங்
குளிரிளமதியமுங்கூவிளமலரு
நாறுமல்லிகையுமெருக்கொடுமுருக்கு
மகிழிளவன்னியுமிவைகலம்பகர
வாறுமோர்சடைமேலணிந்தவெம்மடிக
ளச்சிறுபாக்கமதாட்சிகொண்டாரே.

ஷி திருமுறை 2-ல் திருப்புள்ளிருக்கும்வேளூர் பண்-சீகாமரம்.

வாசகலஞ்செய்திமையோர் நாடோறுமலர்தூவ
நீசனெம்பெருமானு ரினிதாகவுறையுமிடம்
மோசணேபோய்ப்பூக்கொணர்ந்தங் கொருநாளுமொழியாமே
பூசனைசெய்தினிதிருந்தான் புள்ளிருக்கும்வேளூரே.

திருமந்திரம்.

அம்புயலேங்கழுநீரணிநெய்தல்
வம்பவிழ்பூசுமுமாதனிமந்தாரந்
தும்பைவகுளஞ்சாபுன்னைமல்லிகை
செண்பகம்பாதிரிசெவ்வந்திசாத்திடே.

ஏழுத்துரும்பிடை.

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் திருமுறை 1-ல்

திருவாலூர்ப்பசுபதீச்சரம் பண்-நட்டபாடை.

குற்றமறுத்தார்குணத்தினுள்ளார் கும்பிடுவார்தமக்கன்புசெய்வார்
நற்றவினைடையினர் கெற்றிக்கண்ணு ருறைபதியாகுஞ் செறிகொள்
சுற்றியவாசலின்மாதர்விழாச்சொற்கவிபாடநிதானநல்கப்[மாடஞ்
பற்றியகையினர்வாழுமாலூர்ப்பசுபதீச்சரம்பாடுநாவே.

பிரதக்ஷணஞ்செய்ய.

திருநாவுக்கரசுசுவாமிகள் திருமுறை 3-ல்
திருவாரூர்-திருத்தாண்டகம்.

மனிதருவாய்நெஞ்சமேயுஞ்சுபோக
வழிபாவதிதுகண்டாய்வானோர்க்கெல்லாம்
அதிபதியேயாரமுதேயாதியென்று
மம்மானேயாரூரெம்மையாவென்றுங்
துதிசெய்துதன்றுமலர்கொண்டுதூவிச்
சூழும்வலஞ்செய்துதொண்டுபாடிக்
கதிர்மதிசேர்சென்னியனேகாலகாலா
கற்பகமேயென்றென்றேகதறுநில்லே.

ஜெபித்துச்சாத்த.

சுந்தரமூர்த்திசுவாமிகள் திருமுறையில்
திருவாரூர் பண்-புறநீர்மை.

அந்திபுரண்பகலுமஞ்சுபதஞ்சொல்லி
முந்திவெழும்பழையவல்வினைமூடாமுன்
சிந்தைபராமரியாத்தென்திருவாரூர்புக்
கெந்தைபிரானெனையென்றுகொலெய்துவதே.

திருநாவுக்கரசுசுவாமிகள் திருமுறை 2-ல்
திருவீழிமிழலை-திருக்குறுந்தொகை.

கருவனேகருவாய்த்தெளிவார்க்கெலாம்
ஒருவனேயுயிர்ப்பாயுணர்வாய்நின்ற
திருவனேதிருவீழிமிழலையுட்
குருவனேயடியேனைக்குறிக்கொளே.

ஆனந்தத்தால் கூத்தாடல்.

ஞானசம்பந்தசுவாமிகள் திருமுறை 1-ல் கோயிற்றிருகேரிசை பண்-கொல்லி.

பார்த்திருந்தடியனேனுன்பரவுவண்பாடியாடி
மூர்த்தியேயெம்பணுண்ணீமுவரில்முதல்வனென்பன்
ஏத்துவாரிடர்கடீர்ப்பாய்நில்லேச்சிற்றம்பலத்துக்
கூத்தாவுன்கூத்துக்காண்பான்கூடாமல்வந்தவாறே.

நமஸ்காரம்பண்ணுவதற்குமுன் செய்யுந்துதி.

சுந்தரமூர்த்திசுவாமிகள் திருமுறையில்
திருப்புன்கூர்-பண்-தக்கேசி.

இயக்கர்கின்னரர்ஞமனெடுவருண
ரியங்குதீவளிகாயிறதிங்கள்
மெய்க்கமில்புலிவானரகாகம்
வசுக்கள்வானவர்தானவரெல்லாம்
அயர்ப்பொன்றின்றிநின்றிருவடியதனை
யர்ச்சித்தார்பெறுமாரருள்கண்டு
நிகைப்பொன்றின்றிநின்றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப்புன்கூருளானே.

நமஸ்காரஞ்செய்ய.

திருநாவுக்கரசு சுவாமிகள் திருமுறை 1-ல்
தனித்திருகேரிசை.

அங்கத்தைமண்ணுக்காக்கியார்வத்தையுனக்கேதந்து
பங்கத்தைப்போகமாற்றிப்பாவித்தேன்பரமாயின்னீச்
சங்கொத்தமேனிச்செல்வாசாதலுணையேலுன்னை
யெங்குற்றுயென்றபோதாலிங்குற்றேனென்கண்டாயே.

மேலதிருமுறை 2-ல் தனித்திருக்குறுந்தொகை.

ஞானத்தாற்றொழுவார்சிலஞானிகள்
ஞானத்தார்றொழுவேனுனைஞானலேன்
ஞானத்தாற்றொழுவார்கடொழக்கண்டு
ஞானத்தாலுனைநானுன்தொழுவனே.

மேல்

வாழ்த்தலாயும்நினைக்கமடநெஞ்சம்
தாழ்க்கச்சென்னியுந்தந்ததனைவணைச்
சூழ்த்தமாமலர்தூவித்தொழாதே
வீழ்த்தவாவினைபேணெடுங்காலமே.

ஷே-திருமுறை 2-ல் திருமருகல்-திருக்குறுந்தொகை.

பெருகலாந்தவம்பேதைமைதீரலாம்
திருகலாகியகிலதிருத்தலாம்
பருகலாம்பரமாயதோரானந்தம்
மருகலானடிவாழ்த்திவணக்கமே.

நமஸ்காரஞ்செய்து எழுந்திருக்கும்போது துதிக்க.

ஷே-திருமுறை 2-ல் திருக்கடம்பூர் திருக்குறுந்தொகை.

பொய்தொழாதுபுலியுரியோன்பணி
செய்தெழாவெழுவார்பணிசெய்தெழா
மெய்தெழாதெழுவாரவரெள்கலீர்
மைதெழாவெழுமின்கரக்கோயிலே.

தோத்திரஞ்செய்ய.

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் திருமுறை 1-ல்
திருவலிவலம்-பண்-பழந்தக்காகம்.

தாயுநீயேதந்தைநீயேசங்கரனேயடியேன்
ஆயுநின்பாலன்புசெய்வானுரிக்கின்றதுள்ளம்
மாயமாயகாயந்தன்னுளோர்கின்றென்றலொட்டார்
மாயமேயென்றஞ்சுகின்றேனல்வலிவலமேயமனே.

திருநாவுக்கரசு சுவாமிகள் திருமுறை 3-ல்
தனித்திருத்தாண்டகம்.

அப்பனீயம்மைநீயையனுநீ
யன்புடையமாமனுமாமியுநீ
பொப்புடையமாதருமொண்பொருளுநீ
யொருகுலமுஞ்சுற்றமுமோருருநீ
துய்ப்பனவுமுப்பனவுந்தோற்றுவாய்நீ
துணையாயென்னெஞ்சகத்துறப்பிப்பாய்நீ
யிப்பொன்னியிம்மணிநியிம்முத்துநீ
யிறைவனீயெம்மானந்தசெல்வனீயே.

ஷெ திருமுறை 3-ல் திருவாவடுதுறை திருத்தாண்டகம்.

திருவேயென்செல்வமேதேனேவானோர்
செழுஞ்சுடரேசெழுஞ்சுடர்க்கற்சோதீமிக்க
வருவேயென்னுறவேயென்னானேயூனி
னுள்ளமேயுள்ளத்தினுள்ளேநின்ற
கருவேயென்கற்பகமேகண்ணேகண்ணி
கருமணியேமணியாடுபாவாய்காவாய்
யருவாயவல்வினைநோயடையாவண்ண
மாவடுதண்டுறையுறையுமமரேறே.

ஷெ திருமுறை 1-ல் திருக்கடவூர் திருநேரிசை.

பழியுடையாக்கைதன்னிற்பாழுக்கேநீரிறைத்து
வழியிடைவாழுமாட்டேன்மாயமூர்த்தெளியகில்லேன்
அழிவுடைத்தாயவாழ்க்கையைவரால்லிக்கப்பட்டுக்
கழியிடைத்தோணிபோன்றேன்கடவூர்வீரட்டனீரே.

ஷெ திருமுறை 1-ல் திருவதிகைத் திருவீரட்டானம் திருநேரிசை.

கழித்திலேன்காமவெங்கோய்காதன்மையென்னும்பாசம்
ஒழித்திலேனொன்கணேக்கியுணர்வெனுமிமைதிறத்து
விழித்திலேன்வெளிறுதோன்றவினீயெனுஞ்சரக்குகொண்டேன்
அழுத்திலேனையர்ந்துபோனேனதிகைவீரட்டனீரே.

ஷெ திருமுறை 1-ல் திருக்கோடிகா திருநேரிசை.

சேமல்வெண்கொம்புபூண்டகிளரொளிமார்பினனே
யேழையேனேழையேனென்செய்கேனெந்தையெம்மான்
மாழையொண்கண்ணினார்கள்வலைதனின்மயங்குகின்றேன்
கூழையேறுடையசெல்வாகோடிகாவுடையகோவே.

ஷெ திருமுறை 1-ல் திருப்பாதிரிப்புலியூர் திருவிருத்தம்.

புழுவாய்ப்பிறக்கினும்புண்ணியாவுன்னடியென்மனத்தே
வழுவாதிருக்கவரந்தரவேண்டுமிவ்வையகத்தே
தொழுவார்க்கிரங்கியிருந்தருள்செய்பாதிரிப்புலியூர்ச்
செழுநீர்ப்புனற்கங்கைதங்கடைமேல்வைத்த தீவண்ணனே.

ஷெ திருமுறை 1-ல் கோயில் திருவிருத்தம் பண்-கொல்லி.

படைக்கலமாகவுண்ணமத்தெழுத்தஞ்செனுளிற்கொண்டேன்
இடைக்கலமல்லேனெழுபிறப்பும்முனக்காட்செய்கின்றேன்
நடைக்கினும்போகேன்றெழுது வணங்கித்தாமீறணிந்துன்
அடைக்கலங்கண்டாயணிதில்லைச்சிற்றம்பலத்தரனே.

ஷெ திருமுறை 3-ல் திருவாரூர் போற்றித்திருத்தாண்டகம்.

சங்கரனேநின்பாதம்போற்றிபோற்றி
சதாசிவனேநின்பாதம்போற்றிபோற்றி
பொங்கரவாநின்பாதம்போற்றிபோற்றி
புண்ணியனேநின்பாதம்போற்றிபோற்றி
யங்கமலத்தயனூடுமாலுங்காணு
வனுருவாநின்பாதம்போற்றிபோற்றி
செங்கமலத்திருப்பாதம்போற்றிபோற்றி
திருமூலத்தானனேபோற்றிபோற்றி.

சுந்தரமூர்த்திசுவாமிகள் திருமுறையில்
திருவிடைமருதூர்-பண்-தக்கேசி.

கொடுக்கைற்றிலேஞெண்பொருடன்னீக்
குற்றஞ்செற்றமிவைமுதலாக்
விடுக்கைற்றிலேன்வேட்கையுஞ்சினமும்
வேண்டிலீம்புலனென்வசமல்ல
நடுக்கமுற்றதோர்மூப்புவந்தெய்தி
நமன்றமர்கரத்திடலஞ்சி
யிடுக்கணுற்றனனுய்வகையருளா
யிடைமருதுறையெந்தைபிரானே.

ஷெ திருமுறையில் திருமழபாடி பண் கட்டராகம்.

பொன்னார்மேனியனேபுலித்தோலையரைக்கசைத்து
மின்னார்செஞ்சடைமேல்மிளிர்கொன்றையணிந்தவனே
மன்னேமாமணியேமழபாடியுள்மாணிக்கமே
என்னேயுன்னியல்லாலினியாரைநினைக்கேனே.

ஷே திருமுறையில் திருக்கடலூர் பண்-கட்டளைக் கலித்துறை.

மண்ணீர் தீவெளிகால்வருபூதங்களாகிமற்றும்
பெண்ணோடாணலியாய்ப்பிறவாவுருவானவனே
கண்ணுறுண்மணியேகடலூர்தனுள்வீரட்டத்தெம்
அண்ணலெவ்வண்ணமுதேயெனக்கார்துணையேலமே.

ஷே திருமுறையில் திருவாடுதுறை பண்-தக்கேசி.

ஒப்பிலாமுலையாளொருபாகாவுத்தமாமத்தமார்தருசடையாய்
முப்புராங்களீத்தீவளீதத்தங்கேமூவருக்கருள்செய்யவல்லானே
செப்பவானிழற்கீழிருந்தருளுஞ்செல்வனேதிருவாவடுதுறையுள்
அப்பனேயெண்ணியஞ்சலென்றருளாயாரெனக்குறவமார்களேமே.

ஷே

குறைவிலாநிறைவேகுணக்குன்றே
கூத்தனே குழைக்காதுடையானே
யுறவிலேனுனையன்றிமற்றடியே
னொருபிழையொறுத்தாளிழிவுண்டோ
நிறைவண்டார்பொழில்சூழ்திருவாரூர்ச்
செம்பொனேதிருவாவடுதுறையுள்
அறவனேயெண்ணியஞ்சலென்றருளா
யாரெனக்குறவமார்களேமே.

எட்டாந்திருமுறையாகிய திருவாசகம்.

திருச்சதகம் 97-ம் பாசுரம்.

உடையநாதனேபோற்றி நின்னலாற்
பற்றுமற்றெனக்காவதொன்றினி
யுடையனேபணிபோற்றியும்பரார்
தம்பராபராபோற்றியாரினும்
கடையனாயினேன்போற்றியென்பெரும்
கருணையாளனேபோற்றி யென்னைநின்
னடியனாக்கியபோற்றியாதியு
மந்தமாயினைப்போற்றியப்பனே.

அடைக்கலப்பத்து 8-ம் பாசுரம்.

மாலடிவகிரண்னகண்ணிபங்காநின்மலரடிக்கே
கூவிடுவாய்கும்பிக்கேயிடுவாய்நின்குறிப்பறியேன்
பாவிடையாடுகுழல்போற்கரந்துபரந்ததள்ளம்
ஆகெடுவேனுடையாயடியேனுன்னடைக்கலமே.

குழைத்தபத்து 7-ம் பாசுரம்.

அன்றேபென்றனவியுமுடனுமுடமையெல்லாமும்
குன்றேயனையபெண்ணையாட்கொண்டபோதேகொண்டிலீயோ
வின்றோரிடையூறெனக்குண்டோவெண்டோண்முக்கணெம்மானே
நன்றேசெய்வாய்பிழைசெய்வாய்காஞ்சிதற்குநாயகமே.

ஒன்பதாந்திருமுறையாகிய கருவூர்த்தேவர் திருவிசைப்பா.

திருச்சாட்டியக்குடி பண்-பஞ்சமம்.

செங்கணபோற்றிதிசைமுகாபோற்றி
சிவபுரகருள்வீற்றிருந்த
அங்கணபோற்றி யமரனேபோற்றி
யமரர்கடலிவனேபோற்றி
தங்கணண்மறைநூல்சகலமுங்கற்றோர்
சாட்டியக்குடியிருந்தருளும்
எங்களபகனேபோற்றியேழிருக்கை
யிறைவனேபோற்றியேயோற்றி.

சேந்தனர் திருப்பல்லாண்டு.

பாலுக்குப்பாலகன்வேண்டியழுதிடப்பாற்கடலீந்தபிரான்
மாலுக்குச்சக்கரமன்றருள்செய்தவன்மன்னியதில்லைதன்னுள்
ஆலிக்குமந்தணர்வாழ்கின்றசிற்றம்பலமேயிடமாகப்
பாலித்துட்டம்பயிலவல்லானுக்கேபல்லாண்டுகூறுதுமே.

பத்தாந்திருமுறையாகிய திருமந்திரம்.

போற்றுகின்றேன்புகழ்ந்தும்புகழ்ஞானத்தைத்
தேற்றுகின்றேன்சிந்தைநாயகன்சேவடி
சாற்றுகின்றேனனையேசிவயோகத்தைப்
போற்றுகின்றேனெம்பிரானென்றுகாணே.

பதினோராந்திருமுறையில்
காரைக்காலம்மையார் அற்புதத்திருவந்தாதி.

81-ம் பாசுரம்.

காலணியுமெண்ணெய்க்கடிகாகலகழுன்மேறும
மேலிருளினையுமேலாடுத்தோல்—சோல
அரணைவிரித்தழியவெரித்தபெற்றான
சரணைவிரித்தகன்சார்ந்து.

ஐந்திருமுறையில் யோடிகள்காடவர்கோமானார்
அருளிச்செய்த கேஷத்திரவெண்பா.

20-ம் பாசுரம்.

னன்னெஞ்சேயுன்னை யிரந்துமுனோக்கின்றேன்
கன்னெஞ்சேவாயாயிறகாலுதலால்—வன்னெஞ்சேய்
மாகம்பத்தாணைபுரித்தாணைவல்கச்சி
யேகம்பத்தாணையிலையோ.

ஐந்திருமுறையில் சேரமான் பெருமானாயனார்
அருளிச்செய்த பொன்வண்ணத்தந்தாதி.

91-ம் பாசுரம்.

கொற்றவனேயென்றுனைகோலனத்தாயென்றுமாலணைத்தால்
கற்றவனேயென்றுகருஞ்சுண்டியேயெனுமஞ்சலயக்கா
பெற்றவனேயென்றும்பிஞ்ஞகனேயெனுமன்மதனே
செற்றவனேயென்றுநாளுமபராதஞ்சிந்தனையே.

பட்டணத்துப்பிள்ளையாரருளிச்செய்த
திருவெண்காட்டுத்திருவிசைப்பா.

பூதமுங்காரணம்பொறிகளைம்புலனும்பொருந்தியகுணங்களோர்
நாதமுங்கடந்தவெளியிலேயுகாணுமாயிற்குகாருளேதாழுன்றும்
வாதமுஞ்சமயபேதமுங்கடந்தமோலபெளின்பசாரலே
ஏதுமொன்றறியேன்யாதுகின்செயலேயிறைவனேயுகாவுளே

யாவரோடு நந்தும்பாவமேவாழ்ந்தும்யாவரேயெமக்குறவாயும்
மீதுவரல்லாற்றிகைமுகமெனக்குத்திருவுளமதியவேவுளதோ
பாவலாரெனுரவன்செந்தமிழ்க்கிரங்கிப்பரவையாரூடலீமாற்ற
ரவலாரியிரவெலாமுழன்றவிவர் ...ணையேகாயகனே

உண்டமீதாயுண்டுமூடுத்ததேயுடுத்திமடித்தடித்துரைத்ததேயுரைத்து
கண்டமீதகண்டுங்கேட்டதேகேட்டுங்கழிந்தகைகடவுமெல்லாம[ம
ஈண்டதாமரைமேமலன்னம்வீற்றிருக்குமழுவரூவீதிவெண்காடா
ஆண்டமீரபோற்றவம்பலத்தாடுமையனேயுய்யுமாறருளே.

கோயிற்புராணம் பரயிரம்.

3–ம் பாகரம்.

தற்பரமாய்ப்பரமபதமாய்தாவிலறுபூதியதாய்
அற்புதமாயாரமுதாயனைத்துலகினுமெவளிப்
பொற்பினதாய்பபிறிவிலதாய்ப்பொருளாகியருளாகுஞ்
சிற்பரமாமம்பரமாந்திருச்சிற்றம்பலம்போற்றி.

ஓமத்துக்குப்பின் உபயகாலபூசைபோகாங்க மூர்த்தி முதலியோர்க்குப் பரமுகங்கொடுத்துக்கூட்டி ஸ்ரீபஞ்சாத்தினபின் துதி.

திருநாவுக்கரசுசுவாமிகள் திருமுறை 2-ல்
திருக்கடம்பத்தறை திருக்குறுந்தொகை.

பூமென்மேகாதையுமையொருபாகனீ
யோமஞ்செய்துமுனைப்பின்சுரைநுள்ளத்தாற்
காமற்காய்ந்தபிரான்கடம்பத்துறை
காமமேந்தகந்தீவினைகாரசமே.

மூர்த்தியை எழுந்தருளப்பண்ண.

ஷை திருமுறை 1-ல் திருவகம்பம் பண்–காந்தாரம்.

கைப்போதுமலர்தூவிக்காதலித்துவாழ்நாள்
முப்போதுமுழுடிசாய்த்துத்தொழுன்றமுதல்வனீ
யப்போதுமலர்தூவியையம்புலனுமசத்தடக்கி
யெப்போதுமுனியாதீனெண்மனத்தேவைத்தேனே.

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் திருமுறை 2-ல

திருக்குடவாயில்-பண்-காந்தாரம்

அடியார்ந்தபைங்கழலுஞ்சிலம்புமார்ப்பவகையிற்
செடியார்ந்தவெண்டலையிற்பலிதேர்ந்துகொண்டுமிதர்வீர்
குடியார்ந்தமாமலையாருலாவியகுங்குடவாயிற்
படியார்ந்தகோயில்மேசாயிலாகப்பயின்றீரே.

சண்டேசுரர்பூசை.

திருநாவுக்கரசுசுவாமிகள் திருமுறை 1-ல்

திருக்குறுக்கை-திருநேரிசை.

தழைத்தகோரைத்தியின்கீழ்த்தாபரணனலாறுகூப்பி
யழைத்தகுகேயாவின்பாலேக்கறந்துகொண்டாட்டங்கண்டு
பிழைத்ததன்முலைதாஞ்சப்பெருகெடுபுவலீரக்
குழைத்ததேனமுதமீந்தார்குறுக்கைவீரட்டனீரே.

கோயில்சாத்த.

திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் திருமுறை 2-ல்

திருமறைக்காடு-பண்-இந்தளம்.

சதுரமாமறைதான்றிசெய்துவணங்குமம
மதுரம்பொழில்சூழ்மறைக்காட்டுறையும்பர
விதுகண்டுறைவுவத்தருள்செய்தவெனர்சூன்
கதவந்திருக்காப்புக்கொளுங்கருத்தாலே.

திருச்சிற்றம்பலம்.

சிவபூசைத்திரட்டு முற்றிற்று.

பஞ்ச வில்வம்.

மெச்சியே யடியவர் வியந்து சாத்திடு
நொச்சியே நறுவிளா தவன்ற கூவிளம்
வைச்சிடுங் கிளுவையே மாவி லிங்கையின்
பச்சிலை யென்றிவை பஞ்சவில்வமே.

சிவமயம்.

பின்பு சாந்தி நிமித்தம்.

அகோரமந்திரம் ஜெபித்து இயன்ற ஸ்தோத்திரம் பண்ணுக.

பட்டணத்துப்பிள்ளையார் பாடல்.

கையொன்றுசெய்ய விழியொன்றுகாடக் கருத்தொன்றெண்ணப்
பொய்யொன்று வஞ்சகமாவொன்று பேசப்புலால்கமழு
மெய்யொன்று சாரச்செவியொன்று கேட்கவிரும்புமியான்
செய்கின்றபூசை யெவ்வாறுகொள்வாய் விநாயகனே. (1)

கல்லாப்பிழையுங் கருதாப்பிழையுங் கசிந்துருகி
நில்லாப்பிழையு நினையாப்பிழையு நின்னஞ்செழுத்தைச்
சொல்லாப்பிழையுந் துதியாப்பிழையுந் தொழாப்பிழையு
மெல்லாப்பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே. (2)

சொல்லால்வருங்குற்றம் சிந்தனையால்வருந் தோடஞ்செய்த
பெரல்லாததீவினை பார்வையிற்பாவங்கள் புண்ணியதூல்
அல்லாதகேள்வியைக் கேட்டிடுந் தீங்குகளாயவுமற்
றெல்லாப்பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே. (3)

கொல்லாமற்கொன்றதைத் தின்னாமற்குத்திங்கோள்களவு
கல்லாமற் கைதவோடிணங்காமற் கனவினும்பொய்
சொல்லாமற் சொற்கேட்கேளாமற் றேவகையர்மாயையிலே
செல்லாமற் செல்வந்தருவாய் சிதம்பரதேசிகனே. (4)

நீறுர்த்தமேனியு மோமஞ்சிலிர்த்தளை நெக்குநெக்குச்
சேறுய்க்கசிந்து கசிந்தேயுருகி நின்சீரடிக்கே
மாறுத்தியானமுற் றூனந்தமேற்கொண்டு மார்பிற்கண்ணீர்
ஆறுய்ப்பெருக்கிடப்பதென்றோ கயிலாயத்தனே. (5)

நல்லாயெனக்கு மனுவொன்றுதந்தருண் ஞானமிலாப்
பொல்வெங்கொன்றுபோடும்பொழுதியல் பூசைசெபஞ்
சொல்லார் நற்கோயினியமம் பலவகைத்தோத்திரமு
மெல்லாமுடிந்தபின் கொல்லுகண்டாய் கச்சியேகம்பனே. (6)

ஐயுந்தொடர்ந்து விழியுஞ்செருகி யறிவழிந்து
மெய்யும்பொய்யாகி விடுகின்றபோதொன்று வேண்டுவன்யான்
செய்யுந்திருவொற்றியூ ருடையீர் திருமேறமிட்டுக்
கையுந்தொழப்பண்ணி யைந்தெழுத்தோதவுங் கற்பியுமே. (7)

கண்ணிற்பூட்டிய சூத்திரப்பாவை நன்னூற்பிணைத்
தன்னலமாடிச் சலித்திடுமோ வந்தத்தன்மையைப்போ
லுன்னலீயாணுந் திரிவதல்லான் மற்றுனைப்பிரிந்தா
லென்னுயிர்காவலுண்டோ விறைவா கச்சியேகம்பனே. (8)

அஞ்சருளைப்போற்றி யைந்துபுலனுந் துறக்க
நெஞ்சேயுனக்கு நிலைவுகான் சொல்லுகிறேன்
வஞ்சகத்தைநீக்கி மறுநினைவு வாராமல்
செஞ்சரணத்தாளைச் சிந்தைசெய்வாய் நெஞ்சமே. (9)

திருச்சிற்றம்பலம்.

முற்றும்.

புட்ப விதி.

தாழம்பூ.

திருமுடி கண்டேனென்று திசைமுகன் பொய்யுரைப்ப
விருமடிகரியாகிற்ப விருவர்க்குஞ் சாபமெய்த
வருமடியவர்கள் கைதை மலர்சிவன்முடியிற்சாத்தார்
பெருமிடிவரினும்பொய்சொற் பிதற்றிடார் பெரியோராவார்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்

சரித்திரம்.

சந்தானாசாரியராகிய

உமாபதி சிவாசாரியார்

திருவாய்மலர்ந்தருளிய

புராணசாரம்.

காழிநகர்ச் சிவபாத விதயர் தந்த
கவுணியர்கோனமுதமையான் கருதியூட்டு
மேழிசையி னமுதுண்டு தாளம் வாங்கி
யிலங்கியதித் திலச்சிவிகை யிசையவேறி
வாழுமுப லகனகற்றிப் பந்த ரேய்ந்து
வளர்கிழிபெற் றரவின்விட மருகற்றீர்த்து
வீழிநகர்க் காசெய்தி மறைக்கதவம் பிணித்து
மீனவன்மே னியின்வெப்பு விடுவித் தாரே.

ஆரெரியிட் டெறித்தவே டவைமுன் னேற்றி
யாற்றிலிடு மேடெதிர்போ யணையவேற்றி
யோரமண சொழியாமே கழுவிலேற்றி
யோதுதிருப் பதிகத்தா லோடமேற்றிக்
காருதவு மிடிபுத்தன் றலையி லேற்றிக்
காயாத பனையின்மூது களிக ளேற்றி
யீரமிலா வங்கமுயி ரெய்த வேற்றி
யிலங்குபெரு மணத்தாணை யெய்தினாரே.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்.

திருப்பாசுரம்.

பண்-கௌசிகம் (3-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்.

1. வாழ்கவந்தணர் வானவரானினம்
வீழுகதண்புனல்வேந்தனுமோங்குக
வாழ்கதீயதெல்லாமரனுமே
சூழ்கவையகமுந்துயர்தீர்கவே.

2. அரியகாட்சியராய்த்தமதங்கைசே
ரெரியமேறுகந்தேறுவர்கண்டமும்
கரியகாடுறைவாழ்க்கையராயினும்
பெரியராரறிவாரவர்பெற்றியே.

3. வெந்தசாம்பல் விரையெனப்பூசியே
தந்தையாரொடு தாயிலர்தம்மையே
சிந்தியாவெழுவார்வினைதீர்ப்பரா
வெந்தையாரவரெவ்வகையார்கொலோ.

4. ஆட்பாலவர்க்கருளும் வண்ணமுமாதிமாண்புங்
கேட்பான்புகிலளவில்லை யிளக்கமேவண்டா
கோட்பாலனவும் வினையுங்குறுகாமையெங்கை
தாட்பால்வணங்கித்தலைநின்றிவைகேட்கதக்கார்.

5. ஏதுக்களாலுமெடுத்தமொழியாலுமிக்குச்
சோதிக்கவேண்டா சுடர்விட்டுளனெங்கள் சோதி
மாதுக்கருங்கலுறுவீர்மனம்பற்றிவாழ்மின்
சாதுக்கண்மிக்கிறையேவந்துசார்மின்களே.

6. ஆடுமிமையவுமருங்கூற்றமுதைத்துவேதம்
பாடுமிமையவும்புகழல்லதுபாவியாதே
கேடுபிறப்புமிக்குமெனக்கேட்டுராணி
ஞாநிறத்தார்க்கருளல்லதுநாட்டலாமே.

திருச்சிற்றம்பலம்.

சரித்திரம்.

சோழவளநாட்டில் சிறப்புற்றோங்கும் சீர்காழியில் பிராமண வம்சத்தில் கவுணிய கோத்திரத்தில் பிறந்த சிவபாத விருதயரும் அவர் மனைவியாராகிய பகவதியாரும் செய்த அரியதவப்பேற்றால் பகவதியாருமைத் திருவயிற்றில் தோணிபுரப்பர் திருவருளால் திருவாதிரை நட்சத்திரத்தில் ஆளுடையபிள்ளையா யவதரித்தனர். இவர் மூன்றுவயதில் தம் பிதாவாகிய சிவபாதவிருதயர் நீராடச் சென்றபோ துடன்சென்றனர். தந்தையார் ஆளுடைய பிள்ளையாரைப் பொய்கைக்கரையி லுட்காரவைத்துத் தாம் தீர்த்தத்துள் முழுகி அகமருவணங்திருந் செபித்தெழுமுன் பிள்ளையார் தம் பரமபிதாவாகிய சிவபெருமானிடம் நீங்கி நெடுகாளாயிற்றென்று கருதித் தோணியப்பர் வீற்றிருக்குமலயத்தைநோக்கிக் கண்களில் நீர் பெருகுமபடி அழுதிரங்க, அது கண்டு தோணியப்பர் திருவுளமிரங்கித் தருமபுரவாகிய இடபவாகனத்தின்மேல் பார்வதிசமேதராய் எழுந்தருளித் திருமுலைப்பால் தருகவெனப் பார்வதியாருக்குக் கட்டளையிட்டருளினர். பார்வதியாரும் அவ்வாறே திருமுலைப்பாலோடு ஞானவிர்தமுங் கலந்துகொடுக்க உண்டு அழுகை நீங்கியிருக்கையில், தந்தையார் ஸ்நானஞ் செய்து வந்து பார்த்து, உனக்கு பால்கொடுத்தவர் யார்? என்று பயமுறுத்தும்போது, இவர் கொடித்தாரென்று விரலாற் சுட்டி, "தோடுடையசெவியன்" என்னுந் திருப்பதிசம் பாடிப் பரமாப்தராகிய சிவபெருமானைக் காட்டக்கண்டு அவர் ஆனந்தபரவசராயினர்.

அன்றுதொட்டு ஆளுடை பிள்ளையார் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனர் என்னுந் திருநாமம்பெற்று சிவாலயத்தில் சென்று பரமகாருண்ணியராகிய சிவபெருமானைத் தரிசித்துத் தம் பிதாவாகிய சிவபாத விருதயர் தோளிற் முற்கிவரத் திருமாளிகைக் கெழுந்தருளினர். பின்பொருநாள் திருக்கோலக்காவென்னுந் தலத்துக்குப் போய்த் திருக்கயங்களோ யொத்தித் திருப்பதிகம் பாடுகையில், எம்பெருமான் திருவைகூர்ந்து பொற்றாளங் கொடுத்தருளப்பெற்று

முன்போலத் திருமாளிகைக் கெழுந்தருளிக் காலந்தோறும் தோணியப்பர் திருமுன்னர்ச்சென்று, திருப்பதிகம் பாடித் தோத்திரஞ் செய்து வாழுநாளில், தம்முடைய தாயாகிய பகவதியார் சனன கேஷத்திரமாகிய திருநனி பள்ளியில் வாழும் பிராமணர்கள் வந்து தம்மூர்க் கெழுந்தருள வேண்டுமென்று பிரார்த்திக்கத் தோணியப்பர் சந்நிதியில் விடை பெற்றுக்கொண்டு அத்தலத்திற்கேயன்றி மற்றைத் தலங்களுக்குஞ்சென்று சுவாமி தரிசனம் பண்ணிக் கொண்டு மீண்டும் திருநனிபள்ளியில் எழுந்தருளியிருந்தனர். அப்பொழுது திருத்தலைச்சங் காட்டிலுள்ள பிராமணர்வந்து வணங்கித் தம்முடைய தலத்திற் கெழுந்தருள வேண்டுமென்ன, அங்குச்சென்று சிவதரிசனஞ்செய்து திருப்பதிகம் பாடியருளி, அங்கிருந்து புறப்பட்டுத் திருவலம்புரமுதலிய சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு பின்பு சீர்காழிக்குச் சென்றனர். அங்கிருந்து புறப்பட்டுத் திருமயேந்திரப்பள்ளி முதலிய ஸ்தலங்களிற் சென்று சுவாமிதரிசனஞ்செய்து திருப்பதிகம்பாடி துதித்து, மீண்டுஞ் சீர்காழிக்கெழுந்தருளித் தோணியப்பரைத் தரிசனஞ்செய்து வாழும் போது திருநீலகண்டப்பெரும்பாணர் பத்தினியாருடன் வந்ததை கேட்டுச் சென்று அழைத்துவந்து தோணியப்பர் ஆலயத்துக் கோபுரவாயிலுக்குச் சமீபத்தில் நிறுத்தித் தரிசனஞ் செய்வித்து, அவர்க்கோர் இடங்கொடுத்து விருந்திட்டுபசரித்தனர். திருநீலகண்டப்பெரும்பாணர் திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரை நோக்கித் தேவரீர் திருவாய்மலர்ந்தருளிய திருப்பதிகங்களை அடியேன் யாழிலிசைத்து வாசிக்கக் கட்டளையிட்டருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தனர். பிள்ளையார் திருவுளமகிழ்ச்சியோடுடன்பட்ட அந்நாள்முதல் திருநீலகண்டப் பெரும்பாணர் அவ்வாறே திருப்பதிகங்களை யாழிலிசைத்துப் பாடித் தம்மைவிட்டுப் பிரியாதிருந்தனர். ஆனுடைய பிள்ளையார் ஈடேசரைத் தரிசிக்கவேண்டுமென்னும் அன்பு மேன்மேலும் பெருகச் சிதம்பரத்துக் கெழுந்தருளி எழுநிலைக் கோபுரத்தைக் கண்ட அளவில் பூமியில் விழுந்து பல முறை பணிந்தெழுந்து சந்நிதியிற்சென்று பிதட்சிணஞ் செய்து பொன்னம்பலத்தின்கண் ஆனந்தத் தாண்டவஞ் செய்தருளும் சபாநாதரைத் தரிசித்துத் திருப்பதிகம்பாடித் துதித்துக் கண்

னில் ஆசுத்த பாஷ்பம் பெருகப் பரவசமடைந்து சற்றுத்தெளிந்து விடைபெற்றுச் சந்நிதியைவிட்டு அரித்திற்புறம்போந்து, அங்கிருந்து தற்கஞ்சித் திருவேட்களத்துக் கெழுந்தருளிச் சிவதரிசனஞ்செய்து திருப்பதிக மோதித்துதித்து அத்தலத்திலேயே வீற்றிருந்து மேடை சரைத் தரிசனஞ்செய்துகொண்டிருந்தனர்.

அங்கு வாழுகாளில் ஓர்நாள் தில்லைவாழந்தணர் மேடைசுரை அருச்சிக்கத் தக்க பேறுபெற்றார்களே யென்னுங் கருத்தோடு சிதம்பரத்துக் கெழுந்தருளின போழ்து அவ்வந்தணர்கள் சிவகணங்களாக இருக்கக்கண்டு வணங்கி அவ்வற்புதத்தைத் திருநீலகண்டப் பெரும்பாணருக்குக் காட்டியருளிச் சிற்சபையிற்சென்று சபாநாதரைத் தரிசித்துத் திருப்பதிகம்பாடித் துதித்து விடைபெற்றுக்கொண்டு புறம்போந்து பாணர் வேண்டுகோளால் திருவெருக்கத்தம்புலியூர் முதலிய சிவஸ்தலங்கட்குச்சென்று சிவதரிசனஞ் செய்துகொண்டு ஆங்காங்குத் திருப்பதிகமோதித் துதித்துப் பின்னர் விருத்தாசலத்திற் கெழுந்தருளிச் சுவாமிதரிசனஞ் செய்து திருப்பதிகம்பாடி அங்குச் சிலநாள் வீற்றிருந்தனர். அங்கிருந்து புறப்பட்டுத் திருப்பெண்ணாகடமென்னுந் தலத்திலே தூங்காணைமாடம் என்னும் ஆலயத்துட்சென்று சிவபெருமானை வணங்கித் திருப்பதிகம்பாடித் துதித்து அங்கிருந்து புறப்பட்டுத் திருவடிவருந்த மெல்ல மெல்லச் சென்று, திருமாறன் பாடியென்னுஞ் சிவஸ்தலத்திற் சேரப் பொழுதுபட்டதனால் அங்குத் திருக்கூட்டத்துடன் வீற்றிருக்கையில் திருவரத்துறையில் எழுந்தருளிய சிவபெருமான் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் சிரடிவருந்த நடந்துவந்த வருத்தம்பொறாது முத்துச்சிவிகை, முத்துக்குடை, முத்துச்சின்ன முதலியவற்றைக் கொடுத்தருள வேண்டுமென்று திருவுளங்கொண்டு அப்பதியின் கண்ணுள்ள அந்தணர்முதலிய சிவனடியார்களுக்குச் சொப்பனத்தி லெழுந்தருளிக் கட்டளையிட்டருளினர். அவர்களனைவரும் ஒருங்குகூடி ஆலயத்துட்சென்று பார்த்தபொழுது சிவபிரான் அருளியபடி இருக்கக்கண்டு மகிழ்ந்து அவற்றை எடுப்பித்துத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருமுன்பு கொண்டுபோய்வைத்துச் சுவாமி திருவாய்மலர்ந்தருளி

யதையும் விண்ணப்பஞ்செய்யக்கேட்டு அச்சிவபிரான் கட்டளையை மறுக்க அஞ்சித்தொழுது முத்துச்சிவிகையி லெழுந்தருளித் திருவாத்தூரைக்குச் சமீபத்திற்சென்று சிவிகையையிட்டிறங்கிச் சந்நிதியிற்போய் சுவாமியைவணங்கித் திருப்பதிகமோதித் துதித்துச் சிலகாலங்கிருந்தனர். மீண்டும் சீர்காழிக்கெழுந்தருளும்போது திருப்பழுவூர்முதலிய சிவஸ்தலங்களை வணங்கித் திருப்பதிகம் பாடியருளிச் சீர்காழியிற்சென்று தோணியப்பரைத் தரிசித்து வணங்கித் திருப்பதிகமோதிக்கொண்டிருந்தனர் அங்குப் பிதாவாணவர் தமக்குபயனஞ் செய்விக்கப்பெற்று வேதாகம முதலிய லைகனிணத்தும் ஓதாதுணர்ந்து பஞ்சாட்சரப்பதிகந் திருவாய் மலர்ந்தருளி வாழுகாளில் திருநாவுக்கரசுநாயனர் எழுந்தருளுவது கேட்டு எதிர்கொண்டு சென்றபோது அவர் பூமியில் விழுந்து வணங்க "அப்பரே எழுந்திரும" என்று தமதிண்டி திருக்கரங்களாலும் எடுத்துபசாரத்தோடு அழைத்துக்கொண்டு சந்நிதியிற் சென்று தோணியப்பரை இருவரும் தொழுது துதித்து அங்கெழுந்தருளியிருந்தனர்.

திருநாவுக் கரசுநாயனர் தம்மோடு சிலகாளிருந்து நீங்கிய பின்னர்த் திருஞானசம்பந்த மூர்த்திநாயனர் காலந்தோறும் தவறாது தோணியப்பரைத் தரிசனஞ்செய்து திருமொழி மாற்றுமுதலிய சித்திரக்கவிப் பதிகங்கள் ஓதித் துதித்து வாழுகாளில், இன்றுமுள்ள மற்றைச் சிவஸ்தலங்கட்குச் சென்று சிவபெருமானைத் தரிசிக்கவேண்டுமென்று திருவுளங்கொண்டு, தந்தையார்க்கறிவித்தனர் தந்தையாராகிய சிவபாதவிருதயர் பிள்ளையாரை நோக்கி வேள்விசெய்யப் பொருள் வேண்டும், ஆகையால், நாமுங்கூடவருகிறே னென்னச் சம்மதித்துப் புறப்பட்டுத் திருக்கண்ணூர்கோயில் முதலிய பற்பல சிவஸ்தலக்கட்குச் சென்று சிவதரிசனஞ் செய்து திருப்பதிகமோதித் துதித்துத் திருப்பாச்சிலாச்சிராமத்துக்கெழுந்தருளும் போழ்து அங்குக் கொல்லிமழவனென்னு மோரரசன் தன்புதல்வியைக்குற்ற முயலகநோய் எவ்வகையினுந் தீராமையால் மனவருத்தமுற்று அவன் சைவசமயப்பற்றுள்ள சந்ததியாளுகையால் அக்கன்னிகையைச் சிவ சந்நிதானத்திற் கொண்டுவந்து

கிடத்தினவத்தங்கிருந்தபோது தன்னாட்டுக்குள் திருஞானசம்பந்த மூர்த்திநாயனர் எழுந்தருளுவதைத் திருச்சின்ன வோசையா லுணர்ந்து நகரத்தை யலங்கரிக்க வுத்தரவுசெய்து தான் எதிர் கொண்டு சென்று வணங்கினன், ஆளுடைய பிள்ளையார் அவனை அழைத்துக்கொண்டு அவன் நகருக்குளெழுந்தருளிக் கோபுரவா யிலின் புறத்து முத்துச்சிவிகையை விட்டிழிந்துபணிந்து ஆலயத் தூட் சென்று பிரதக்ஷணஞ்செய்து சந்நிதானத்துட் செல்லுகை யில் அக்கன்னிகை பிரதம்போற் கிடத்தலிலேகண்டு, இருதிபாது, என்றுளினவ, அவ்வாசன் ஆளுடைய பிள்ளையாரைத் தொழுது 'அடியேனுடைய புத்திரி, இவளுக்குண்டாய முயலக நோய் தீரா மையால் சிவபெருமான் திருவுளமெப்படியோ', அப்படியாகட்டு மென்று இங்குக் கிடத்தினேன் என்றான், அங்ஙனம் கூறியது கேட்டுத் திருவுளமகிழ்ந்து கிருபைகூர்ந்து "துணிவளர்திங்கள் தலங்கி விளங்க" என்னும் திருப்பதிகமோதித் துதித்தவளவில் அக்கன்னிகை அந்நோய் நீங்கி எழுந்து தன்பிதாவினருகிற்சென்று நின்றனள். அவ்வரசன்கண்டு பரமானந்தமடைந்து தன் புதல்வி யோடு தானும் திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் திருவடிகளை வணங்கி நிற்கக் கண்டு திருவருள் புரிந்து பின்னர்ச் சந்நிதியிற் சென்று பணிந்து பதிகமோதித் துதித்துச் சிலகாளங்கிருந்து விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டுத் திருப்பைஞ்ஞீலி, திருவீங் கோய்மலை, திருக்கொடிமாடச் செங்குன்றூர், திருநகரை முதலா கிய சில சிவஸ்தலங்கட்குச் சென்று சிவதரிசனம் பண்ணித் திருப் பதிகமோதித் துதித்து மீண்டும் திருக்கொடிமாடச் செங்குன்றூர் க்கெழுந்தருளியிருந்தனர். அங்குக் குளிர்காலம்வர, அக்காலத் தங்கிருப்பார்க்கு ஆண்டுமூன்றாறும் உண்டாகும் குளிர்சுரந் தமது திருக்கூட்டத்தார்க்கும் எய்தியது நோக்கி "அவ்வினைக்கிவ்வினை" என்னும் திருவிலகண்டப்பதிகம் பாடியமாத்திரத்தில்அச்சுரநோய் தம் திருக்கூட்டத்தாரை விட்டோடியதன்றி அந்தாட்டிலுள்ளாரை யும் விட்டொழிந்தது, சிலகாளங்கிருந்து பின்பு புறப்பட்டுத்திருப் பாண்டிக்கொடுமுடி, திருக்கருகாவூர் முதலிய தலங்கள் பலவற்றி னுஞ்சென்று சுவாமிதரிசனம்பண்ணிப் பதிகமோதித் துதித்து

விடை பெற்றுக்கொண்டு திருவலஞ்சுழிக் கெழுந்தருளிச் சிவதரி சனஞ்செய்து பதிகமோதித் துதித்து அங்கு வீற்றிருக்குகாளில் முதிர்வேனிற்காலம் வந்தது, அங்ஙனமாகத் திருஞானசம்பந்த மூர்த்திநாயனர் திருச்சத்தி முற்றத் தெழுந்தருளிய சிவபெருமா னைத் தரிசிக்கவேண்டுமென்னும் அன்புமிகுதியால் அங்குச்சென்று கைலாசப்பதியை தொழுது பதிகமோதித் துதித்து விடை பெற் றுக்கொண்டு திருப்பட்டீச்சரத்துக்கெழுந்தருளினர், அத்தலத்தி லெழுந்தருளிய சிவபிரான் ஆஞ்ஞைபிழல் திருஞானசம்பந்தமூர் த்திநாயனர்க்குத் தோன்றுதபடி பூதகணங்கள் முத்துப்பந்தர் கொண்டெய்தி இருதுவெயில் வெப்பம் தணிப்பதற்குச் சிவபெரு மானால் கொடுக்கப்பட்டதென்று சொல்லுமொலியும் பந்தரும் ஆகாயத்தில் தோன்றக்கண்டு இருதும் நம் கடவுள் ஆஞ்ஞைபா யின் ஏற்றுக்கொள்ளத்தக்கதே யென்றிசைந்து பணிந்து சிவிகை யையிட்டிழிந்து பணிந்த அளவில் அம்முத்துப்பந்தலின் கால்களைப் பரிசனந் தாங்கிவர திருப்பட்டீச்சரத்துக் கெழுந்தருளி ஆலயத் தில் சென்று சிவபெருமானைத் தரிசித்துப் பதிகமோதித் துதித்து அங்குச்சிலநாள்வைகினர். பின்பு திருவாரூரை வடதளி முதலா யுள்ள பற்பல சிவஸ்தலங்கட்குச் சென்று சிவபெருமானைத் தொ ழுது பதிகமோதித் துதித்துத் திருவாவடுதுறைக்கெழுந்தருளிச் சிவதரிசனஞ்செய்து பதிகமோதித்துதித்து அங்குவீற்றிருந்தனர்.

அப்பொழுது சிவபாதவிருதயர் பிள்ளையாரை நோக்கி 'வேள்வி செய்வதற்கு ஆகுநாள் சமீபித்தது' ஆகலால் அதற்குப் பொருள் வேண்டும் என்று கூற திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் ஆலயத் துட் சென்று சிவபெருமானைத் திருப்பதிகமோதித் துதித்தவள வில் சிவகணேயால் ஆயிரம்பொன் னடங்கிய வொரு கிழியை யோர் பூதங்கொடுபோந்து பலிபீடத்தின்கண் வைத்துத் திருஞா னசம்பந்தமூர்த்தி நாயனர்க்கெதிரில் நின்று "இப்பொற்கிழி எடு க்குந்தோறும் குறைவுபடாது, இதைச் சிவபெருமானர் தேவரீ ருக்குக் கொடுக்கும்படி கட்டளையிட்டதனால் கொண்டுவந்துவைத் தேன்" என்று சொல்ல பிள்ளையார் அதைப் பலமுறை பணிந்தெ

டித்துச் சிரமேற்றங்கிப் பிதாவின் கையிற் கொடுத்து "நீர் செய்யும் வேள்விக்கேயன்றிச் சீர்காழியிலுள்ள அந்தணர்செய்யும் வேள்விகளனைத்திற்கு முதலும்" என்று கொடுத்துப் போக்கித் தாம் அங்குச் சில்காளிருந்து புரப்பட்டுத் திருக்கோழம்பம் முதலிய சிவஸ்தலங்கட்குச் சென்று சிவதரிசனஞ்செய்து தருமபுரத்துக் கெழுந்தருளினர். அப்போது திருநீலகண்டப் பெரும்பாணர் தம்முறவினர் எதிர்கொண்டு வந்து வணங்க அவர்களை நோக்கி, 'பிள்ளையார் திருவாய் மலர்ந்தருளுந் திருப்பதிகங்களை யாழில மைத்து வாசிக்கும் அறிவபேறுபெற்றேன்' என்று கூறக்கேட்டு, 'நீர்யாழொடு பொருத்தி வாசிப்பதனு லப்பதிகங்களுலகமெங்கும் விளக்கமுற்றிருக்கின்றன' என்றுரைக்கப் பாணர்சமுற்று உடனே சுவாமிகள் சந்நிதானத்தில் விண்ணப்பஞ்செய்து யாழிற் பொருந்தாவண்ண மோர்திருப்பதிகங் கட்டளையிட்டருளவேண்டுமென, அவ்வாறே ஆளுடையபிள்ளையார் "மாதர்மடப்பிடி" என்னுந் திருப்பதிகம் பாடியருளினர். அதைப் பாணர் யாழிலமைத்துப் பாட இசையாமையால் மனநடுங்கி இந்தயாழினுலன்றே சுவாமிகளருளிச்செய்த திருப்பதிகத்தினிசையை யாழிற் பொருத்திப்பாடுவேன் என்று சொல்ல ஈவிசைந்ததென்று அதைச் சிதைக்க வோங்கியபோது பிள்ளையார் தடுத்தருளி, பெரும்பாணரே நீர் திருப்பதிக விசையை உம்மாலியன்றமட்டும் இசை லமைத்துப் பாடும்" என்று யாழைவாங்கி வாசித்துக்காட்டிக் கொடுத்தருள, பாணர் பிள்ளையாரைத்தொழுது யாழைவாங்கிச் சிரமேற்கொண்டனர், பிறகு திருஞானசம்பந்தப் பிள்ளையார் தருமபுரத்தைவிட்டுப் புறப்பட்டுச் சில சிவஸ்தலங்கட்குச் சென்று சிவதரிசனஞ்செய்து கொண்டு திருச்சாத்தமங்கைக்கெழுந்தருளினர். அந்தத் திருப்பதியினின்று வந்து தம்மை வணங்கிய திருநீலநக்கநாயனாரோடு அயவந்தி என்னும் ஆலயத்திற் சென்று சிவதரிசனஞ் செய்துகொண்டு அந்நாயனர் திருமாளிகைக்குப் போய்த் திருவமுது செய்து அங்குச் சிலநாளிருந்து புறப்பட்டுத் திருநாகைக்காரோணமுதலிய சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டெழுந்தருளும்போது

திருச்செங்காட்டங் குடியிலிருக்குஞ் சிறுத்தொண்டநாயனார் எதிர் சொண்டு வந்து வணங்கி அழைத்துக்கொண்டு போகப்போய்க் கணபதீச்சரத்திற் சிவதரிசனஞ் செய்துகொண் டங்கிருந்தார்.

இதற்கும்போது ஒருவணிகன் வழிச்செல்வோனுப் ஒரு கன்னிகையை உடன்கொண்டு போந்து சோயிலுக்குப் புறத் திலே ஒருமடத்திலே நித்திரை செய்யும்போது அவன் பாம் புகடித்திறந்தான். அதுகண்டு அக்கன்னிகை பூமியில் விழுந்து புரண்டழுது கொண்டிருப்பதைச் சிவதரிசனத்துக் கெழுந் தருளிய ஆளுடைய பிள்ளையார் கேட்டுத் திருவுளமிரங்கி அவளுக்கருள் செய்யும் பொருட்டு அடியவர்களோ டெழுந் தருளி வந்து நின்று அவளை நோக்கி "பயப்படாதே நிகழ்ந்த சமாசாரத்தைச்சொல்" என்றருளிச் செய்தார். கன்னிகை கண்ணீர் பெருகப் பிள்ளையார் திருவடியில் விழுந்து கமல் கரித் தெழுந்து நின்று, வைப்பூரிலிருக்கும் என்பிதாவாகிய காமனென்பவனுக்குப் புத்திரிகள் எழுவர், அவர்களில் யான் நீங்கலாக மூத்தோர்- அறுவரையும் தன் சகோதரியின் புத்திர னுகிய இவனுக்கே விவாகஞ் செய்துகொடுக்கிறேனென்று பல முறைசொல்லித் திரவிய அபேட்சையால் பிறருக்கு விவாகஞ் செய்து விட்டான், அதுகண்டு வருத்தமுற்ற இவனுக்கே மனைவியாக வேண்டுமென்று கருதித் தாய் தந்தையர்க்குத் தெரியாது இவனுடன் புறப்பட்டு வந்தேன், இவன் இங்குப் பாம் புகடித் திறந்தான். அடியேன் ஆதரவற்றிருக்கின்றேன், தேவரீர் எழுந்தருளப் பெற்றதனல் அடியேன் சஞ்சலந்தீர்ந்தது, என்றான் ஆளுடைய பிள்ளையார் சிறுபைகூர்ந்து விஷநீங்கும் பொருட்டு "சடையாயெனுமால்" என்னுந் திருப்பதிகமோதி அவனைப் பிழை ப்பித்து அவனுக்கு அக்கன்னிகையை மணஞ்செய்வித்துப் போ க்கி, அங்கு வீற்றிருக்குகாளில், சிறுத்தொண்ட நாயனர் வந்து பிரார்த்திக்கமீண்டும் திருச்செங்காட்டங் குடிக்கெழுந்தருள் விருப் பமுற்றுத் திருமருகற்கோயிலிற்சென்று வணங்கிச் சிவபெருமா னர் தாம் திருச்செங்காட்டங் குடியிலிருக்கின்ற திருக்கோலத்தை

அவருக்கு அங்கே காட்டியருள மனமகிழ்ந்து "அங்கமும் வேத முமோதுகாவ்" என்னும் திருப்பதிகம்பாடி அங்கு சிலகாளிருந் தபுறப்பட்டுப் பற்பல சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு திருப் புகலூருக்குச் சமீபித்து, அப்பதியினின்று வருது தம்மை எதிர் கொண்டு வணங்கிய முருகநாயனார் முதலிய அடியார்களோடு திருக் கோயிலுட்சென்று சிவதரிசனஞ்செய்து முருகநாயனார் திருமடத் துக் கெழுந்தருளினர். அங்கு வீற்றிருக்குநாளில் திருநாவுக்கரசு நாயனார் திருவாரூரைவணங்கித் திருப்புகலூருக் கெழுந்தருளு கின்றார் என்னும் செய்தி கேட்டு எதிர்கொண்டுவர, திருநாவுக் கரசுநாயனரும் எதிர்கொண்டுவந்தனர். இருவரும் ஒருவரை யொருவர்வணங்கிமகிழ்ந்தனர். அப்பொழுது ஆளுடைய பிள்ளை யார் மருணீக்கியாரைநோக்கி 'அப்பரே' நீர் வருநாளில் திருவா ரூரிலே நிகழ்ந்த சிறப்பைச்சொல்லும், என வாகீசர் திருவா லிலைச்சிறப்பைத் திருப்பதிகத்தாற் சொல்லியருளப் பிள்ளையா ரதுகேட்டு "நானங்குச் சென்று சிவதரிசனஞ்செய்து மீண்டு வந்து உம்முடன் இருப்பேன்" என்று சொல்லிப் புறப்பட்டுத் திருவிற்குடி வீரட்டத்தை வணங்கித் திருவாரூரைச் சேர்ந்து புற்றிடங் கொண்டாரை வணங்கித் திருப்பதிகம்பாடி அங் கெழுந்தருளி யிருக்குநாளில், திருவலிவலம் திருக்கோவில் முதலிய சிவஸ்தலக்கட்குச் சென்று சிவதரிசனஞ் செய்து கொண்டு மீண்டும் திருவாரூரில் வந்திருந்து பிறகு திருப்புக லூர்க் கெழுந்தருளும்போது அத்தலத்தினின்று எதிர்கொண்டு வந்த திருநாவுக்கரசு நாயனர் முருக நாயனர் முதலிய திருத் தொண்டர்களோடுசென்று சிவதரிசனஞ்செய்துகொண்டு அங் கிருக்கு நாளில் திருநீலநக்க நாயனரும் சிறுத்தொண்ட நாய னரும் வந்துடனிருந்தனர். சிலநான் சென்றபின்பு ஆளுடைய பிள்ளையார் திருநாவுக்கரசு நாயனரோடு புறப்பட்டுத் திருவம் பர், திருக்கடவூர் முதலிய சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு திருவீழிமிழலையிற்சென்று சிவதரிசனஞ்செய்து அங்குவீற்றிருக் கும்போது, மழையின்மையால் பஞ்சமுளதாக உயிர்கள்வருந்

தினர்; சிவனடியார்களும் பசியால் மெலிந்து வாடினர். அது கண்டு பிள்ளையாரும், அப்பரும் திருநீறுதரித்த சிவனடியார் களுக்கும் இடுக்க ணுளதாமோ வெனத் திருவுளமிரங்கிச் சிவ பெருமான் திருவடிகளைத் தியானித்துக்கொண்டு அன்றிரவு நித்திரைசெய்கையில் சிவபெருமான் அவர்களுக்குச் சொப்ப னத்தில் எழுந்தருளிக் "காலமேபதத்தால் நீங்கள் வருந்தினீர்கள். ஆயினும், உங்களை வழிபடும் அடியவர்கள் வருத்தத்தை நீக் கும்பொருட்டு இப்பஞ்ச நீங்குமட்டும் தினந்தோறும் திருக் கோயிலின்றெழுக்குப் பீடத்திலும், மேற்குப்பீடத்திலும், ஒவ்வொரு காசு வைத்தருளுகிறோம், என்று மறைந்தருளினர். பிள்ளையார் விழித்தெழுந்து மருணீக்கியாரோடு ஆலயத்திற் சென்று அங் ஙனமே பிருக்கக்கண்டு மகிழ்ந்தெடுத்துச் சிவனடியார்கட் கமுது படைத்து ஆனந்தமடைந்திருக்குங் காலத்தில், மழைபெய்து பஞ்சநீங்கியது. உடனே புறப்பட்டு மார்க்கமத்திலுள்ள சிவ ஸ்தலங்களை வணங்கிக்கொண்டு திருமறைக்காட்டிற் சென்று ஆலயத்துட்புகுந்து வலஞ்செய்து வேதங்கள் பூசித்துத் திருக் காப்பிட்ட அங்ஙாண்முதல் இங்ஙாள்மட்டும் அடைக்கப்பட்டே யிருக்கும் திருவாயிலுக்கு முன்போய் திருநாவுக்கரசு நாயஞ ரால் திறப்பித்துச் சிவதரிசனஞ்செய்து பின்னர்த் தாம் திறக் கவும் மூடவுமாயிருக்கத் திருப்பதிகம்பாடி அங்கிருந்தனர்.

அப்பொழுது பாண்டியநாட்டிலே பாண்டிய ராஜன் தான் முற்பிறப்பிற்செய்த தீவினையால் சமணர்களுடைய தூண்டுதலை க்குட்பட்டு மெய்ச்சமயமாகிய சைவசமயத்தைக்கைவிட்டுப் பொய்ச் சமயமாகிய ஆருகதமதத்திலே பிரவேசித்தான். 'அரச னெவ்வழி அவ்வழியக்குடி' என்றும் பழமொழிப்படி குடிகளும் அவ்வாறுயின. இங்ஙனம் சமணசமயம் பெருகியும் அப்பாண் டியன் மனைவியாராகிய மங்கையர்க் கரசியாரும், அவ்வரசன் முதன் மந்திரியாராகிய குலச்சிறைநாயனாரும் ஆகிய இருவரும் சைவசமயப் பற்றுவிடாதவர்களாய் ஒழுகுகாளில் அளவிறந்த

அற்புதங்களைச் செய்துவரும் திருஞானசம்பந்தப் பிள்ளையார் வேதாரணியத்தில் எழுந்தருளியிருப்பதைக் கேள்வியுற்றுச் சிலரை ஏவ, அவர்கள் அங்குச்சென்று ஆளுடைய பிள்ளையாரைக் கண்டு வணங்கித் தாம் வந்த செய்திசொல்லக்கேட்டுப் பாண்டி காட்டுக்கெழுந்தருளி அங்கோர்மடத்தில் வீற்றிருந்தனர். அன்றிராத்திரி படுபாவிகளாகிய சமணர்கள் திருமடத்தில் தீயிடக் கண்டு பயந்து "செய்யனே திருவாலவாய்" என்னுந் திருப்பதிகத்தை "அமணர்கொளுவுஞ் சுடர் பையவேசென்று பாண்டியற் காகவே" என்ற பாடியருளவே அவ்வக்கினியின் வெப்பம் பாண்டியனையடைந்து வருத்த அவன் வருந்தும் பொழுது ஞானசம்பந்தமூர்த்தி எழுந்தருளித் திருநீற்றுப் பதிகம்பாடியருளி, விபூதியைப் பாண்டியனுடலில் பூசிய அளவில் அப்பிணிநீங்க அரசன் எழுந்து சமணர்களைநோக்கி "நீர்தோற்றீர்களே" என்றனன். அவர்கள் "இவ்வொருவிஷயத்திலேயே தோல்வியும் வெற்றியும் சொல்லக்கூடுமா? எங்களிருவோமுடைய சமயக்கருத்தையும் ஏட்டில் வரைந்து அக்கினியிலிட்டு வேகாமலிருப்பது யாதோ அதுதான் உண்மைச் சமயமாம்" என்றுசொல்லி அவ்வாறே தங்கள் சமயக்கருத்தை ஓரேட்டிலெழுதித் தீயிலிட்டனர். திருஞான சம்பந்தமூர்த்தி நாயனரும் "போகமார்த்த பூண் முலையாள்" என்னும் திருக்கள்ளாற்றுப் பதிகமெழுதிய ஏட்டை அதே தீயிலிட்டனர், அவ்வேடுக ளிரண்டில் சமணர்களிட்ட ஏடு அவ்வக்கினியால் தகிக்கப்பட்டது. ஆளுடைய பிள்ளையாரிட்ட ஏடுவேகாமல் முன்னிலும் பசுமையும் புதுமையுமாய் விளங்கிற்று. அதைச்சபைமுன் எடுத்து வைத்தனர். பாண்டியன் சமணரைநோக்கி "இப்போதாவது தோற்றீர்களோ" என்னதோற்றவர்கள் "மூற்றிலும் தோற்கார்கள்" முன்னே யிரண்டுதரம் வாதுசெய்தோம், இன்னும் ஒருதரம் செய்யவேண்டும், ஆதலால், முன்போல எங்களிருவோமுடைய சமயவுண்மையை ஏட்டிற்றீட்டி வைகைநதியிலிட்டால் எது எதிரேறுகிறதோ அதுவே உண்மைச்சமயம், என்றமாத்திரத்தில் குலச்சிறை

நாயனார் சமீபத்தில் வந்து, மும்முறை தோற்றிக்களானால் செய்வது யாது? என்ன அவர்கள் வாய்தவறிக், கழுமலம் இழந்தும், என்றனர். உடனே யாவரும் வைகைக்கரையிற் சென்றனர்; அரசன், தங்கள் தங்கள் சமய வண்மையை வரைந்த வட்டை வைகையிலிடக் கடவர்கள் என்றனன். சமணர் "அத்தி நாத்தி" என்றெழுதிய வட்டைவைகையிலிடுதலும், அது விரைந்து கடலை நோக்கிச்சென்றது. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் "வாழ்க வந்தனர்" என்னுந் திருப்பதிகமபாடி வட்டில் வரைந்து வைகையிலிட்டனர். அத்திருவேடு எதிர்த்து நீரைக்கிழித்துச சென்றது. சிவபெருமானே எல்லாப் பொருளு மென்று எழுதிய திருவேட்டிலே "வேகதணிமாங்குக" எனறருளியபடியால் அரசன் கூன் நிமிர்ந்தது, குலச்சிறை நாயனர் திருவேட்டை எடுக்குமபோருட்டுக் குதிரை ஏறிச்சென்று பிள்ளையார் அவ்வேடு தங்கும்படி "வன்னியுமத்தமும்" என்னுந் திருப்பதிகம் பாடினதினால் திருவேடகமென்னுந் தலத்தில் தங்கநோக்கி எதிர்த்துவந்த அளவில சமணர்கள் தாங்கள் கூறியபடி கழுமலிவினர். அரசன் முதலிய அடியவர்களனைவரும் திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் திருவடியில் விழுந்து வணங்கித் துதி செய்து மகிழ்ந்தனர். கழுமலிவினர் நழிந்நின்ற மற்றையோர் விபூதி சாதனந் தரித்துச் சைவராயினர்.

அதன் பின்பு பிள்ளையார் பாண்டியன் முதலாயினோடு சென்று சொக்கநாதரைத் தரிசித்து வணங்கி இன்னும் பாண்டிய நாட்டிலுள்ள சிவஸ்தலங்கள் பலவற்றையும் வணங்கி அவ்விடம் விட்டுச் சோழநாட்டின் கண்ணுள்ள சிவஸ்தலங்களை வணங்கிக் கொண்டு திருத்தெளிச்சேரியை யடைந்து சிவதரிசனஞ்செய்து பருகையில் பரசமயகோளரி வந்தார் என்றதும் திருச்சின்ன வோசையைப் போதி மங்கையிலிருக்கும் பௌத்தரில் புத்தநந்தி என்பவன் கேட்டு மனம் பொறுமல் அவன் பௌத்தர் கூட்டம் சூழச்சென்று தடுத்தனன். அதைக்கேட்டுத் தேவாரத்திருமுறை எழுதும் சம்பந்த சரணலயர் பொறுமல் தேவாரத்திலே,

"புத்தர் சமண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தஞ் சவர்க டெளிந்து தேறின
வித்தக நீறணி வார்ஜீனப் பகைக்
கத்திர மாதனவஞ் செழுத்தமே."

என்னுந் திருப்பாடலை யோதி "இப்புத்தனுடைய சிரம் உருண்டு விழும்படி இடியிடித்து விழக்கடவது" என்று சொல்லிய உடனே தலையிலிடிவிழுந் திறந்தனன். மற்றைப் பவுத்தர்கள் எல்லாம் அஞ்சியோடினர். மீண்டு மவர்கள் ஒருங்குகூடி கம்பில் சாரிபுத்தனைத் தலைவனாகக்கொண்டு நீங்கள் எங்களோடு மந்திரவாதமின்றிக் தருக்குஞ்செய்ய வாருங்கள்" என்ன, திருஞான சம்பந்தமூர்த்திநாயனர் திருக்கூட்டத்துடன் அங்கோர் மண்டபத்திலெழுந்தருளினர். சம்பந்த சரணாலயர் சுவாமிகளுத்தரவு பெற்றுச் சாரிபுத்தனோடு வாதுசெய்து அவனை வென்று அவர்களனைவரையுஞ் சைவர்களாக்கினர் பிள்ளையார் அங்கிருந்து புறப்பட்டு மற்றைச் சிவஸ்தலங்கட்குச் சென்று சிவதரிசனஞ் செய்துகொண்டு தொண்டைமண்டலத்தக்கு வந்து அங்குள்ள காஞ்சீபுரமுதலிய ஸ்தலங்களை வணங்கி ஸ்ரீ காளஸ்திரிக் கெழுந்தருளிச் சுவாமி தரிசனஞ் செய்து அங்கு வீற்றிருக்கையில், திருமயிலையில் வைசியகுலதிலகராகிய சிவனேச செட்டியாருக்குக் கபாலீசர் திருவருளால் ஒரு புத்திரிபார் பிறந்து வளருகாளில் ஒருநாள் மலர்பறிக்கப் பாங்கிமாரோடு நந்தவனத்திற் சென்று பூப்பறிக்கையில் அவர்தீண்டியிறக்க, மணிமந்திர ஔஷதங்களாலுந் தீராமை கண்டு இவனைத் திருஞானசம்பந்தப் பிள்ளையாருக்கென்று வைத்திருந்ததனால் தகனஞ்செய்த என்பையும் சாம்பரையும் அவர் வருவதனுஞ் சேமஞ்செய்து வைப்பேனென்று துணிந்து அவ்வாறே செய்து என்பையும் சாம்பரையும் ஓர் குடத்திலிட்டு வஸ்திராபரணங்களணிந்து கன்னிமாடத்தில் பஞ்சணைமேல் வைத்து முன்போல உபசரித்துவந்தனர். இவ்வாறு செய்துகொண்டிருக்கையில் ஆளுடையபிள்ளையார் திருவொற்றியூரில் எழுந்தருளியிருப்பதைக் கேள்வியுற்றுப் பாமாலைகளுடன் அங்குச் சென்று சுவாமிகளைக் கண்டு வணங்கித் திருமயிலைக் கெழுந்தருளப்படி

விண்ணப்பஞ்செய்ய அப்படியே பிள்ளையார் திருமயிலைக் கெழுந்த ருளிக் கபாலீசரைத் தரிசித்து வணங்கிச் சிவனேசரை நோக்கி என்பும் சாம்பருமிட்ட குடத்தைக் கொண்டுவரக் கட்டளையிட்டு அவ்வங்கத்தை "மட்டிட்ட புன்னையங் கானன்மடமயிலே" என் னும் பதிகமோதிப் பெண்ணுக்கிக் கபாலீசர் சந்நிதானத்தில் விடை பெற்றுக்கொண்டு திருவான்மியூர் முதலிய சிவஸ்தலங்களை வணங் கிக்கொண்டு சீர்காழிக் கெழுந்தருளித் தோணியப்பரைத் தரிச னஞ் செய்துகொண்டிருந்தனர். அங்குச் சிவபாதவிருதயரும் அவர் சுற்றத்தாரும் பிள்ளையார் திருமுன்பு வந்து "தேவரீர் வை திகநெறியை விளக்கும்பொருட்டு ஓர் கன்னிகையைத் திருக்கல் யாணஞ்செய்தருள வேண்டும்" என்று பிரார்த்திக்க உடன்பட்டுத் திருநல்லூரிலிருக்கும் நம்பியாண்டார் நம்பி என்பவருடைய புத்தி ரியை சுந்தரமூர்த்திப்படி திருமணஞ்செய்து தீயை வலம் வரும்பொ ருட்டு எழுந்து அக்கினி சிவபெருமானே என்று திருவுளக்கொ ண்டு சிவாலயத்துட்சென்று "நல்லூர்ப்பெருமணம்" திருப்பதிகம் பாடியருளினர், சிவபெருமான் திருவுளமகிழ்ந்து "நீயும் உன் மனை வியும் உன்னுடைய விவாகத்தைக் காணவந்தவர்கள் யாவரும் இக்கோ தித்தை வந்து நம்மையடையுங்கள்" என்றருளி அவ்வால யமுற்றுஞ் சோதியாகி அச்சோதித்தூளார் வாயிலை வருத்தக் காட்ட, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் "காதலாகிக் கசிந்து" என்னும் நமச்சிவாயத் திருப்பதிகம்பாடியருளிக் கல்யாணத்துக்கு வந்தவர்களையெல்லாம் "இக்கோதித்துட்செல்லுங்கள்" என்று திரு வாய்மலர்ந்தருளிப் பின்பு திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தம் முடைய பத்தினியார் கையைப் பற்றிக்கொண்டு அச்சோதியை வலம் வந்து அதனுட் சென்று கலந்தனர். பிறகு அந்தச் சோதி மறைந்து பழையபடி ஆலயமாகக்கண்டு மண்ணுலகத்தாரும் விண் ணுலகத்தாரும் வணங்கித் தோத்திரஞ் செய்தார்கள்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் சரித்திரம்

முற்றிற்று.

திருநாவுக்கரசு நாயனார்.

திருநேரிசை. (4-ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்.

1 நெடியமாலற்பிரமனேதிசெலும்பிலியங்கொள்ள
வடியொடு முடியுங்காணாதருசசுனற்கம்பும்விம்மும்
குடியுடைவேடராகித்தூயமந்திரங்கள்சொல்லிக்
கொடியநெஞ்சீர்கூடித்தார்குறுக்கைவீரட்டனீரே.

2 ஆத்தமாமயனுமாயுமன்றிமற்றெழுந்தமேதவர் [ஏத்த
மீசாத்தமெம்பெருமானென்றுதாழுமேதாத்திரங்கள்
நீர்த்தமாமட்டமிழ்சிருடையெழுகாலுங்
கூத்தராய்வீழ்ந்திடைப்பாற்குறுக்கைவீரட்டனீரே.

3 நீற்றினைநிறையப்பூசிநித்தலுங்கியமஞ்செய்து
வாற்றுநீர்பூரித்தாட்டுமெந்தணலுரைக்கிலவான்
சாற்றுகாளற்றதென்றுதருமமாசற்காய்வந்த
கூற்றினைக்குமைப்பர்போலுங்குறுக்கைவீரட்டனீரே.

4 பொய்யினைத்தவிர்மின்பிறமலாவடிமைசெய்ய
வையமீருனிச்செய்யாதிதியேயாதிரிந்திங்
கையகற்கண்ணிற்பிக்கமல்குசிற்றம்பலத்தே
யையனுண்டுடனாகாண்பான்பரமனென்வந்தவாறே.

5 மனத்தினுள்ளிகைத்துகாளுமாண்பலாதெரிகண்மேலே
சினப்பரா லென்செய்கேமீளுகலையலிகண்டத்தாலே
நினைத்தநீவேதகுன்றுத்தில்லைசிற்றம்பலத்தே
யினத்துவெள்ளிலையங்காண்பாலடியேனென்வந்தவாறே.

6 நெஞ்சினுத்தூய்மைசெய்துநினைக்குமாநினைப்பியாதே
வஞ்சமேசெய்திதியாலோவானவர்தலைவனீ
மஞ்சணைசேர்சாலுத்தில்லைமல்குசிற்றம்பலத்தே
யஞ்செழுத்தாங்காணநின்றுவழகனீயாடுமாறே

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு நாயனார் சரித்திரம்.

போற்றுதிருவாமூரில் வேளாண்டொன்மைப்
பொருவில் குறுக்கையர்தியர் புகழனார்பான்
மாற்றருமன் பினிற்றிலக வதியாரூரு
வருதிதபின்பு மருணீக்கியாருந்
தோற்றியமண்சமயமுயு துயரகீங்கத்
துணைவரருடரவந்த சூலைநோயாற்
பாற்றருளிடையெய்திப் பாடலிபுத்திரத்திற்
பாழியொழித்தரன திகைப்பதியில்வந்தார்.

வந்துமக்கையாருளானிறசாத்தி
வண்டமிழாலேஞ்சீர்ந்து வாக்கின்மன்னைப்.
பெங்கைபாடிவிடம்வேழம் வேலைநீந்தி
யியன்குலல்கொடியிடபம் விளங்கச்சாத்தி
யந்தமிலப்பூதிமக னரவுமாற்றி
யருட்காசுபெற்றுமறை யடைப்புநீக்கிப்
புந்திமகிழ்ந்தையாற்றிற் கயிலைகண்டு
பூம்புகலூரான்பாதம் பொருந்தினரே.

சரித்திரம்.

திருமுனைப்பாடி நாட்டில் சிறப்புற் றோங்கிய திருவாமூரில் வேளாளர் குலத்தில் குறுக்கையர் குடியில்தோன்றிய புகழனார் செய்த அருந்தவத்தால் அவர்மனைவியாராகிய மாதினியார் திருவயிற்றில் திலகவதியார் அவதரித்தனர். பின்னர் மருணீக்கியாரென்னும் பிள்ளைத் திருநாமமுடைய திருநாவுக்கரசுநாயனார் அவதரித்தனர், இவர்களிருவரில் மருணீக்கியார் சைவாகம

முதலிய கலிபயின்று வருநாளில் சிலமுதியோர் புகழனரிடத்து வந்து 'கலிப்பகையர ரென்பவருக்குத் திலகவதியாரைத் திருமணஞ்செய்விக்கத் தரவேண்டும்' என்ன, அவர் அதற்கு உடன்பட்டனர். இச்செய்தியை அம்முதியோர் கலிப்பகையார்க் கரிவிக்க அவரும் மணஞ்செய்துகொள்ள விருப்பமுற்றிருக்கும் போழ்து, சோழமகாராஜன் சேனாபதியாகிய கலிப்பகையாரை வடதேசத்துப் பகைமன்னரோடு போர்செய்யும்படி ஏவ, அவர் சேனையுடன் சென்று பகைவரோடு நெடுநாள் யுத்தஞ்செய்துக் கொண்டிருந்தனர். அவர் அங்ஙனமிருக்க, இங்குப் புகழனரும் மாதினியாரும் சிவபதம் அடைந்தனர் திலகவதியாரும் மருணீக்கியாரும் தாய்தந்தையர் தேகவியோக மடைந்ததறிந்து தன்புற்று உறவினர் தேற்றத் தெளிந்துமருணீக்கியார் தாய்தந்தைகட்குச் செய்யவேண்டுங் கர்மாதிகளைச்செய்து முடித்திருந்தனர், அங்கு அமர் செய்திருந்த கலிப்பகையார் பகைவரைவென்று புகழ் கொண்டு வீரசுவர்க்கம் எய்தியதைக் கேள்வியுற்ற திலகவதியார் உயிர் துறக்கக்கருதியபோது மருணீக்கியார் வேண்டிகோளால் அக்கருத்தை விட்டுச் சிவபெருமான் திருவடிக்கணன்புபூண்டு அந்நெறிக்கண்ணே யிடையரு தொழுகி னின்றனர். இவர் இவ்வாறிருக்க மருணீக்கியார் வீட்டுநெறியை யடையக் கருதியும் சிவபெருமான் திருவருளின்மையின் மெய்ச்சமயமாகிய சைவ சமயத்தை விட்டுப் பொய்ச்சமயமாகிய சமணசமயத்தைக் கைக் கொண்டு அச்சமயநூல்களைக் கற்றுணர்ந்து அவரின்மேம்பட்டுத் தருமசேனரென்னும் பெயர்பெற்று ஒழுகுவதைத் திருவதிகையிற் சென்று சிவவேடம் பூண்டு சிவாலயத்தில் திருவலகிடுதல் திருமெழுகிடுதல் திருமாலை தொடுத்தல் முதலிய திருத்தொண்டு செய்து வாழுந் திலகவதியார் அறிந்து, தம்முடன் பிறந்தவராகிய மருணீக்கியார் பரசமயப் படுகுழியில் வீழ்ந்து கெடுவதை வீரட்டானேசுவரர் சந்நிதியில் நாள்தோறும் விண்ணப்பஞ் செய்யாநிற்க, ஒருநாள் வீரட்டானேசுவரர் திலகவதியார் சொப்பனத்தெழுந்தருளி, 'உன்னுடன் பிறந்த வனுக்குச் சூலை நோயை உண்டாக்கி அவனை நாம் ஆட்கொள்

ஞ்சுகிறேம், நீதுன்பப்பட வேண்டுவதில்லை, என்று கட்டளை யிட்டருளி அவ்வாறே அவர்க் கற்நோயை உண்டாக்கியவளவில் அவர் பொறுத தமக்குத்தெரிந்த மந்திரங்களாலும் சமணமுனி வர் மந்திரங்களாலுந்தடுக்கவும் அதுமேன்மேலு முதிர்வது கண்டு இனி யிதற்கென் செய்வோமென்று வருந்தித் திலகவதி யாருக் கறிவிக்க, அவர் 'நாம் அங்குவரோம், என்றதை ஒரே வலாளனல் உணர்ந்து அவனியே தூணைப்பற்றிக் கொண்டு ஒரு வர்க்குந் தெரியாது இராவழிக்கொண்டு சென்று திருவதிகை யென்னுஞ்சிவதலத்திற் சேர்ந்து திலகவதியாரைக்கண்டு வணங் கினாயே? இச் சூலநோயால் யான்படுந் துயரத்திற்கோரளவில்லை இது தீரும்படி நீர் அனுக்கிரகஞ் செய்யவேண்டும், என்று பிரார்த்தித்தனர். திலகவதியார் மனமிரங்கிச் சிவபெருமான் திருவருளைப் பலமுறை சிந்தித்துத் தொழுது சகோதராகிய மருணீக்கியாரை நோக்கி 'நீர்கடைத்தேறும பொருட்டு வீரட் டானேசுவரர் திருவருளாலுமக் கிந்நோய் நேரிட்டது, ஆகலால், அவரைத் தொழுதுதித்தாலன்றித் தீராதென்று திருநீரளித்து அணிந்து கொள்ளச் சொல்லிச் சுவாமி சந்நிதானத்திற் கழைத் துக்கொண்டு போகச்சென்று ஆலயத்தைப்பிரதட்சிணஞ் செய்து வணங்கிப் பரமபிதாவாகிய சிவபெருமான் திருபையால் பதிகம் பாடவேண்டுமென்னும் பேரன்பு தம்முள்ளத்தின் கண் உதிக்க அவ்வாறே "கூற்றாயினவாறு விலக்ககிலீர்" என்னுந் திருப்பதி கம் பாடினர். அங்ஙனம் பாடிய மாத்திரத்தில் அந்நோய் நீங்கிப் பேரானந்தமடைந்து சிவபெருமான் திருவருள் இருந் தபடியைக் கருதிப்பரவசமுற் றிருக்கும்பொழுது 'நீ இனிமை யாகப் பதிகமோதிய தன்மையால் உனக்கினி நாவுக்கரசு என வோர் பெயர்வழங்கக் கடவது' என்று அசரீரிவாக்குண்டாக அதுகேட்டு மிகுதியு மகிழ்ச்சியுற்றுப் பசுபதியைப் பலமுறை பணிந்து அன்றுதொட்டுச் சிவவேடம் பூண்டு திருத்தொண்டு செய்திருந்தனர்.

சமணர்கள் இதுதறிந்து இனி நம்முடைய சமயம்பொய்த் தது, அரசனிதுணர்ந்தால் அவனுஞ் சைவனுவான், ஆகலால்

அவன்றிவதற்கு முன்னே நாம்போய் வேறுவகையாகத் தெரிவிக்க வேண்டுமென்று தம்முள் ஆலோசித்து அரசனிடத்துச் சென்று தருமசேனர் சைவசமய விருப்பத்தால் அதிற் சேரக்கருதிக் கபட மாகத் தமக்குச் சூலைநோய் கண்டதென்றும் அது நம்மந்திரங் களால் தீரவில்லையென்றும் கற்பித்து நம்முடைய சமயத்தை இழி வுபடுத்தித் தம்முடைய தமக்கையினிடத்திற்சென் றுசைவராயின ரென்று சொல்லினர். அரசன் அதுகேட்டு வெகுண்டு இங்ஙனஞ் சமயத்துரோகஞ் செய்தவனை யாது செய்யவேண்டுமென, அவர் கள் கீற்றரையிலிடவேண்டுமென்று அரசனுணையால் அவ்வண்ண மே செய்யத் திருநாவுக்கரசு சுவாமிகள், "மாசில்வீணைய மாலைமதி தியுமே" என்னும் திருப்பதிகம் பாடிச் சிவபெருமானைத்தித்து அதனுற் சிறிதும் இடைஞ்சலின்றியிருக்க சமணர்கள் ஏழாநாள் கீற் றறையைத் திறந்துபார்க்கும்போது அவர் தமது திருமேனியில் யாதொரு துன்பமுமின்றி யிருக்கக்கண்டு அதிசயித்து மீண்டும் பாலில் விடங்கலந்துகொடுக்க அதையுமுண்டு உயிர்வாழ்ந்திருந்த னர். பின்னர் அவரை மிதிக்கும்படி யானையை ஏவினர். அப் போது "சுண்ணவெண்சந்தனச்சாந்து" என்னும் பதிகம் பாடியருள அவ்யானைத் திருநாவுக்கரசுநாயனரை வணங்கித் தன்மேல் ஏறியி ருந்த பாகனையுஞ் சமணரையுங் கொன்று சென்றது. பிறகு கற் றூணிற் கட்டிக் கடலிலிட்டனர். அப்பொழுது மருணீக்கியார் பரமசிவத்தை தியானித்து "சொற்றுணைவேதியன்" என்னும் பதி கம்பாடத தொடங்கக் கட்டுகளெல்லாம் நீங்கி அக்கற்றூண் தெப் பம்போலமிதக்க அதன்மே லிருந்து திருப்பதிக முற்றும் பாடி யருளித் திருப்பா திரிப்புலியூருக் கடுத்த திருக்கெடில நதி முகத் துவாரக்கரையிற் சேர்ந்து திருப்பா திரிப்புலியூர்க்கெழுந்தருளி அங்குச் சிவபெருமானை வணங்கித் திருப்பதிகம் பாடிக் துதித்து மறுநாள் திருவதிகை வீரட்டானேசுவரரைச் சென்று வணங்கித் திருப்பதிகம்பாடிக் கைத்தொண்டு முதலிய திருத்தொண்டு செய் தொழுதுவாழ்நாளில சமணவரசனைய பல்லவனென்பவன் திருநாவுக் கரசு சுவாமிகளது உண்மையை உணர்ந்து தானுஞ் சைவனாகிச்

சமணர் மடம் ஆலயம் முதலியவற்றை இடித்து ஓர் சிவாலய பிரதிட்டை செய்து வாழ்ந்தனன்.

பின்பு திருநாவுக்கரசுசுவாமிகள் திருவதிகை வீரட்டானத் தினின்றும் புறப்பட்டு அருகிலுள்ள சிவாலயங்களினுதையுந் தரிசித்துத் திருப்பதிகம் பாடித் துதித்துத் திருத்துங்காளி மாடத்திற்சென்று சிவபெருமானைத் தரிசித்து வணங்கின்று "ஐயனே" சமணசமயச் சாயலிலிருந்த இவ்வுடலை பொறுத் திருக்க அருவருக்கின்றேன், ஆகலால், தேவரீருடைய இலச் சினையை அடியேனுடலில் தரித்தருளவேண்டுமெ. எனை "வடி. வேறுதிரிசூலம்" எனனும் பதிகம் பாடித்துதிக்க அவ்வாறே சிவபெருமான் திருவருளால் ஒருவர்க்குந் தெரியாமல் ஓர் பூதம் வந்து சூலக்குறியாடு இடபக்குறியையும் தமது திருக்கரங்களில் பொறிக்க மகிழ்ந்து துதித்து அங்கிருந்து புறப்பட்டு மற்றைச் சிவஸ்தலங்களையும் வணங்கிக்கொண்டு அளவிலா ஆர்வு மேன் மேலும் பெருகத் சிதம்பரத்திற்சென்று சிற்சபையில் ஆனந்தத் தாண்டவஞ் செய்தருளும் கூடசரைத் தொழுது திருப்பதிகம் மோதித் துதித்து விடைபெற்றுக்கொண்டு திருஞானசம்பந்த சுவாமிகளைத் தரிசிக்கவேண்டுமென்னும் பேராவலோடு சில தினமிருக்கும் அவர் தமது திருக்கூட்டத்துடன் வருகை கண்டு வணங்கத் திருஞான சம்பந்தசுவாமிகள் "அப்பரே எழுந்திரும்" என்று தமது திருக்கரத்தா லெடுத்து எழுந்திருந்து அவருடன் சீர்காழியிற் சென்று சிவபெருமானைத் தரிசித்துத் திருப்பதிகம் பாடித்துதித்துத் திருஞானசம்பந்த சுவாமிகள் திருமாளிகையில் திருவமுது செய்து வீற்றிருந்து சோபுரட்டின் கண்ணுள்ள சிவாலயகளுக்குச்சென்று தரிசிக்கவேண்டுமென்னும் ஆவலோடு திருஞான சம்பந்தசுவாமிகளுடன் எழுந்தரு ளித் திருக்கோலக்காவிற் சென்று சிவபெருமானைத் தொழுது பதிகம்பாடி அங்கிருந்து தணித்துச்சென்று மற்றைச் சிவஸ் தலங்களையும் வணங்கிக் கொண்டு பிறகு திருச்சத்தி முற்றத் திற்சென்று சிவபெருமானைப் பலமுறைபணிந்து "கூற்றன் வரு

முன்னரே அடியேன் முடியில் தேவரீர் திருவடி சூட்டவேண் டும்" எனத்திருப்பதிகம் பாடியருள, சுவாமி "திருநல்லூர்க் குவருக" வென, அவ்வாறே யங்குச்சென்று ஆலயத்தில் சாஷ் டாங்க நமஸ்காரஞ் செய்து நின்றபொழுது என்பெருமான் திருவடிசூட்ட திருப்பதிகம்பாடித் திருத்தி அங்கிருந்து புறப் பட்டுத் திங்களூரிற் சென்று கும்மிடத்தன்புள்ள அப்பூதி நாய னாரைக்கண்டு மகிழ்ந்து அவரது வேண்டுகோளால் அவர் திரு மனையில் திருவமுது செய்தவுடன் பட்டமையால் அந்நாயனர் மனைவியார் திருவமுது சமைத்து மூத்த திருநாவுக்கரசென்னும் புதல்வனை நோக்கி, "நீ சென்று வாழையிலை கொய்துவருக." என்று ஏவ, அப்புதல்வன் சென்று, வாழையிலையறுக்கும்பொழுது சர்ப்பந்தீண்டிமடிந்து. அவன் கொய்த இலையைக் கொண்டுவந்து தாய் கையிற் கொடுத்திறந்தனன். அவர்கள் கண்டு விஷந்தீண்டி யிருக்கலாமென்று தமக்குள் குறிப்பாலறிந்து அவ்வுயிர் நீங்கிய வுடலை மறைத்துத் திருநாவுக்கரசு சுவாமிகளிடத்துச்சென்று திருவமுதுகொள்ள எழுந்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க, அவரதுணர்ந்து தேவாரமோதிப் புத்திரனைப் பிழைப்பித்து அப்பூதி நாயனுடன் திருவமுது செய்து அங்கிருந்து புறப்பட் டுத் திருவாரூரிற்சென்று திருக்கோயிலுட் புகுந்து வன்மீகநா தரைப் பதிகம்பாடித் தரிசித்துத் திருபுகலூருக்கு வருகையில் அங்கு முன்னரே யெழுந்தருளியிருந்த திருஞானசம்பந்த சுவாமி கள் கேள்வியுற்று எதிர்கொண்டுவர இருவருங்கண்டு வணங்கித் திருப்புகலூரைச்சேர்ந்து சிவதரிசனஞ்செய்து திருப்பதிகமோதி முருகநாயனர் திருமடத்தில எழுந்தருளித் திருவமுதுசெய்து திருஞான சம்பந்த சுவாமிகள் திருவாரூர்க் கெழுந்தருள, திரு நாவுக்கரசு சுவாமிகள் அங்குள்ள மற்ற சிவஸ்தலங்களை வணங் கிக்கொண்டு மீண்டும் திருபுகலூரில் முருகநாயனர் திருமடத் தில வீற்றிருக்கத் திருஞான சம்பந்த மூர்த்திநாயனர் அங்கெ ழுந்தருளினர். பின்னர் இவ்விருவர்களும் திருவீழிமிழலையிற் சென்று சிவதரிசனம் பண்ணித் தேவாரமோதித்துதித்து அங் கிருக்கும் பொழுது காலமழையின்றிப் பஞ்சமதிகரித்துச் சிவ

பெருமான் திருவுளமிரங்கித் தம்மடியாருக்குப் படிக்காசு கொடுத் தருள அதனால் இடைவிடாது வருகின்ற சிவனடியார்களுக்கா வர்க்கும் அமுதுபடைத்துக் கொண்டிருந்து பிறகு திருமறைக் காடென்னுந் தலத்திற்சென்று தேவர் பூசித்துச் சாத்திய திருக்கதவந்திறக்கும்படி "பண்ணினேர்மொழியாளுமைபங்கரோ" என்னும் திருப்பதிகமோதிப் பின்னர்ச் சோழநாட்டின்கண்ணும் நடுநாட்டின் கண்ணுமுள்ள சிவஸ்தலங்களைத்தரிசித்து வணங்கித் தொண்டை நாட்டிற் கெழுந்தருளி அங்குள்ள காஞ்சிபுரமுதலிய ஸ்தலங்களை வணங்கிக்கொண்டு திருக்காளத்தி மலைக்கெழுந்தருளிச் சிவபெருமானைத்தரிசிக்கும் பொழுது ஸ்ரீ கைலாசம் தரிசனமாக அங்கிருந்து புறப்பட்டு ஸ்ரீமல்லிகார்ச் சுனமென்னுந் தலத்திற்சேர்ந்து சிவபெருமானைத் தரிசித்துத் திருப்பதிக மோதித்துதித்து விடைபெற்றுக்கொண்டு வடக்கு நோக்கிச்சென்று கங்கைக்கரை சேர்ந்து காசிசிவதலத்தைத் தரிசித்து வணங்கி அங்குத் தம்பரிசனங்களை நிறுத்தித் தாம் தனியே இரவும் பகலும் இடைவிடாமல் நடந்து காடு மலைகளை யாவுங் கடந்து பாலிவனத்திற் செல்லும் பொழுது அதன் வெப்பத்தாற் கால்கள் பரடுவரையினும் கைகள்மணிக்கட்டுவரை யினுந் தேய நடக்கச் சக்தியற்றுப் பின்னர்ச்சார்பால் தவழ்ந்தும் புரண்டும் சென்று அதற்குஞ் சக்தியின்மையால் மூர்ச்சித்து நிட க்க, சிவபெருமான் திருவுளமிரங்கி இவ்வுலகத்தின்கண்ணுள்ள ஆன்மாக்கள் உய்யும்பொருட்டுத்திருப்பதிகம் பாடியருள வேண்டு மென்னும் கருத்தால் திருக்கைலாயத்திற்குவரக் கட்டளையிட்ட ருளாது ஓர் பிராமண வடிவங்கொண்டு திருநாவுக்கரசு நாயனு ருக்கு முன்னெழுந்தருளி நீர் இங்ஙனம் வருந்திய தென்னையென அப்பொழுது சிவபெருமான் திருபாதோதக மீதுண்ணிய விசே ஷத்தால் திருநாவுக்கரசு நாயனர் சற்றுணர் வுற்று அம்மறைய வரை நோக்கித் திருக்கைலாச தரிசனஞ்செய்ய வேண்டு மென்னும் பேராசையா லிங்ஙனம் வந்தேன், என்ன அதற்கு "அவ் வந்தணர் திருக்கைலாச தரிசனம் மானிடர்களுக்குக் கிடைக்கத் தக்கதோ" என. "இவ்வுடல் எவ்வகையா லுழிவது ஆகையால்,

கைலாச தரிசனஞ்செய்தாலொழிய மீளேன்'' என்றனர் அவரது மனவுறுதியை நன்குணர்ந்த சிவபெருமான் அப்பிரமணவருக் கருள்செய்து அறவடிவாகிய இடபவாகனத்தின் மேல் பார்வதிசமேத ராய்த்தோன்றி ''திருநாவுக்கரசே! எழுந்திரு'' என்றுதிருவாக்கரு ளிய வளவில் திருநாவுக்கரசு நாயனார் திருமேனிமுன்போலப் பழு தின்றி விளங்க உணர்வுற்றுச் சிவபெருமானே அடியேனுக்குத் திரு க்கைலாச தரிசனந் தந்தருளவேண்டும் என்று பலவாறுகத் தோத் திரஞ்செய்தனர். சுவாமி எழுந்தருளியபோது உண்டாகிய தடாகத் தைக் காட்டி ''இதில் முழுகித் திருவையாற்றிற்சென்றால் அங்கு க்கைலாசதரிசனஞ் செய்வாய்'' என, அவ்வண்ணமே அதுதடாகத் தில் மூழ்கித் திருவையாற்றில் ஓர் தடாகக்கரையிலேறிச் சிவபெரு மான் சந்நிதானத்திற் சென்று நந்திதேவர் முதலிய பிரமதகணங் களும முனிவர்களும இந்திராதிதேவர்களும வந்துகொருங்கியிருக்க வும் தேவதுந்துபி முழங்கவும், நன்கு வேதங்களும் கோஷிக்க வும், பார்வதி சமேதராய் எழுந்தருளியிருக்கும் வைரசபதியைக் கண்டு தரிசித்து வணங்கி ஆனந்த பரவசமாய்த் திருப்பதிகம் பா டித் துதித்தப்பின்பு அக்காஞ்சிமேய் பலமுயடி ஆலயமாயிருக் கக்கண்டு மனமகிழ்ந்தமடைந்து இன்னுமுள்ள சிவஸ்தலங்களுண்டு தையுமு சென்று தரிசிக்க வேண்டுமென்னும் பேரன்பினால் திருப் பூந்துருத்தி யென்னுஞ சிவஸ்தலத்திற்கெழுந்தருளிச் சிவதரிசனம் பண்ணிப் திருப்பதிகப்பாடித துதித்துக் வைகுதொண்டுஞ் செய்து அங்கேயாயிடலையட கட்டுவித்து அதில் வீற்றிருந்து காலங்கள் தோறும தவறாது சிவதரிசனஞ் செய்துக்கொண்டிருக்கையில் திரு ஞான சபந்தமூர்த்தி நாயனார் மதுரைக்கெழுந்தருளிச் சமணரை வாதில்வென்று மீண்டும் சோழவளநாட்டிற்கு வருபோது திரு நாவுக்கரசு நாயனாரைக் காணவேண்டுமென்னும் ஆசையால் திருப் பூந்துருத்திக்கெழுந்தருள, அதைத திருநாவுக்கரசு நாயனாருணர்ந்து ஓருவருமறியாது சென்று திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் எழு ந்தருளிய முத்துச்சிவிகையைத் தமது அருளைத் திருத்தோளால் தாங்க, அதைத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அறியாமை யையால் ''அப்பா எங்கே'' அடியேன ''தேவரீர் முத்துச் சிவிகை

யைத் தாங்கும் பெருவாழ்வு பெற்றுளன்" என்ன, அம்மொழி தம் திருச்செவியில் புகுமுன் திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் விமானத்தில் சிவிகையை விட்டிறங்கித் திருநாவுக்கரசு நாயனாரைப் பணிய, அவரதற்கு முன்னமே வணங்கக்கண்ட சிவனடியார்களனைவரும் அவ்விருவர்களையும் தொழுது அடங்கா மகிழ்ச்சியால் ஆரவாரித்தனர். பிறகு திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும் திருநாவுக்கரசு நாயனாரும் ஆலயத்திற் சென்றுதரிசனஞ்செய்து திருமடத்திற்போய் இருவரும் அளவளாயமர்ந்திருக்கையில் மதுரையில் நடந்த செய்திகளெலாவற்றையுந் திருக்கூட்டத்தார் கூறக்கேட்டு ஆனந்தமடைந்ததுமன்றிக் குலச்சிறையாரென்னும் மங்கையர்க்கரசியார் ஆகிய இவர்களுடைய சிவபோகமிகுதியைத் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் திருவாய்மலர்ந்தருளக்கேட்டுப் பரவசமடைந்து உடனே தாமும் மதுரைச்செழுந்தமிழ்ச் சொக்கநாதரையும் அங்கயற்கண்ணம்மையையும் தரிசித்ததுத் திருப்பதிகமபாடிக் துதித்திருகையில் பாண்டியராகிய குலச்சிறை நாயனாரும் பாண்டிய ராசராகிய நின்றசீர்நெடுமாறநாயனாரும் வந்து வணங்க மகிழ்ந்து அவர்க்கினிய வசனங்கள் சொல்லிப்போக்கி அங்கிருந்து புறப்பட்டு இடையிலுள்ள சிவஸ்தலங்களைத் தரிசித்து இராமேச்சுரத்துக்கெழுந்தருளி இராமேச்சுரனைத் தரிசித்துப் பதிகமபாடிச் சாத்தியபின்பு சில நாள் வரையிலிருந்து மீண்டும் சோழவளநாட்டிற் கெழுந்தருளித் திருப்புகலூரிற்சென்று சிவபெருமானைத் தரிசித்து வணங்கி அங்குழவாரத்தாற் சேவித்திருந்து செய்து வாழுநாளில் பரமகாருண்ணியராகிய சிவபெருமான் திருநாவுக்கரசு நாயனாரது பக்தி மிகுதியை உலகத்தின்கண்ணுள்ள ஆன்மகோடிகளுக்குவிளக்கும் பொருட்டு அவர் உழவாரப்படையாற் செதுக்குமிடங்களிலெல்லாம் பொற்குவையும் நவமணிக்குவையுமாகச் செய்தருள அவற்றை ஓடுங்கற்களுமாக மதித்துத் திருவலகிட்டெறியப் பின்பு அவரை மயக்கும்படி அரமகளிரை ஏவ அவர்களுங்கனவெய்தி மயக்க அதுகண்டு திருநாவுக்கரசுநாயனார் விண்ணோரை நோக்கி "உம்மாலிங்கென்ன குறையுடையேனுன்" என்னுந்திருத்தாண்டகமோதியருள, அம்மாதர்கள் இவரை மயக்குவது நம்மை

லாவது அன்றென்று கருதிப் போயினர் பின்பு திருநாவுக்கரசு நாயனார் அத்தலத்திலேயே சிவபெருமானை இடையறாது தரிசனஞ் செய்து பதிகம்பாடிச் சாத்திவாழ்நாளில் ஓர்நாள் "எண்ணுகேனென்சொல்லி எண்ணுகேனே" என்னுந்திருத்தாண்டக மோதிச்சிவா னந்தாதீதராய்ச் சிவபெருமான் திருவடி நீழலில் சேர்ந்தருளினார்,

திருநாவுக்கரசுநாயனர் சரித்திர

முற்றிற்று.

ஷெபார்

திருகேரிசை, பண்-கொல்லி (4-ம் திருமுறை)

திருச்சித்றம்பலம்.

பத்தனுய் பாடமாட்டேன் பரமனே பரமயோகீ
யெத்தினும் பத்திசெய்கை னென்னை நீ யிகழ்வண்டா
முத்தனே முதல்வாதில்லை யம்பலத்தாடுகின்ற
வத்தாவுன்னுடல்காண்பா னடியனேன் வந்தவாறே.

கருத்தனுய்ப் பாடமாட்டேன் காம்பனதோளிபங்கா
வொருத்தரா லறியவொண்ணுத் திருவுருவுடையசோதீ
திருத்தமாந் தில்லைதன்னுட் டிகழ்ந்த சிற்றம்பலத்தே
நிருத்தனான் காணவேண்டி நோற்பட வந்தவாறே.

பார்த்திருந்தடியனேனுன் பரவுவன் பாடியாடி
மூர்த்தியேயென்பனுன்னை மூவரின் முதல்வனென்ப
னேத்துவாரிடர்கடீர்ப்பாய் தில்லைச் சிற்றம்பலத்துக்
கூத்தாவுன் கூத்துக்காண்பான் கூடநான்வந்தவாறே.

பொய்யினைத் தவிரவிட்டுப் புறமலாவடிமைசெய்ய
வையனேயருளிச்செய்யா யாதியே யாதிமூர்த்தி
வையகந்தன்னின்மிக்க மல்கு சிற்றம்பலத்தே
பையநுன்னுடல் காண்பான் பரமநான்வந்தவாறே.

மனத்தினுர் திகைத்தகாலு மாண்பலாலெறிகண்மேலே
கனைப்பரா லென்செய்கேனே கறையணிகண்டத்தானே
தினைத்தனை வேதகுன்றுத் தில்லைச்சிற்றம்பலத்தே
யினைத்துநின் னிலையுங்காண்பா னடியனேன்வந்தவாறே.

சுந்தரமூர்த்தி நாயனார்.

திருக்கழுக்குன்றம்.

சுந்தரமூர்த்தி நாயனார்

பண்-வட்டப்பாடை (7-ம் திருமுறை.)

1. கொன்றுசெய்தகொடுமையாற்பலசொல்லிவை
நின்றபாவவினைகடாம்பலநீங்கவே
சென்றுசென்றுதொழுமின்றேவர்பிரானிடம்
கன்றிநீடுபிடிசூழ்தண்கழுக்குன்றமே.

2. இறங்கிச்சென்றுதொழுமினின்னிசைபாடவே
பிறங்குகொன்றைச்சடையனெங்கள்பிரானிட
நிறங்கள்செய்தமணிகணித்திலம்விரவிமுன்
கறங்குவெள்ளோயருவித்தண்கழுக்குன்றமே.

3. நீளநின்றுதொழுமினித்தலநீதியா
லாளுநம்வினைகளல்கியழிந்திடத்
தோளுமெட்டிமுடையபரமனிசனிகியான்
காளகண்டனுறையுந்தண்கழுக்குன்றமே.

4. வெளிறுதீர்ந்துதொழுமின்விண்பொடியாடியை
முளிமிலங்குமுழவாளன்முத்தியுறைவிடம்
பிளிறுகீடம்பெருங்கைப்பிடிமுன்றுடைக்
களிறுதீரும்பிடிசூழ்தண்கழுக்குன்றமே

5. புலிகளுமத்தொதொழுமின்புன்சடைப்புன்னிய
னிலிகொள்கூரம்பையினெந்தைபிரானிட
முலைகளுண்டுதழுவிக்குட்டியொழுகுசுக்
கலைகளாயும்புறவிற்றண்கழுக்குன்றமே

6. [illegible]
[illegible]
[illegible]
[illegible]

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்தி நாயனார்

சரித்திரம்.

தண்கயிலைநீக்கி நாவலூர்வாழ்
சைவனார் சடையனார் தங்களாராய்
மண்புகழ் வருட்டிறையா னேவிகாட்டி
மணமலிலக்க வன்றொண்டா யதிகைசேர்ந்து
கண்பினுடனருள்புரிய வாரூர்மேவி
நலங்கிளரும் பாவைதோ ணயந்துவைகித்
திண்குலவுமறிறன்மிண்டர் திறல்தண்டேத்துந்
திருத்தொண்டத்தொகையருளாற் செப்பினேரே.

செப்பலருங் குண்டையூர் கெல்லழைத்துத்
திருப்புகலூர்ச்செங்கல்செழும்பொன்னுச்செய்து
தப்பின்முது குன்றர்தரும் பொருளாற்றிட்டுத்
தடத்தெடுத்துச் சங்கிலியோள்சார்ந்துநாத
னெப்பிறனித் தாதுவந்தா றுடுகிறி
யறுமுதலே சிறுமதலே யுமிழநல்கி
மெய்ப்பெரிய களிறேறி யருளாற்சேர
வேந்தருடன் வடகயிலை மேவினாரே.

சரித்திரம்.

திருக்கைலாச மலையில் பார்வதியாரோடு எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுடைய மெய்த்தொண்டர் அறுபத்துமூவரில் ஒருவராகிய ஆலாலசுந்தரனென்பவர் ஒருநாள் அப்பரமபதிக்கு பூமாலைதொடுத்தணிதற்பொருட்டு மலர்கொய்தற்குத் திருநந்தனவனத்திற் சென்றபோது, உமாதேவியார்க்கு மலர்மாலைகட்டிச் சாத்

தகுதி கல்வனத்திற் பூப்பறித்துவிற்ற அவருடைய சேடியர்களாகிய அனிந்திதை, கமலினி என்னும் பெயருடைய பெண்கள் இருவர்மேல் இச்சைகொண்டார். அவர்களும் ஆலால சுந்தரரைக் கண்டு அவர்மேல் ஆசைகொண்டார்கள். பின்பு ஒருவாறு பனத்தை மீட்டுக்கொண்டு ஆலாலசுந்தரர் சிவசருந்தானத்துக்கும் சேடியர்கள் தாயார் சருகிதிக்கும் சென்றனர். சர்வார்தரியபாகிய கலாசபதி ஆலாலசுந்தரைநோக்கி "நீ பெண்கள் மேல் இச்சை கொண்டமையால் தட்சிணபூமியில் மானிடதேகமெடுத்து அப்பெண்களோடு கூடியின்பமனுபவிப்பாயாக என்று சிருவாய்மலர்ந்தருளக்கேட்டு, ஆலாலசுந்தரர் நடுநடுங்கிச் சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து எழுந்து நின்று அஞ்சலியஸ்தராய் "கருணைக்கடலே" மனிதனைப் பிறந்து சமுசார சாகரத்தில் முழுகிச் செய்வதின்னதுதவியதின்னதுஎன்றறியாது மயங்கும்பொழுது நீரவரீர் என்னைத் தடுத்தாட்கொள்ளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, சிவபெருமான் அதற்குத் திருவுளமிசைந்தனர்.

அவ்வாறே ஆலாலசுந்தரர் புண்ணிய பூமியாகிய பாரதகண்டத்தில் தென்தேசத்தில் திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் ஆதிசைவப்பிராமணகுலத்தில் சடையனுநங்கையாரென்னும் நற்புத்திரபதிவிரதையாகிய இசைஞானியார் திருவயிற்றில் அவதரித்து கம்பியாரூரரென்னுமபிதானத்தோடும் நாகராஜ வீதியில் சிறுதேருருட்டி விளையாடுவதையில் அந்நகரட்டராசராகிய நரசிங்கமுனையரையர் கண்டு சடையனார் சமயகுரவர்தின்மேல் அப்பிள்ளையைத் தம்பாலிலைக்கு எடுத்துக்கொண்டுபோய் அபிமான புத்திரராகப் பாவித்து வளர்க்க வளர்ந்தாராயினும் பிராமணகுலத்துக்குரிய ஒழுக்கமுடையராய்த் தக்கபருவத்தில் உபநயனஞ் செய்யப்பெற்று வேதாகம முதலிய சகல சாஸ்திரங்களிலும் வல்லவராய்த் திருமணஞ்செய்துகொள்ளுதற்குரிய பருவத்தையடைந்தனர். அதுகண்டு தந்தையாராகிய சடையனார் தம்மாப்பூக்கூற்ற புத்தூரிலுள்ள சடங்கவி சிவாசாரியாரிடத்தில் மகட்பூக்கோரிபை தம்புத்தூருக்கு மணம்பேசச் சில முதியோரை அனுப்பினர், அவர்கள் சடங்கவி சிவாசாரியாரிடத்திற் சென்று பேசி அவர் உடன்பட்ட செய்தி

லையைச் சடையனுக்குக் கறியித்தனர். அப்பொழுது சடையனும் மனம் மிழ்ந்து விவாகசுபதினமுகூர்த்தம் நிச்சயித்தத் தம்ஞாதிகள் முதலிய உறவினரையும், நட்பினர் யாவரையும் திருமணவோலீபோக் கிவரவழைத்தனர். பின்பு நம்பியாரூராகிய சுந்தரமூர்த்தி நாயனர் திருமணக்கோலமபூண்டு குதிரையிலேறிச் சகல சம்பிரமத்தோடு புத்தூரில் சடங்கவியார் வீட்டில் திருக்கல்யாணப்பந்தர்க்கு முன்சென்று குதிரையினின்றிழிந்து உள்ளேபோய் ஆசனத்திருந்தனர். அப்பொழுது சிவபெருமான் தாம் திருக்கைலாயத்தில் ஆலாலசுந்தர்க்குத் திருவாக்களித்தபடி ஓர் வயோதிக பிராமண வடிவங்கொண்டு அத்தக்கல்யாணப்பத்தலில் எழுந்தருளி நின்று அங்குள்ளார்க்கெதிரில் நம்பியாரூரைநோக்கி "உனக்கும் எனக்கு மொரு வழக்கிருக்கிறது" அது தீர்ந்தபிறகுதான் நீ விவாகஞ் செய்துக்கொள்ளவேண்டும், என்றனர். நம்பியாரூர் "உமக்கும் எனக்கும் உள்ள வழக்கு யாது என்ன அவ்வையர் அங்குள்ள பிராமணர்களை நோக்கி இந்த நம்பியாரூரன் எனக்கடிமை" என்றார் அதுகேட்ட நம்பியாரூர், இவ்வையர் சொல்லியது நன்றாயிருக்கிறது 'என்றுபழித்தச்சிறிக்க' பிராமணரிடம் பூண்டிவந்த கடவுள் உன்பாட்டன் எழுதிக்கொடுத்த முறியோலை இதோ இருக்கிறது அப்படியிருக்க நீ பரிகாசஞ்செய்தது என்ன, என்றார். நம்பியாரூர் ஐயரைநோக்கி 'பிராமணருக்குப் பிராமணர் அடிமைப்படுதல் இன்று நீர் சொல்லக் கேட்டோம். 'நீ பித்தனே, என்ன, ஐயா 'நான் பித்தனைனு மாகட்டும் பேயனைனு மாகட்டும், நானதற்குச் சிறிதும் வெட்கமடையேன், நீ விரோதவார்த்தைகள் பேசவேண்டாம், அடிமைத்தொழில் செய்யுமா என்றார், 'நம்பியாரூர் ஐயரே அவ்வோலையைக் காட்டும்' என்ன ஐயர் 'நீ பித்த வோலையைப் பார்த்து நிச்சயிக்கத் தக்கவனே, நானிதச் சபையாருக்குக் காட்டி மெய்யென்று ஒப்புக்கொள்ளாச் செய்வித்தபின் எனக்கடிமைத் தொழில் செய்பமாத்திரம் தக்கவன், என்றார். அதுகேட்டு நம்பியாரூரர் கோபங்கொண்டு அவர் கையிலுள்ள ஓலையைப்பறிக்க அவருக்கெதிரில் சென்ற அளவில் அவ்வோடத்தாம் பின்தொடர்ந்தோடிப் பிடித்து ஓலையைப் பறித்துக் கிழித்த

னர். கந்தரமூர்த்தியைப் பிடித்து ஒருதரம் 'இது முறையோ' என்று கூச்சலிட, சமீபத்தி னின்றவர்கள் இருவரையும் விலக்கி, உலகத்தில எங்காளும் கடக்கிராத செய்தியைக் கொண்டு வழக்காடுகிற பிராமணரே! நீரெங்கே யிருக்கிறவர்? சொல்லும, என 'நான் இக்கத் திருவெண்ணெய் நல்லூரில் இருக்கிறவன், அதிருக் கட்டும், இந்த நம்பியாரூரன் அறவெரிக்கு விரோதமாக என் கை யில் இருந்த ஓலையைப் பலாத்காரமாய்ப் பிடிங்கிக் கிழித்ததனால் தான் எனக்கடிமை என்பதை ஸ்திரப்படுத்தினன், என்றார். அப் பொழுது நம்பியாரூரர் 'நீர் திருவெண்ணெய் நல்லூரில் இருப்பவ ராயின் உம்முடைய தப்பு வழக்கை அங்கேதானே பேசித் தீர்ப் புச் செய்யவாரும் என்ன, ஐயர் அது கேட்டுத் "திருவெண்ணெய் நல்லூரில் உள்ள பிராமணர்களுக்கு முன் ஆதியில் எழுதிய மூல ஓலையைக் காட்டி நீ எனக்கு முறியென்பதைச் சாதிப்பேன், என்று தண்டின்றிக்கொண்டு முன்னே சென்றார். நம்பியாரூரரும் மற் றைப் பிராமணர்களும் பின்னே போயினர்கள்.

ஐயர் தமக்குப் பின்வந்த நம்பியாரூரோடும் மற்றப் பிராம ணரோடும் திருவெண்ணெய் நல்லூரைச் சேர்ந்து அங்குக் கூடிய பிராமணர்களுக்கெதிரில் அவர்களை நோக்கி அரிவிற் சிறந்த பெரி யோர்களே! இந்த நம்பியாரூரன் நீ எனக்கடிமையென்று காட்டிய ஓலையைப் பறித்துக் கிழித்து விட்டு உங்களிடத்தில் வந்திருக்கிறான் என்று முறையிட்டார், அதைக் கேட்ட பிராமணர்கள் அவரைப் பார்த்து 'பிராமணர்கள் அடிமைப்படுதல் இவ்வுலகத்தில் எக்கால த்துமில்லையே, ஐயரே நீர் என்ன தப்புவார்த்தை சொல்லுகின்றீர்" என்ன ஐயர் "நான் சொல்லியது பொய்யன்று, மெய்யே. இவன் பறித்துக் கிழித்த வோலை இவனுடைய பாட்டன் தானும் தன் உறவினரும் எனக்கடிமை யென்றெழுதிக் கொடுத்த வோலை" என்றார். உடனே பிராமணர்கள் நம்பியாரூரரை நோக்கி, இவர் உம் முடைய பாட்டன் எழுதிக்கொடுத்த முறியோலையைக் காட்டினால் நீரதைப் பறித்துக் கிழிக்கலாமா? அதனால் உம்முடைய பகும் செயித்தாதோ? இவர் தம் வழக்கை யாவரும் ஒத்துக்கொள்ளும் படி கூறினர். இனி உம்முடைய கருத்து யாது? என்ன, அதற்

ருச் சுந்தரர் "வேதாகம முதலிய யாவுங் கற்றுணர்ந்த மகான்களே, நான் ஆதிசைவனென்பதை நீங்களெல்லாம் பிரிர்களே, அப்படியிருக்க இந்தப் பிராமணர் என்னைத் தமக்கடிமை என்று சாதிக்கிறாரே இது மனத்தால் நிச்சயிக்கத்தகாத மாயை என்றே நினைத்தல் வேண்டும், நானிதற்கென்ன சொல்வேன் என்ன அதைக் கேட்ட பிராமணர் அவ்வையரை நோக்கி "நீர் இவரை உம்முடைய அடிமையென்று சொல்லுகிறதற்கு அநுபவம் விரிதம் சாட்சி இம்மூன்றிலொன்று உம்மிடத்தில் இருக்கவேண்டுமே அதைக் காட்டும் என்ன அப்பொழுது ஐயர் "இவன் எழுதிக் கொடுத்த ஓலை மூலவோலையைப் பார்த்தெழுதிய படியாகிலும், மூலவோலையா என்னிடத்திருக்கின்றது" என்றார். பிராமணர் "ஆனால் அதைக் காட்டும்" என்ன, ஐயர் "ஆரூரன் அதைத்தும் முன்போலப் பாடுதற்கு நிழித்துப் பாட்டால் என் செய்வேன். ஆதலால் அப்படிச் செய்யாதபடி திட்டஞ் செய்வீர்களானால் காட்டுகிறேன்" என்ன, பிராமணர் "நிழிக்கவொட்டோம், காட்டும்" என்ன, ஐயர் மூலவோலையைக் காண்பித்தனர். அப்பொழுது சபையார் கட்டளையின்படி ஓர் காரணன் அவரைக் கும்பிட்டு ஓலையை வாங்கிச் சபையிலுள்ளோர் கேட்கும்படி, "திருநாவலூரிலிருக்கும் ஆதிசைவனாகிய ஆரூரனென்னும் நான் திருவெண்ணெய்நல்லூரிலிருக்கும் பித்தனுக்கு நானும் என் சுற்றத்தாரும் வழித்தொண்டு செய்ய உள்ளமும் புறமுமொப்ப உடன் பட்டெழுதிக்கொடுத்தேன். இப்படிக்கு ஆரூரன்" என்று வாசித்தான். அதிற் சாட்சி கையெழுத்திட்டவர்களும் தங்கள் கையெழுத்தென்றே ஒப்புக்கொண்டனர். அதன்பின்பு பிராமணர் சபையாரூரரை நோக்கி, "இது உம்முடைய பாட்டன் கையெழுத்து தானே? பாரும்" என்ன, ஐயர் அவர்களைப் பார்த்து, இவன் தன்னடிமையோலையில் எழுதிய தன பாட்டன் கையெழுத்தை அறியச் சக்தியுள்ளவனே, இவன் பாட்டன் எழுதிய வேறு ஓலை சாத்திருந்தால் அதை வருவித்துப் பார்த்து ஒத்திருந்தால் உனக்குத் தோன்றிய தீர்ப்புச் சொல்லுங்கள் என்ற அளவில் அப்படியே அவர் பாட்டனார் கைச்சாத்தொன்று அழைப்பித்துப் பார்த்து ஒத்திருக்கக் கண்டு "இனி நீர் தப்பவழி இலலை நீர் இந்தப்

பிராமணருக்குத் தோற்றீர். ஆதலால் அவர் கருத்தின்படி அடிமைசெய்வதே கடன்" என்றார்கள். ஆலாலசுந்தரர் "விதிமுறை இதுவாயின் நானுடன்பட்டேனென்று சொல்லக்கூடுமோ" என்று நின்றார் அப்பொழுது பிராமணர்கள் அவ்வையரைநோக்கி "நீர் காட்டிய முறியோலையில் எங்களூரே உம்முடைய ஊராக எழுதப்பட்டிருக்கின்றது. ஆகையால் உமக்கிங்கே தலைமுறைபாக வள்ளிமுகம் ஸ்திதியும் காட்டும்" என்ன, "காட்டுகிறேன் வாருங்கள்" என்று கடபிரபாரூரும் பிராமணர்களும் பின்தொடர்ந்துவரத் தாம் அவ்வூரிலுள்ள திருவருட்பிறை என்னுஞ் சிவாலயத்தின்முன் போயினர் பின்போன சபையார் அவலைக்காணுது திகைத்து நின்றார்கள்.

அப்பொழுது சுந்தரமூர்த்தி நாயனார் என்னை அடிமைகொண்ட பிராமணர் திருக்கோயிலுள்ளே புகுந்தது என்ன ஆச்சரியமென்று கருதி அத்திசைவாசையோடும் தனித்து அவரைப் பின்தொடர்ந்துபோய் கூப்பிட சிவபெருமான் அறவடிவாகிய இடபவாகனத்தின்மேல் பார்வதிசமேதராய் எழுந்தருளி "நீ நமக்கு முன்னே தொண்டனாயிருந்தாய், பெண்கள்மேல் ஆசை வைத்ததனால் நம்முடைய ஆணைபால் பூமியில் பிறந்தாய் இப்பொழுது சமுசாரபந்தமானது உன்னைத் தொடராதபடி நாமே வலிய வந்து தடுத்தாட்கொண்டோம்" என்று திருவாய்மலர்ந்தருளினார். இவ்வாறெழுந்த அருளமுதத் திருவாக்குச் செவியில் நுகரழுகச் சுந்தரமூர்த்தி நாயனார் பரவசப்பட்டு அடியற்ற மரம்போல் பூமியில்விழுந்து ஆஷ்டாங்க நமஸ்காரம் பண்ணி ஆனந்தக் கண்ணீர் பெருக எழுந்துநின்று இரண்டு கைகளையும் சிரசின்மேற் குவித்து "பொன்னம் பலத்தில் பஞ்சகிருத்தியத் திருநடனஞ் செய்தருளும் சுவாமி தேவரீர் ஒன்றுக்கும் பற்றுதற்கண்ணே வலியத் தடுத்தாண்ட அருட்பெருமையை யாரென்று சொல்லுவேன்" என்றார் அப்படி நின்ற நம்பிபாரூரரை நோக்கி "நீ நம்மோடு வன்சொற் பேசி வன்றொண்டனென்னும் பெயர் பெற்றாய், நமக்கு அன்பினாற் செய்யும் அருச்சனையாவது பாடலேயாம். ஆதலால், நம்மேற் றமிழ் பாடல் பாடுக" என்று அருளிச்செய்யச் சுந்தரமூர்த்தி நாயனார் அஞ்சலியஸ்

தராய் "அடியேன் தேவரீருடைய அநந்தகல்யாண குணங்களில் எதை அறிவேன் என்னவென்று பாடுவேன்" என்ன, அதற்குச் சிவபெருமான் "நீ மூன்றே கம்மைப் பித்தனென்றாய் ஆதலால் என் பெயர் பித்தனென்றே பாடுக" என்ன சுந்தரமூர்த்தி நாயனார் தம்மை அடிமைக்கொண்ட சிவபெருமான்மேல் "பித்தாபிறைசூடி" என்னுஞ் சொற்றொடரை முதலாகவுடைய திருப்பதிகத்தைப் பாடியருளினார் பின்பு சிவபெருமான் "நீ யின்னும் கபுகழைக் குறித்துப் பலவகையாகப் பாடுக" என்று மறைந்தருளினார். இது நிற்க புத்தூரில் சடங்கவி சிவாசாரியர் பத்தினியாரோ சிவாகந்தவ றினதினால் சுந்தரமூர்த்தி நாயனாரையே தியானஞ் செய்துகொண் டிருந்து சிவபதமடைந்தனர்.

பின்பு சுந்தரமூர்த்தி நாயனார் திருவெண்ணெய்நல்லூரிலிருக் கின்ற திருவருட்டுறை என்னும் ஆலயத்தி லெழுந்தருளிய பரம காருண்ணிய மூர்த்தியாகிய சிவபெருமான் தம்மை யாட்கொண்ட பின் திருநாவலூர்க்கும் திருத்துறையூர்க்கும் சென்று திருப்பதி கம் பாடிச் சிதம்பரத்திலே ஆனந்தத்தாண்டவஞ் செய்தருளும் நடேசரைத் தரிசிக்கவேண்டுமென்னும் பேராசையோடு புறப்பட் டுத் திருவதிகையென்னுந் தலத்துக்குச் சமீபத்திற்போய்க் 'திரு நாவுக்கரசுநாயனார் உழவாரத்தால் கைத்தொண்டு செய்த இத்தல த்திலே நான் மிதிக்க அஞ்சுகிறேன்' என்று அதற்குட் செல்லாமல் அருகிலிருந்த சித்தவடமடத்தி லெழுந்தருளி அன்றிராத்திரி திரு வதிகை வீரட்டானத்தில் வீற்றிருக்கும் சிவபிரான் திருவடிகளைத் தியானஞ் செய்துகொண்டு நித்திரை செய்யும்போது வீரட்டானே சுவர் ஓர் விருத்தப் பிராமணராகி அம்மடத்தில் நுழைந்து சுந்தர மூர்த்தி நாயனார் சிரசின்மேல் தமது திருவடியை வைத்தருளித் துயில்பவர்போ லிருந்தனர் அப்பொழுது சுந்தரமூர்த்தி நாய னார் விழித்துக்கொண்டு, "ஐயரே ஏன் உம்முடைய பாதத்தை என் சிரசின்மேல் வைத்தீர்" என்ன; ஐயர் "என் வயோதிகத்தால் திசை தெரியாது அப்படிச் செய்தேன்" என்ன, சுந்தரமூர்த்தி

சிவ கேஷத்திர யாத்திரை விளக்கம்.

நாயனர் அதற்கொத்துக்கொண்டு தம்முடைய சிரசை வேறொரு திசையில் வைத்து நித்திரை செய்தனர். சிவபிரான் அங்குஞ் சென்று சுந்தரமூர்த்தி நாயனாருடைய சிரசில் தம்முடைய பாதத்தை நீட்ட சுந்தரமூர்த்தி நாயனார் "என் சிரசில் பலமுறை கால் வைத்த நீர் யார்" என்ன, "நீ என்னை அறியாய்" என்று உறைத்து மறைந்தருளினர். அதுகண்டு சுந்தரமூர்த்தி நாயனார் தம்முடைய சிரசில் பாதத்தை வைத்தவர் சுவாமி என்றறிந்து "அடியேன் செருக்கினால் சிவபெருமானென்று அறியாமையால் என் செய்தேன்" என்று வருந்தி, வீரட்டானேசுரரை "தம்மானை யறியாத சாதியாருளரே" என்னுந் திருப்பதிகம் பாடித் துதித்து அங்கிருந்து புறப்பட்டுச் சிதம்பரத்திற் சென்று கனகசபையில் ஆனந்தத் தாண்டவஞ் செய்தருளும் சபாநாதரைத் தரிசித்து அன்பு மிகுதியால் நெருப்பிலிட்ட நெய்போல் மனமுருகி ஆனந்தக் கண்ணீர் பெருகவிழுந்து நமஸ்கரித்து பேரின்பசாகரத்தில் முழுகி இரண்டு கைகளையுஞ் சிரசின்மேற் குவித்துப் பதிகம் பாடித்துதித்து நின்றனர்.

அப்பொழுது ஈடேசர் திருவருளால் "திருவாரூர்க்குவா" என்று எழுந்த அசரீரிவாக்கைக் கேட்டு அக்கட்டளையைச் சிரமேற்கொண்டு கனகசபையைப் பிரதட்சிணஞ்செய்து வணங்கி விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டுக் கொள்ளிடநதியைக்கடந்து சீர்காழிக்குச் சமீபித்து இது திருஞானசம்பந்தநாயனார் திருவவதாரஞ் செய்ததலம் ஆகையால் அதை மிதிக்கலாகாதென்று கருதி அதன் எல்லையை வணங்கி வலம் வரும்போது சிவபெருமான் தரிசனந் தந்தருள, "சாதலும் பிறத்தலுந் தவிர்த்து" என்னுந் திருப்பதிகம்பாடித் துதித்து அங்கிருந்து புறப்பட்டுத் திருக்கோலக்கா முதலிய சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு திருவாரூர்க்கெழுந்தருளி ஆலயத்துட்சென்று வன்மீகநாதரை வணங்கிப் பேரின்பக்கடலுள் மூழ்கித் திருப்பதிகம் பாடித் துதித்துநின்றார். அப்பொழுது சுந்தரமூர்த்தி நாயனார் கேட்கும்படி தியாகப்பெருமான் திருவருளால் "நாம்முனக்குத் தோழராமேனும், முன்னே நாமுன்னே பாட்கொ

ண்ட விவாக காலத்தில் நீ கொண்டிருந்த மணக்கோலத்தை எள்
ளும் பூண்டு வினையாயினாயாக" என்று ஓசரீரி வாக்கு எழுந்தது.
அதுகேட்ட சுந்தரமூர்த்தி நாயனார் ஆனந்தபரவசராய்த்தொழுது
திதித்து புறம்போந்து அன்றுதொட்டு அடியார் யாவரும் தம்பி
ரான் தோழர் என்று சொல்லிக்கொள்ளத் திருமணக்கோலம்பூண்டு
காள்தோறும் வன்மீகநாதரைத் தரிசனஞ் செய்துக்கொண்டு அங்
கிருந்தனர்.

இதற்கு முன்னே திருக்கைலாயமலையில் இருக்கும் பார்வ
தியாருடைய பாங்கிய ரிருவரில் ஒருவராகிய கமலினி என்பவர்
அத்திருவாரூரில் உருத்திர கணிகையர் குலத்தில் பிறந்து பரவை
யார் என்னுக் திருப்பெயர்பெற்று மங்கைப் பருவமடைந்து அவ
ரும் தோழிமாரோடு தினமும் ஆலயத்துட் சென்று சிவதரிசனஞ்
செய்யப் போம்பொழுது அங்குப் பரிசனத்தோடு சிவதரிசனத்
துக்கெழுந்தருளிய சுந்தரமூர்த்தி நாயனர் கண்டு ஆசைகொண்டு
தாம் அவரை விவாகஞ் செய்துக்கொள்ளவேண்டுமென்று சுவாமி
சந்நிதானத்தில் விண்ணப்பஞ் செய்தருளினர். சிவபெருமான்
அவர் விண்ணப்பத்தைத் திருவுளங்கொண்டு பரவையாரைச் சுந்
தரமூர்த்தி நாயனருக்குத் திருமணஞ் செய்துகொடுக்கும்படி அடி
யார்களுக்குக் கட்டளையிட்டருள, அவர்களப்படியே சுந்தரமூர்த்தி
நாயனருக்குப் பரவையாரை விதிப்படி விவாகஞ் செய்துகொடுத்
தார்கள். சுந்தரமூர்த்தி நாயனர் பரவையாரைக் கூடி வாழ்ந்தி
ருக்கும்காலில் ஒருநாள் சிவதரிசனத்துக் கெழுந்தருளும்போது
தேவாசிரிய மண்டபத்தில் சேர்ந்திருந்த சிவனடியார்களைக்கண்டு
அவர்கள்மேல் பத்திமிகுந்து 'தானிவர்களுக்கடியனுகுநாள் எந்நாள்'
என்று கருதிச் சுவாமிதரிசனத்துக்குத் திருக்கோயிலுக்குட் சென்
றனர். அவர் விருப்பத்தை நிறைவேற்றும்பொருட்டு நியாகப்
பெருமான் அவர்க்குக் காட்சி கொடுத்தருளி 'நீ கம்மடியார்மேற்
பதிகம் பாடியாயாக' என்று திருவாய்மலர்ந்தருள, சுந்தரமூர்த்தி
நாயனர் வணங்கிநின்று, சுவாமி அடியவர்கள் வரலாறு இன்னதெ
ன்றும் அவர்கள் தன்மை இன்னதென்றும் சிறிதும் அறியாதபான்

எப்படி பாடுவேன், அவர்களைப்பாடுஞ் சக்தியைத் தேவரீரே அடியேனுக்கு அருளிச்செய்யவேண்டும் என்று பிரார்த்தித்தார். சிவபெருமான் அதற்கிசைந்து தமது அருமைத்திருவாக்கால், "தில்லைவாழந்தணர்தம் மடியார்க்குமடியேன்" என்று அடி எடுத்துக் கொடுத்து மறைந்தருளினர். அதுகண்டு சுந்தரமூர்த்தி நாயனர் தேவாதிய மண்டபத்தை யடைந்து அவ்வடியவர் யாவர்க்குந் தனித்தனிய அடியேன் அடியேன் என்று திருத்தொண்டத்தொகையென்னுந் திருப்பதிகம் பாடி அவர்களை வணங்கினர்.

பின்பு சுந்தரமூர்த்தி நாயனர் சிலகாலங்கிருந்து அதற்குச் சமீபத்திலுள்ள திருக்கோளிலி என்னும் ஸ்தலத்துக்கெழுந்தருளி ஆலயத்துட்சென்று சிவபெருமானை வணங்கி "வேளாளராகிய குண்டையூர்கிழார் கொடுத்த நெற்குவியலைத் திருவாரூரிற் சேர்ப்பிக்கத் திருவை செய்யவேண்டும்" என்று விண்ணப்பஞ்செய்ய, சிவாக்கினைபாற் பூதங்கள் குண்டையூரிலிருந்த நெல்மலையை எடுத்துச் சென்று பரவையார் திருமாளிகையிலும் மற்றிடங்களிலும் நிறைத்தன. சுந்தரமூர்த்தி நாயனர் மீண்டுந் திருவாரூர்க்குச்சென்று வன்மீகநாதரைத் தொழுது துதித்துப் பரவையார் திருமாளிகையிற் சேர்ந்து நிகழ்ந்த செய்திலயச் சொல்லிச் சிலகாலங்கிருந்து கோட்புலி நாயனர் வேண்டுகோளால் திருநாட்டியத்தான் குடிக்கெழுந்தருளிபபொழுது அந்நாயனர் எதிர்கொண்டு வந்து வணங்கித் தம்முடைய வீட்டுக்கழைத்துப்போய் ஆசனத்திலிருத்தி அருச்சனை செய்து திருவமுது செய்வித்து வணங்கித் தமமுடைய புத்திரிகளாகிய சிங்கடி வனப்பகை என்னும் இருவரையும் கொண்டுவந்து வணங்குவித்துத் தாமும் வணங்கி 'அடியேன் பெற்ற இப் பெண்களை அடிமைபாகக் கொண்டருளவேண்டும்' என்ன, சுந்தரமூர்த்தி நாயனர் அப்பெண்களைப் புத்திரிகளாகப் பாவித்தருளிச், சிவாலயத்துட் சென்று சிவபெருமானை வணங்கி "பூணூலவேதாரவம" என்னுந் திருப்பதிகம்பாடி அப்பதிகத்தின் திருக்கடைக்காப்பில் கோட்புலி நாயனாரைச் சிறப்பித்துச் சிவபெருமானுக்குத்

தம்மைப் பிதாவாகக் கருதினமையால் தம்மைச் 'சிக்கடியப்பன்' என்று வைத்தருளினர். பின்பு அவ்விடத்தினின்றும் எழுந்தருளித் திருவலி வலத்திற் சென்று சிவதரிசனஞ் செய்துக்கொண்டு மீண்டும் திருவாரூர்க்குச்சென்று வன்மீகநாதரை வணங்கிக்கொண்டு பரவையார் வீட்டிலிருந்தனர். இருக்கும்காளில் பங்குனியுத்திரத்திருவிழா சமீபிக்கவும், பரவையார் திருவிழாச்செலவிற்குக் கொடுப்பதற்குப் பொருள் கொண்டவரும்பொருட்டுத் திருப்புகலூரைச் சேர்ந்து ஆலயத்துட் சென்று சுவாமியை வணங்கிப் பதிகம்பாடிச் செங்கல்லைப் பொன்னாக்கித்தரப்பெற்று அங்கிருந்து புறப்பட்டுத் திருவாரூரையடைந்து பரவையார் வீட்டிலெழுந்தருளினர்.

அங்கிருந்து புறப்பட்டுத் திருநன்னிலம் முதலிய சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு திருமுது குன்றத்தைச் சேர்ந்து சிவதரிசனஞ்செய்து பதிகம் பாடியபோது சுவாமி பன்னீராயிரம் பொன் கொடுத்தருள, சுந்தரமூர்த்திநாயனார் வணங்கி நின்று, "தேவரீர் கொடுத்தருளிய பொன்னெல்லாம் திருவாரூரில் உள்ளவர் யாவரும் அதிசயிக்குமபடி அங்கே வரச்செய்யவேண்டும்" என்று பிரார்த்திக்க அபயபூழுது எம்பிரானுடைய திருவ்ருளால் "சுந்தரமூர்த்தி! நீ இத்தப் பொன் எல்லாவற்றையும் மணிமுத்தாநதியிலிட்டுத் திருவாரூர் திருக்குளத்தி லெடுத்துக்கொள்" என்று அசரீரி வாக்கெழுந்தது. அது கேட்டுச் சுந்தரமூர்த்தி நாயனார் மச்சமுவெட்டி எடுத்துக்கொண்டி பொன்னனைத்தையும் மணிமுத்தாநதியிலிட்டு "அன்று என்னைத் தடுத்தாட்கொண்ட திருவருளை இதிலு நினைவன்" என்று சிதம்பரத்துக் கெழுந்தருளக்கருதி வழிக்கொண்டி இடையிலுள்ள திருக்கடம்பூரை வணங்கித் தில்லையைச் சேர்ந்து கோபுரத்தைத் தொழுது பதிகம்பாடித் துதித்து விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டுத் திருக்கருப் பரியலூர் முதலிய பல சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு மீண்டுந் திருவாரூர்க் கெழுந்தருளி வன்மீகநாதரைப் பணிந்து பரவையாருடன் மனமகிழ்ந்திருக்குநாளில் ஒருநாள் பரவையாரை நோக்கி "எனக்குத் திருமுது குன்றங் கொடுத்தருளிய பொன்னெல்லாம் மணிமுத்தாநதியி லிட்டுவந்தேன்,

இப்போது இத்தலத்தில் திருக்கோயிலுக்கு மேற்கிலுள்ள குளத்தில போய் அவரது திருவருளால் எடுத்துக்கொண்டு வருவோமவா" என்றனர், பரவையார் இதுஎன்ன அதிசயமென்று தமக்குள் தாமே எண்ணிக்கொண்டு கூடவர, அக்குளத்தருகிற்சென்று பரவையாரைக் கரைமேல் நிறுத்திச் தாம வன்மீகநாதரை வணங்கித் துதித்துக் குளத்திலிறங்கிக் கடவிப்பார்க்கையில் பொன்னகரப் பூசமையால் மனம்வருந்தித் திருப்பதிகம் பாடிச் சிவபெருமான திருவருளால் வந்தெழுந்த பொற்றிரளை வாரியெடுத்து ஆட்சலிலசுமத்தி அனுப்பிவிட்டுத் தாம் திருக்கோயிலுட் சென்று வன்மீகநாதரைப் பணிந்து துதித்து வீட்டுக்குச்சென்று பரவையாரோடு மகிழ்ந்திருக்குநாளில் சிவஸ்தல யாத்திரை பண்ணவிருப்பமுற்று திருநள்ளாறு முதலியவற்றை வணங்கிக்கொண்டு திருக்கருகாவூர்க்குச் சமீபத்தில வரும்பொழுது வன்றொண்டர் பதிதச்சு முதலியவற்றால் மெலிந்து வருகிறார் என்று சுவாமி திருவுளமிரங்கித் தண்ணீரும் கட்டமுதும் கொண்டுவந்து வெயில் வெப்பத்தைக் தணிக்கும்பொருட்டு அங்கு ஒருபக்கத்திற் ஓர் தண்ணீர்ப்பந்தலை யுண்டாக்கித் தாம் ஒரு பிராமணவேடம் பூண்டு சுவேதவருணின்ற சுந்தரமூர்த்தி நாயனாரை நோக்கி "நீர் பிரமபுரம் பதிததிருக்கின்றீர் எண்ணிடத்தில் பொதிசோறிருக்கின்றது, அதையுண்டு தண்ணீர் குடித்து இளைப்பாறும்" என்று சொல்லியருள, சுந்தரமூர்த்தி நாயனர் அதற்கிசைந்து கட்டமுதை வாங்கி அடியாரோடு அமுதுசெய்து தண்ணீர் அருந்தி பரிசனங்களோடு நித்திரைசெய்ய, ஐயா தண்ணீர்ப்பந்தரோடு மறைந்தருளினர். சுந்தரமூர்த்தி நாயனர் துயிலுணர்ந்து ஐயரைக் காணுமையால் ஆச்சரியமடைந்து "இதுதானோ மாற்றமறிந்திலன்" என்னும் திருப்பதிகம் பாடித் திருக்கருகாவூரைச்சேர்ந்து சிவதரிசனஞ்செய்து அதை அகன்று வழிக்கிடையிலுள்ள சிவஸ்தலங்களெல்லாம வணங்கிக்கொண்டு திருத்தூங்குன்றிற் போய்ச் சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு திருக்கருகாவூருக் கெழுந்தருளி ஆலக்கோயிலுள்ளே சென்று சிவதரிசனஞ் செய்து கூத்தில் வந்து அமுதுசெய்யும் காலமளவியும் அமுதுசெய்து படைக்கும் பரிசனங்கள் வரவாமையால் மிகுந்த பதிசயோடு

வதிப்புறத்திலிருந்தனர். அப்பொழுது சிவபெருமான் ஒரு பிரம்ம மணராகி அருகிற்சென்று "நீர் மிகப்பசியோடிருக்கின்றீர், நான் உமக்குப் பிராமணர் வீட்டில் அன்னம் யாசித்துக்கொண்டு வருகிறேன், நீர் அப்புறம் போகாமல் இங்கேயிரும்" என்று சொல்லிப் போய் அப்படியே யாசித்துக் கொண்டுவந்து கொடுக்க, சுந்தரமூர்த்தி நாயனர் தம்முடன் வந்த தொண்டர்களோடு உண்டு மகிழ்ந்தனர். உடனே அவ்வையர் மறைந்தருளினதைக் கண்டு அவர் சிவபெருமானேயென்று தெளிந்து, இந்த கடிப்பகலில் திருவடி வருந்த அடியேன் பொருட்டு எழுந்தருளிய பெருங்கருணையை என்னென்று புகழ்வேன்" என்று மனமுருகித் தோத்திரஞ்செய்து, அவ்விடம் விட்டுப் புறப்பட்டுக் காஞ்சீபுரத்திற்சென்று திருவேகாம்பரத்தை யடைந்து காமாட்சியம்மையாலருச்சிக்கப்பட்ட ஏகாம்பரநாதரை வணங்கி அங்கிருந்து புறப்பட்டு இடையிலுள்ள சிவஸ்தலங்களையெல்லாம் தொழுதுகொண்டு திருக்காளத்தி மலைக்குச் சென்று சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு அங்கிருந்து புறப்பட்டுத் திருவொற்றியூரிற் போய்ப் பதிகம் பாடிச் சுவாமிதரிசனம் பண்ணிக்கொண்டிருந்தனர்.

முன் திருக்கைலாசகிரியில் சுந்தரமூர்த்திநாயனர்மேல் ஆசை கொண்ட தோழிமாரிருவரில் ஒருவராகிய, "அனிந்திதையார்" என்பவர் ஞாயிறு என்னும் ஊரில் வேளாளரிற் சிறந்த ஞாயிறுகிழார் என்பவருக்குப் புத்திரிபாராகத் திருவவதாரஞ் செய்து சங்கிலியாரென்னும் திருநாமம்பெற்றுத் திருக்கோயிலில் திருத்தொண்டு செய்து ஏழாந்நாளில் ஒருநாள் சுந்தரமூர்த்தி நாயனர் சங்கிலியாரைக்கண்டு ஆசைகொண்டு சுவாமி சந்நிதானத்திற் சென்று வணங்கி, சங்கிலியாரைத் தமக்குத் தந்தருளும்படி பிரார்த்தித்துக் கோயிலின் புறத்தில் ஓரிடத்தில் மணக்கவலியோடிருக்க அப்பொழுது சிவபெருமான் சுந்தரமூர்த்தி நாயனருக்கெதிரிற் போய்ச் சங்கிலியை உனக்குத் தருகிறோம் நீ கொண்ட கவலையை ஒழிப்பாயாக" வென்று திருவாய்மலர்ந்தருளி உடனே கன்னிமாடத்திற் கண்வளரும் சங்கிலியார் சையனத்திற் சென்றிச் சங்கிலியே! நம்மிடத்து மிகுந்த பத்தியையுடைய சுந்தரன் தனக்கு மனைவியாக

உன்னைத் தரும்படி என்னைப் பிரார்த்தித்தான், நீ அதற்குடன்பட வேண்டும், என்றார் அதற்குச் சங்கிலியார் ''சுவாமி! அடியேன் தேவரீருடைய திருவாணையைச் சிரமேற்கொண்டேன், அவ்வாறே அவர்க்கே மணமுடிப்பதற்குறியேன் ஆயின் அவர் திருவாரூரிலே யிருந்த சந்தோஷத்தோடு வசிக்கின்றவர் என்பதைத் தேவரீர் திருவுளங் கொண்டருளும்'' என்று விண்ணப்பஞ் செய்தார். சுவாமி அதுகேட்டுப் ''பெண்ணே சுந்தரன் உன்னைப்பிரியேன் என்று சபதஞ்செய்துதருவான்'' என்று சொல்லிச் சுந்தரமூர்த்தி நாயனரிடத்து வந்து ''நான் உன்னைப் பிரியேன் என்று நீ அவளுக்குச் சபதஞ் செய்துகொடுத்தால்தான் அவள் உடன்படுவாள்'' என்ன, ''ஆயின் அவ்வாறே செய்துகொடுக்கிறேன் தேவரீர் அப்பொழுது திருக்கோயிலினிராது மகிழின்கீழ் எழுந்தருளியிருக்கவேண்டும்'' என்றனர்.

அதற்குச் சிவபெருமான் இசைந்தருளி மீண்டுஞ் சங்கிலியாரிடத்திற் சென்று, சுந்தரன் உனக்குச் சபதஞ் செய்துகொடுக்க இசைந்திருக்கிறான்; அவன் ஆலயத்திற் சபதஞ் செய்யவந்தால் மகிழடியிற் செய்யும்படி கேள், என்று மறைந்தருளினார். பின்பு சங்கிலியார் திருப்பள்ளி எழுச்சிக்குப் பூமாலை தொடுக்க தோழியாரோடி திருக்கோயிலுக்குட் செல்ல, அவருக்குச் சபதஞ் செய்துகொடுக்க அதற்குமுன் வந்திருந்த சுந்தரமூர்த்தி நாயனார் அவர்க்கெதிரிற் போய்த் தமக்குச் சிவபிரான் திருவாய் மலர்ந்தருளினதைச் சொல்ல, அவர் அதற்கொன்றுஞ் சொல்லாமல நாணமுற்றுச் சேடியரோடு கோயிலுக்குட் சென்றார். சுந்தரமூர்த்தி நாயனார் பின்தொடர்ந்து போய்ப் பெண்ணே உன்னைப் பிரியேனென்று சபதஞ்செய்யச் சந்நிதானத்திற்கு வா 'என்ன' சங்கிலியார் கண்ட கனவைக் கேட்டறிந்த தோழிமார் 'இங்கே வேண்டுவதில்லை மகிழடியிற் சபதஞ் செய்துகொடும்' என்ன அவ்வாறே மகிழடியிற் போய்ச் சபதஞ் செய்துகொடுத்துச் சங்கிலியாரை விவாகஞ் செய்துகொண்டு அங்கு அவரோடு சிலநாள் கூடியிருந்து அதற்குமேல் திருவாரூர் வீதிவிடங்கப்பெருமானைத் தரிசனஞ் செய்யாமல் எந்

தினநாள் நீங்கியிருப்பேன் என்று மனவருத்தமுற்று ஆலயத்திற் சென்று சுவாமி தரிசனஞ் செய்து திருவொற்றியூரெல்லையை நீங்கிய அளவில் இரண்டு கண்ணும் மறைந்தன, மறையவே சபதங்கள் நினைவையால் நேரிட்டதென்று வருந்தி "அழுக்கு மெய்கொடேன் றிருவடியடைந்தேன்" என்னுந் திருப்பதிகம் பாடியும் அத்தின் பம் நீங்கவில்லை; ஆனாலும் திருவாரூருக்குப் போகவேண்டுமென் னும் ஆசை மேன்மேலும் வளர்தலால் சிலர் முன்னே வழிகாட்டிக் திருமுல்லைவாயிலுக்குச் சென்று சுவாமியை வணங்கி "விண்பணிந் தேதுந்தும் வேதியர்" என்னுந் திருப்பதிகம் பாடிக் திருவெண் பாக்கத்தைச் சேர்ந்து சிவபெருமானைப் பணிந்து "திருக்கோயி லுள்ளீர், எனது விண்ணப்பஞ்செய்ய, சுவாமி அவருக்கு ஊன்று கோல கொடுத்தருளி "உளோமபோகீர்" என்றனர். பிறகு சுந்தர மூர்த்தி நாயனார் "பிஞ்ஞகனை பொறுத்திடுவர்" என்னுந் திருப் பதிகம் பாடிக்கொண்டு காஞ்சீபுரத்துக் செழுத்தருளி ஏகாம்பர நாதரை வணங்கி அவர் திருவருளால் ஒரு கண் பெற்று வழிக்கி டையிலுள்ள சிவஸ்தலங்களையெல்லாம் வணங்கிக்கொண்டு திருவா ரூர்க்குச் சென்று வன்மீகநாதரைத் தொழுது மற்றொரு கண்ணும் பெற்றுப் பரவையார் ஊடலை நீக்கும்பொருட்டு வீதிவிடங்கப் பெருமானை இரண்டுதரம் அவர்மனைபில தூது அனுப்பி ஊடல் தணிந்தபின் அங்குச் சென்று அவரோடு கூடி காள்தோறும் வன் மீகநாதரைத் தரிசனஞ் செய்துகொண்டிருந்தனர். இதகதும் பொழுது சிவபெருமானைத் தூது அனுப்பிப் செய்திலைப் திருப் பெருமஙசலத்திலிருக்கும் ஏயர்கோன் கலிக்காம நாயனார் சேனாதி யுற்று அதனதக்கது அண்றென்று தபர்மற் கோபங்கொண்டு இருந்த தலை அறிந்து சுவாமி சந்நிதானத்தில் விண்ணப்பஞ்செய்ய, சிவ பெருமான் கலிக்காம நாயனாருக்குச் சூலிரோயை ஏவி அவரிட்ட நிற்போயச் 'சுந்தரன் வந்தாலன்றித் தீராது' என்ன, அவர் அதற் உடன்படாமையைக் கண்டுமை சுந்தரமூர்த்திநாயனரிடத் நில் வந்து 'நீ போய்க் கலிக்காமனுடைய சூலையைத் தீர்ப்பாய்' என்ன, சுந்த ரமூர்த்தி நாயனர் சூலிரோயைத் தீர்க்குமபொருட்டுவருஞ்செய்தி

கேட்டுக் கலிக்காம நாயனார் உடைவாளால் வயிற்றைப் பிறிக் கொண்டிருந்தார். சுந்தரமூர்த்தி நாயனார் அங்குச் சென்று கலி க்காம நாயனார் இறந்திருத்தலை நோக்கி நானும் மரணமடைவே னென்று உடைவாளை எடுத்தனர். உடனே சிவபெருமான் திரு வருளால் கலிக்காம நாயனார் உயிர்த்தெழுந்து உடைவாளைப் பற் றிக்கொள்ள, அவர் விழுந்து நமஸ்கரித்தனர். கலிக்காம நாயனா ரும் சுந்தரமூர்த்தி நாயனாரை வணங்கினர். பின்பு இருவரும் அன் போடு அளவளா யிருந்து மீண்டும் திருவாரூர்க்கெழுந்தருளி வன் மீகநாதரைத் தரிசனஞ் செய்துகொண்டிருந்தனர். அப்பொழு து சேரமான்பெருமாள் நாயனார் சிவபெருமானால் சுந்தரமூர்த்தி நாயனாருடைய மகிமையை அறிந்து அவரைத் தரிசிக்க விரும்பித் திருவாரூரையடைந்து அவரை வணங்க, சுந்தரமூர்த்தி நாயனார் சேரமான்பெருமாள் நாயனாரை வணங்கினர். பின்பு சுந்தரமூர் த்தி நாயனார் சேரமான்பெருமாள் நாயனாரை உடன்கொண்டு ஆல யத்திற் சென்று வன்மீகநாதரை வணங்கிப் பரவையார் வீட்டிக் கழைத்துக்கொண்டு போய் விருந்து செய்து சிலநா ளவரோடு அங் கிருந்து இன்னு முள்ள சிவஸ்தலங்களைத் தரிசிக்க விரும்பிச் சே ரமான்பெருமாள் நாயனாரும் கூடவரப் புறப்பட்டுச் சோழநாட்டி லுள்ள சிவஸ்தலங்களையெல்லாம் வணங்கிக்கொண்டு பாண்டியநாட் டிற் சென்று அங்குள்ள மதுரை முதலிய சிவஸ்தலங்களைத் தரிச னஞ் செய்துகொண்டு மீண்டும் திருவாரூர்க்கு சென்று வன்மீக நாதரை வணங்கி அங்கிருந்து புறப்பட்டுச் சிவஸ்தலங்களை வணங் கிக்கொண்டுசெல்லுகையில் திருவையாற்றுக்குச் சமீபத்தி லாகக் காவேரி பெருகிவருவதைக் கண்டு சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய திருப்பதிகத்தால் அவ்வாறு வழிவிடப் பரிசனங்களோடு சென்று பஞ்சநாதேசுரரைத் தரிசித்து வணங்கி மீளவும் அவ்வழி யே வந்தபின்பு வெள்ளமு முன்போலப் பெருகியோடிற்று அப்பதி டம்விட்டு நீங்கிக் கொங்காட்டிலுள்ள சிவஸ்தலங்களை வணங்கிக் கொண்டு மலைநாட்டிற் சென்றபோது சேரமான்பெருமாள் நாய னார் நகரமாகிய கொடுமுடிகாஞ்சிருப்பவர்கள் எதிர்கொண்டுவந்து வணங்க அவர்களுடன் திருவஞ்சைக் களமென்னுந் தலத்திற்

சென்று ஆலயத்தைப் பிரதக்ஷிணம் பண்ணித் திருப்பதிகம் பாடித் துதித்துச் சேரமான்பெருமாள் நாயனாரோடு அவர் திருமாளிகை யிற் சென்று திருவமுது செய்து சிலகாலங்கழித்து புறப்படும்போது சேரமான்பெருமாள் நாயனார் தம்முடைய பொக்கிஷத்திலுள்ள நிதியையெல்லாம் பல ஆட்களின்மேற் சுமத்தியனுப்பத் திருமுருகன் பூண்டி வரையுந் தனதுக்குச் சமீபமாக வருமபோது சிவபெருமான் ஆநிலைநெய்யால் பூதங்கள் நிலவிருக்கொண்டிவந்து அப்பொருள்களைத்தடுத்துப் பறித்துக்கொண்டு போய்ச் சுவாமி சந்நிதானத்தில் சேர்த்தனர். அதுகண்டு சுந்தரமூர்த்தி நாயனார் திருமுருகன் பூண்டியிலே தலபத்தரட்சகனாகிய சுவாமியை வணங்கி "கொடுகு வெஞ்சிலை விடுகணிவாய்" என்னுந் திருப்பதிகம் பாடியபடித்தில் கடவுள் திருவருளால் அந்தப் பொருளெல்லாம் கோபுரவாயிலில் குவிந்திருக்கக் கண்டு சுவாமியை வணங்கி அவற்றை எடுத்துக்கொண்டு புறம்பேனசெல்ல ஆட்களோ ரளி அவ்விடத்தை நீங்கிக் கொங்காட்டுக் காடுந்து திருவாரூரை அடைந்து அங்குச் சிவதரிசனஞ் செய்திருந்தனர்.

சிலகாலஞ் சென்றபின் சேரமான்பெருமாள் நாயனாரைக் காணவிரும்பி அங்கிருந்து புறப்பட்டுத் தோழமைத்தலத்தைக்கடந்து கொங்கதேசத்தை யடைந்து திருப்புக்கொளியூரிற் சென்று அங்கே ஒரு வீதியிலே இரண்டு வீடுகளில் ஒரு வீட்டில் மங்கலவாத்தியமும் மற்றொரு வீட்டில் அழுகை ஒலியு மாயிருக்கக் கண்டு அங்கிருந்த பிராமணர்களை நோக்கி 'இதென்ன' வென, அவர்கள் வணங்கி 'இந்த வயதனர்க்கு இரண்டு புதல்வர்கள் குளத்தில் நீராடுகையில் ஒருவனை முதலை விழுங்கிற்று' மற்றொருவன் பிழைத்து வந்தான், இந்த வீட்டில் முழுங்குமோசை பிழைத்துக்கொண்ட புதல்வனுக்கு உபநயனம் செய்யு மங்கலவோசை அந்த வீட்டி லுண்டா மோசை இறந்த பிள்ளையைக் குறித்தழுகைக் குரலோசை; என்றனர். அதுகேட்ட சுந்தரமூர்த்தி நாயனர் திருவுளமிரங்கி அந்தக் குளத்திருநீர் சென்று அம்முதலை தான் விழுங்கிய புதல்வனை உமிழும்பொருட்டு "உரைப்பாருரையுகந்து கள்கவல்லார்" என்னுந் திருப்பதிகம் பாடியபோது அம்முதலை பிள்ளையைக் கரை

யில் உமிழ்ந்தது, தாய் ஓடி அப்பிள்ளையை எடுத்துக்கொண்டு வந்து நாயகமேறு தானும் சுந்தரமூர்த்தி நாயனார் திருவடிகளில் விழுந்து நமஸ்காரஞ் செய்தாள். சுந்தரமூர்த்தி நாயனார் அப்புதல்வனை அழைத்துக்கொண்டு அவிநாசிக்குப் போய்ச் சிவதரிசனஞ் செய்து திருப்பதிகம் பாடித் திருமபி அப்புதல்வன் வீட்டிற் சென்று அவனுக்கு உபநயனஞ் செய்வித்து அதன்பின்பு மகோதையென்னுந் தலத்திற் சென்றிருக்கையில் ஒருநாள் சேரமான் பெருமாள் நாயனார் ஸ்நானஞ் செய்யும்போது சுந்தரமூர்த்தி நாயனார் மீண்டும் திருவஞ்சைக்களத்தருகிற் சென்று அங்குள்ள ஆலயத்தை வலஞ்செய்து சந்நிதியில் விழுந்து நமஸ்கரித்து எழுந்து நின்று அழலிற்பட்ட மெழுகுபோல் உள்ளமுருக மயிர்க்கூச்செறியக் கண்ணீர் பெருக இரண்டு கைகளும் சிரசின்மேற் கூவியத்தஞ்சித்து அடியேனை மாயகாரியமாகிய இவ்வுலக வாழ்க்கையில் நின்ற நீக்கித் தேவரீருடைய திருவடியிற் சேர்த்தருளவேண்டுமென்னுங் கருத்தோடு "தலைக்கு தலைமாலை" எனனுந் திருப்பதிகம் பாடியருள தயா சமுத்திரமாகிய சிவபெருமான் பிரமன் விஷ்ணு முதலிய தேவர்களை நோக்கி 'நீங்கள் சென்று நம்முடைய தோழனாகிய சுந்தரனை வெள்ளை யானையின்மேல் ஏற்றிக்கொண்டுவாருங்கள்' என்று கட்டளையிட்டருள அவர்கள் அவ்வாறே சென்று சுந்தரனைச் சிறிதுதூரம் எழுந்தருளுகிற சுந்தரமூர்த்திநாயனாரை எதிர்கொண்டு சிவபெருமானுடைய திருவாணையைத் தெரிவிக்க, சுவாமியை வணங்கி வெள்ளையானையின்மேலேறிச் செல்லுகையில் தம்முடைய மித்ராழாகிய சேரமான்பெருமாள் நாயனாரை நினைத்துச் செல்ல, சேரமான்பெருமாள் நாயனார் அறிந்து ஓர் குதிரையின்மேலேறி அதிவிரைவாகத் திருவஞ்சைக்களத்துக்குப்போய்ச் சுந்தரமூர்த்தி நாயனார் வெள்ளையானையின்மேலேறி அந்தரமார்க்கமாய்ச் செலவதையுணர்ந்து தம்முடைய குதிரைகாதில் ஸ்பஞ்சாட்சரத்தை ஓதியருளில் அக்குதிரை ஆகாயமார்க்கமாய்போய்ச் சுந்தரமூர்த்தி நாயனார் மேறிச்செல்லும் வெள்ளையானையை வலம் வந்து அதற்குமுன் சென்றது. சேரமான்பெருமாள் நாயனார் படைவீரர்கள் அவரைக் கண்ணுக்குத் தோன்றுமளவும் ஆகாயத்

திற் கண்டு பின் காணுமையால் மனவருத்தமுற்றுத் தம் தம் உடை வாளால் உடலிச் சேதித்து வீரயாக்கையைப் பெற்று அந்நாயனருக்கு முற்பட்டு அவரைத் தரிசித்துக் கொண்டு சென்றனர். சேரமான்பெருமாள் நாயனர் முன்செல்லப் பின்சென்ற சுந்தரமூர்த்தி நாயனர் "தானெனைமுன்படைத்தான்" என்னுந் திருப்பதிகம் பாடிக்கொண்டு திருக்கைலாசமலையின் தெற்குவாயிலுக்கு முன் சென்றனர். அங்கு இருவரும் வாகனங்களினின் றிழிந்திச் சன்னிதானத்திற் சென்று கைலாசபதியை நமஸ்கரித்தெழுந்து அவருடைய திருவருளால் பழபடி ஆலாலசுந்தராய் தாமுன் செய்து கொண்டிருந்த திருத்தொண்டு செய்பவரும் சேரமான் பெருமாள் நாயனர் தம் தொழில் செய்பவரும் ஆயினர்.

முன் பூமியின்கண் அவதரித்த பரவையாரும் சங்கிலியாரும் முன்போலக் கமலினியும் அனிந்திதையுமாகிப் பார்வதியாருக்குத் திருத்தொண்டு செய்திருந்தனர். சுந்தரமூர்த்தி நாயனர் தாம் வழியில் திருவாய் மலர்ந்தருளிய திருப்பதிகங்களை வருணராஜனிடத்துக் கொடுத்தருள அவனதைத் திருவஞ்சைக்களத்திற் கொண்டுபோய் விளக்கினன்.

சரித்திர முற்றிற்று,

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்தி நாயனர்

பண்–பஞ்சமம் (எ–ம் திருமுறை)

திருச்சிற்றம்பலம்.

---

1 தானெனைமுன்படைத்தானதறிந்துதன்பொன்னடிக்கே
நானெனபாடலந்தோநாயினேனைப்பொருட்படுத்து
வானெனைவன்தெதிர்கொண்மதயானையருள்புரிந்து
ஊனுயிர்வேறுசெய்தாளுடித்தான்மலையுத்தமனே.

திருஞானசம்பந்த சுவாமிகள்.

சோழநாட்டில் சீர்காழியில் பிராமணகுலத்தில் சிவபாதவிருத்தயருக்கும் அவர் மனைவி பகவதியாருக்கும் திருவாதிரை நக்ஷத்திரத்தில் அவதரித்தனர். வயது 16 முத்தியடைந்தது வைகாசிமீ மூலநக்ஷத்திரம்.

திருநாவுக்கரசு சுவாமிகள்.

திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் வேளாளர் குலத்தில் புகழனுருக்கும் அவர் மனைவி மாதினியாருக்கும் அவதரித்தனர். வயது 81 முத்தியடைந்தது சித்திரைமீ சதயநக்ஷத்திரம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

திருமுனைப்பாடிநாட்டில் திருநாவலூரில் பிராமண குலத்தில் சடையனுருக்கும் அவர்மனைவி இசைஞானியாருக்கும் அவதரித்தனர். வயது 18முத்தியடைந்தது ஆடிமீ சுவாதிநக்ஷத்திரம்.

ம—

திருச்சிற்றம்பலம்.

தேவாரத் திருமுறையின் வரலாறு.

இப்பரதகண்டத்தில் பிறக்க முத்திதரும் தலமாகிய திருவாரூரின்கண் கல்வி, அறிவு, ஒழுக்கத்திலும், குருலிங்க சங்கமபத்தியிலுஞ் சிறந்த அபயகுலசேகர சோழமகாராஜன், பரமகருணாநிதியாகிய தியாகேசருடைய திருவருளினுலே வைதிக மார்க்கமுஞ், சைவமார்க்கமுந் தழைத்தோங்கச் செங்கோல் நடத்தி வருங்காலத்தில் அவர் சபைக்கு எழுந்தருளிவருஞ் சிவனடி

யார்கள் மூவர் தேவாரத் திருப்பதிகங்களுள் ஒவ்வொன்று ஓதக்கேட்டு ஆனந்தபரவசராய் அத்தேவாரத் திருமுறையை எங்குந் தேடி அகப்படாமையால் மனத் துயரங்கொண்டிருந்தனர். அப்போது திருநாரையூரில் எழுந்தருளியிருக்கும் பொல்லாப்பிள்ளையாருக்கு பூசை செய்யும் ஆதிசைவர் ஒருநாள் ஊருக்குப்போக அவர் புத்திரர் நம்பியாண்டார் நம்பி அடி பிள்ளையாருக்கு அபிஷேக முதலியனவெல்லாஞ்செய்து நைவேத்தியத்தை அவர் திருமுன்வைத்து திருவமுது செய்யும்படி பிரார்த்தித்தார். திருவமுது செய்யாதிருப்பதைக்கண்டு மேற்படி நம்பியார் மனம் வெம்பித் தமது கலேயைக் கல்லில் மோதப் புகுந்தார். உடனே பிள்ளையார் 'நம்பீ, பொறு, பொறு' என்று தடுத்து நைவேத்திய முழுவதையுந் திருவமுது செய்தருளி அவருக்கு ஆசிரியராய் வேதமுதலிய கலேகளெல்லாவற்றையும் ஓதுவிக்க மேற்படி நம்பி மனமகிழ்ந்து நாடோறும் ஓதுவார்தொடங்கி அப்பிள்ளையார்மேல் திருவிரட்டைமணிமாலே பாடியருளினர். அதுகண்ட சோழமகாராஜன் மனமகிழ்ந்து மேற்படி நம்பியை வணங்கி சமயகுரவர் மூவர்கள் அருளிச்செய்த தமிழ்வேதமாகிய தேவாரத் திருமுறையும் திருத்தொண்டர்களுடைய சரித்திரமும் பூவுலகத்தில் விளங்கவேண்டுமென்று விண்ணப்பம் செய்தார். உடனே நம்பி திருவுளமகிழ்ந்து திருக்கோயிலினுள்ளே புகுந்து பிள்ளையாரை வணங்கி தேவாரத்திருமுறைகள் இருக்குமிடத்தையும் திருத்தொண்டர்களுடைய சரித்திரத்தையும் அடியேனுக்கு அருளிச்செய்தல்வேண்டுமென்று பிரார்த்திக்க பிள்ளையார் சிதம்பரத்தில் கனகசபைக்குப் புறக்கடையின் பக்கத்து அறையினுள்ளே தேவாரத்திருமுறைகள் இருக்கின்றனவென்று அருளிச்செய்து திருத்தொண்டர்களுடைய சரித்திரத்தையும் திருவாய் மலர்ந்தருளினர். மேற்படி நம்பி அதைச் சோழமகாராஜாவிடம் தெரிவித்து இருவரும் சிதம்பரமடைந்து சிவகங்கையில் ஸ்நானஞ்செய்து சபாநாயகரைத் தரிசித்து வணங்கினர்கள், பிறகு நம்பி சபாநாயகர்மீது "கோயிற்றிருப்பண்ணியர் விருத்தம்" பாடியருளினர். பின்பு சோழமகாராஜன் தில்லைவாழந்தணர்களை நோக்கி மேற்படி பிள்ளையார் அருளிச் செய்ததை சொல்லி

தேவாரங்களே எடுத்தல்வேண்டுமென்றார். தில்லைவாழந்தணர்கள் அத்திருமுறைகளை வைத்தருளிய மூவரும் எழுந்தருளிவந்தால் அறை திறக்கும் என்றார்கள். சோழமகாராஜன் நடேசருக்கும் மூவருக்கும் அபிஷேகம் செய்வித்து மூவரைக் கனகசபையை வலஞ்செய்வித்துத் திருமுறைகள் இருக்கும் அறையினெதிரே கொணர்வித்து நிருத்திக்கொண்டு தில்லைவாழந்தணர்களை நோக்கிச் சமயகுரவர்கள் மூவரும் எழுந்தருளி வந்துவிட்டார்கள். இனி அறை திறக்கலாமே என்றார். தில்லைவாழந்தணர்கள் சோழமகாராஜனுடைய புத்தியை வியந்து அறை திறக்க அநுமதி செய்தார்கள். சோழமகாராஜன் சமயகுரவர் மூவருடைய கையடையாளமிட்ட திருக்கதவைத் திறந்து திருமுறைகளை புறத்திலே கொணர்வித்து அவற்றுள் அளவில்லாத் திருவேடுகள் பழுதாயிருக்கக்கண்டு கண்ணீர் வாரச் சோகித்து நின்றார். அப்பொழுது எல்லோருங் கேட்கச் சிவபெருமானது திருவருளினாலே "தேவாரத் திருப்பதிகங்களிலே இக்காலத்துக்கு வேண்டினவனவற்றைமாத்திரம் வைத்துவிட்டு மற்றவைகளைச் செல்லுமண் மூடச் செய்தோம்" என்று ஓசரீரிவாக்கு ஆகாயத்திலே தோன்றிற்று, அது கேட்டலும் சோழமகாராஜன் மனக்கவலைதீர்ந்து திருவருளை வியந்து ஆடிப்பாடி மேற்படி நம்பியை வணங்கி சுவாமி தேவாரமுதலிய அருட்பாக்களெல்லாவற்றையும் திருமுறையாக வகுந்தருளும் என்று பிரார்த்தித்தார். நெடி நம்பி அதற்குடன்பட்டு திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாருளிச்செய்த தேவாரத் திருப்பதிகங்களை மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசு நாயனாருளிச்செய்த தேவாரப்பதிகங்களை மூன்று திருமுறைகளாகவும், சுந்தரமூர்த்தி நாயனாருளிச்செய்த தேவாரத் திருப்பதிகங்களை ஒரு திருமுறையாகவும் ஆக ஏழு திருமுறைகளாக வகுத்தருளி மாணிக்கவாசகசுவாமிகள் அருளிச்செய்த திருவாசகம் திருக்கோவையார் என்னும் பிரண்டையும் எட்டாந் திருமுறையாகவும், திருமாளிகைத் தேவர் முதலிய நாயன்மார் ஒன்பதின்பர் அருளிச்செய்த திருவிசைப்பா முதலிய இருபத்தொன்பது திருப்பதிகங்களையும் ஒன்பதாந் திருமுறையாகவும், திருமூலநாயனர் அருளிச்செய்த திருமந்திரத்

தைப் பத்தாந் திருமுறையாகவும், திருவாலவாயுடையார் திருமுகப்பாசுரமுதலிய திவ்வியப் பிரபந்தங்களைப் பதினோராந் திருமுறையாகவும் வகுத்தருளினர். இங்ஙனம் திருமுறைவகுப்பு முற்றியபின்பு மேற்படி நம்பி தமக்கும் பிள்ளையார் உபதேசித்தருளிய திருத்தொண்டத்தொகையை முதனூலாகக்கொண்டு அறுபத்து மூன்று தனியடியாரும் ஒன்பது தொகையடியாருமாகிய திருத்தொண்டர்களுடைய திருத்தொண்டையும் அதனுலவர்கள் பெற்ற பேற்றையும் கலித்துறைத் திருவந்தாதியாக அருளிச் செய்தார். பின்பு திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்மீது ஆறு பிரபந்தங்களும் திருநாவுக்கரசு நாயனர் மீது திருவேகாதச மாலையும் ஆகத் தாம் பாடியருளிய பத்துத் திவ்வியப் பிரபந்தங்களையும் சோழமகாராஜனுடைய வேண்டுகோளின்படி பதினோராந் திருமுறையில் சேர்த்தருளினர். பின்பு நம்பியும் சோழமகாராஜாவுந் தேவாரப் பதிகங்களுக்குப் பண்ணடைவு பெறுமையாலே திருவெருக்கத் தம்புலியூரை யடைந்து திருக்கோயிலை வலஞ்செய்து சிவபெருமானை வணங்கி தேவாரப் பதிகங்களுக்குப் பண்ணடைவை அருளிச்செய்தல்வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அப்பொழுது எல்லோருங் கேட்க ஆகாயத்தில் "அன்பர்களே! திருநீலக்கண்டப்பெரும்பாணன் மரபிலே பிறந்த பெண்ணொருத்திக்கு பண்களை அருளிச்செய்தோம்" என்று ஓசரீரிவாக்குத் தோன்றிற்று. உடனே நம்பியும் சோழமகாராஜாவும் அவளை அழைப்பித்து அவளிடத்தே பண்களைக் கேட்டு மனமகிழ்ந்தார்கள். அதன்பின் இவளைக் கனகசபைக்குமுன் கொண்டுபோய்த் தேவாரத்திருப்பதிகங்களுக்குப் பண்ணடைவு வகுக்கக்கடவீர்கள் என்று ஓசரீரிவாக்கு எழுந்தது. அது கேட்டலும் மேற்படி நம்பியும் சோழமகாராஜாவும் அவ்வாறே அவளை அழைத்துக்கொண்டு சிதம்பரத்தையடைந்து கனகசபைக்குமுன் சென்று தேவாரத் திருப்பதிகங்களுக்குப் பண்ணடைவு வகுத்தார்கள்.

அபயகுலசேகர சோழமகாராஜாவானவர் பதினொரு திருமுறைகளையும் செப்பேடு செய்து தியாகேசர் சந்நிதியில் ஏற்றுவித்தனர். நம்பியாண்டார் நம்பியினலும் திருமுறை கண்ட அபயகுலசேகர

சோழமகாராஜாவினாலும் சைவத் திருநெறித் தமிழ்த் திருமுறை பதினொன்றும் தமிழ் நாடெங்கும் பரந்தன. அதனால் உயர்வொப் பில்லாத சற்சமயமாகிய சைவசமயம் எங்கும் தழைத்தோங்கிற்று.

ஆதியில் உள்ள தேவாரத் திருப்பதிகத் தொகை.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்		...	16000
திருநாவுக்கரசு நாயனார்	...	...	49000
சுந்தரமூர்த்திநாயனார்	...	...	37000
		ஆக ...	102000

இப்போது உள்ள தேவாரத் திருப்பதிகத் தொகை.

திருஞானசம்பந்த ரருளிச் செய்த
திருப்பதிகம் பொதுவகையா லேழதாகு
மருண் ஞானத் தவமுனிவர் மூப்பத்தேழா
மாரூரனம்பியொருநான்காமாகு

வருஞானத் திருப்பதிக நாற்பத்தெட்டா
மற்றுமிந்தப் பதிகமொடு மறைதேவர் மூவர்
திருநாவான் மொழிந்த திருப்பதிகம் யாவு
மியம்பி லெழு நூற்றுத்தொண்ணூற்றாறன்றே.

	ஸ்தலப் பதிகம்.	பொதுப் பதிகம்.	இரண்டின் றொகை.
திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்	378	7	385
திருநாவுக்கரசு நாயனார் ...	274	37	311
சுந்தரமூர்த்தி நாயனார் ...	96	4	100
	748	48	796

இத்தேவாரத் திருப்பதிகங்கள் எழுநூற்றுத்தொண்ணூற்றாறும் அடங்கிய திருமுறை "அடங்கன்முறையெனப்படும்."

நாடு முதலிய விவரம்.

	நாடு.	நாடுகளின் ஸ்தலங்கள். முதலெழுத்து.	பதிகங்கள்.	
1.	சோழநாடு	சோ.		
	காவேரிக்கு வடகரை		63	239
	ஷெ தென்கரை		127	316
2.	ஈழநாடு	ஈ.	2	3
3.	பாண்டியநாடு	பா.	14	34
4.	மலைநாடு	ம.	1	1
5.	கொங்குநாடு	கொ.	7	9
6.	நடுநாடு	ந.	22	62
7.	தொண்டைநாடு	தொ.	32	68
8.	துளுவநாடு	து.	1	2
9.	வடநாடு	வ.	5	14
			274	748
		பொதுப்பதிகம்		48
				796

நால்வர் திருநக்ஷத்திரம்.

பாடிய சம்பந்தர் வைகாசிமூலம் பயிலுமப்பர்
நீடிய சித்திரைமாதச் சதியநிறை வன்றொண்டர்
ஆடியிற் சோதிதிருவாதவூரர் நல்லானிமகந்
தேடிய சேக்கிழார் வைகாசிப்பூசஞ் சிறந்தனரே.

சமயகுரவர் நால்வர் வயது.

அப்பருக்கெண்பத்தொன்றருள்வாதவூரருக்குச்
செப்பியநா லெட்டினிற் றெய்வீக—மிப்புவியிற்
சுந்தரார்க்கு மூவாறு தோன்ஞான சம்பந்தர்க்
கந்தம் பதினாறறி.

சுந்தானகுரவர்.

சித்திரையத்தமமாபதியாவணித்திங்கடனில்
உத்திரஞ்சீர் கொண்மறை ஞானசம்பந்தரோதுகன்னிச்
சுத்திமெயப்பூரமருணந்தியைப்பசிச்சோதிதனில்
வித்தகமெய்கண்ட தேவர் சிவகதி மேவினரே.

மூவர் வயதும், முத்தியடைந்த நகூத்திரமும்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் வயது 16.
முத்தியடைந்தநாள் வைகாசிமீ மூலநகூத்திரம்.
திருநாவுக்காசு நாயனர் வயது 81
முத்தியடைந்தநாள் சித்திரைமீ சதயநகூத்திரம்.
சுந்தரமூர்த்திநாயனர் வயது 18
முத்தியடைந்தநாள் ஆடிமாதம் சுவாதிநகூத்திரம்.

உ

திருச்சிற்றம்பலம்.

திருப்பதிக் கோவை.

கோயிறிரு வேட்களெல் வாயில்கழிப் பாலி
குலவுபெரு மணமையேந் திரப்பள்ளி மூல்லி
வாயில்கலிக் காமூர்சாய்ப் காடுதிருப்பல்ல
வனீச்சரம்வெண் காடுவளர் திருக்காட்டுப்பள்ளி
தாயிலான் குருகாவூர் காழிகோலக்கா
தருக்கிளர்புள் ளிருக்குவே ளூர்கண்ணூர் கோயின்
ஞாயிலியர் கடைமுடியே நின்றியூர் புன்கூர்
காடியமீ நேரன்னி யூர்வேள்விக் குடியே. (1)

கருதெதிர்கொள் பாடியணைந் தேரிசிருக் குறுக்கை
கருப்பறியல் வார்கதியே காட்டுகுரக் குக்கா
மருவும்வாழ் கொளிபுத்தூர் மண்ணிப் படிக்கரையே
வளருமேவா மாம்புலியூர் காஞ்சட்டு முள்ளூர்
திருநாரை யூர்கடம்பூர் பந்தணைகல் லூர்பொன்
னிகழ்ஞ்ச னூர்கோடி காமங்கலக் குடியே
திருப்பனந்தா ளாப்பாடி சேய்ஞலூர் திருந்து
தேவன்குடி திருவியலூர் திருக்கொட்டை யூரே. (2)

இன்னம்பர் திருப்புறம்ப யம்விசய மங்கை
யியல்வைகா வூர்நல்வட குரங்காடு துறையே
பின்னமறு பழனமை யாறுகெய்த் தானம்
பெரும்புலியூர் மழபாடி திருப்பழுவூர் காவூர்
அன்னவன்பி லாலந்துறை மாந்துறைபாற் றுறையே
யாவைக்கா பைஞ்ஞீலி பாச்சிலாச் சிராம
மன்னுமீங் கோய்மலியி னேடறுபான் மூன்றே
வடகரையிற் பதிதென்பால் வாட்போக்கியாமே. (3)

கடம்பந்துறை திருப்பராய்ந்துறை கற்குடிமூக் கீச்சரங்
கருதிருச் சிராப்பள்ளி திருவெறும்பி யூரே
நெடுங்களமே லைக்காட்டுப் பள்ளிபாலம் பொழில்சீர்
நிகழ்திருப்பூ வணநிகண்டி யூர்சோற்றுத் துறைமா
லடிம்மேவி குடிதென்குடித் திட்டைபுள்ள மங்கை
யணியார்ச்சக் கரப்பள்ளியருங்கருகா வூரே
படர்பாலைத் துறை நலூர் திருவாவூ ரதனிற்
பசுபதீச் சரஞ்சத்தி முற்றம்பட் டீச்சரமே. (4)

ஆறைவட தளிதிருவ லஞ்சுழியே குடமூக்
கதனிற்கீழ்க் கோட்டங்கா ரோணகா கேச்சரங்
கூறுமிடை மருதுகுரங் காடுதுறை நீலக்
குடிவைகன் மாடக்கோயி னல்லங்கோ மும்பம்

சாறமரா வடுதுறைதண் டுருத்திநிரு வழுந்தூர்
சகம்புகழ்மா யூரம்வில ருகர்பறிய வூரே
வீறுசெம்பொன் பள்ளிகனி பள்ளிவலம் புரமே
வியன்றலீச்சங் காடாக்கூர் விளங்குகட வூரே. (5)

நிருக்கடவூர் மயானமொடு நிருவேட்டக் குடியே
தெளிச்சேரி தருமபுர நள்ளாறு கோட்டா
றுரைக்குமப்பர்ப் பெருந்திருக் கோயின்மா காள
முயர்மீயச் சூரிலங்கோ யிறிலதைப் பதியூ
மருக்கமழ்பாம் புரநற்சிறு குடிவீழி மிழலை
வன்னியூர் கருவிலிமண் பெணுபெருந் துறையென்
கருத்துடைக்கு றையூர்ச்சித் தீச்சரத் தோடரிசிற்
கரைப்புத்தூர் சிவபுரமுங் கலியகல்லூர் காணே. (6)

கருக்குடிவாஞ் சியந்திருகன் னிலத்துப்பெருங் கோயில்
கவின்கொண்டீச் சரம்பணையூர் விற்குடிதென் புகலூர்
இருக்கும்வர்த்த மானேச்ச ரிராமனதீச் சரமே
யியல்பயற்றூர் செங்காட்டங் குடிமருக விருளே
முருக்குதிருச் சாத்தமங்கை காகைக்கா ரோண
முன்றிருச்சிக்க றிருக்கீழ் வேளூர்தே வூரே
அரிக்கரியான் பள்ளியின்முக் கூடறிரு வாரூ
ரரகெறிமூ லட்டானம் பரவையுண்மண் டளியே. (7)

மேலாகும் விளமர்கா வீரம்பெரு வேளூர்
மிளிர்தலீயா லங்காடு குடவாயில் சேறை
நாலூர்ம யானங்கடு வாய்க்கரைப் புத்தூர்
நவிலுமிரும் பூளைதிரு வாதைப்பெரும் பாழி
மாலூரு மவளிவணல் லூர்பருதி நியமம்
வாழ்வெண்ணி பூவனூர் பாதாளீச் சரநீர்ச்
சேலூரு திருக்களர்சிற் றேமருசாத் தானக்
திருவிடைப்பா வனத்தோடு சேர்ந்தகடிக் குளமே. (8)

தண்டலீ ணெறிகோட்டீர் வெண்டுறையோ டழகே
கருகொள்ளம் பூதூர்பே யெயில்கொள்ளிக் காடு
கண்டெருதெங் கூர்நெல்லிக்கா காட்டியத்தான் குடியே
காழியில் கன்றுப்பூர் வலிவலங்கைச் சினதேதோ
டண்டர்பிரான் கோளிலிதென் றிருவாய்மூர் மறைக்கா
டகத்தியான் பள்ளிகோடிக் குழகருந்தேன் கரையில்
எண்டருநூற் றிருபத்தே ழிப்பாலீ ழத்தில்
இசைகோண மாமலிகே தீச்சுரமென் றிரண்டே. (9)

ஆலவா யப்பனூர் பரங்குன்றே டகத்தோ
டருங்கொடுங்குன் றகதிருப்புத் தூர்புனவா யிலிஞ்சே
டேலுமிரா மேச்சுரமா டாணிகா னப்பே
பெழிற்றிருப்பூ வணஞ்சுழிய லின்புறுகும் முளம்
பாலலோ சனன்றிருநெல் வேலியொடு பாண்டி
பதிஞன்கு மலைநாட்டி லஞ்சைசக்கள மொனறே
சீலமிகு மவிநாசி திருமுருகன் பூண்டி
திருமுரு கொடிமாடச் செங்குன்றூர் தானே. (10)

வெஞ்சமாக் கூடல்கொடு முடிகருவூர் கோங்கின்
மேவுமே முரத்துறைவண் டேங்காடீ மாடம்
எஞ்சலில் கூடலையாற்றூ ரெருக்கத்தம் புலியூ
ரிணையகலுந் திணைநகர்சோ புரமதிகை புகழே
விஞ்சுதிரு நாவலூர் முதுகுன்றக் திருநெல்
வெண்ணெய்திருக் கோவலூ ரறையணிநல் லூரே
மஞ்சுதிக ழிடையாறு வெண்ணெய் நல்லூர் துறையூர்
வடிகூர்வீ டேயருளுந் திருமாணி குழியே. (11)

தண்ணார்தண் டலைப்பாதி ரிப்புலியூர் முண்டீச்
சரம்புறவார் பனங்காட்டூர் திருவாமாத் தூரே
எண்ணாரண் ணமலையு நேநோட்டி லிருபத்
திரண்டாகு மிப்பாலே கம்பமேற் றளிவீண்

கண்ணிணுக்கு மதிலோண காந்தன்றளி யணேக
தங்காவ தங்கச்சி நெறிக்காரைக் காடே
உண்ணுடி குரங்கணின்முட் டந்திருமா நகலோத்
தூர்வன்பார்த் தான்பனங்காட் டீர்வல்ல மாற்பேறு. (12)

ஊறலிலம் பயங்கோட்டீர் விற்கோல மாலங்கா
டுயர்பாசூர் வெண்பாக்கங் கள்ளில் காளத்தி
மாறிறிரு வொற்றியூர் வலிதாயம் பாலி
வடமுல்லை வாயில்வேற் காடுதிரு மயிலை
நூறிறிரு வான்மியூர் கச்சூரா லக்கோயி
லிடைச்சுரங் கழுக்குன்ற மச்சிறுபாக் கம்மே
மாறிறிரு வக்கரையே யரசிலிதால் விரும்பை [டே. (13)
மாகாளந் தொண்டைநன்னாட் டெண்ணின்முப்பா னிரண்

கோகாணங் துளுவதே யத்திலொன்றே யிப்பாற்
குலவுபருப் பதநீல பருப்பதமம் பிகைதன்
பாகருறை யனேகதங்கா வதந்திருக்கே தாரம்
பசுங்கொடித்தான் மலைவடக்கிற் பதினெயந்தே யிவற்றோ
டாகவிரு நூற்றெழுபா னுன்கென்பர் மூவ
ருருட்பதிக மிருக்குமூ நிகமாம் வைப்புத்
தாகமுட னினைப்போர்க்குந் துதிப்போர்க்கும் வினைகள்
சாராவாம் பிறப்பகலுஞ் சத்தியமுத் தியுமே. (14)

மூற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

பாடல் பெற்றுள்ள ஸ்தலங்கள் 274-க்கு விவரம்.

சோழநாட்டே ஸ்தலங்கள் 190-ல் காவேரியின் வடகரையிலுள்ள ஸ்தலங்கள் 63.

1. கோயில்-சிதம்பரம், 2. திருவேட்களம், 3 திருநெல்வாயில் சிவபுரி, 4. திருக்கழுப்பாலி, 5. திருநல்லூர்ப்பெருமணம்-ஆச்சாபுரம், 6. திருமயேந்திரப்பள்ளி, 7. திருத்தென்திருமுல்லைவாயில், 8. திருக்கலிக்காமூர்-அன்னப்பன்பேட்டை, 9. திருச்சாய்க்காடு சாயாவனம், 10 திருப்பல்லவனீச்சுரம்-காவிரிப்பூம்பட்டினம், 11. திருவெண்காடு, 12. கீழைத்திருக்காட்டுப்பள்ளி, 13. திருக்குருகாவூர். 14. சீகாழி, 15. திருக்கோலக்கா, 16. திருப்புள்ளிருக்குவேளூர்-வைத்தீசுரன்கோயில், 17. திருக்கண்ணார்கோயில் குறுமாணக்குடி, 18. திருக்கடைமுடி-கீழையூர், 19. திருநின்றியூர், 20. திருப்புன்கூர், 21. திருநீர், 22. திருஅன்னியூர், 23. திருவேள்விக்குடி, 24 திருஎதிர்கொள்பாடி-மேலத்திருமணஞ்சேரி, 25. திருமணஞ்சேரி-மேழைத்திருமணஞ்சேரி, 26. திருக்குறுக்கை, 27. திருக்கருப்பறியலூர்-மேலைக்காழி, தலைஞாயிறு, 28. திருக்குரக்குக்கா, 29. திருவாவொளிபுற்றூர், 30. திருமண்ணிப்படிக்கரை இலம்பைப்பட்டு, 31. திருவோமாம்புலியூர், 32. திருகாஞ்சிமூள்ளூர், 33. திருநாரையூர், 34. திருக்கடம்பூர்-மேலைக்கடம்பூர், 35. திரும்பற்கணேல்லூர், 36. திருக்கஞ்சனூர், 37. திருக்கோடிகா, 38. திருமங்கலக்குடி, 39. திருப்பனந்தாள், 40. திருஆப்பாடி, 41. திருச்சேய்ஞலூர், 42. திருத்துதேவன்குடி, 43. திருவியலூர், 44. திருக்கொட்டையூர், 45. திருஇன்னம்பர், 46. திருப்புற பயம், 47. திருவிசயமங்கை, 48. திருவைகாவூர், 49. திருவடகுரங்காடுதுறை, 50. திருப்பழனம், 51. திருவையாறு, 52. திருநெய்த்தானம், 53. திருப்பெரும்புலியூர், 54. திருமழபாடி, 55. திருப்பழனூர், 56 திருக்காறாயூர், 57. திருஅன்பிலாலந்துறை திருமாலயந்துறை-அன்பில், 58. திருமாந்துறை, 59. திருப்பாற்

துறை, 60. திருவாணைக்கா-ஜம்புகேசுரம், 61. திருப்பைஞ்ஞீலி, 62. திருப்பாச்சிலாச்சிராமம்-திருவாசி, 63. திருஈங்கோய்மலை திருவிங்கநாதமலை.

காவேரிக்கு தென்கரையிலுள்ள ஸ்தலங்கள் 127.

1. திருவாட்போக்கி-ரத்நகிரி மாணிக்கமலை, 2. கடம்பர்துறை கடம்பர்கோயில்-குழித்தலை, 3. திருப்பராய்த்துறை, 4. திருஈற்குடி-உய்யக்கொண்டான், 5. திருமூக்கீச்சுரம்-உறையூர், 6 திருச்சிராப்பள்ளி, 7. திருஎறும்பியூர், 8. திருஎடுங்களம், 9. மேலைத்திருக்காட்டுப்பள்ளி, 10. திருவாலம்பொழில், 11. திருப்பூந்துருத்தி, 12. திருக்கண்டியூர், 13. திருச்சோற்றுத்துறை, 14. திருவேதிக்குடி, 15. திருத்தென்குடித்திட்டை-திட்டை, 16. திருப்புள்ளமங்கை, 17. திருச்சக்காப்பள்ளி-ஐயம்பேட்டை, 18. திருக்கருகாவூர்-திருக்கறைவூர், 19. திருப்பாலைத்துறை, 20. திருவல்லூர், 21. திருஆவூர், 22. திருச்சத்திமுத்தம், 23. திருப்பட்டீச்சுரம், 24. திருப்பழையாறைவடதளி, 25. திருவலஞ்சுழி, 26 திருக்குடமூக்கு-கும்பகோணம், 27. திருக்குடந்தைக்கீழ்க்கோட்டம் கும்பகோணத்திலுள்ள நாகேசுர்சுவாமி கோயில், 28. திருக்குடந்தைக்காரோணம் கும்பகோணத்திலுள்ள காசிவிசுவநாதர் கோயில், 29. திருநாகேச்சுரம், 30. திருவிடைமருதூர், 31. திருத்தென்குரங்காடுதுறை-ஆடுதுறை, 32. திருலேக்குடி. தென்னல்குடி, 33. திருவைகன்மாடக்கோயில், 34. திருகல்லம்-கோனேரிராயபுரம், 35. திருக்கோழம்பம், 36. திருவாவடுதுறை, 37. திருத்துருத்தி-குற்றாலம், 38. திருவழுந்தூர், 39. திருமயிலாடுதுறை-மாயூரம், 40. திருஇளகர், 41. திருப்பறியலூர்-பரசலூர், 42. திருச்செம்பொன்பள்ளி, 43. திருநனிபள்ளி-புஞ்சை, 44. திருவலம்புரம், 45. திருத்தலைச்சங்காடு, 46. திருஆக்கூர், 47. திருக்கடவூர், 48. திருக்கடவூர்மயானம், 49. திருவேட்டக்குடி, 50. திருத்தெளிச்சேரி, 51. திருத்தருமபுரம், 52. திருநள்ளாறு, 53. திருக்கோட்டாறு, 54 திருஅம்பர்ப்பெருந்திருக்கோயில், 55. திரு

அம்பர்மாகாளம், 56. திருமீயச்சூர், 57. திருமீயச்சூர்-இளங்கோயில், 58. திருநிலதைப்பதி-மதிமுத்தம், 59. திருப்பாம்புரம், 60. திருச்சிறுகுடி, 61. திருவீழிமிழலை, 62. திருவன்னியூர், 63. திருக்கருவிலி, 64. திருப்பேணுபெருந்துறை-திருப்பந்துறை, 65. திருநறையூர்ச்சித்தீச்சுரம், 66. திருஅரிசிற்கரைப்புத்தூர், 67. திருச்சிவபுரம், 68. திருக்கலபகல்லூர் சாக்கோட்டை, 69. திருக்கருக்குடி மருதாந்தநல்லூர், 70 திருவஞ்சியம், 71. திருநன்னிலம், 72. திருக்கொண்டீச்சுரம், 73 திருப்பனையூர், 74. திருவிற்குடி, 75. திருப்புகலூர், 76. திருப்புகலூர்வர்த்தமானீச்சுரம். 77. திருஇராமனதீச்சுரம், 78. திருப்பயற்றூர், 79. திருச்செங்காட்டங்குடி, 80. திருமருகல், 81. திருச்சாத்தமங்கை, 82. திருநாகைக்காரோணம்-நாகப்பட்டணம், 83. திருச்சிக்கல், 84. திருக்கீழ்வேளூர், 85. திருத்தேவூர், 86. திருப்பள்ளியின் முக்கூடல்-அரியான்பள்ளி, 87. திருவாரூர், 88. திருவாரூர் அரகெறி, 89. திருவாரூர்ப்பரவையுண்மண்டளி, 90 திருவிளமர், 91. திருக்காவிரம் கரையபுரம். 92. திருப்பெருவேளூர் காட்டுமையன்பேட்டை 93 திருத்தலையாலங்காடு, 94. திருக்குடவாயில், 95. திருச்சேறை, 96. திருநாலூர்மயானம், 97. திருக்கடவாய்க்கரைப்புத்தூர், 98. திருஇரும்பூளை ஆலங்குடி, 99. திருஆதைப்பெரும்பாழி அரித்துவாரமங்கலம், 100. திருஅவளிவணல்லூர், 101. திருபரிதியப்பம், 102. திருவெண்ணி, 103 திருப்பூவணூர், 104. திருப்பாதாளீச்சுரம்-பாம்பணி, 105. திருக்களர், 106. திருச்சிற்றேமம், 107. திருவுசாத்தானம், 108. திருஇடும்பாவனம், 109. திருக்கடிக்குளம், 110. திருத்தண்டலைநீணெறி, 111. திருக்கோட்டூர், 112. திருவண்டுதுறை, 113. திருக்கொள்ளம்பூதூர், 114. திருப்பேரெயில், 115. திருக்கொள்ளிக்காடு, 116. திருத்தெங்கூர், 117. திருநெல்லிக்கா, 118. திருநாட்டியத்தான்குடி, 119. திருக்காறுயில்-திருக்காறைவாசல், 120. திருக்கன்றாப்பூர், 121. திருவலிவலம், 122. திருக்கைச்சினம், 123. திருக்கோளிலி, 124. திருவாய்மூர், 125. திருமறைக்காடு-வேதாரணியம், 126. திருஅகத்தியான்பள்ளி, 127. திருக்கோடி-குழகர்கோயில்.

ஈழநாட்டு ஸ்தலங்கள் 2.

1. திருக்கோணமலை, 2. திருக்கேதீச்சுரம்.

பாண்டியநாட்டு ஸ்தலங்கள் 14.

1. திருஆலவாய்-மதுரை, 2. திருஆப்பனூர் திருஆப்புடையார்கோயில், 3. திருப்பரங்குன்றம், 4. திருவேடகம், 5. திருக்கொடுங்குன்றம்-பிரான்மலை, 6. திருப்புத்தூர், 7 திருப்புனவாயில், 8 திருஇராமேச்சுரம், 9. திருஆடானை, 10. திருக்காளப்பேர்-காளையார்கோயில், 11. திருப்பூவணம், 12. திருச்சுழியல், 13. திருக்குற்றாலம், 14. திருநெல்வேலி.

சேரநாட்டு ஸ்தலம் 1.

1. திருஅஞ்சைக்களம்.

கொங்குநாட்டு ஸ்தலங்கள் 7.

1. திருஅவிநாசி, 2. திருமுருகன்பூண்டி, 3. திருஆணை-பவானி, 4. திருச்செங்குன்றூர்-திருச்செங்கோடு, 5. திருவெஞ்சமாக்கூடல், 6. திருப்பாண்டிக்கொடுமுடி-கொடுமுடி, 7. திருக்கருவூர்.

தொண்டைநாட்டு ஸ்தலங்கள் 22.

1. திருநெல்வாயில்அரத்துறை-திருவரத்துறை, 2. திருப்பெண்ணாகடம், 3. திருக்கூடலையாற்றூர், 4 திருவதிகைத்தம்புலியூர்-இராஜேந்திரன்பட்டினம், 5. திருத்தினைநகர், 6. திருச்சோபு

ரம்–தியாகவல்லி, 7. திருவதிகை, 8. திருகாவலூர், 9 குன்றம்–விருத்தாசலம், 10. திருநெல்வெண்ணெய், 11 வலூர், 12. திருஅறையணிநல்லூர், 13. திருஇடையா–காடையற் வெண்ணெய்நல்லூர், 15. திருத்துறையூர், 16. திருவடிகூகவர்தா டார்கோயில், 17. திருமாணிகுழி, 18. திருப்பாதிருப்புலியூய 19. திருமுண்டீச்சுரம், 20. திருப்புறவார்பனங்காட்டூர் பனையபு ரம், 21. திருவாமாத்தூர், 22. திருவண்ணமலை.

தொண்டைநாட்டு ஸ்தலங்கள் 32.

1. திருக்கச்சியேகம்பம்–காஞ்சீபுரம், 2. திருக்கச்சிமேற்றளி காஞ்சீபுரம், 3. திருஓணகாந்தன்தளி–காஞ்சீபுரம், 4. திருக்கச்சி அனேகதங்காபதம்–காஞ்சீபுரம், 5. திருக்கச்சி ஏகம்பனிக்காரைக்காடு-காஞ்சீபுரம், 6. திருக்குரங்கணின்முட்டம், 7. திருமாகறல், 8. தி ருவோத்தூர், 9. திருப்பனங்காட்டூர்-திருப்பனங்காடு, 10. திரு வல்லம், 11. திருமாற்பேறு, 12. திருஊறல்–தக்கோலம், 13. திரு இலம்பையங்கோட்டூர், 14. திருவிற்கோலம்–கூவம், 15. திருவா லங்காடு, 16. திருப்பாச்சூர், 17. திருவெண்பாக்கம், 18. திருக் கள்ளில், 19. திருக்காளத்தி, 20. திருவொற்றியூர், 21. திருவளி தாயம்–பாடி, 22. வடதிருமுல்லைவாயில், 23. திருவேற்காடு, 24. திருமயிலாப்பூர், 25. திருவான்மியூர், 26. திருக்கச்சூர், 27. திருவிடைச்சுரம், 28. திருக்கழுக்குன்றம், 29. திருஅச்சிறு பாக்கம், 30. திருவக்கரை, 31. திருஅரசிலி–ஒழுந்தியாப்பட்டு 32. திருஇரும்பைமாகாளம்.

நடுநாட்டு ஸ்தலம் 1.

1. கோகர்ணம்.

வடநாட்டு ஸ்தலங்கள் 5.

1. ஸ்ரீபர்ப்பதம்-ஸ்ரீசைலம்-மல்லிகார்ச்சுனபுரம், 2. திருஇந் திரநீலபருப்பதம், 3. திருஅனேகதங்காபதம், 4. திருக்கேதாரம், 5. திருமொடித்தான்மலை-ஸ்ரீகைலாசம்.

274-ஸ்தலங்கள் முற்றிற்று.

1.

ஸ்ரீகணபதி. ஸ்ரீபிரமன். ஸ்ரீமஹேச்வரர்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

நேரிசை வேண்பா.

காடையற் தவர்தா லாய

விநாயகர்.

வானுலகு மண்ணுலகும் வாழுமறை வாழுப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத வைந்துகர மூன்றுவிழி நால்வா
யானமுக னைப்பரவி யஞ்சலிசெய் கிற்பாம்.

தந்திதேவர்.

சித்தர்களிருடிகட்குச் சிரேஷ்டமா யுதித்து நித்தம்
சத்தியஞ் சாந்தமாதித் தனிப் பதினாறுபேறும்
அத்தனலளிக்கப்பெற்றே யனுதினமவர்முன் றங்கும்
கத்தனு நந்திநாளைக் கருத்தினி லிருத்தி வாழ்வாம்.

சிவபெருமான்.

சீர்சான்றவேதச் செழும்பொருளே சிற்சொரூபப்
போர்சான்ற வுண்மைப் பிரமமே—சேர்சான்றோர்
நாடும் பரசிவமே நாயேனுக் கன்புநின்பா
னீடும்படி நீ நிகழ்த்து.

சத்தி.

ஈசனருளிச்சையறிகியற்றலின்ப மிலயமொடுபோகமதிகாரமாகித்
தேசருவமருவருவமுருவமாகித் தேவியுமாய்த் தேசமொடுசெல்வ
மாகிப், பேசரியவாபிரையெல்லாம்பெற்றநோக்கிப் பெரும்போகம
வையளித்துப் பிறப்பிணியுமொழித்திட்ட, வாசகமுமடியருள்த்தப்
பணடனிருக்குமன்னையருட் பாதமலர் சென்னிவைப்பாம்.

நடராஜர்.

நஞ்சதர்மனறையுந் தில்லைவாழந்தணரும்
1. பரும புலிமுனியும் பதஞ்சலியுந் தொழுதேத்த
ராருங் சுடல்புடைசூழ் வையமெலா மீடேற
வாரமணிமன்று ளெடித்த திருவடி போற்றி.

சிவகாமசுந்தரி.

பரந்தெழுந்த சமண்முதலாம் பாசமயவிருணீங்கிச்
சிரந்தழுவுசைவநெறித் திருநீற்றினொளிவிளக்க
அரந்தைகெடப்புகலியர்கோ னமுதுசெயத் திருமூலப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரிபூங் கழல்போற்றி.

தியாகராஜர்.

கார்பெருவங் கருங்கூந்தற் செவ்வாய் வெண்ணகைப்பச்சைக் கன்னியோடுங், தார்கமழ்பூங்காந்தளந்தோட் குமரனொடு மணிச்சிங்காதனத்துமேவிச், சீர்பரவு வான்புலவர் நிதிநந்தன யாவையுங்கல்கிச் சிறப்பின்வைகும், வார்புனல்சூழ்வயற்கமலத்தேவர்கள் சிந்தாமணியை மனத்துள்வைப்பாம்.

சுப்பிரமணியர்.

வீறுடையாய் வேலுடையாய் வெற்புடையாய் விண்ணுடையாய்
நீறுடையாய் நேயமுடங் கெஞ்சுடையாய்—கூறு
முதல்வாவேள் ஆறுமுகவா முக்கண்ணன்
புதல்வா நின்பூ ளெம் புகல்.

வீரபத்திரர்.

சந்திரனைத்தாளினுற் றேய்த்திட்டுச் சூரியனைத் தந்த மெல்லைஞ்
சிந்தவே புடைத்ததுமகத் தழலவியத்தக்கன்முடி தீயிற்போட்டு
வந்தமுனிவோரையெல்லாம் யூபத்திற் சேர்த்தடித்து வாய்படித்து
முந்துகின்றபின்னருளுமொருவீரபத்திரன்முண் முடிமேல் வைப்
பாம்

அறுபத்துமூவர்.

தோடுகூற வூற்றெழுகப் பசுந்தாது மலர்ந்தருக்குந் தொடையற் கொன்றை, நீடிய செஞ்சுடர்ச்சற்றைச் சடைமுடியிலணிந்தவர்தா ணிழற்சே யெய்தும், பீடுபெறு தில்லைவா ழந்தணரே முதலாய பெரியோர்பாதம், கோடைகெடும் பலரீங்கப்புனைந்தவர்தாண் மலர் சிரமேற் கொண்டுவாழ்வாம்.

அறுபத்துமூன்றுநாயன்மார்களுதயம்.

சித்திரையிலவர் வைகாசியினிலவர்
திகழானிதனிலவ ராடியினிலவர்
பொத்தியசீராவணியிலறுவர் புரட்டாசிபுகழ்
நால்வ ரைப்பசியிலறுவர் கார்த்திகையில்
வித்தார மோரைவர் மார்கழியோரைவர்
விளங்கிய தை மதியெழுவர் மாசிதனி லவர்
வைத்த திறற் பங்குனியி லவ ரீராறு
மாதத்தி லிவ்வாறறுபான்மூவ ருதித்தனரே.

63-நாயன்மார்கள் திருநக்ஷத்திரங்கள்.

சித்திரைமீ

பரணி சிறுத்தொண்ட நாயனர். ரோகணி மங்கயர்க்கரசி நாயனர். திருவாதிரை விரன்மிண்ட நாயனர். அஸ்தம் உமாபதி சிவாச்சாரியார். சித்திரை இசைஞானியார். சுவாதி திருக்குறிப்புத்தொண்ட நாயனர். சதயம் திருநாவுக்கரசு நாயனர்.

வைகாசிமீ

பரணி சுழற்சிங்க நாயனர். பூசம் நமிநந்தியடிகள் நாயனர். சேக்கிழார் நாயனர். ஆயிலியம் சோமாசிமாறர். மூலம் ஞான சம்பந்தர். முருகர். திருநீலகண்டயாழ்ப்பர். திருநீலநக்க நாயனர்.

ஆனிமீ

மகம் மாணிக்கவாசகர். பூரம் அமர்நீதி நாயனர். ரேவதி கலிக்காம நாயனர்.

ஆடிமீ

கார்த்திகை மூர்த்தி நாயனர். கார்த்திகை புகழ்ச்சோழ நாயனர். திருவாதிரை கூற்றுவ நாயனர். சித்திரை குரும்ப நாயனர். சுவாதி சுந்தரமூர்த்தி நாயனர். சுவாதி சேரமான் பெருமாள் நாயனர். கேட்டை கணிய நாயனர். கேட்டை கோட் புலி நாயனர்.

ஆவணிமீ

பூசம் செறுத்துணை நாயனர். ஆயிலியம் புகழ்த்துணை நாயனர். ஆயிலியம் அதிபத்த நாயனர். மகம் இளையான்குடிமார நாயனர். உத்திரம் முறைஞானசம்பந்தர். அனுஷம் குலச்சிறைய நாயனர். மூலம் கழற்சிங்கநாயனர்.

புரட்டாசிமீ

அஸ்வம் ருத்திரபசுபதி நாயனர். ரோகணம் திருநாளைப் போவார். பூசம் அருணந்திசிவாசாரியார். சதயம் நரசிங்கமுனைய நாயனர். உத்திராடம் ஏகாதி நாயனர்.

அற்பிசிமீ

அஸ்வம் திருமூல நாயனர். பரணி கெடுமார நாயனர். கார்த்திகை இடங்கழிய நாயனர். பூசம் சத்தி நாயனர். சுவாதி மெய்கண்டதேசர். அனுஷம் பூசலார் நாயனர். மூலம் ஐபடிகள் காடவர்.

கார்த்திகைமீ

கார்த்திகை கணம்புல்ல நாயனர். உத்திரம் மெய்ப்பொருள் நாயனர். அஸ்தம் ஆகாய நாயனர். மூலம் மூர்க்க நாயனர். பூராடம் சிறப்புலி நாயனர்.

மார்கழிமீ

திருவாதிரை சடைய நாயனர். உத்திரம் இயற்பகை நாயனர். சுவாதி மானக்கஞ்சா நாயனர். பூராடம் சாக்கிய நாயனர். ரேவதி வாயிலார் நாயனர்.

தைமீ

மிருகசிரிடம் கண்ணப்ப நாயனர். திருவாதிரை அறிவாட்டாய நாயனர். உத்திரம் சண்டேசுர நாயனர். விசாகம் திருநீலகண்ட நாயனர். சதயம் அப்பூதியடிகள் நாயனர். ரேவதி கலிக்கம்ப நாயனர்.

மாசிமீ

அஸ்தம் எறிபத்த நாயனர். பூராடம் காரி நாயனர். சதயம் கோட்செங்கண் நாயனர்.

பங்குனிமீ

ரோகணி சிவநேச நாயனர். திருவாதிரை கணநாத நாயனர். பூசம் மூர்ணயடுவா நாயனர். சுவாதி காரைக்காலம்மையார். சதயம் நண்டியடிகள் நாயனர்.

தட்சணமூர்த்தி.

வேதமாகம மியாவும் விளம்புநின்
பாதமேயொருபற்றெனப் பற்றலும்
போதமேதெனும் புண்ணிய நால்வருக்
கோதமூர்த்தியை யுள்ளத் திருத்துவாம்.

சண்டேசர்.

சிந்தைகூர்ந்து சிவனீயருச்சிக்க
நிந்தைசூழுமந்நேரம் பொருமலே
தந்தையாரிருதாளறவீசுமும்
எந்தையார் திருத்தாள்பணிந்தேத்துவாம்.

வயிரவர்.

கானிலத்திற் சிறந்திருக்கு நகர்களிலே முதல்வனாபதியேபோலும் மேனிலத்திற் பசுபதியே மேலோனென் றெடுத்துரைக்கும் வேத வாய்மை, தானிலத்திற்றடுத்தலாற் றலைபரிந்து சதுர்முகன் றன் முருக்குத்தீர்த்திம், மானிலத்திற் காட்டிவரும் வயிரவனூர் மலரடி கள் வணக்கஞ்செய்வாம்.

நால்வர்துதி.

கற்பனைபுலகமெல்லாங் கடந்தான் பதத்தின்மேவி
விற்பனவடியராக விளங்கு சம்பந்த ரப்பர்
பற்பலயேவலாகப் பதம்புரி சுந்தரேசர்
நற்பொருள்வாதவூரர் நறுமலர்ப்பதங்கள் போற்றி.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

காழிநகர்ச் சிவபாதவிதயர்தந்த கவுணியர்கோ னழுதுமையாள் கரு தியூட்டு, மேழிசையி னமுதுண்டு தாளம் வாங்கி யிலங்கியசித் திலச்சிவிகையிசையவேறி, வாழுமுபலகனகற்றிப்பந்தரேய்ந்து வள ர்கிழிபெற்றரவின்விடமருகற்றீர்த்து, வீழிநகர்க்கரசெய்தி மறைக் கவம்பிணித்துமீனவன்மேனியின்வெப்பு விலித்தாரே.

ஆரெரியிட்டெடுத்தவேடவைமுன்னேற்றி யாற்றிலிடு மேடெதிர் போயணையவேற்றி, யோரமணரொழியாமே கழுவிலேற்றி யோது திருப்பதிகத்தா லோடமேற்றிக், காருதவுமிடிபுத்தன் றலையிலேற் றிக் காயாதபனின் முதுகணிகளேற்றி, யீரமிலாவங்கமுயிரெய்த வேற்றியிலங்குபெருமணத்தாணையெய்தினரே.

திருநாவுக்கரசு நாயனார்.

போற்றுதிருவாமூரில் வேளாண்டொன்மைப் பொருவில் கொறுக் கையரதிபர் புகழனார்பான், மாற்றருமன்பினிற்றிலதவதியா மாது வந்ததித்தபின்புமருணீக்கியாருந், தோற்றியமண்சமயமுறு துயர நீக்கத் துணைவரருடரவந்த சூலைநோயாற், பாற்றருநீனிடசெய்திப் பாடனீபுரத்திற் பாழிபொழித்தரனிகைப்பதிபில்வந்தார்.

வந்தமக்கையாருளானீறுசாத்தி வண்டமிழா ஞைப்பிரிந்து வாக்
கின்மன்னுய், வெந்தபொடி விடம்வேழம் வேலைநீத்தி வியன்சூலன்
கொடியிடபம் விளக்கச்சாத்தி, யத்தமிலப்பூதிமகனாவுமாற்றி யரு
ட்காசுபெற்றுமையடைப்புகீக்கிப், புந்திமகிழ்க்கையாற்றிற் கயிலை
கண்டு பூம்புகலூரான்பாதம் பொருந்தினீரே.

சுந்தரமூர்த்தி நாயனார்.

தண்கயிலையதுநீங்கி காவலூர்வாழ் மைவவனார் சடையனார் தமைய
னாராய், மண்புகழவருட்டிறமையா லேழ்லைகாட்டி மணம்விலக்க வன்
றொண்டராய திகைசேர்ந்து, நன்பினுட வைகுபுரிய வாரூர் மேவி
கலங்களரும் பரவைதோணயக்துலவுதித், திண்டிறலும் விறன்மிண்
டர் திறல்கண்டேடத்துத் திருத்தொண்டத் தொகையருளாற் செப்
பினீரே.

செப்பலருங்குண்டையூர் நெல்லைபூத்துத் திருப்புகலூர்ச்செங்கல்
செழும்பொன்னுச்செய்து, தப்பினறுதகுன்றார்தரும் பொருளாற்
றிட்டுத் தடத்தெடித்துச் சங்கிலிதேர்ள் சாயந்துகாத, ஞெப்பிற
னித் தூதுவந்தாறுகிறியுறுமுதலே சிறு மதலைபுமிழல்லி, மெய்ப்
பெரியகளிறேறியருளாற்சேர வேந்தருடன் வடகயிலை மேவினீரே

மாணிக்கவாசக சுவாமிகள்.

அம்மறைநாதன் றேன்றி யருட்பெறக் குறித்திடாது
செம்மையற்றனவென்றுன்னிச்செழுமறைப்பிரமனன
விம்பிய வாசகத்தை விமலன்வந் தெழுதப்பெற்ற
பொம்மலர் வாதவூரர்ப் பொன்னடி வணங்குவாமால்.

திருமால்.

அமலையாதியென் றெண்ணி யவன்பதம்
விமலமாகத் தொழுது விண்ணோருடன்
சமலநீங்கித்தனிபழ தண்டுவாழ்
கமலைகாதன் கழலிணை பேற்றுவாம்.

இலக்குமி.

தண்கமலத்திருந் தீசனடிக் கமலமனக் கமலத்தன்னில் வைத்து வண்கமலக்கண்ணுனேமமனவாளனெனப்பெறுவான்மாதவஞ் செய் தொண்கம லாலயமெனும் பேரொளியார்ந்த திருவாரூர்க்குகத்தணிந்த, பெண்கமலங் கைக்கமலம் பிடித்தகோடி தீணத்தொழுது பெரிது வாழ்வாம்.

சரஸ்வதி.

விரைப்போதன் முகப்போது பிரியாத தனிவண்டு வெண்பால் வேலைத், திரைப்போதுமமுதகிறத் தேனடைந்தோர் பவக்கடலைத் தீர்த்தமுத்திக், கரைப்போதும்படியெடுக்குந் திருஞானத் தனிப் புணேவெண்கமலஞ்சென்தாண், மரைப்போது மனப்போது வைத்தினிது முப்போதும் வாழ்த்தல் செய்வாம்.

நவக்கிரகம் 9.

1 சூரியன் 2 சந்திரன் 3 செவ்வாய் 4 புதன் 5 குரு 6 சுக்கிரன் 7 சனி 8 ராகு 9 கேது.

வேயுறுதோளிபங்கன் விடமுண்டகண்டன் பிரகலல்லவீணைதடவி மாசுறுதிங்கள் கங்கைமுடிமேலணிந்தெனுளமே புகுந்தவதனுன் ஞாயிறுதிங்கள் செவ்வாய்புதன் வியாழம்வெள்ளிசனிபாம்பிரண்டு யாசுறுகல்லகல்ல வலைகல்லகல்ல வடியாரவர்க்குமிகவே. [முடனே

இரவிசங்கர னீசபு திங்கள்சே
யினியகந்தனி லைதிருமால்புதன்
குருவயன்சுரர் கோன்கொள்ளிசன்னெமன்
குலவிராகு குறிபத்திரகாளியா
மருவு சித்திர புத்திரன் கேதுவாம்
வானவர்முனி வேராசி மற்றுநா
ளரிமுதற்கிர கத்தாற்பரசிவ
னண்டபிண்ட பலடத்தனித்தாற்றுமே.

சூரியபகவான் வணக்கம்.

காலினியிருளோடீக்குங் கதிரொளிபாதியெங்கும்
பூதலமுலகோர்போற்றப் புகிற்பொடு சுகத்தைகல்கும்
வாகியேழுடைய தேர்மேல் மகாகிரி வலமாய்வந்த
தேசிகாவெனோரட்சிப்பாய் செங்கதிரவனேபோற்றி.

சந்திரபகவான் வணக்கம்.

அலைகடலதனினின்று மன்றவந்ததித்தபோது
கலைவளர்திங்களாகிக் கடவுளரெவருமேத்துஞ்
சிலைநுதலுமையாள்பங்கன் செஞ்சடைப்பிறையாய்மேரு
மலைவலமாகவந்த மதியமே போற்றி போற்றி.

செவ்வாய்பகவான் வணக்கம்,

வசனகற்றையாத்தோடு மன்னவர்சபையில்வார்த்தை
புசபலபராக்ரமங்கள் போர்தனில்வெற்றி யாண்மை
நிசமுடனவர்க்கு நீயிலக்கணிலளிக்குங்
குசனிலமகனுஞ் செவ்வாய் குரைகழல் போற்றி போற்றி.

புதபகவான் வணக்கம்.

மதனனுன் முதலா னான்கு மறைபல கல்லிநாணம்
விதமுடனவர்க்கு விஞ்சைகளருள்வோன்றிங்கள்
சுதன்கன பதசுபாக்கியஞ் சுகம்பல தொடுக்கவல்லன்
புதன்கனிப்புலவன் சீர்மால் பொன்னடி போற்றி போற்றி.

குருபகவான் வணக்கம்.

மறைமிகுகலிநூல்வல்லோன் வானவர்க்காசான்மந்திரி
கறைசொரிகற்பகப்பொன் னூட்டிணுக்கதிபஞ்சி
நிறைதனஞ்சிலைகமண்ணி னீடுபோகத்தைதல்கு
மிறைபவன் குருவியாழி மலர்ப்பாதம்போற்றி.

சுக்கிரபகவான் வணக்கம்.

மூர்க்கவான் சூரவாணவன் முதலினோர் குருவாம் வையம்
காக்கவான் மழைபெய்விக்குங் கவிமகன்கனமீவோன்
றீர்க்கவானவர்கள் போற்றச் செத்தவர்தமையெழுப்பும்
பார்க்கவன் சுக்ராசாரி பாதபங்கயமேபோற்றி.

சனிபகவான் வணக்கம்.

முனிவர்கடேவரேனும் மூர்த்திகண் முதலினோர்கள்
மனிதர்கள் சகலவாழ்வின் மகிமையதல்லா தண்டோ
கனிவுளதெய்வமீயே கதிசேயெகாகமேறுஞ்
சனியனேயுன்னை துதிப்பேன் நாமியமேற்சருள்செய்வாயே.

இராகுபகவான் வணக்கம்.

வாகுசேர்கெடிமாரன்முன்னம் வானவர்க்குமுதமீயப்
போகுமக்காலையுன்றன் புனர்ப்பினும் கிரமேயற்று
பாகுசேர்மொழியாள்பங்கன் பரன்கையில் மீண்டுபெற்ற
ராகுவேயுனைத்துதிப்பேன் ரட்சிப்பாய் ரட்சிப்பாயே.

கேதுபகவான் வணக்கம்.

பொன்னையனுரத்திற்கொண்டோன்விலவர்தம்பொருட்டாலாழி
தன்னையேகலடந்தமுன்னந்தண்ணமுதளிக்கலுற்ற
பின்னைநின்காவாலுண்டபெட்பினிற்கிரம்பெற்றுய்ந்தா
யென்னையாள்கேதுவேயில்லிருநிலம்போற்றத்தாமே.

சப்தபுரிகேஷத்திரம். 7

அயோத்தியா மதுராமாயா, காசி, காஞ்சி அவந்திகா
புலிதுவாராவதி சைவ, சப்தயிதே மோட்சதாயகா

அயோத்தி, வடமதுரை, மாயூரம், காசி, காஞ்சி, உச்சினி, துவாரகை.

சப்தலிங்கலக்ஷணம். 7

1. சுயம்பு—சுயம்பு, 2 திவ்வியம்—பார்வதியால், 3 தெய்வீகம்—தேவர்களால், 4 ஆருஷம்—ரிஷிகளால், 5 ராட்சஷம்—அசுரர்களால, 6 பாணம்—பாணாசுரனல், 7 மானுஷம்—மனிதர்களால்.

திருக்கைலாயத்தில் சூதமுனிவரால் சொல்லப்பட்ட 1008-சிவகேஷத்திரத்தில் மகாமுக்கியமானவஸ்தலங்கள்.

விருத்தம்.

அண்ணாமலை விருத்தாசலம் ஆரூர் ஆங்காசி
மண்ணார் மதுரை சீகாளத்தி சைலம்—பரங்காஞ்சி
விண்ணார்கோயில் ஆலங்காடு மருதூர் விடுகும்பம்
கண்ணேர் குடமூக்கு சேதுகேதாரங்கள் கல்சிவமே.

1. திருஅண்ணாமலை. 2 திருமுதுகுன்றம்—விருத்தாசலம். 3 திருவாரூர். 4 காசி. 5 திருஆலவாய்-மதுரை. 6 திருக்காளத்தி. 7 ஸ்ரீசைலம். 8 ஸ்ரீகாஞ்சி. 9 சிதம்பரம். 10 திருவாலங்காடு. 11 திருவிடமருதூர். 12 திருக்குடமூக்கு கும்பகோணம். 13 இராமேச்சுரம். 14 திருக்கேதாரம்.

பஞ்சமூர்த்திகள். 5

1.	பிருதிவிலிங்கம்—காஞ்சி. திருவாரூர்.	பிரமா
2.	அப்புலிங்கம்—திருவானைக்கா	விஷ்ணு
3.	தேயுவுலிங்கம்—திருவண்ணாமலை	ருத்திரன்
4.	வாயுலிங்கம்—திருக்காளத்தி	மகேசுரன்
5.	ஆகாயலிங்கம்—சிதம்பரம்	சதாசிவம்

சிவ ஆகமங்கள் 28.

1. காமிகம், 2. யோகசம், 3. சிந்தியம், 4. காரணம், 5. அசிதம், 6. தீப்தம், 7. சூக்குமம், 8. சகத்திரம்அஞ்சுமான், 9. சுப்பிரபேதம், 10. விசயம், 11. நிசுவாசம், 12. சுவாயம்புவம்,

13. அனலம், 14. வீரம், 15. இரௌரவம், 16. மகுடம், 17. விமலம், 18. சந்திரஞானம், 19. விம்பம், 20. பிரோற்கீதம், 21. இலளிதம், 22. சித்தம், 23. சாந்தானசருவோத்தமம், 24. சார்வோத்தம், 25. பாரமேச்சுரம், 26. கிரணம்பேதம், 27. வாதுளம்,

1 முதல் 10-வரையிலுள்ளது சதாசிவமூர்த்தியால் சொல்லப்பட்டது என்றும் 11-முதல் 28-வரையிலுள்ளது மகாருத்திரரால் சொல்லப்பட்டதென்றும் கூறியிருக்கின்றனர்.

நவசக்தி 9.

வாமை—பிரதிஷ்ரூபி—ஜேஷ்டை—ஜலரூபி
ரவுத்தரி—அக்கினிரூபி—காளி—வாயுரூபி
கலவிகரணி—வாயுவை அடக்குதல்
பலவிகரணி—பலத்தை கொடுத்தல்
பலப்பிரமதனி—பலத்தை அழித்தல்
சர்வபூததமணி—சர்வபூதங்களை சேட்டித்தல்
மனோண்மணி—மனோரூபி.

கிரக தேவதைகள் 9.

சூரியன்-சிவன்-சந்திரன், ஈஸ்வரி, செவ்வாய்-சுப்பிரமணியர் புதன்-விஷ்ணு, குரு, பிரம்மா, சுக்கிரன், இந்திரன் சனி, இயமன், ராகு-காளி. கேது. சித்திராபுத்திரன்.

ஜாதிகள் 5.

குரு, சுக்கிரன்—பிராமணர்
சூரியன், செவ்வாய்—க்ஷத்திரியர்
சந்திரன், புதன்—வைசியர்
சனி—சூத்திரர், ராகு, கேது—சண்டிரஜாதிபாம்.

கிரக புஷ்பங்கள் 9.

சூரியன், செந்தாமரை—சந்திரன், வெள்ளாம்பரி
செவ்வாய், சண்பகம்—புதன், வெண்காந்தள்

குரு, முல்லை—சுக்கிரன், வெண்தாமரை—சனி, கருங்குவளை இராகு, மந்தாரை—கேது, செவ்வல்லி.

கிரகபாஷைகள் 5.

சூரியன், குரு, சுக்கிரன்—சமஸ்கிருதமும தெலுங்கும்
சந்திரன்—தமிழ்
செவ்வாய்—மந்திரம்,
புதன்—சோதிடம்
சனி, ராகு, கேது—அன்னியபாஷை.

சப்த தரிசனம் 7.

கோபுரம், சிகரம், துவாரம், பிராகாரம், பலிபீடம், அர்ச்சகர், சுவாமி.

பிரதான மூர்த்திகள் 13.

சூரியன், சக்தி, துவாரபாலகர், சுவாமி, அம்மன், கணபதி, சுப்பிரமணியம், தக்ஷணமூர்த்தி, பிரம்மா, விஷ்ணு, சண்டேஸ்வரர், வயிரவர்-சாஸ்தா அல்லது அரிஹரபுத்திரர்.

பரிவார தரிசனம் 12.

சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், நடேசர், பிட்சாண்டவர், சோமஸ்காரி, சங்காளம், கவக்கிரகம், வீரபத்திரர், அருபத்திமூவர், மகாலட்சுமி, சப்தமாதர் அல்லது கன்னிகை 7, லிங்கோற்பவம்.

சண்டேஸ்வரர், வைரவர்-சாஸ்தா இவர்களை கடைசியில் தரிசிக்கவேணும், பிறகு வேறு தரிசனம் செய்யலாகாது.

பஞ்சகிருத்தியங்கள் 5.

சிருஷ்டி, திதி, சம்ஹாரம், திரோபாவம், அனுக்கிரகம்.

தூபதீபகங்களாவன.

சந்தனமுஞ் சாம்பராணி தான்குங்கல் யம்பூரம்
கந்தலிலா லாம்ப லிலவங்கம்—முக்தக்
கறுப்புள்ள காஷி கடுகுசெம்மரத்தூள்
சிறப்பிரவி முன்புகதீபம்.

ஐம்பூதங்களாவன.

வெண்பா.

பார்சேய்பிர தீவாம்பைங்கதிர்க்கோளப்பாகும்
சீர்கதிருஞ்சீவனுதேமயுவாம்—தேர்ப்பாகன்
வாயுவாங்காரிதலீவாலரவாகாய்ந்தான்
ஆயிலைவையம்பூதமாம்.

பிரதிவு, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்.

பஞ்ச சத்திகள் 5.

பராசத்தி, ஆதிசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி.

இலிங்கங்கள் 9.

இஷ்டலிங்கம், பிராணலிங்கம், பாவலிங்கம், ஆசாரலிங்கம், குருலிங்கம், சிவலிங்கம், சரலிங்கம், பிரசாதலிங்கம்.

பஞ்சகோஷம் 5.

அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம்.

வேதங்கள் 4.

இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம்.

சாஸ்திரங்கள் 6.

வேதாந்தம், வைசேஷிகம், பாட்டம், பிரபாகாரம், பூர்வ மீம்சை, உத்தரமீம்சை.

அஷ்டாங்கயோகங்கள் 8.

இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி.

நடராஜர் அபிஷேகங்கள் 6.

வெண்பா.

சித்திரையி லோணமுதற் சீராணி யுத்திரமாம்
சத்துதனுவாதிரையுஞ் சார்வாகும்—பத்திவளர்
மாசிரியகன்னி மருவுசதுர்த்தசிமன்
றீசரபிஷேகத்தினமாம்.

சித்திரை	திருவோணம்	அபிஷேகம்
ஆனி	உத்திரம்	திருமஞ்சனம்
ஆவணி	சதுர்த்தசி	அபிஷேகம்
புரட்டாசி	சதுர்த்தசி	அபிஷேகம்
மார்கழி	திருவாதிரை	தெரிசனம்
மாசி	சதுர்த்தசி	அபிஷேகம்

முருகர் பிரதான ஸ்தலங்கள்.

திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவாவினன்குடி, கதிர்காமம், சுவாமிமலை, செண்ணிமலை, திருப்போரூர், திருத்தணிகை, திருவேரகம், சோலைமலை, விராளிமலை

அட்டவீரட்டங்கள் 8.

கட்டளைக்கலித்துறை.

பூமன்சிரங்கண்டி அந்தகன்கோவல்புரமதிகை
மாமன்பதியல்சலந்தரன்விற்குடிமாபழுவூர்
காமன்குறுக்கையமன்கடவூர்இந்தக்காசினியில்
தேமன்னுகொன்றையுந்திங்களுஞ்சூடிதன்சேவகமே.

1. திருக்கண்டியூர் பிரமன் சிரங் கொய்தது
2. திருக்கோவலூர் அந்தகாசுரனைச்சங்கரித்தது

3.	திருஅதிகை	திரிபுரத்தை எரித்தது
4.	திருப்பறியலூர்	தக்கன் சிரம் கொய்தது
5.	திருவிற்குடி	சலந்தராசுரனைச் சங்கரித்தது
6.	திருப்பழுவூர்	யானையை உரித்தது
7.	திருக்குறுக்கை	காமனை எரித்தது
8.	திருக்கடவூர்	யமனை உதைத்தது

சப்த ஸ்தான க்ஷேத்திரங்கள் 7.

1. திருவையாறு, 2. திருப்பழனம், 3. திருச்சோற்றுத்துறை, 4. திருவேதிக்குடி, 5. திருக்கண்டியூர், 6. திருப்பூந்துருத்தி, 7. திருநெய்த்தானம்.

சப்தவிடங்கத்தலங்கள் 7.

நேரிசைவெண்பா.

சத்தவிடங்கத்தலங்கள்சாற்றுங்கால்நள்ளாறு
கந்தருசூர்வாய்மூர் காறுயில்—நத்து
நாகைக்காரோணமுடன் நாடுதிருக்கோளிலியும்
ஈகைமறைக்காடாமிசை.

1. திருமால் பூசித்த சோமாஸ்கந்தரை இந்திரன் பெற்று பிறகு முசுகுந்தசக்கரவர்த்தியால் திருவாரூரில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. 2. திருநள்ளாறு, 3. திருநாகைக்காரோணம், 4. திருக்காறுயில், 5. திருக்கோளிலி, 6. திருவாய்மூர், 7. திருமறைக்காடு.

2 முதல் 7-வரையிலுள்ள ஸ்தலங்களில் இந்திரனால் கொடுக்கப்பட்ட உபயதியாகேசரை ஷே சக்கரவர்த்தியால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

பஞ்சபூத ஸ்தலங்கள் 5.

1. திருவாரூர், 2. திருவண்ணாமலை, 3. திருக்காளத்தி, 4. சிதம்பரம், 5. திருவானைக்கா.

காசிக்குச்சமானமாகச் சொல்லப்படும் ஸ்தலங்கள் 6.

1. திருவெண்காடு, 2 திருவையாறு, 3. மாயூரம், 4. திருவிடைமருதூர், 5. திருச்சாயக்காடு, 6. திருவாஞ்சியம்.

பஞ்ச சபைகள் 5.

1.	திருவாலங்காடு	இரத்தினசபை
2.	சிதம்பரம்	கனகசபை-பொன்னம்பலம்.
3.	மதுரை	ரஜதசபை-வெள்ளியம்பலம்
4.	திருநெல்வேலி	தாமிரசபை
5.	திருக்குற்றாலம்	சித்திரசபை

வியாக்கிரபாதருஷி பூஜித்த புலியூர் ஸ்தலங்கள் 5.

1. பெரும்பற்றப்புலியூர்—தென்புலியூர்-சிதம்பரம்
2. திருப்பாதிரிப்புலியூர்—வடபுலியூர்
3. ஓமாம்புலியூர்
4. எருக்கத்தம்புலியூர்
5. பெரும்புலியூர்.

ஆதிசேஷன் பூசித்த தலங்கள் 4.

1. திருநாகேச்சுரம், 2. திருநாகைக்காரோணம், 3. திருக்குடந்தைக்கீழ்க்கோட்டம் (நாகேஸ்வரசுவாமிகோயில்) 4. திருப்பாம்புரம்.

தக்ஷிண கைலாச க்ஷேத்திரங்கள் 3.

1. திருக்காளத்தி, 2. திருச்சிராப்பள்ளி, 3. திருக்கோணமலை.

காயாரோகண ஸ்தலங்கள் 3.

1. கச்சிக்காரோணம், 2. குடந்தைக்காரோணம், 3. நாகைக்காரோணம்.

வாயுவினால் பரிக்துத்தள்ளப்பட்ட மேருமலையின் சிகரங்களினின்று விழுந்தவைகள்.

1. திருக்காளத்தி, 2. திருசிராமலை, 3. திருக்கோணமலை

தேவேந்திரனால் பூசிக்கபட்ட வடநாட்டுஸ்தலங்கள் 5.

1. இந்திரகீலப்பருப்பதம், 2. அனேகதங்காபதம்-கௌரீ குண்டம், 3. திருக்கயிலாயம்-கொடித்தான்மலை, 4 திருப்பருப் பதம்-ஸ்ரீசைலம், 5. திருக்கேதாரம்-இமயமலை-மல்லிகார்ச்சுனபுரம்

சிவமூர்த்திகள் 31.

அருபம் 1 சுத்தசிவம்

ரூபாரூபம் 5.

சிவசாதாக்கியம், அமூர்த்திசாதாக்கியம், மூர்த்திசாதாக்கி யம், கர்த்தர்சாதாக்கியம், கர்மசாதாக்கியம்.

சிவனாதாசிவச் சைவ மகேஸ்வரத்திரிவிதவஸ்மிருத:

"உயர்மறை புகழ் சிவன் 1, ஓங்கு சதாசிவன் 2, இயலு மகேசன் 3 என மூன்று சுத்த நித்திய சிருட்டி பூர்வதத்துவமூர்த் திபாய் விளங்கும் பரசிவத்தின் மூன்றவதான மகேசமென்னும் இருபத்தைந்து மூர்த்திகளும் மஹாகைலாயத்தில் காரியார்த்த மாய் அனுதிசித்தியமாய் உள்ளனவென்று சிவாகமத்தில் கூறப்பட் டிருக்கினவன்றே"?

ரூபம் 25.

அவ்விரூபத்தைந்து மூர்த்திகளாவன:—

1. இலிங்கோற்பவம். 2. சுகாசனம்.

1. அருபலிங்கம் 2. ரூபாரூபலிங்கம், 3. ரூபலிங்கம்.

குறிப்பு:—இவ்விவரம் வாதுளாகமம் தத்துவபேத படலத்தில் பார்க்க.

3. உமாசகம்.
4. கலியாணசுந்தரம்
5. அர்த்தநாரீசுரம்.
6. சோமாஸ்கந்தம்.
7. சக்ரப்பிரதானம்.
8. திரிமூர்த்தி
9. சேசவாகர்த்தம்.
10. தக்ஷணமுகம்.
11. பிட்சாடனம்.
12. கங்காளம்.
13. காமதகனம்.
14. காலசம்மாரம்.
15. சலந்தரவதம்.
16. திரிபுராந்தகம்.
17. சரபம்.
18. நீலகண்டம்.
19. திரிபாதம்.
20 ஏகபாதம்.
21. பைரவம்.
22. விருஷபாரூடம்.
23. சந்திரசேகரம்.
24 நடராஜம்.
25. கங்காதரம்.

2. இவ்விருபத்தைந்து மூர்த்திகளின் காரியத்தைச்சொல்லுமிடத்தில் முதலாவதான இலிங்கோற்பவமூர்த்தி ஜீவகோடிகளின் பிண்ட (இலிங்கம்) உற்பத்திக்காக கருணைபுரியும் கிரியாரூபமாயும், இரண்டாவதான (2) சுகாசனமூர்த்தியினல் பிராணிகளுக்கு வாலிப பக்குவ முண்டாகக்கடவதென்னும் கருணையாயும், மூன்றவதான (3) உமாசகர் என்னுங்கருணையால் பிராணிகள் கல்லியாணஞ் செய்துக்கொள்ளச் சித்திப்பதும், நான்காவதான (4) கல்லியாணசுந்தர மூர்த்தியால் பிராணிகள் கல்லியாணத்தின் பயனைப் பொருந்தவும், ஐந்தாவதான (5) அர்த்தநாரீசுர மூர்த்தியால் அப்படிப் பொருந்திய சம்போகம் முற்றும் பெற்றுத் தெவிட்டலுண்டாக்கிச் சாஸ்திர பயிற்சியில் முபலச்செய்வதும், ஆறவதான (6) சோமஸ்கந்தர் என்னும் மூர்த்தியால் பிராணிகள் பிள்ளைகளைப் பெறுகிறார்கள் (ஆன்மாக்கள் பக்குவப்பட தேகமமைத்துக் கொடுத்தல்) என்றும், ஏழாவதான (7) சக்ரப்பிரதானமூர்த்தி அதாவது பிரபஞ்ச ஸ்திதிகாரண பூதராண விஷ்ணுசக்திக்குச் சக்தத்தை யருள்செய்த இம் மூர்த்தியால் பிராணிகள் இகபோகங்களைப் புசிக்கிறார்களென்றும், எட்டாவதான (8)

திரிமூர்த்தியால் ஜீவர்கள் ஜாக்கிரம் சொப்பனம் சுழுத்தி என்ற மூன்று அவஸ்தைகளிலுற்று விலகரிக்கிறார்கள் என்றும். ஒன் பதாவதான (9) கேசவர்த்தம் அல்லது அர்த்தாக்கணீசுவரர் என்னும் மூர்த்தியால் ஆன்மாக்களின் புண்ணிய பாவங்கள் சமப்படுத்தும் சத்திநிபாதமிலையென்றும், பிறகு உபதேசமடை யும்பொருட்டு பத்தாவதான (10) குருமூர்த்தம் ஆகிய தக்ஷிணா மூர்த்தமென்றும், பதினோராவதான (11) பிட்சாடன மூர்த்தியால் அந்த ஞானிக்கு அடக்கமுண்டாய் திருப்தியடைகிறதென்றும் பன்னிரண்டாவதான (12) கங்காளமூர்த்தியால் பக்குவ ஆன் மாக்கள் வைராக்கியத்தைப்பெறுவதாயும், பதின்மூன்றாவதான (13) காமதகனமூர்த்தியால் பக்குவர்கள் சிற்றின்பவாதனை தொ லைந்து நிராசையை யடைகின்றார்கள் என்றும், பதினான்காவதான (14) காலசம்மாரமூர்த்தியால் ஆன்மாக்களுக்கு நமபயம் நீங்கப் படுகின்றதாயும், பதினைந்தாவதான (15) சலந்தாவத மூர்த்தி யால் பரிசுத்தமான சித்தத்தையுடைய சிவயோக ஞானிகளின் கோபதேசமூர்த் தொலைக்கப்படுகிறதாயும், பதினாறாவதான (16) திரிபுராசம்ஹார மூர்த்தியால் பரிசுத்தம்பொருந்திய ஆன்மாக் களின் சத்துவம், இராசசம், தாமசம் என்னும் முக்குணபேத வுணர்ச்சி விலக்கப்படுகின்றதென்றும், பதினேழாவதான (17) சரபமூர்த்தியால் பக்குவான்மாக்களின் கருமமலம் மாயை மலம் என்னும் இருமலங்களும் நாசமாக்கப்படுகின்றனவென் றும், பதினெட்டாவதான (18) நீலகண்டமூர்த்தியால் வேடியார் களுக்கு மற்றொரு மூன்றாவது மலமான 'ஆன்' என்னும் ஆணவ மலம் நசிக்கப்படுகின்றதென்றும், பத்தொன்பதாவதான (19) திரி பாதமூர்த்தியால் பக்குவர்களுக்குச் சரியை, கிரியை, யோகம் ஆகிய முன்மூன்று சாதனங்களும் அருளப்படுகின்றனவென்றும், இருபதாவதான (20) ஏகபாதமூர்த்தியால் அவர்களுக்கு முன் மூன்று சாதனங்களின் சாத்திய சாதனமாகிய ஞானபாதத்தை யனுஷ்டிக்கும்படியான பக்குவம் உண்டாகிறதென்றும், இருபத் தோராவதான (21) பைரவமூர்த்தியால் பக்குவான்மாக்களின் தூல சூக்கும காரணதேகத்தினின்று அவர்கள் விடுபடுகின்றன

வென்றும், இருபத்திரண்டாவதான (22) விருஷபாரூடமூர்த்தியால் அவர்களுக்குப் பிரசாதகம் அருளப்படுகிறதென்றும், இருபத்துமூன்றாவதான (23) சந்திரசேகர மூர்த்தியால் சுத்தவான்மாக்கள் நமபயம் விடுபட்டும் இனிப்பிறவிவரும் எனும் பயம் இருக்குமாகலால் அதினின்றும் விடுபடுகிறார்களென்றும், இருபத்திநான்காவதான (24) ஸ்ரீ கடாரூபமூர்த்தியால் அப்பக்குவர்கள் பேரானந்தத்தை யடைகின்றார்கள் என்றும், இருபத்தைந்தாவதான (25) கங்காதர மூர்த்தியால் புண்ணியாத்மாக்களின் பேரானந்தங் குறைவுபடாது நித்தியநிலையிலேயேயிருக்கிறார்களென்றும், மகுடாமத்தியில் கூறப் பட்டிருப்பதை சௌனகாதி முனிவர்களுக்கு ஸ்ரீசூதமுனிவரால் சொல்லப்பட்டதென்று சங்கரசம்மிதை சிவரகசியகாண்டம், உப தேசகாண்டம் 90-வது அத்தியாயத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

3. மேற்கண்ட அருட்சோபான பஞ்சக்கிருத்தியோபகார இருபத்தைந்து சருணைமூர்த்தங்களால் உயர்மறை புகழ் சிவன் மகேசநிலையில் அருள்புரிந்து நித்தியானந்த கங்காதர சாயுச்சியத் தைக் கொடுத்தருளுகிறதென்ற சுருதிக்கருத்தை விட்டுவிட்டுச் சிலர் சிவன் முத்தநிலையை அதாவது 18-வது நிலையை முடிந்த நிலை யென்றும் பின்னிட்ட எழுநிலைப்பயனைத் தழுவாமலிருக்கிறார்கள்.

திருச்சிற்றம்பலம்.

ஓ

திருச்சிற்றம்பலம்.

அகத்தியர் தேவாரத்திரட்டின் வரலாறு.

அநாதி முத்த சித்தருவாகிய முதற்கடவுள் சிவபெருமானே சென்று ஆண்மாக்கள் துணிந்து வழிபட்டு உய்யும்பொருட்டுப்பல அற்புதங்களினூலே சைவ சமயத்தைத் தாபித்தருளிய திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், என்னும் சமயாசாரியர்கள் மூவரால் அருளிச்செய்யப் பட்ட தமிழ்வேதமாகிய தேவாரம் ஒருலக்ஷத்திரண்டாயிரந் திருப் பதிகமுடையது. அவைகளுள் எழுநூற்றுத் தொண்ணூற்றேழு

திருப்பதிகம் ஒழிந்து ஒழிந்தவை இறந்துபோயின, எஞ்சிநின்ற எழுநூற்றுக்கொண்ணூற்றேழு திருப்பதிகங்களையும் திருவாரூர் அபயகுல சோழமகாராஜாவுடைய வேண்டுகோளின்படி திருநாவலூர்ப் பொல்லாப் பிள்ளையாருடைய மாணாக்கராகிய நம்பியாண்டார் நம்பி ஏழுதிருமுறைகளாக வகுத்தருளினர். அவ்வேழும் அடங்கிய திருமுறை அடங்கன்முறை யெனப்படும்.

கலியறி வொழுக்கங்களாற் சிறப்புற்று விளங்கிய சிவாலய முனிவர் அவ்வடங்கன் முறையினது மகிமையையும் அதனை நாடோறும் விதிப்படி சிரத்தையோடு பாராயணஞ் செய்யின் முக்தி சித்திக்குமென்பதனையும், அறிந்து, தாம் அப்படிப் பாராயணஞ் செய்ய ஆசைகொண்டார். அது நிறைவேறுதல் கூடாமையால் வருத்தமுற்று, சிதம்பரத்தை அடைந்து, கனகசபையின்கண் னை ஆனந்த தாண்டவஞ் செய்தருளும் சபாநாதரை வணங்கி, தமது கருத்து முற்றும்பொருட்டு நெடுங்காலம் அருந்தவஞ் செய்தார். அப்பொழுது சபாநாதருடைய திருவருளினாலே, "சிவாலய முனிவனே" நீ பொதியமலையிலிருக்கின்ற அகத்திய முனிவனிடத்தே போவாயாயின் உன்கருத்து நிறைவேறும்" என்று ஓசரீரவாக்கு தோன்றிற்று. அது கேட்ட சிவாலயமுனிவர் மனமகிழ்ந்து, சபாநாதரை வணங்கி, விடை பெற்றுக்கொண்டு சென்று பொதியமலையை அடைந்து அகத்தியமகாமுனிவரைச் சந்தித்து, மூன்றுவருஷகாலம் அருந்தவஞ் செய்தார். அகத்திய மகாமுனிவர் அவருக்குபதேசித்து, அதினின்றும் இருபத்தைந்து திருப்பதிகங்களை எடுத்துத் தொட்டி, "இவைகளை நாடோறும் பாராயணஞ் செய்பவர்கள் அடங்கன்முறை முழுதையும் பாராயணஞ் செய்பவர்களாவார்கள்" என்று திருவாய் மலர்ந்து, மறைந்தருளினார். சிவாலயமுனிவர் அப்படியே இவ்விருபத்தைந்து திருப்பதிகங்களையும் நெடுங்காலம் பாராயணஞ் செய்து சிவபெருமானுடைய திருவருளைப் பெற்றார்.

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

அகத்தியமகாமுனிவர்

திரட்டியருளிய

தேவாரத் திரட்டு.

தேவாரநூதலியபொருள்.

நேரிசை வெண்பா.

குருவுருவும் வெண்ணீ றெழுத்தஞ்சுங் கோயி
லாலயமு மென்றலேமே லாக்குந்—திருவடியுஞ்
சிட்டான வர்ச்சனையுந் தொண்டுஞ் சிவாலயர்க்கெண்
றிட்டா ரகத்தியனு ரெட்டு.

திருப்பதிகக் கருத்துரை.

நிலமண்டில வாசிரியப்பா.

தோடு கூற்றுப் பித்தா மூன்றும்
பீடுடைத் தேசிகன் பேரரு ளாகு
நீற்றுப் பதிக நிகழ்த்துங் காலே
மாற்றுப் பரையின் வரலா றுதுந்
தஞ்சல் காதல் சொற்றுணை மற்று
மஞ்செழுத் துண்மை யருளிய தாகு
மாரூர் நில்லை காட்டூர் மூன்றுஞ்
சீரார் கோயிற் றிறமைய தாகு
மோருரு வரிய பாலா வடிவே
மருவா ரென்ற வண்டமி ழைந்துந்

திருவார் மேனிச் செய்திய தாகும்
பொடியுடை யாவணி யந்தளுளை
னடியிணை தந்த வருளே யாகும்
பந்து வேற்ரு கொன்றிவை மூன்று
நந்தலி லருச்சனை நாட்டிய தாகும்
வேய்குலந் தில்லை யெனுமிவை மூன்று
நாயனு மடிமையு நாட்டியதாகு
மிப்பரி சகத்திய முனிவ னிருநிலத்
தொப்பரு மூவ ரோதுதே வார
மூழுதையுஞ் சிவாலய முனிக்கறிவித்துப்
பழுதிலா வவையுட் பரிந்தெடுத் திருபத்
தைந்துயர் பதிகமு மறிவுறத் திரட்டி
யெண்ணரு மடங்க லியாவையு முணரும்
புண்ணியமிலைகொடு பொருந்துமென் றவன்
றனக்கருள் செய்தனன் றகவுறவதனுற்
றீதிலா வகத்தியத் திரட்டினை யுலகி
லோதின ரடங்கலு மோதினை ராவரே.

திருச்சிற்றம்பலம்.

ஏ

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்த மூர்த்திநாயனூர்.

திருப்பிரமபுரம்.

பண்-நட்டபாடை.

குருவருள்.

திருச்சிற்றம்பலம்.

தோடுடையசெவி யன்றிடையேறியோர் தூயவெண்மதிசூடிக்
காடுடையசுடலைப் பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வ
னேடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள் செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 1

முற்றலாமையிளநாகமோடேன முகிக்கொம்பவையுண்டு
வற்றலோடிகல ஞப்பலிதேர்ந்தென தள்ளங்கவர்கள்வன்
கற்றல்கேட்டலுடை யார்பெரியார்கழல் கையாற்றொழுதேத்தப்
பெற்றமூர்ந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 2

நீர்பரந்தநிமிர் புன்சடைமேலோர் நிலாவெண்மதிசூடி
யேர்பரந்தவின வெள்ளிளோசோரவென்னுள்ளங்கவர்கள்வ
னூர்பரந்தவுல கின்முதலாகிய வோரூரிதுவென்னப்
பேர்பரந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 3

விண்மகிழ்ந்தமதி லெய்ததுமன்றி விளங்குதலையோட்டி
லுண்மகிழ்ந்துபலி தெரியவந்தென தள்ளங்கவர்கள்வன்
மண்மகிழ்ந்தவர வம்மலர்க்கொன்றை மலிந்தலரைமார்பிற்
பெண்மகிழ்ந்தபிற மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 4

ஒருமைபெண்மை யுடையன்சடையன்விடை யூருமீவனென்ன
வருமையாகவுரை செய்யவமர்ந்தென தள்ளங்கவர்கள்வன்
கருமைபெற்றகடல் கொள்ளமிதந்ததோர் காலம்பிதுவென்னப்
பெருமைபெற்றபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 5

மறைகலந்தவொலி பாடலோடாடல ராகிமழுவேந்தி
யிறைகலந்தவின வெள்ளிளோசோரவென்னுள்ளங்கவர்கள்வன்
கறைகலந்தகடி யார்பொழினீடியர் சோலைக்கதிர்சிந்தப்
பிறைகலந்தபிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே. 6

சடைமுயங்குபுன லன்னனலன்னெரி வீசிச்சதிர்வெய்த
வுடைமுயங்குமர வோடுழிதந்தென தள்ளங்கவர்கள்வன்
கடன்முயங்குகழி சூழ்குளிர்காவலம் பொன்னஞ்சிறகன்னம்
பெடைமுயங்குபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 7

வியரிலங்குவரை யுந்தியதோள்களீ ரைம்மிளோவித்த
வுயரிலங்கையரை யன்வலிசெற்றிறன தள்ளங்கவர்கள்வன்
துயரிலங்கும்முல கிற்பலவூழிக டோன்றும்பொழுதெல்லாம்
பெயரிலங்குபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 8

தாணுதல்செய்திறை காணியமாலொடு தண்டாமரையாணு
நீணுதல்செய்தொழியந்நிமிர்ந்தானென துள்ளங்கவர்கள்வன்
வாணுதல்செய்மக ளீர்முதலாகிய வையத்தவரேத்தப்
பேணுதல்செய்பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே. 9

புத்தரோடுபொறியில்சமணும்புறங் கூறநெறிநில்லா
வொத்தசொல்லவுலகம்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
மத்தயானைமறுகவ்வுரிபோர்த்தசோர் மாயம்மிதுவென்னப்
பித்தர்போலும்பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே. 10

அருகெறியமறைவல்லமுனியகன் பொய்கையலர்மேய
பெருகெறியபிரமாபுரமேவிய பெம்மானிவன்றன்னை
யொருகெறியமனம்வைத்துணர்ஞானசம் பந்தனுரைசெய்த
திருநெறியதமிழ்வலலவர்தொல்வினை தீர்தலெளிதாமே. 11

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு நாயனார்

திருவதிகை வீரட்டானம்.

பண்–திகால்லி.

குருவருள்

திருச்சிற்றம்பலம்.

கூற்றுயினவாறுவிலக்கலீர்
கொடுமைபல செய்தனநானறியே
னேற்றுயடிக்கே யிரவும் பகலும்
பிரியாதுவணங்குவ னெப்பொழுதுந்
தோற்றுதென்னயிற்றி னகம்படியே
குடரோடுதடக்கை முடக்கியிட
வாற்றேனடியே னதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே.

நெஞ்சமுமக்கே யிடமாகவைத்தே
னினையாதொருபோதுமிருந்தறியேன்
வஞ்சமிதுவொப்பது கண்டறியேன்
வயிற்றோடுதடக்கி மூடக்கியிட
நஞ்சாகிவந் தென்னை நலிவதனை
நணுகாமற்றுரத்துகரத்துமிடி
ரஞ்சேலுமென்னீ ரதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே. (2)

பணிந்தானபாவங்கள் பாற்றவல்லீர்
படுவண்டலையிற் பலிகொண்டுழல்வீர்
துணிந்தேயுமக்காட்செய்து வாழலுற்றார்
சுடுகின்றதுசூலை தவிர்த்தருளீர்
பிணிந்தார்பொடிகொண்டுமெய்பூசவல்லீர்
பெற்றமேற்றுகந்தீர்சுற்றும்வெண்டலைகொண்
டணிந்தீரடிகே ளதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே. (3)

முன்னம்மடியே னறியாமையினன்
முனிந்தென்னைநலிந்து முடிக்கியிடப்
பின்னையடியே னுமக்காளும்பட்டேன்
சுடுகின்றதுசூலை தவிர்த்தருளீர்
தன்னையடைந்தார்வினை தீர்ப்பதன்றே
தலையாயவர்தங் கடனுவதுதா
னன்னைநடையா ரதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே. (4)

காத்தாள்பவர்காவ லிகழ்ந்தமையாற்
கரைநின்றவர் கண்டுகொளென்றுசொல்லி
நீத்தாயகபம்புகநூக்கியிட
நிலைக்கொள்ளும் வழித்துறையொன்றறியேன்
வார்த்தையிது வொப்பதுகேட்டறியேன்
வயிற்றோடு தடக்கி மூடக்கியிட

வார்த்தார் புனலா ரதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே. (5)

சலம்பூவொடுதூப மறந்தறியேன்
றமிழோடிசைபாடன் மறந்தறியே
னலந்தீங்கிலுமுன்னே மறந்தறியே
னுன்னுமமென்னுளின் மறந்தறியே
னுலந்தார்தலையிற் பலிகொண்டுழல்வா
யுடனுள்ளுறுசூலந் தவிர்த்தருளா
யலர்தேனடியேன திகைக்கெடில
வீரட்டானத்துறை யம்மானே. (6)

உயர்ந்தேன்மனவாழ்க்கையு மொண்பொருளு
மொருவர்தலைகாவ லிலாமையினல்
வயர்தேயுமக்காட்செய்து வாழுமுற்றல்
வலிக்கின்றசூலந் தவிர்த்தருளீர்
பயந்தேயென்வயற்றி னகம்படியே
பறித்துப்புரட்டி யதுத்தீர்த்திடரா
னயர்ந்தேனடியே னதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே. (7)

வலித்தேன்மனவாழ்க்கை மகிழ்ந்தடியேன்
வஞ்சம்மனமொன்றுமிலாமையினற்
சலித்தாலொருவர் துணையாருமில்லைச்
சங்கவெண்குழைக்கா தடையெம்பெருமான்
கலித்தேயென்வயிற்றினகப்படியே
கலக்கிமலக்கிட்டுக் கவர்ந்துதின்ன
வலுத்தேனடியே னதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே. (8)

பொன்போலமிளிர்வதோர் மேனியினீர்
புரிபுன்சடையீர் மெலியும்பிறையீர்
துன்பேகவலிபிணியென்றியற்றை
நணுகாமற்றுரந்துகரந்தமிடி

ரென்போலிக ளும்மையினித்தெளியா
டியர்படுவதிதுவேயாகி
ல்பேயமையும் மதிகைக்கெடில
வீரட்டானத்துறை யம்மானே. (9)

போர்த்தாயக்கொ ராணையினீருரிதோல்
புறங்காடரங்கா நடமாடவல்லா
யார்த்தானரக்கன் றலைமால்வரைக்கீ
முடர்த்திட்டருள்செய்தலதுகருதாய்
வோர்த்தும் புரண்டும் விழுந்தும்மெழுந்தா
லென்வேதனையான விலக்கியிடா
யார்த்தார்புனல்சூ ழதிகைக்கெடில
வீரட்டானத்துறை யம்மானே. (10)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்தி நாயனார்

திருவெண்ணெய்நல்லூர்.

பண்-இந்தளம்.

குருவருள்

திருச்சிற்றம்பலம்.

பித்தா பிறை சூடி பெருமானே யருளாளா
வெத்தான்மறவா தே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூ ரருட்டுறையு
ளத்தாவுனக் காளாயினி யல்லேனெனலாமே. (1)

நாயேன் பலநாளு நினைப்பின்றி மனத்துன்னைப்
பேயாய்த் திரிந்தெய்த்தேன் பெறலாகா வருள்பெற்றேன்
வேயார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூ ரருட்டுறையு
ளாயாவுனக் காளாயினி யல்லேனெனலாமே. (2)

மன்னைமதவாதே நீங்கின்றேன் மனத்தண்ணைப்
பொன்னே மணிதானே வயிரம்மே பொருதுந்தி
மின்னார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையு
ளன்னையுனக் காளாயினி யல்லேனெனலாமே. (3)

முடியேனினிப் பிறவேன்பெறின் மூவேன்பெற்றமூர்த்தி
கொடியேன்பல பொய்யேயுரைப்பேனைக் குறிக்கொண்ணீ
செடியார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையு
ளடிகேளுனக் காளாயினி யல்லேனெனலாமே. (4)

பாதம்பணி வார்கள்பெறு பண்டம்மது பணியா
யாதென்பொரு ளானேனறிவில்லே னருளாளா
தாதார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரட்டுறையு
யாதீயுனக் காளாயினி யலலேனென லாமே. (5)

தண்ணார்மதி சூடிதழல் போலுந் திருமேனி
யெண்ணூர்புர மூன்றுமெரி யுண்ணாகை செய்தாய்
மண்ணார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையு
ளண்ணலுனக் காளாயினி யல்லேனென லாமே. (6)

ஊனுயிர் தானுயுட லானுயுல காளுய்
வானுய் நிலனுயுக்கட லானுப் மலிபானுய்
தேனார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையு
ளானுயுனக் காளாயினி யல்லேனென லாமே. (7)

ஏற்றூர்புர மூன்றுமெரி யுண்ணச் சிலை தொட்டாய்
தேற்றாதன சொல்லித் திரிவேனெ செக்கர்வானீ
சேற்றூர் பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையு
ளாற்றா யுனக் காளாயினி வல்லேனென லாமே. (8)

மழுவாள்வல னேந்தீமறை யோதீ மங்கை பங்கா
தொழுவாரவர் துயராயின தீர்த்தருள தொழிலே
செழுவார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையு
ளழகாவுனக்காளாயினி யல்லேனெனலாமே. (9)

காரூர்புன லெய்திக்கரை கல்லித்திரைக் கையாற்
பாரூர்புக ழெய்தித்திகழ் பண்மாமணியுந்திச்
சீரூர்பெண்ணைத்தென்பால வெண்ணெய் நல்லூரருட்டுறையு
ளாரூரனெம் பெருமாற்கா ளல்லேலெனலாமே. (10)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

திருவாலவாய்த் திருநீற்றுப் பதிகம். (4)

பண்—காந்தாரம்.

பரையின் வரலாறு.

திருச்சிற்றம்பலம்.

மந்திரமாவதுநீறு வானவர்மேலதுநீறு
சுந்தரமாவதுநீறு துதிக்கப்படுவதுநீறு
தந்திரமாவதுநீறு சமயத்திலுள்ளதுநீறு
செந்துவர்வாயுமைபங்கன் றிருவாலவாயான்றிருநீறே. (1)

வேதத்திலுள்ளதுநீறு வெந்துயர்தீர்ப்பதுநீறு
போதந்தருவதுநீறு புன்மைதவிர்ப்பதுநீறு
வோதத்தகுவதுநீறு வுண்மையிலுள்ளதுநீறு
சீதப்புனல்வயல்சூழ்ந்த திருவாலவாயான்றிருநீறே. (2)

முத்திதருவதுநீறு முனிவாணிவதுநீறு
சத்தியமாவதுநீறு தக்கோர்புகழ்வதுநீறு
பத்திதருவதுநீறு பரவவினியதுநீறு
சித்திதருவதுநீறு திருவாலவாயான்றிருநீறே. (3)

கானவினியதுதீறு கவிஞைத்தருவதுதீறு
பேணியணிபவர்க்கெல்லாம் பெருமைகொடுப்பதுதீறு
மாணந்தகைவதுதீறு மதியைத்தருவதுதீறு
சேணந்தருவதுதீறு திருவாலவாயான்றிருநீறே. (4)

பூசவினியதுதீறு புண்ணியமாவதுதீறு
பேசவினியதுதீறு பெருந்தவத்தோர்களுக்கெல்லா
மாசைகொடுப்பதுதீறு வந்தமதாவதுதீறு
தேசம்புகழ்வதுதீறு திருவாலவாயான்றிருநீறே. (5)

அருத்தமதாவதுதீறு வவலமறுப்பதுதீறு
வருத்தந்தணிப்பதுதீறு வானமளிப்பதுதீறு
பொருத்தமதாவதுதீறு புண்ணியர்பூசும்வெண்ணீறு
திருத்தகுமாளிகைசூழ்ந்த திருவாலவாயான்றிருநீறே. (6)

எயிலதுவட்டதுதீறு விருமைக்குமுள்ளதுதீறு
பயிலப்படுவதுதீறு பாக்கியமாவதுதீறு
துயிலெத்தடுப்பதுதீறு சுத்தமதாவதுதீறு
வயிலெப்பொலிதருசூலத் தாலவாயான்றிருநீறே. (7)

இராவணன்மேலதுதீறு வெண்ணத்தகுவதுதீறு
பராவணமாவதுதீறு பாவமறுப்பதுதீறு
தராவணமாவதுதீறு தத்துவமாவதுதீறு
வராவணங்குந்திருமேனி யாலவாயான்றிருநீறே. (8)

மாலொடயனறியாத வண்ணமுமுள்ளதுதீறு
மேலுறைதேவர்சுடங்கண் மெய்யதுவெண்பொடிதீறு
வேலவுடம்பிடர்தீர்க்கு மின்பந்தருவதுதீறு
வாலமதுண்டமிடற்றெம் மாலவாயான்றிருநீறே. (9)

குண்டிகைக்கையர்களோடு சாக்கியர்கூட்டமுங்கூடக்
கண்டிகைப்பிப்பதுதீறு கருதவினியதுதீறு
வெண்டிசைப்பட்டபொருளா ரேத்துந்தகையதுதீறு
வண்டத்தவர்பணிந்தேத்து மாலவாயான்றிருநீறே. (10)

ஆற்றலடல்விடையேறு மாலவாயான்றிருநீற்றைப்
போற்றிப்புகலிநிலாவும் பூசுரன்ஞானசம்பந்தன்
தேற்றித்தென்னனுடலுற்ற தீப்பிணியாயினதீரச்
சாற்றியபாடல்கள்பத்தும் வல்லவர்கல்லவர்தாமே. (11)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்த மூர்த்திநாயனர்

பஞ்சாக்கரத் திருப்பதிகம். (5)

பண்–காந்தாரபஞ்சமம்.

அஞ்செழுத்துண்மை.

திருச்சிற்றம்பலம்.

நஞ்சணிகண்டர நிலாதபோழ்திலு
நெஞ்சகமேகுவ நிச்சமிருடோறும்
வஞ்சகமற்றடி வாழ்த்தவர்தங்கடூற்
றஞ்சவதைத்தன வஞ்செழுத்துமே. (1)

மந்திரநான்மறை யாகிவானவர்
சிந்தையுணின்றவர் தம்மையாள்வன
செந்தழலோம்பிய செம்மைவேதியர்க்
கந்தியுன்மந்திர மஞ்செழுத்துமே. (2)

ஊனிலுயிர்ப்பை யொடுக்கியொண்சுடர்
ஞானவிளக்கினை யேற்றிநன்புலத்
தேனவழிதிறந் தேத்துவார்க்கிட
ரானகெடுப்பன வஞ்செழுத்துமே. (3)

நல்லவர்தீய ரெனுதுகச்சினர்
செல்லல்கெடச்சிவ முத்திகாட்டுவ
கொல்லமன்றமர் கொண்டுபோமிடத்
தல்லல்கெடுப்பன வஞ்செழுத்துமே. (4)

கொங்கலர்வன்மதன் வாளியைந்தகத்
தங்குளூகமு மஞ்சவைம்பொழிற்
றங்கரவின்பட மஞ்சுகந்தம்முடை
யங்கையிலிவிர லஞ்செழுத்துமே. (5)

தும்மலிருமல் றொடர்ந்தபோழ்திலும்
வெம்மைநரகம் விளைந்தபோழ்திலு
மிம்மைவினையடர்த் தெய்துமபோழ்திலு
மம்மையினுந்துணை யஞ்செழுத்துமே. (6)

வீடுபிறப்பை யறுத்துமெச்சினர்
பீடைகெடுப்பன பின்னைநாடொறு
மாடுகொடுப்பன மன்னுமாகட
மாடியுகப்பன வஞ்செழுத்துமே. (7)

வண்டமரோதி மடந்தைபேணின
பண்டையிராவணன் பாடியுய்ந்தன
தொண்டர்கள்கொண்டு துதித்தபின்னலர்க்
கண்டமளிப்பன வஞ்செழுத்துமே. (8)

கார்வணனுன்முகன் காணுதற்கொணாச்
சீர்வணச்சீசவடி செவ்விநாடொறும
பேர்வணமேசெப் பிதற்றும்பித்தர்கட்
கார்வணமாவன வஞ்செழுத்துமே. (9)

புத்தர்சமண்கழுக் கையர்பொய்கொளாச்
சித்தத்தவர்க டெளிந்துதேறின
வித்தகநீறணி வார்வினைப்பகைக்
கத்திரமாவன வஞ்செழுத்துமே. (10)

நற்றமிழ்ஞானசம் பந்தனன்மறை
கற்றவன்காழியர் மன்னனுன்னிய
வற்றமின்மாலையி னைந்துமஞ்செழுத்
தற்றனவல்லவ ரும்பராவரே. (11)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

நமச்சிவாயத் திருப்பதிகம். (6)

பண் - கௌசிகம்.

அஞ்செழுத்துண்மை.

திருச்சிற்றம்பலம்.

காதலாகிக் கசிந்துகண்ணீர்மல்கி
யோதுவார்தமை நன்னெறிக்குய்ப்பது
வேதநான்கினு மெய்ப்பொருளாவது
நாதனும நமச்சிவாயவே. (1)

கம்புவார்நமர் காவினவிற்றிரல்
வம்புநாண்மல வார்மதுவொப்பது
செம்பொனார்நில கம்முலகுக்கெலா
நம்பனும நமச்சிவாயவே. (2)

நெக்குளார்வ மிகப்பெருகிந்நினைந்
தக்குமாலெகொ டுங்கையிலெண்ணுவார்
தக்கவானவ ராய்த்தகுவிப்பது
நக்கனும நமச்சிவாயவே. (3)

இயமன்றாதரு மஞ்சுவரின்சொலா
னையம்வந்தோதவல் லார்தமைகண்ணினு
னியமந்தானினை வார்க்கினியாஞெற்றி
நயனமு நமச்சிவாயவே. (4)

கொல்வாரேனுங் குணம்பலகண்மைக
னில்லாரேனு மியம்புவராயிடி
னெல்லாத்தீங்கையு நீங்குவரென்பரா
னல்லார்நாம நமச்சிவாயவே. (5)

மந்தரம்மன பாவங்கண்மேவிய
பந்தணையவர் தாமும்பகர்வரேற்
சிந்தும்வல்வினை செல்வமுமல்குமா
னந்திநாம நமச்சிவாயவே. (6)

நரகமேழ்புக நாடினராயினு
முரைசெய்வாயின ராயினுருத்திரர்
விரவியேபுகு வித்திடுமென்பரால்
வரதனும நமச்சிவாயவே. (7)

இலங்கைமன்ன னெடுத்தவடிக்கண்மேற்
றலங்கொள்கால்விரல் சங்கரனூன்றலு
மலங்கிவாய்மொழி செய்தவனுய்வகை
நலங்கொணும நமச்சிவாயவே. (8)

போதன்போதன கண்ணனுமண்ணறன்
பாதந்தான்முடி தேடியபண்பரா
யாதுங்காண்பரி தாகியலந்தவ
ரோதுநாம நமச்சிவாயவே (9)

கஞ்சிமண்டையர் கையிலுண்கையர்கள்
வெஞ்சொன்மிண்டர் விரவிலரென்பரால்
விஞ்சையண்டர்கள் வேண்டவமுதுசெய்
நஞ்சுண்கண்ட னமச்சிவாயவே. (10)

நந்திகாம நமச்சிவாயவெனுஞ்
சந்தையாற்றமிழ் ஞானசயபந்தன்சொற்
சிந்தையான்மகிழ்ந் தேத்தவல்லாரெல்லாம்
பந்தபாச மறுக்கவல்லார்களே. (11)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு நாயனார்.
நமச்சிவாயத் திருப்பதிகம். (7)

பண் - காந்தாரபஞ்சமம்.

அஞ்செழுத்துண்மை.

திருச்சிற்றம்பலம்.

சொற்றுணைவேதியன் சோதிவானவன்
பொற்றுணைத்திருந்தடி பொருந்தக்கைதொழுக்
கற்றுணைப்பூட்டியோர் கடலிற்பாய்ச்சினு
நற்றுணையாவது நமச்சிவாயமே. (1)

பூவினுக்கருங்கலம் பொங்குதாமரை
யாவினுக்கருங்கல மரனஞ்சாடுதல்
கோவினுக்கருங்கலங் கோட்டமில்லது
காவினுக்கருங்கல நமச்சிவாயமே. (2)

விண்ணுறவடுக்கிய விறகின்வெவ்வழ
லுண்ணியபுகிலவை யொன்றுமில்லையாம்
பண்ணியவுலகினிற் பயின்றபாவத்தை
நண்ணிநின்றறுப்பது நமச்சிவாயமே. (3)

இடுக்கண்பட்டிருக்கினு மிரந்தியாரையும்
விடுக்கிற்பிரானென்று வினவுவோமல்லோ
மடுக்கற்கீழ்க்கிடக்கினு மருளினுமுற்ற
கடுக்கத்தைக்கெடுப்பது நமச்சிவாயமே. (4)

வெந்தநீறருங்கலம் விரதிகட்கெலா
மந்தணர்க்கருங்கல மருமறையாறங்கந்
திங்களுக்கருங்கலந் திகழுநீண்முடி
நங்களுக்கருங்கல நமச்சிவாயமே. (5)

சலமிலன்சங்கரன் சார்ந்தவர்க்கல்லா
னலமிலனுடொறு நல்குவானலன்
குலமிலராகினுங் குலத்துக்கேற்பதோர்
நலமிகக்கொடுப்பது நமச்சிவாயமே. (6)

வீடினுநலனில் விழுமியதொண்டர்
கூடினுரன்நெறி கூடச்சென்றலு
மோடினனோடிச்சென் றுருவங்காண்டலு
நாடினனுடிந்து நமச்சிவாயமே. (7)

இல்லகவிளக்கது விருள்கெடுப்பது
சொல்லகவிளக்கது சோதியுள்ளது
பல்லகவிளக்கது பலருங்காண்பது
நல்லகவிளக்கது நமச்சிவாயமே. (8)

முன்னெறியாகிய முதல்வன்முக்கணன்
றன்னெறியேசர ணுதறிண்ணமே
யன்னெறியேசென்றவ கடைந்தவர்க்கெலா
நன்னெறியாவது நமச்சிவாயமே. (9)

மாப்பிணைதழுவிய மாதொர்பாகத்தன்
பூப்பிணைதிருந்தடி பொருந்தக்கைதொழு
காப்பிணைதழுவிய நமச்சிவாயப்பத்
தேத்தவல்லார்தமக் கிடுக்கணில்லையே. (10)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்தி நாயனார்

திருப்பாண்டிக் கொடுமுடி. (8)

பண் – பழம்பஞ்சுரம்.

அஞ்செழுத்தண்மை.

திருச்சிற்றம்பலம்.

மற்றுப்பற்றெனக் கின்றிநின்றிருப் பாதமேமனம்பாவித்தேன்
பெற்றலும்பிறந் தேனினிப்பிற வாததன்மைவந் தெய்தினேன்
கற்றவர்தொழுதேத்துஞ் சீர்க்கறை யூரிற்பாண்டிக் கொடுமுடி
நற்றவாவுனை நான்மறக்கினுஞ் சொல்லுகா நமச்சிவாயவே. (1)

இட்டலும்மடி யேத்துவாரிகழ்ந் திட்டநாண்மறந் திட்டநாள்
கெட்டநாளினை யென்றலாற்கரு தேன்கிளாபுனற் காவிரி
வட்டவாசிகை கொண்டடிதொழு தேத்துபாண்டிக்கொடுமுடி
நட்டவாவுனை நான்மறக்கினுஞ் சொல்லுகா நமச்சிவாயவே. (2)

ஓவுநாணுணர் வழியுநாளுயிர் போகுநாளுயர் பாடைமேற்
காவுநாளினை யென்றலாற்கரு தேன்கிளர்புனற் காவிரிப்
பாவுதண்புனல் வந்திழிபரஞ் சோதிபாண்டிக் கொடுமுடி
நாவலாவுனை நான்மறக்கினுஞ் சொல்லுகா நமச்சிவாயவே. (3)

எல்லியில்புக ழெம்பிரானெந்தை தம்பிரானெம்பொன் மாமணி
கல்லியுந்தி வளம்பொழிந்திழி காவிரியதன் வாய்க்கரை
கல்லவர்தொழு தேத்துஞ்சீர்க்கறை யூரிற்பாண்டிக்கொடுமுடி
வல்லவாவுனை நான்மறக்கினுஞ் சொல்லுகா நமச்சிவாயவே (4)

அஞ்சினுக்கர ணாதியென்றடி யேனுநான்மிக வஞ்சினே
னஞ்சலென்றடித் தொண்டனேற்கரு ணல்கினுப்க்கழி கின்றதென்
பஞ்சின்மெல்லடி பாவைமார் குடைந் தாடுபாண்டிக்கொடுமுடி
நஞ்சணிகண்ட நான்மறக்கினுஞ் சொல்லுகா நமச்சிவாயவே. (5)

ஏடுவானிளந் திங்கள்சூடினை யென்பின்கொல்புவித் தோலின்மே
ளாடுபாம்ப தரைக்கசைத்த வழகனேயந்தண் காவிரிப்
பாடுதண்புனல் வந்திழிபரஞ் சோதிபாண்டிக் கொடுமுடிச்
சேடனேயுனை நான்மறக்கினுஞ் சொல்லுரை நமச்சிவாயவே. (6)

விரும்பிமின்மலர்ப் பாதமேகினைந் தேன்னினைகளும் விண்டன[டைக்
னெருங்கிவண்பொழில் சூழ்ந்தெழில்பெற நின்றகாவிரிக் கோட்டி
குரும்பைமென்முலைக் கோதைநமார்குடை காடுபாண்டிக் கொடு
விரும்பனேயுனை நான்மறக்கினுஞ் சொல்லுநமச்சிவாயவே. [முடி

செம்பொனேர்சடை யாய்திரிபுரந் தீயெழச்சிலைகோலினாய்
வம்புலாங்குழ லாளைப்பாக மமர்ந்துகாவிரிக் கோட்டிடைக்
கொம்பின்மேற்குயில் கூவமாமயி லாடுபாண்டிக் கொடுமுடி
நம்பனேயுனை நான்மறக்கினுஞ் சொல்லுநர நமச்சிவாயவே. (8)

சரணன்றந்தை யெம்பிரானெந்தை தம்பிரானென்பொன் மாமணி
பேரொணாயிர கோடிதேவர் பிதற்றிநின்று பிரிகிலார் [யென்று
நாரணன்பிர மன்றொழுங்கரை யூரிற்பாண்டிக் கொடுமுடிக்
காரணாவுனை நான்மறக்கினுஞ் சொல்லுநர நமச்சிவாயவே. (9)

கோணியபிறை சூடியக்கறை யூரிற்பாண்டிக் கொடுமுடி
பேணியபெரு மானைப்பிஞ்ஞகப் பித்தனைப்பிறப் பில்லியைப்
பாணுலாவரி வண்டறைகொன்றை தாரனைப்படப் பாம்பரை
நாணனைத்தொண்டனூரன்சொல்லிவை சொல்லுவார்க்கில்லைத்
துன்பமே. (10)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

திருக்ஷேத்திரக் கோவை. (9)

பண்–இந்தளம்.

கோயிற்றிறம்.

திருச்சிற்றம்பலம்.

ஆரூர்தில்லை யம்பலம் வல்லங்கல்லம்
வடகச்சியு மச்சிறுபாக்க நல்ல
கூரூர்குட வாயில்குடைந்த வெண்ணி
கடல்சூழ்கழிப் பாலிதென் கோடிபீடார்
சீரூர்வய னின்றியூர் குன்றியூருங்
குருகாவையூர் நாரையூர் நீடுகோனப்
பேரூர்கன் னீள்வய னெய்த்தானமும்
பிதற்றுப் பிறைசூடிதன் பேரிடமே. (1)

அண்ணுமலை யிங்கோய் மத்திமுத்தா
றகலாமுது குன்றங்கொடுங் குன்றமும்
கண்ணுர்கழுக் குன்றங் கயிலைகோணம்
பயில்கற்குடி காளத்தி வாட்போக்கியும்
பண்ணுர்மொழி மங்கையோர் பங்குடையான்
பரங்குன்றம் பருப்பதம் பேணிநின்றே
யெண்ணுயிர வும்பகலு மிடுமைபைக்
கடனீந்தலாங் காரணமே. (2)

அட்டானமென் றோதியகா லிரண்டு
மழகன்னுறை காவனைத்துந் துறைக
ளெட்டாந்திரு மூர்த்தியின் காடொன்பதும்
குளமூன்றுங்களமஞ்சும் பாடிநான்கு

மட்டார்குழ லாண்மலை மங்கைபங்கன்
மதிக்கும்மிட மாகியபாழி மூன்றுஞ்
சிட்டானவன் பாசூரென்றே விரும்பா
யரும்பாவங்க ளாயின தேய்ந்தறவே. (3)

அறப்பள்ளியகத்தி யான்பள்ளி வள்ளிப்பொடிப்பூசி
நீறணிவானமர் காட்டுப்பள்ளி
சிறப்பள்ளி சிராப்பள்ளி செம்பொன்பள்ளி
திருநனிபள்ளி சீர்மகேந் திரத்துப்
பிறப்பில்லவன் பள்ளிவெள்ளச் சடையான்
விரும்பும்மிடைப் பள்ளிவண் சக்கரமா
லுறைப்பாலடி போற்றக்கொடுத்த பள்ளி
யுணராய்மட நெஞ்சமேயுன்னிநின்றே. (4)

ஆறைவட மாகறலம்ப ரையா
றணியார்பெரு வேளூர்விளமர் தெங்கூர்
சேறைதுலை புகலூ ரகலா
திவைகாதலித் தானவன் சேர்பதியே. (5)

மனவஞ்சர்மற் றோடமுன் னூதரா ரு
மதிகூர்திருக் கூடலி லாலவாயு
மினவஞ்சொலிலா விடைமா மருது
மிரும்பைப்பதி மாகாளம் வெற்றியூருஞ்
கனமஞ்சின மால்விடையான் விரும்புங்
கருகாவூர் நல்லூர் பெரும்புலியூர்
தனமென்சொலிற் றஞ்சமென்றே நினைமின்
றவமாமல மாயினதா னறுமே. (6)

மாட்டிடமடப் பாச்சிலாச் சிராம
முண்டீச்சரம் வாதவூர் வாஞ்சி
காட்டிர்சுடம் பூர்படம் பக்கங்கொட்டிங்
கடலொற்றியூர் மற்றுறையூ ரவையுங்

கோட்டீச்சிரு வாமாத்தூர் கோழம்பமும்
கொடுங்கோவலூர் திருக்குணவாயில். (7)

குலாவுதிங்கட் சடையான் குளிரும்பருதியமம்
போற்றா ரடியார்வழி பாடொழியாத்
தென்புறம்பயம் பூவணம் பூழியூருங்
காற்றார்வை யன்றெடுத்தான் முடிதோ
ணேற்றித்தா னுறைகோயி
லென்றென்று நீகருதே. (8)

நெற்குன்றமோத்தூர் நிறைநீர்மருத
னெடுவாயில் குறும்பலா நீடுதிரு
நற்குன்றம் வலம்புர நாகேச்சுர
களிர்சோலையுஞ் சேணமாகாளம் வாய்மூர்
கற்குன்றமொன் றேந்தி மழைகடுத்த
கடல்வண்ணனு மாமலரோனுங் காணச்
சொற்கென்றுந் தொலிவிலாதா னுறையுங்
குடமூக்கென்று சொலலிக்குலாவுமினே. (9)

குத்தங்குடி வேதிகுடி புனல்சூழ்
குருந்தங்குடி தேவன் குடிமருவு
மத்தங்குடி தண்டிரு வண்குடியு
மலம்புஞ்சலந் தன்சடை வைத்துகந்த
நித்தன் னிமலனுமை யோடுங்கூட
நெடுங்கால முறைவிடமென்றுசொல்லாப்
புத்தர்புறங் கூறிய புன்சமணர்
நெடும்பொய்களை விட்டுநினைத்துய்மினே. (10)

அம்மானை யருந்தல மாகிநின்ற
வமரர்பெரு மான்பதியான வன்னிக்
கொய்மாமலர்ச் சோலைகுலாவு கொச்சைக்
கிறைவன்சிவ ஞானசம்பந்தன் சொன்ன

விம்மாலயி னைந்து மிருநிலத்தி
லிரவும்பகலு நினைந்தேத்தி நின்று
விம்மா வெருவா விரும்பும் மடியார்
விதியார் பிரியார் சிவன்சே வடிக்கே. (11)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு நாயனார்.

திருகேஷத்திரக்கோவை. (10)

திருக்காண்டகம்.

கோயிற்றிறம்.

திருச்சிற்றம்பலம்.

தில்லைச்சிற்றம்பலமுஞ் செம்பொன்பள்ளி
தேவன்குடிசிராப் பள்ளிதெங்கூர்
கொல்லிக்குளிரறைப்பள்ளிகோவல்
வீரட்டங்கோகரணங் கோடிகாவு
முல்லைப்புறவ முருகன்பூண்டி
முழையூர்பழையாறை சத்திமுற்றங்
கல்லிற்றிகழ்சீர்காளத்தியங்
கயிலாயநாதனையே காணலாமே. (1)

ஆரூர்மூலட்டான மாஞைக்காவு
மாக்கூரிற்றன்றோன்றி மாடமாளூர்
பேரூர்பிரமபுரம் பேராவூரும்
பெருந்துறை காம்பீலி பிடவூர்பேணுங்
கூராழ்குறுக்கைவீ ரட்டானமுங்
கோட்டீச்சுடமூக்குக் கோழம்பமுங்
காராரிழக்குன்றுங் கானப்பேருங்
கயிலாயநாதனையே காணலாமே. (2)

இடைமருதிங்கோ யிராமேச்சர
மின்னம்பரேரிடவை யேமப்பேறூர்
சடைமுடிசாலைக் குடிதக்கூர்
தலையாலங்காடு தலைச்சங்காடு
கொடுமுடிகுற்றாளங் கொள்ளப்பூதூர்
கோத்திட்டைகோட்டாறு கோட்டுக்காடு
கடைமுடிகாணூர் கடம்பந்துறை
கயிலாயநாதனையே காணலாமே. (3)

எச்சிலிளம ரேமகல்லூ
ரிலம்பையங்கோட்டூ ரீறையான்சேரி
யச்சிறுபாக்க மளப்பூரம்ப
ராவடு தண்டுறை யழுந்தூராறை
கச்சினங்கற்குடி கச்சூராலக்
கோயில்கரவீரங்காட்டுப்பள்ளி
கச்சிப்பலதளியு மேகம்பத்துங்
கயிலாயநாதனையே காணலாமே. (4)

கொடுங்கோளூரஞ்சைக் களஞ்செங்குன்றூர்
கொங்கணங்குன்றியூர்குரக்குக்காவு
நெடுங்களநன்னில நெல்லிக்காவு
நின்றியூர்நீடூர் நியமகல்லூ
ரிடும்பாவனமெழுமூ ரேழுந்தோழு
ரெறும்பியூரோராகூ மேமமூடங்
கடம்பையிளங்கோயிறன்னிலுள்ளும்
கயிலாயநாதனையே காணலாமே. (5)

மண்ணிப்படிக்கரை வாழ்கொளிபுத்தூர்
வக்கரைமந்தாரம் வாரணாசி
வெண்ணிவிளத்தொட்டி வேள்விக்குடி
விளமர்விராடபுரம் வேட்களத்தும்

பெண்ணையருட்டுறைதண் பெண்ணைகடம்
பிரம்பில்பெரும்புலியூர் பெருவேளூருங்
கண்ணிகளார்க்காரை கழிப்பாலியுங்
கயிலாயநாதனையே காணலாமே. (6)

வீழிமிழலைவெண் காடுவேங்கூர்
வேதிகுடிவிசய மங்கைவியலூர்
ராழியகத்தியான் பள்ளியண்ணு
மலைபாலங்காடு மாதைப்பெரும்
பாழிபழனம்பனந் தாள்பாதாளம்
பராய்த்துறைபைஞ்ஞீலிபனங்காட்டூர்தண்
காழிகடவூகைக்காரோணத்துங்
கயிலாயநாதனையே காணலாமே. (7)

உஞ்சேனைமாகாள மூறலோத்தூ
ருருத்திரகோடி மறைக்காட்டுள்ளூ
மஞ்சார்பொதியின்மலை தஞ்சைவழுவூர்
வீரட்டமானங் கேதாரத்துமை
வெஞ்சமாக்கூடன்மீ யச்சூர்வைகா
வேதீச்சரம் விளீச்சுரம் வெற்றியூரும்
கஞ்சனூர்கஞ்சாறு பஞ்சாக்கையுங்
கயிலாயநாதனையே காணலாமே. (8)

திண்டீச்சரஞ்சேய்ஞலூர் செம்பொன்பள்ளி
தேவூர்சிரபுரஞ்சிற் றேமஞ்சேமை
கொண்டீச்சரங்கூந்தலூர் கூழையூர்கூடல்
குரங்காவூர் வெள்ளடை குமரிகொங்கு
அண்டர்தொழுதிகை வீரட்டானை
மையாறமேசாகந்தியாமத்தூறுங்
கண்டியூர்வீரட்டங்கருகாவூரும்
கயிலாயநாதனையே காணலாமே. (9)

நறையூரிற்சித்தீச்சரங்கள்ளாறு
காரையூர்காகேச் சரங்கல்லூர்கல்ல
துறையூர்சோற்றுத்துறை சூலமங்கை
தோணிபுரத்துருத்தி சோமீச்சர
முறையூர்கடலொற்றி யூரூற்றத்தூ
ரோமாம் புலியூரோ ரேடகத்துங்
கரையூர்கருப்பறியல் கன்றாப்பூருங்
கயிலாயநாதனையே காணலாமே. (10)

புலிவலம்புத்தூர்புகலூர்புன்கூர்
புறம்பயம்பூவணம் பொய்கைகல்லூர்
வலிவலமாற்பேறு வாய்மூர்வைகல்
வலஞ்சுழிவாஞ்சிய மருகல்வன்னி
நிலமலிநெய்த்தானத்தோ டெத்தானத்து
நிலவுபெருங்கோயில் பலகண்டாற்றொண்டீர்
கலிவலிமிக்கோணக்கால் விரலாற்செற்ற
கயிலாயநாதனையே காணலாமே. (11)

திருச்சிற்றம்பலம்.

சுத்தாசூர்த்தி நாயனார்

ஊர்த்தொகை. (11)

பண் – பழம்பஞ்சுரம்.

கோயிற்றிறம்.

திருச்சிற்றம்பலம்.

காட்டேர்க்கடலே கடம்பூர்மலையே கானப்பேரூராய்
கோட்டேர்க்கொழுந்தே யழுந்தூராசே கொழுநற்கொல்லேறே
பாட்டேர்பலரும் பரவப்படுவாய் பணங்காட்டூரானே
மாட்டேறவா மறவாதுன்னைப் பாடப்பணியாயே. (1)

கொங்கிற்குறும்பிற் குரகுத்தளியாய் குழகாகுற்றலா
மங்குற்றிரிவாய் வரஞர்த்தலிவா வாய்மூர்மணவாளா
சங்கைக்குழையார் செவியாவழகா வலியாவனலேந்திக்
கங்குற்புறங்காட் டாடியடியார் கவலைகளையாயே. (2)

நிறைக்காட்டானே நெஞ்சத்தானே நின்றியூரானே
மிறைக்காட்டானே புனல்சேர்சடையா யனல்சேர்கையானே
மறைக்காட்டானே திருமாந்துறையாய் மாகோணத்தானே
யிறைக்காட்டாயே யெங்கட்குன்னி யெம்மான்றம்மானே. (3)

ஆரூரத்தா வையாற்றமுதை யளப்பூரம்மானே
காரூர்பொழிகள் புடைசூழ்புறவிற் கருகாவூரானே
பேரூருறைவாய் பட்டிப்பெருமான் பிறவாநெறியானே
பாரூர்பலரும் பரவப்படுவாய் பாசூரம்மானே. (4)

மருகலுறைவாய் மாகாளத்தாய் மதியஞ்சடையானே
யருகற்பிணிகின் னடியார்மேல வகலவருளாயே
கருகற்குரலாய் வெண்ணிக்கரும்பே காவூர்க்கட்டியே
பருகப்பணியா யடியார்குன்னப் பவளப்படியானே. (5)

தாங்கூர்பிணிகின் னடியார்மேல வகலவருளாயே
லேங்கூருறைவாய் விளமர்நகராய் விடையார்கொடியானே
காங்கருறையாய் தேங்கூர் நகராய் நல்லூர் நம்பரனே
பாங்கூர்பலிதேர் பரனேபரமா பழனப்பதியானே. (6)

தேனைக்காவல் கொண்டுளிண்ட கொன்றைச்செழுந்தாராய்
வானைக்காவல் கொண்டுநின்ற ரறியாநெறியானே
யானைக்காவி லரனேபரனே யண்ணாமலையானே
யூனைக்காவல் கைவிட்டுன்னே யுகப்பாருணர்வாரே. (7)

தருத்திச்சுடரே நெய்த்தானத்தாய் சொல்லாய் கல்லாலா
பருத்தியமத் தறைவாய்வெயிலாய்ப் பலவாய்க்காற்றுனுய்
திருத்தித்திருத்தி வந்தென்சிந்தை யிடங்கொள் கயிலாயா
வருத்தித்துன்னே யடைந்தார்வினைக ளகலவருளாயே. (8)

புலியூர்ச்சிற்றம் பலத்தாய்புகலூர்ப் போதாமுதூரா
பொலிசேர்புரமூன் றெரியச்செற்ற புரிபுன்சடையானே
வலிசேரரக்கன் றடக்கைபைஞ்ஞான் கடர்த்தமதிசூடி
கலிசேர்புரவிற் கடவூராளி காணவருளாயே. (9)

கைம்மாவுரிவை யம்மான்காக்கும் பலவூர்கருத்தன்னி
மைம்மாந்தடங்கண் மதாமன்ன மொழிபாண்மடச்சிங்கடி
தம்மா னூரன் சடையன்சிறுவ னடியன்றமிழ்மாலை
செம்மாந்திருந்து திருவாய்திறப்பார் சிவலோகத்தாரே. (10)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

திருவெழு கூற்றிருகை. (12)

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

முருகுவாயினை மாலைங்காரத்
தீரியல்பாயொரு வின்முதல்பூகல
மொன்றியவிருகுட ரும்பார்களாயிரமும்
படைத்தளித்தளிப்ப மும்மூர்த்திகளாயினை
யிருவரோடொருவ னாகினின்றனை
யோரானீழ லொண்கழலிரண்டு
மூப்பொழுதேத்திய நால்வர்க்கொளிநெறி
காட்டினைநாட்ட மூன்றாக்கோட்டினை
யிருநதியரவமோ டொருமதிசூடினை
யொருதாளீரயின் மூவிலைச்சூல
நாற்கான்மான்மறி யைந்தலையரவ
மேந்தினைகாய்ந்த நால்வாய்மும்மதத்

திருக்கோட்டொருகரி யீடழித்தரித்தனை
யொருதனுவிருகால் வளையவாங்கி
முப்புரத்தேடு நானிலமஞ்சக்
கொன்றதலத்துற வுணையபுத்தனை
யெம்புலனுலா மந்தக்கரண
முக்குணமிருவகை யொருங்கியவாஞை
ரேத்தகின்றனை யொருங்கியமனத்தோ
டிருபிறப்போர்ந்து முப்பொழுதுகுறைமுடித்து
நான்மறையோதி யைவகைவேள்வி
யமைத்தாறங்கமுதலெழுத்தோதி
வரண்முறைபயின்றெழு வான்றனைவளர்க்கும்
பிரமபுரம் பேணினை
யறுபதமூரலும் வேணுபுரம்விரும்பினை
யிகலியமைந்துணர் புகலியமர்ந்தனை
பொங்குநாற்கடல்சூழ் வெங்குருவிளங்கினை
பாணிமூவுலகும் புதையமேன்மிதந்த
தோணிபுரத்துறைந்தனை தொலையாவிருமதி
வாய்ந்தபூந்தரா யேய்ந்தனை
வரபுரமென்றனர் சிரபுரத்துறைந்தனை
யொருமலையெடுத்த விருதிறலரக்கன்
விறல்கெடித்தருளினை புறவம்புரிந்தனை
முந்நீர்த்தயின்றே ஞன்முகனறியாப்
பண்பொடுநின்றனை சண்பையமர்ந்தனை
யையுறுமமணரு மறுவகைத்தேரரு
மூழியுமுணராக் காழியமர்ந்தனை
யெச்சனெழிசையோன் கொச்சையமெச்சினை
யாறுபதமு மைந்தமர்கல்வியு
மறைமுதலுணர்ந்து
மூன்றுகாலமுந் தோன்றநின்றனை
பிறுமையினு நுமையு மொருமையின்பெருமையு

மறவிலாமறையோர்
கழுமலமுதுபதிக் கவுணியன்கட்டுரை
கழுமலமுதுபதிக் கவுணியனறிவு
மனையதன்மையை யாதலினின்னே
நினையவல்லவ ரில்லைநீணிலத்தே.

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு நாயனார்.

திருக்கடவூர் மயானம். (13)

பண்–காந்தாரம்.

சிவனுருவம்.

திருச்சிற்றம்பலம்.

வரியமறையார்பிறையார் மலியோர்சிலையாவணக்கி
பெரியமதில்களெய்தா ரெறியுமுசலமுடையார்
கரியமிடறுமுடையார் கடவூர்மயானமமர்ந்தார்
பெரியவிடைமேல்வருவா ரவரெம்பெருமானடிகளே. (1)

மங்கைமணந்தமார்பர் மழுவாள்வலனெண்றேந்திக்
கங்கைசடையிற்கரந்தார் கடவூர்மயானமமர்ந்தார்
செங்கண்வெள்ளேறேறிச் செல்வஞ்செய்யவருவா
ரங்கையெறியமறியா ரவரெம்பெருமானடிகளே. (2)

ஈடலிடபமிசைய வேறிமழுவொன்றேந்திக்
காடதிடமாவுடையார் கடவூர்மயானமமர்ந்தார்
பாடலிசைகொள்கருவி பதிதம்பலவும்பயில்வா
ராடலரவமுடையா ரவரெம்பெருமானடிகளே. (3)

இறைகின்றிலங்குவளையா ளிளையாலொருபாலுடையார்
மலைகின்றிலங்குமொழியார் மலையார்மனத்தின்மிசையார்
கறைகின்றிலங்குபொழில்சூழ் கடவூர்மயானமமர்ந்தார்
பிறைகின்றிலங்குசடையா ரவரெம்பெருமானடிகளே. (4)

வெள்ளையெருத்தின்மிசையார் விரிதோடொருகாதிலங்கத்
துள்ளுமிளமான்மறியார் சுடர்பொற்சடைகடிலங்கக்
கள்ளநகுவெண்டலையார் கடவூர்மயானமமர்ந்தார்
பிள்ளைமதியமுடையா ரவரெம்பெருமானடிகளே. (5)

பொன்றுதிருமணங்கொள் புணர்பூங்கொன்றைபுனைந்தார்
ஒன்றுவெள்ளேறுயர்த்த துடையாரதுவேயூர்வார்
கன்றுவினைஞ்சூழ்புறவிற் கடவூர்மயானமமர்ந்தார்
பின்றுழ்சடையாரொருவ ரவரெம்பெருமானடிகளே. (6)

பாசமானகளைவார் பரிவார்க்கமுதமனையா
ராசைதீரக்கொடுப்பா ரலங்கல்விடைமேல்வருவார்
காசைமலர்போன்மிடற்றார் கடவூர்மயானமமர்ந்தார்
பேசவருவாரொருவ ரவரெம்பெருமானடிகளே. (7)

செற்றவரக்கனலறத் திகழ்சேவடிமெல்விரலாற்
கற்குன்றடர்த்தபெருமான் கடவூர்மயானமமர்ந்தார்
மற்றிறன்றிணிபில்வலிய மாசில்வெள்ளிமலைபோற்
பெற்றிறன்றேறிவருவா ரவரெம்பெருமானடிகளே. (8)

வருமாகரியினுரியார் வளர்புன்சடையார் விடையார்
கருமாணுரிதோலுடையார் கடவூர்மயானமமர்ந்தார்
திருமாலொடுநான்முகனுக் தேர்ந்துங்காணமுன் ணெண்ணப்
பெருமானெனவும்வருவா ரவரெம்பெருமானடிகளே. (9)

தூயவிடைமேல்வருவார் தண்ணருடையமதில்கள்
காயவேவச்செற்றார் கடவூர்மயானமமர்ந்தார்
தீயகருமஞ்சொல்லுஞ்சிறுபுன்றேரரமணர்
பேய்பேயென்னவருவா ரவரெம்பெருமானடிகளே. (10)

மரவம்பொழில்சூழ்கடவூர் மன்னுமயானமமர்ந்த
வரவமசைத்தபெருமா னகலமறியலாகப்
பரவுமுறையேபயிலும் பத்தன்செஞ்சொன்மாலை
யிரவுமபகலும்பரவி நினைவார்வினைகளிலரே. (11)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு நாயனார்.

கோயிற்றிரு விருத்தம். (14)

பண்–கொல்லி.

சிவ னுருவம்.

திருச்சிற்றம்பலம்.

பாலாயுடைக்கமழ் கோங்கிப்பன்மாட
கெருங்கிபெங்கும்
வாலாயுடைப்புனல் வக்கெறிவாழ்வயற்
றில்லைதன்னு
ளாலவுடைக்கழற் சிற்றம்பலத்தர
டைல்கண்டார்
பீலாயுடைக்கண்களாற் பின்னைப்பேய்த் தொண்டர்
காண்பதென்னே. (1)

பொருவிடையொன்றுடைப் புண்ணியமூர்த்தி
புலியதள
னுருவுடையம்மலை மங்கைமணாள
னுலகுக்கெல்லாந்
திருவுடையந்தணர் வாழ்கின்றதில்லைச்சிற்
றம்பலவன்
றிருவடியைக்கண்ட கண்கொண்டுமற்றினிக்
காண்பதென்னே. (2)

தொடித்தமலரொடு தூபமுஞ்சாத்துங்கொண்
டெப்பொழுது
மடித்துவணங்கு மபனெடுமாலுக்குங்
காண்பரியான்
பொடிக்கொண்டணிந்து பொன்னுகியதில்லைச்
சிற்றம்பலவ
னடித்தலைகண்ட கண்கொண்டுமற்றினிக்
காண்பதென்னே. (3

வைச்சபொருணமக் காகுமென்றெண்ணி
நமச்சிவாய
வச்சமொழிந்தே னணிதில்லையம்பலத்
தாடுகின்ற
பிச்சன்பிறப்பிலி பேர்நந்தியுந்தியின்
மேலசைத்த
கச்சினழகுகண்டார் பின்னைக்கண்கொண்டு
காண்பதென்னே. (4

செய்ஞ்ஞின்றநீல மலர்கின்றதில்லைச்சிற்
றமபலவன்
மைஞ்ஞின்றவொண்கண் மலைமகள்கண்டு
மகிழ்ந்துநிற்க
நெஞ்ஞின்றெரியும் விளக்கொத்தநீல
மணிமிடற்றன்
கைஞ்ஞின்றவாடல்கண்டார்பின்னைக்கண்கொண்டு
காண்பதென்னே. (5

ஊனத்தைதீக்கி யுலகரியவெண்ணீ
யாட்கொண்டவன்
றேனெஞ்சதனக்கினியான் றில்லைச்சிற்றம்பலவ
னெங்கோன்
வானத்தவருய்ய வன்னஞ்சையுண்ட
கண்டத்திலங்கு
மேனத்தெயிறுகண்டார் பின்னைக்கண்கொண்டு
காண்பதென்னே. (6

தெத்தகணபாற் றிரிபுரமூன்றுஞ்செங்
தீயின்மூழ்க
வெரித்தவிறைவ னிமையவர்கோமா
னிணையடிக
டரித்தமனத்தவர் வாழ்கின்றதில்லீச்சிற்
றம்பலவன்
சிறித்தமுகங்கண்ட கண்கொண்டுமற்றினிக்
காண்பதென்னே. (7)

சுற்றுமமரர் சுரபதிநின்றிருப்
பாதமல்லார்
பற்றொன்றிலோமென் றழைப்பப் பரவையு
ணஞ்சையுண்டான்
செற்றங்கருங்கணத் தீவிழித்தான்றில்லை
யம்பலவ
னெற்றியிற்கண்கண்ட கண்கொண்டுமற்றினிற்
காண்பதென்னே. (8)

சித்தத்தெழுந்த செழுங்கமலத்தன்ன
சேவடிகள்
வைத்தமனத்தவர் வாழ்கின்றதில்லீச்சிற்
றம்பலவன்
முத்தும்வையிரமு மாணிக்கந்தன்னுள்
விளங்கியது
மத்தமலர்கண்ட கண்கொண்டுமற்றினிக்
காண்பதென்னே. (9)

தருக்குமிருக்குத் தன்றோள்வளியுன்னித்
தடவரையை
வரைக்கைகளாலெடுத் தார்ப்பமலைகள்
கோன்சிரித்து

வரக்கன்மணிமுடி பத்துமணிதில்லை
யம்பலவ
னெருக்கியிதித்த விரல்கண்ட கண்கொண்டு
காண்பதென்னே. (10)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு நாயனார்.

திருப்பூவணம்.

(15)

திருத்தாண்டகம்.
சிவனுருவம்.

திருச்சிற்றம்பலம்.

வடிவேறு திரிசூலந் தோன்றுந் தோன்றும் வளர்சடைமே
லிளமதியந தோன்றுந தோன்றுங், கடியேறு கமழ்கொன்றைக்
கண்ணிதோன்றுங் காதில்வெண் குழைதோடு கலந்து தோன்று,
மிடியேறு கரிற்றுரிவைப் போர்வை தோன்று மெழிறிகழுந் திரு
முடியு மிலங்கத்தோன்றும், பொடியேறு திருமேனி பொலிந்து
தோன்றும் பொழிறிகழும் பூவணத்தெம் புனிதனுர்க்கே. (1)

ஆணுகிப்பெண்ணுய வடிவுதோன்று மடியவர்கட் காரமுத
மாகித் தோன்று, மூணுகியூர்திரிவா ணுகித்தோன்று வொற்றை
வெண் பிறைதோன்றும் பற்றுர்தமமேற், சேணுகவரைவில்லா
லெரித்த ரூன்றுஞ் செத்தவர்தமெலும்பினுற் செறியச்செய்த,
பூணுணு மறைநாணும் பொலிந்துதோன்றும் பொழிறிகழும் பூவ
ணத்தெம் புனிதனுர்க்கே. (2)

கல்லாலி னீழறனி கலந்துதோன்றுங் கவின்மறையோர் கால்
வர்க்கு நெறிகளன்று, சொல்லாமற் சொல்லியவா தோன்றுந்
தோன்றுஞ் சூழாவு மாண்மறியுந் தோன்றுந் தோன்று, மல்லாத

காலனைமுன் னடர்த்த றேன்றுமைவகையா னினைவார்பாலமர்ந்
தோன்றும், பொல்லாத புலாலெலும்பு பூணுய்த்தோன்றும் பொழி
றிகழும் பூவணத்தெம் புனிதனுர்க்கே. (3)

படைமலிந்த மழுவாளு மானுந்தோன்றும் பன்னிரண்டு கண்
ணுடைய பிள்ளே தோன்று, கடைமலிந்த விடையோடு கொடியுந்
தோன்று நான்மறையி னெலிதோன்று நயனந்தோன்று, முடைம
லிந்த கோவணமுங் கிளந்தோன்று மூரல்வெண் சிரமாலே புலர
வித்தோன்றும், புடைமலிந்த பூதத்தின் பொலிவுதோன்றும் பொ
ழிறிகழும் பூவணத்தெம் புனிதனுர்க்கே. (4)

மயலாகுந் தன்னடியார்க் கருளுந் தோன்று மாசிலாப் புன்
சடைமேன் மதியந் தோன்று, மிபல்பாக விடுபிச்சை யேற்றறே
ன்று மிருங்கடனஞ் சுண்டிருண்ட கண்டந் தோன்றுங், கயல்பா
யக் கடுங்கலுழிக் கங்கை நங்கை யாயிரமா முகத்தினெடு வானிற்
றேன்றும், புயல்பாயச்சடைவிரித்த பொற்புத் தோன்றும் பொழி
றிகழும் பூவணத்தெம் புனிதனுர்க்கே. (5)

பாராழி வட்டத்தார் பரவியிட்ட பன்மலரு நறும்புகையும்
பரந்துதோன்றுஞ், சீராழித் தாமரையின் மலர்களன்ன திருந்தி
யமா நிறத்தசே வடிகடோன்று, மோராழித் தேருடைய விலங்
கைவேந்த னுடனுணித்த விடர்பாவங் கெடுப்பித்தன்று, போராழி
முன்னீந்த பொற்புத்தோன்றும் பொழிறிகழும் பூவணத்தெம்
புனிதனுர்க்கே. (6)

தன்னடியார்க் கருள்புரிந்த தகவுதோன்றுஞ் சதுர்முகனைத்
தலையரிந்த தன்மை தோன்று, மின்னனைய நுண்ணிடையாள் பா
கந்தோன்றும் வேழத்தி னுரிவிரும்பிப் போர்த்த றேன்றுங், துன்
னியசெஞ் சடைமேலோர்புனலும் பாம்புந் தூயமாமதியுடனே
வைத்தறேன்றும், பொன்னனைய திருமேனி பொலிந்துதோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனிதனுர்க்கே. (7)

செறிகழலுந் திருவடியுந் தோன்றுந் தோன்றுந் திரிபுரத்தை யெரிசெய்த சிலையுந் தோன்று, நெறியதனை விரித்துரைத்த நேர்மை தோன்று நெற்றிமேற் கண்டோன்றும் பெற்றந்தோன்று, மறுபிறவி யறுத்தருளுமவகையுந தோன்று பலமகளுஞ் சலமகளு மலிந்து தோன்றும், பொறியரவு மிளமதியும் பொலிந்து தோன்றும் பொழிறிகழும் பூவணத்தெம் புனிதனுர்க்கே. (8)

அருப்போட்டு முலைமடவாள் பாகந் தோன்று மணிகிளறு முருமென்ன வடர்க்குங் கேழன், மருப்போட்டு மணிவயிரக் கோவைதோன்று மணமலிந்த நடந்தோன்று மணியார்வைகத், திருக்கோட்டி னின்றதோர் திருமுந்தோன்றுஞ் செக்கர்வ ளெளி மிக்குத் திகழ்ந்த சோதிப், பொருப்போட்டி னின்றதிண் புயமுந் தோன்றும் பொழிறிகழும் பூவணத்தெம் புனிதனுர்க்கே. (9)

ஆங்கணிந்த சண்டிக்கு மருளியன்று தன்முடிமேலலர்மாலை யளித்தோனும், பாங்கணிந்த பணிசெய்வார்க் கருளியன்று பலபிறவியறுத்தருளும் பரிசுந்தோன்றுங், கோங்கணிந்த கூவிளமு மதமத்தமுங் குழற்கணிந்த கொள்கையொடு கோலந் தோன்றும்; பூங்கணை வேளுருவழித்த பொற்புந் தோன்றும் பொழிறிகழும் பூவணத்தெம் புனிதனுர்க்கே. (10)

ஆருருவவுள்குவா ருள்ளத்துள்ளே யவ்வுருவாய்நிற்கின்றவரு ளுந் தோன்றும், வாருருவப பூண்முலைநன்மங்கை தன்னை மகிழ்ந் தொருபால் லவத்துகந்த வடிவுதோன்று, நீருருவக்கடலிலங்கை யரக்கர்கோனை நெறுநெறென வடர்த்திட்ட நிலையுந் தோன்றும, போருருவக் கூற்றுதைத்த பொற்புத் தோன்றும் பொழிறிகழும் பூவணத்தெம் புனிதனுர்க்கே.

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்தி நாயனார்

திருக்கடவூர் மயானம். (16)

பண்–பழம்பஞ்சுரம்.

சிவ னு ரு வ ம்.

திருச்சிற்றம்பலம்.

மருவார்கொன்றை மதிசூடி மாணிக்கத்தின் மலைபோல
வருவார்விடைமேன் மாதோடு மகிழ்ந்துபூதப் படைசூழத்
திருமால்பிரம னிந்திரற்குந் தேவர்நாகர் தானவர்க்கும்
பெருமான்கடவூர் மயானத்துப் பெரியபெருமா னடிகளே. (1)

விண்ணோர்தலைவர் வெண்புரிநூன் மார்பர்வேத கீதர்
கண்ணார்நுதலர் நகுதலையர் காலகாலர் கடவூர
ரெண்ணூர்புரமூன் றெறிசெய்த விறைவரிமையோ ரொருபாகம்
பெண்ணுணவர் மயானத்துப் பெரியபெருமானடிகளே. (2)

காயம்புலியி னதளுடையர் கண்டரெண்டோட் கடவூர்
தாயுந்தந்தை பல்லுயிர்க்குந் தாமேயாய தலைவனார்
பாயும்விடையொன் றதுவேறிப் பலிதேர்ந்துண்ணும்பரமேட்டி
பேய்கள்வாழு மயானத்துப் பெரியபெருமானடிகளே. (3)

நறைசேர்மலரான் கணையாலே நயனத்தீயாற்பொடிசெய்த
விறையாராவ ரெல்லார்க்கு மில்லையென்ன தருள்செய்வார்
பறையார்முழவும்பாட்டோடு பயிலுந்தொண்டர்பயில்கடவூர்ப்
பிறையார்சடையார் மயானத்துப் பெரியபெருமா னடிகளே. (4)

கொத்தார்கொன்றை மதிசூடிக் கோணைகங்கள்பூணுக
மத்தயானையுரிபோர்த்து மருப்புமாமைத் தாலியார்
பத்திசெய்து பாரிடங்கள் பாடியாடப்பலிகொள்ளும்
பித்தர்கடவூர் மயானத்துப் பெரியபெருமா னடிகளே. (5)

தணிவார்கீளங்கோவணமுந்தைதந்துகடலேப்பொடியணிந்து
பணிமேலிட்டபாசுபதர் பஞ்சவடிமார் பினர்கடவூர்த்
திணிவார்குழைபார் புரமூன்றந் தீவாய்ப்பபடித்த சேவகனூர்
பிணிவார்சடையார் மயானத்துப்பெரியபெருமா னடிகளே. (6)

காராக்கடலி னஞ்சுண்ட கண்டர்கடவூ ருறைவாணர்
தேராரரக்கன் போய்வீழ்ந்து சிதையவிரலா லூன்றிஞ
ரூர்தானுவ துலகேழு முடையாராக்கொற்றி யூராரூர்
பேராயிரவர் மயானத்துப் பெரியபெருமா னடிகளே (7)

வாடாமுலேயா டன்னெடி மகிழ்ந்துகானில் வேடுவனுய்க்
சோடார்கேழற் பின்சென்று குறுகிவிசையன் றவமழித்து
ஈடாயஅணைஞ் செருச்செய்து வாவாழி நிலேயருள்செய்
பிடாசடையார் மயானத்துப் பெரியபெருமா னடிகளே. (8)

வேழமுரிப்பர் மழுவாளர் வேள்வியழிப்பர் சிரமறுப்ப
ராழியளிப்ப ரரிதனக்கு வானஞ்சுகப்ப ரறமுரைப்ப
ரேழைதலேவர் கடவூரி லிறைவாசிறுமான் மறிக்கையர்
பேழைச்சடையர் மயானத்துப்பெரியபெருமா னடிகளே. (9)

மாடமல்கு கடவூரின் மறையோரேத்து மயானத்துப்
பீடைதீர வடியாருக் கருளும்பெருமா னடிகள்சீர்
நாடிநாவ லாரூர னம்பிசொன்ன நற்றமிழ்கள்
பாடுமடியார் கேட்பார்மேற் பாவமான பறையுமே. (10)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

திருவாழ்கொளிபுத்தூர். (17)

பண்–தக்காராகம்.

திருவடிகள்.

திருச்சிற்றம்பலம்.

பொடியுடைமார்பினர்போர்விடையேறிப்
பூதகணம்புடைசூழக்
கொடியுடையூர்திரிக் தையங்
கொண்டுபலபல கூறி
வடிவுடைவாணெடுங் கண்ணுமைபாக
மாயவன்வாழ்கொளி புத்தூர்க்
கடிகமழ்மாமலரிட்டுக் கறைமிடற்
றனடிகாண்போம். (1)

அரைகெழுகோவண வாடையின்மேலோ
ராடரவம்மசைத் தையம்
புரைகெழுவெண்டலை யேந்திப்
போர்விடை யேறிப் புகழ
வரைகெழுமங்கைய தாகமோர்பாக
மாயவன்வாழ்கொளி புத்தூர்
விரைகமழ்மாமலர் தூவிவிரிசடை
யாணடி சேர்வோம். (2)

பூணெடுகாக மசைத்தனலாடிப்
புன்றலையங்கையி லேந்தி
யூனிடுபிச்சையு ரைய
முண்டியென்றுபலகூறி

வாணெடுங்கண் ணுமை மங்கையோர்பாக
மாயவன்வாழ்கொளி புத்தூர்த்
தாணெடுமாமலரிட்டுத்தலைவன
தாணிழல் சார்வோம். (3)

தாரிடுகொன்றையோர் வெண்மதிகங்கை
தாழ்சடைமேலவைசூடி
யூரிடுபிச்சைகொள்செல்வ
முண்டியென்று பலகூறி
வாரிடுமென்முலை மாதொருபாக
மாயவன்வாழ்கொளி புத்தூர்க்
காரிடுமா மலர்தூவிக்
கழறமிடற்றனடிகாண்போம். (4)

கணமலர்க்கொன்றை யலங்கலிலங்கக்
காதிலோர் வெண்குழையோடு
புனமலர்மாலைபுனைந்தூர்
புகுதியென்றேபல கூறி
வனமுலைமாமலை மங்கையோர்பாக
மாயவன்வாழ்கொளிபுத்தூ
ரினமலரேய்ந்தன தூவி
யெம்பெருமானடி சேர்வோம். (5)

அரவளர்நாகம சைத்தனலாடி
யலர்மிசையந்தண னுச்சிக்
கரவதலிற்பலி கொள்ளுங்
கருத்தனேகேள்வனே யென்னு
மரவொலிமுன்கை மடந்தையோர்பாக
மாயவன்வாழ்கொளிபுத்தூர்த்
தரையவிழ்மாமலர் தூவித்
தலைவனதாளிணை சார்வோம். (6)

அடர்செவிவேழத்தி னீருரிபோர்த்து
வழிதலையங்கையி லேந்தி
யுடலிடுபிச்சையோடைய
முண்டியென்றுபல கூறி
மடனெடுமாமலர்க் கண்ணியோர்பாக
மாயவன்வாழ்கொளி புத்தூர்த்
தடமலராயின தூவித்
தலைவனதாணிழல் சார்வோம். (7)

உயர்வரையொல்க வெடுத்தவரக்க
னெளிர்கடகக்கையடர்த்து
வயலிடுபிச்சையோ டைய
மார்தலையென்றடி போற்றி
வயல்விரிநீல நெடுங்கணிபாக
மாயவன்வாழ்கொளி புத்தூர்ச்
சயவிரிமாமலர் தூவித்
தாழ்சடையானடி சார்வோம் (8)

கரியவனுன்முகன் கைதாழ்தந்தக்
காணலுஞ் சாரலுமாகா
வெரியுருவாகியு ரைய
மிடபலிபுண்ணியென் றேத்தி
வரியரவல்குன் மடந்தையோர்பாக
மாயவன்வாழ்கொளி புத்தூர்
விரிமலராயின தூவி
விகிர்தனசேவடி சேர்வோம். (9)

குண்டமணர்துவர்க் கூறைகண்மெய்யிற்
கொள்கையினூர்புறங் கூற
வெண்டலையிற்பலி கொண்டல்
விரும்பினையென்று விளமபி

வண்டார்குழன் மங்கையோர்பாக
மாயவன்வாழ்கொளி புத்தூர்
தொண்டர்கண்மாமலர்த் தூவித்
தோன்றின்றொழுடி சேர்வோம், (10)

கல்லுயர்மாக்கட னின்றுமுழங்குங்
கரைபொருகாழிய மூதூர்
கல்லுயர்கான்மறை நாவி
னன்றமிழ்ஞான சம்பந்தன்
வல்லுயர்சூலமும் வெண்மழுவாளும்
வல்லவன்வாழ் கொளிபுத்தூர்ச்
சொல்லியபாடல்கள் வல்லார்
துயர்கெடுதல்லெளிதாமே. (11)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு நாயனார்.

திருவதிகைவீரட்டானம். (18)

திருவடித் திருத்தாண்டகம்.

திருவடிகள்.

திருச்சிற்றம்பலம்.

அரவணையாண்சிக்கீழ்த் தாற்றும்மடி
யருமறையாண்சென்னிக் கணியாமடி
சரவணத்தான்கைதொழுது சாருமடி
சார்ந்தார்கட்செல்லாஞ் சரணமடி
பாவுவார்பாவம் பறைக்கும்மடி
பதினெண்கணங்களும் பாடும்படி
விரவுநீர்த்தென்கெடில நாடன்னடி
திருவீரட்டானத்தெஞ் செல்வன்னடி. (1)

கொடியினையா ரென்றுங் குருகாவடி
குறைந்தகடன்தா ராழாமைக் காக்கும்மடி.
பழமுழலம்பாணி பயிற்றும்மடி
பதைத்தெழுந்த வெங்கூற்றைப்பாய்ந்தவடி.
கடிமுரணைமூர்த்தான் கழற்சேவடி
கடல்வையகப் பாங்கருகும்மடி
கெடிமதியக்கண்ணி யணிந்தானடி
நிறைகெடிலவீரட்ட நீக்காவடி. (2)

வைதெழுவார்காமம்பொய் போகாவடி
வஞ்சவலிப்பாடொன் றில்லாவடி.
கைதாழுதுகோமத்திக் காணும்மடி.
கணக்குவழக்கைக் கடந்தவடி.
நெய்தாழுதுகோமத்தி யாட்டும்மடி.
நீள்விசும்பையூடறுத்து நின்றவடி.
தெய்வப்புனற்கெடில நாடன்னடி.
திருவீரட்டானத்தெந் செல்வன்னடி. (3)

அரும்பித்தசெய்ஞாயி றேய்க்கும்மடி
யழலெழுதலாகா வருட்சேவடி
சுரும்பித்தவண்டினங்கள் சூழ்ந்தவடி.
சோமவியுங்காலவியுங் காய்ந்தவடி.
பெரும்பித்தர் கூடிப் பிதற்றும்மடி
பிழைத்தார்பிழைப்பரிய வல்லவடி
திருந்துநீர்த்தென்கெடில நாடன்னடி
திருவீரட்டானத்தெந் செல்வன்னடி. (4)

ஒருகாலத்தொன்றாகி நின்றவடி
யூழிதோறூழி யுயர்ந்தவடி
பொருசழலும்பல்சிலம்பும் மார்க்கும்மடி
புகழ்வாய்புகழ்ந்தவைய வல்லவடி

யிருநிலத்தாரின்புற்றங் கேத்தும்மடி
யிகழ்புற்றரிட்டபூ வேறும்மடி
திருவதிகைத்தென்கெடில நாடன்னடி
திருவீரட்டானத்தெஞ் செல்வன்னடி. (5)

திருமகட்குச்சென்தா மரையாமடி
சிறந்தவர்க்குத்தேனுய் விளைக்கும்மடி
பொருளவர்க்குப்பொன்னுரையாய் நின்றவடி
புகழ்வார்புகழ்தகைய வல்லவடி
யுருவிரண்டுமொன்றேறெடான் றெவ்வாவடி
யுருவென்றுணரப் படாதவடி
திருவதிகைத்தென்கெடில நாடன்னடி
திருவீரட்டானத்தெஞ் செல்வன்னடி. (6)

உரைமாலையெல்லா முடையவடி
யுமையாலுணரப் படாதவடி
வரைமாலதவாடாமை வைக்கும்மடி
வானவர்கடாம்வணங்கி வாழ்த்தும்மடி
யரைமாத்திரையி லடங்குமமடி
யகலமளக்கிற்பா ரில்லாவடி
கரைமாங்கடிக்கெடில நாடன்னடி
கமழ்வீரட்டானக்கா பாலியடி. (7)

நறுமலராய்நா றுமலர்ச்சேவடி
நடுவாயுலகுகா டாயவடி
செறிகதிருஞ்ஞங்களுமாய் நின்றவடி
தீத்திரளாயுள்ளே திகழ்ந்தவடி
மறுமதியமாசு கழுவும்படி
மந்திரமுந்தந்திரமு மாயவடி
யெறிகெடிலநாடர் பெருமானடி
திருவீரட்டானத்தெஞ் செல்வன்னடி. (8)

அணியனவுஞ்சேயனவு மில்லாவடி
யடியார்கட்காமுதே மாயவடி
பணிபவர்க்குப்பாங்காக வல்லவடி
பற்றற்றார்பற்றும் பவளவடி
மணியடிபொன்னடி மாண்பாமடி
மருந்தாய்வினைதீர்க்க வல்லவடி
தணிபாடுதண்கெடில நாடன்னடி
தலைசார்வீரட்டத் தலைவன்னடி. (9)

அந்தமரைப்போ தலர்ந்தவடி
யரக்கனையுமாற்ற லழித்தவடி
முந்தாகிமுன்னே முளைத்தவடி
முழுங்கழலாய்நீண்டவெம் மூர்த்தியடி
பந்தாடுமெல்விரலாள் பாகன்னடி
பவளத்தடவரையே போல்வானடி
வெந்தார்கடலேழ் ருடும்மடி
வீரட்டங்காதல் விமலன்னடி. (10)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்தி நாயனார்

திருப்புன்கூர். (19)

திருவடிகள்.

பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

அந்தணனாளன் னடைக்கலம்புகுத
வவனைக்காப்பது காரணமாக
வந்தகாலன்ற னுருயிரதனை
வவ்வினாய்க்குன்றன் வண்மைகண்டடியே

னெஞ்சகமேயினை நமன்றமர்கவியி
லிவன்மற்றென்னடி யானெனவிலக்குஞ்
சிந்தையால்வந்துன் றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப் புன்கூருளானே. (1)

வையகமுற்று மாமழைமறந்து
வயலினீரிலை மானிலந்தருகோ
முய்யக்கொள்கமற் றெங்களீயென்ன
வொளிகொள்வெண்முகி லாய்ப்பரந்தெங்கும்
பெய்புமாமழைப் பெருவெள்ளந்தவிர்த்துப்
பெயர்த்தும்பன்னிரு வேலிகொண்டருளுஞ்
செய்கைகண்டுநின் றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப் புன்கூருளானே. (2)

வுதரன்னில மீரறுவேலி
யேயர்கோனுற்ற விரும்பிணிதவிர்த்துக்
கோதனங்களின் பால்சுரந்தாட்டக்
கோலவெண்மணற் சிவன்றன்மேற்சென்ற
காலதாளற வெறிந்தசண்டிக்குன்
சடைமிசைமல ரருள்செயக்கண்டு
பூதவாளிநின் பொன்னடியடைந்தேன்
பூம்பொழிற்றிருப் புன்கூருளானே. (3)

நற்றமிழ்வல்ல ஞானசம்பந்த
ஞவினுக்கரைய ஞாலப்போவானுங்
கற்றசூதனற் சாக்கியன்சிலந்தி
கண்ணப்பன்கணம் புல்லனென்றிவர்கள்
குற்றஞ்செய்யினுங் குணமெனக்கருதுங்
கொள்கைகண்டுநின் குரைகழலடைந்தேன்
பொற்றிரண்மணிக் கமலங்கண்மலரும்
பொய்கைசூழ்திருப் புன்கூருளானே. (4)

கோலமால்வரை மத்தெனநாட்டிக்
கோளரவுசுற்றிக் கடைந்தெழுந்த
வாலகஞ்சுகண் டவர்மிகவிரிய
வமரர்கட்கருள் புரிவதுகருதி
நீலமார்கடல் விடந்தனையுண்டு
கண்டத்தேதவைத்த பித்தரீசெய்த
சீலங்கண்டுநின் றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப் புன்கூருளானே. (5)

இயக்கர் கின்னரர் யமனெடுவருண
ரியங்குதீவளி ஞாயிறுதிங்கண்
மயக்கமில்புலி வானரநாகம்
வசுக்கள்வானவர் தானவரெல்லா
மயர்ப்பொன்றின்றிநின் றிருவடியதனை
யர்ச்சித்தார்பெறு மாரருள்கண்டு
நிகழ்ப்பொன்றின்றிநின் றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப் புன்கூருளானே. (6)

போர்த்தகீள்செவி யாளரக்கனார்க்குப்
பொழில்கொளாநிழற் கீழுறம்புறிந்து
பார்த்தனுக்கன்று பாசுபதங்கொடுத்
தருளினுப்பண்டு பகீரதன்வேண்ட
வார்தலைவந்திழி புண்புனற்கங்கை
நகுலகையாளோடின் சடைப்பிசைக்கரந்த
தீர்த்தனேநின்றன் றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப் புன்கூருளானே. (7)

மூவெயில்செற்ற ஞான்றுய்ந்த மூவரி
லிருவர்நின்றிருக் கோயிலின்வாய்தல்
காவலாளரென் றேவியபின்னை
யொருவனீகரி காடரங்காக

மானேநோக்கியோர் மாகடமகிழ
மணிமுழாமுழக்க வருள்செய்த
தேவதேவனின் றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப் புன்கூருளானே. (8)

அறிவினன்மிக்க வறுவகைச்சமய
மவ்வவர்க்கங்கே யாசருள்புரிந்து
வெறியுமாகட லிலங்கையர்கோனைத்
தலங்கமால்வரைக் கீழடர்த்திட்டுக்
குறிகொள்பாடலி னின்னிசைகேட்டுக்
கோலவாளொடு காளதுகொடுத்த
செறிவுகண்டுகின் றிருவடியடைந்தேன்
செழும்பொழிற்றிருப் புன்கூருளானே. (9)

கம்பமால்களில் றின்னுரியானைக்
காமர்காய்ந்ததோர் கண்ணுடையானைச்
செம்பொனேயொக்குந் திருவுருவானைச்
செழும்பொழிற்றிருப் புன்கூருளானை
யும்பராளியை யுமையவள்கோனை
யூரன்வன்பெருண்ட வுள்ளத்தாலுகந்
தன்பினற்சொன்ன வருந்தமிழ்வல்லா
டைநெஞ்சமவல்லவ ரருவினையிலரே. (10)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

திருப்பூந்தராய். (20)

பண—காந்தாரபஞ்சமம்.

அருச்சனை.

திருச்சிற்றம்பலம்.

பத்தர்சேர்கிரலாள் பவளத்துவர்
வாயினள்பணிமா மதிபோன்முகத்
தந்தமில்புகழாண் மலைமாதொடு
மாதிப்பிரான்

வந்துசேர்விடம் வானவரத்திசையும்
நிறைந்துவலஞ் செய்துமாமலர்
புந்திசெய்திறைஞ்சிப் பொழிபூத்தராய்
போற்றுதுமே. (1)

காவியங்கருங் கண்ணினாள்கனித்
தொண்டைவாய்க்கதிர் முத்தநல்வெண்ணகைத்
தூவியம்பெடை யன்னகடைச்சுரி
மென்குழலா
டேவியுந்திரு மேனியோர்பாகமா
யொன்றிரண்டொரு மூன்றிருதிசோபதி
பூவிலாதண லெய்ப்பவர்பூத்தராய்
போற்றுதுமே. (2)

பையராவரு மல்குன்மெல்லியல்
பஞ்சின்மேனடை வஞ்சிகொணுண்ணிடைத்
தையலாலொரு பாலுடையெம்மிறை
சாருமிடஞ்
செய்யலாங்கழு நீர்கமலம்மலர்த்
தேறலூறலிற் சேலுலாதருந்
பொய்யிலாமறை யோர்பயில்பூத்தராய்
போற்றுதுமே. (3)

முள்ளிகாண்முகை மொட்டியல்கோங்கி
னரும்புதேன்கொள் குரும்பைமூவாமருந்
தள்ளியென்றனபம் பொற்கலசத்திய
லொத்தமுலை
வெள்ளிமால்வரை யன்னதோர்மேனியின்
மேவினர்பதி வீமருதண்பொழிற்
புள்ளினத்துயின் மல்கியபூத்தராய்
போற்றுதுமே. (4)

பண்ணிபன்மொழி மெண்மொழியாள்பகர்
கோதையோர்திசை யைந்தனிர்மேனியோர்

பெண்ணியன்றடுமாயம்பிற் பெருமாற்கிடம்
பெய்வளையார்
கண்ணியன்றெழு காவிச்செழுங்கரு
நீலமல்கிய காமருவாவிகற
புண்ணியருறையும் பதிபூந்தராய்
போற்றுதுமே. (5)

வாணிலாமதி போலுலாண்மட
மைழையாண்கணுள வண்டறளாகுகை
பாணிலாவிய வின்னிசையார்மொழிப
பாலவையோடுந
சேணிலாத்திகழ் செஞ்சடையெமமண்ணல்
சேர்வதுகிகரப பெருங்கோயிலசூழ்
போணிலாதுலைபுமை பொழிற்பூந்தராய்
போற்றுதுமே. (6)

காருலாவிய வார்குழலாள்கயற்
கண்ணிணுள்புயற் காலொளிமின்னிடை
வாருலாவிய மெனமுலையாண்
மலைமாதுடனாய்
நீருலாவிய செஞ்னியனமனனி
திகருகாமமுக் காலனுகிழ்பதி
போருலாவெயில சூழ்பொழிற்பூந்தராய்
போறறுதுமே. (7)

காசைசோகுழலாள் கயலோர்தடங்
கண்ணிகாமபன் தோட்கதிரமென்முலைத்
தேசுசேர்மலை மாதமருங
திருமாபகலத்
தீசன்மேவு மிருங்கயிலையெடுத்
தானையன்றடாததா னிணைச்சேவடி
பூசைசெய்பவர்சோ பொழிற்பூந்தராற்
போறறுதுமே (8)

கொங்குசேர்குழ லாணிழல்வெண்ணகைக்
கொவ்வைவாய்க்கொடி யேரிடையாளுமை
பங்குசேர்தரு மார்புடையார்
படர்தியுருவாய்
மங்குல்வண்ணனு மாமலரோனு
மயங்கவீண்டவர் வான்மிசைவந்தெழு
பொங்குசீரின் மிதந்தருட்பூந்தராய்
போற்றுதுமே. (9)

கலவமாமயி லாரியலாள்கரும்
பன்னமென்மொழி யாள்கதிர்வாணுதற்
குலவுபூங்குழ லாளுமைகூறினை
வேளுரையா
லலைவுசொல்லுவார் தேரமணர்க்க
ளாக்கிநின்றினை கண்ணுமுலகுநற்
புலவர்தாம்புகழ் பொற்பதிபூந்தராய்
போற்றுதுமே. (10)

தேம்பநாண்ணிடையாள் செழுஞ்சேலன
கண்ணியோடணைல் சேர்விடந்தேனமர்
பூம்பொழிறிகழ் பொற்பதிபூந்தராய்
போற்றுதுமென்
றேம்புதன்மையன் முத்தமிழ்ஞான்மறை
ஞானசம்பந்த னெண்டமிழ்மாலைகொண்
டாம்படியிவை யேத்தவல்லார்க்
கடையாவினையே. (11)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு நாயனார்.

ஸ்ரீ கயிலாயம். (21)

திருத்தாண்டகம்.

அருச்சனை.

திருச்சிற்றம்பலம்.

வேற்றாகி விண்ணாகி நின்றாய்போற்றி
மீளாமேயாலெண்ணைக் கொண்டாய்போற்றி
ஊற்றாகியுள்ளே யொளித்தாய்போற்றி
யோவாதசத்தத் தொளியேபோற்றி
யாற்றாவெங்கே யமர்ந்தாய்போற்றி
யாறங்காலில்வேத மானாய்போற்றி
பசுக்கள் வரும் சமயத்தில் கலசஸ்தாபனம் செய்து பலவித கனிவர்க்கங்களாலேயும் நெய்வேத்தியங்களாலேயும் விதிப்படி மந்திரஞ் சொல்லி பூஜை செய்துவரவேண்டியது. பூர்வகாலத்தில் இந்த விரதத்தை யார் அனுஷ்டித்துவந்தார்கள் அந்த விவரத்தை சொல்லும்படி கேட்டுக்கொண்டாள். பகவான் சொல்லுகிறார்-பார்வதி பூர்வகாலத்தில் மகததேசமிருந்தது அதில் குண்டினம் என்ற நகரமிருந்தது. அந்தவூர் குபேரதேசம்போலிருந்தது, அந்த ஊரில் ஓர் தரித்ரனே இடையாது. அந்த பட்டிணத்தில் சாருமதி என்ற ஓர் பெண்ணிருந்தாள் அந்தப் பெண் புருஷனையும் மாமி, மாமனரையும் தேவரென்று பாவித்துக்கொண்டு அவாள் வார்த்தைகளுக்கு யாதொரு பதில் சொல்லாமல் அவர்களிஷ்டப்படி சிசுருஷை செய்துகொண்டுவந்தாள், தேவதாபக்தியுடையவளாயிருந்தாள். ஓர்நாள் வீட்டில் ஜாஸ்தி வேலையிருந்தபடியால் அபர்ந்து தூங்கிவிட்டாள் தூங்குகிறகாலத்தில் மாமட்சுமி என்பவள் சார்மதி சொர்ப்பனத்தில் வந்து தட்டிஎழுப்பி ஓ மகாபதிவிரதே! உன்னைப் போலிப் பூலோகத்தில் ஒருவருமில்லை என்று சகல ஆபரணத்துடன் தரிசனம் கொடுத்தாள், ஓசார்மதி, இப்பூலோகத்தில் நீரகமேலே செய்துகொண்டிம் சதா பகவத்தியானம் செய்துக்கொண்டு வந்தாயே உன்னைப் போலுள்ள மகாபதிவிரதை இப்பூலோகத்தி லொருவருமில்லை என்று உனக்கு இவ்வித தரிசனம் தந்தேன் என்றாள் உடனே சார்மதி அனேகவிதமான ஸ்தோத்திரங்கள் செய்தாள். அந்த ஸ்தோத்திரத்தை மெச்சி மூன்று வரம் கொடுத்து அந்தரத்தியானமாய்விட்டாள். 1-வது எப்போதும் அஷ்ட ஐஸ்வர்யத்தோடிருக்கும்படியாயும், 2-வது தன்னை மறக்காமலிந்த விரதத்தை செய்துவரும்படியாயும், 3-வது அந்திபகலத்தில் பகவானுடைய பாதாரவிந்தத்தில் சேரும்படியாயும் சொன்னாள். உடனே எழுந்திருந்து சார்மதி கைகால் சுத்திசெய்து தன்னுடைய பர்த்தாவையும், மாமி, மாமனரையும் சுற்றிவந்து நமஸ்காரம் செய்து தான் சொற்பனத்தில் கண்ட சங்கதிகளையெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கும்போது அக்கம்பக்கம் வீட்டுக்காரர் சங்கதி கேட்டுக்கொண்டு கண்ட சொற்பனத்தைவிஸ்தாரமாய் சொன்னாள் இந்த சொற்பன சமாசாரம் ஊரெல்லாம் கேட்டு பரவிவிட்டது உன்னைப்போல பத்தினி யாரி

ருக்கிறார்களென்றும் யாவரும் சொல்லிக்கொண்டார்கள். சார்மதியி டத்தில் இந்த விவரத்தை யாவரும் கொண்டாடுவோம், வரும் தே திலை எங்களுக்கு முந்திதெரிவித்தால்விரதத்தை முடித்து யாவரும் க்ஷேமமாயிருப்போமென்று சொன்னார்கள். பட்டணம் முழுதும் இவ்விரதம் எப்போது வரப்போகிறதென்று தபசு செய் துகொண்டிருந்தார்கள் வரும்தேதி பட்டணமுழுதும் தெரிந்து ஸ் நானம் செய்து அனேகவித கனிவர்க்கங்களும் பலவித புஷ்பங்க ளும் நெய்வேத்தியத்துடன் தாரங்களோ அனேக மேளவாத்தியங்க ளுடன் வரிசைவரிசையாய்பட்டணமுழுதும் வரிசையுடன் சார்மதி வீட்டுக்கு வந்து பூஜை செய்தார்கள். பத்மாசனே! பத்மகரே! சர்வலோகைகபூஜ்யே! நாராயணப்பிரியேதேவி! சுப்ரீதாபவசர்வ தா! என்று தியானித்துக்கொண்டு சோடச உபசாரத்துடன் தோரம் கரித்துக்கொண்டு பிராமணர்களுக்கு தக்ஷிணை தாம்பூலம் கொடுத்து ஆலாத்தி எடுத்தபிறகு சார்மதியிடம் நீ எடுத்துக்கொ ண்ட பிரயாசைக்கு நாங்கள் கடைத்தேறினோமென்று சாயந்திரம் அவரவர்கள் வீடு போய் சேர்ந்தார்கள் இவ்விரதத்தைகொண்டாடி னதால் முன்னிருந்த அயிஸ்வரியத்தைவிட அஷ்ட அயிஸ்வரியங்க ளுடன் புத்திரசந்தானமுண்டாகி அவளாவாளிருப்பிடம் சொன்ன மயபாயணத்தி யிருப்பிடம் தெரிந்து சார்மதியையும் பார்வதியை யும் யாவரும் கொண்டாடினார்கள். இந்த விரதத்தை பூலோகத்தில் யார் யார் அனுஷ்டிக்கிறார்களோ அவரவர்களுக்கு அஷ்டஅயிஸ் வர்யமும் மனதின் கோரிக்கைப்படிக்கும் புத்திரசந்தானமுண்டா குமென்று பார்வதிதேவிக்கு பரமேஸ்வரர் உபதேசித்தார்.

இவ்விரதத்தை யுரைத்தவர், படித்தோர். எழுதினோர், கேட் டோர், செப்பினோர் தீமையிலிருந்து நீங்கி எப்பெருஞ்சிறப்பை யுமமைந்து வாழ்வுடன் தீர்க்காயுளுமுளராய் ஒப்பருங்கதியினிலே பெற விளங்கியும பெரும்புகழ் வாழ்பவரே.

கருத்தனைப் பாடமாட்டேன் காம்பனதோளிபங்கா
லொருத்தாலறியவொண்ணாத் திருவுருவுடைய சோதி
திருத்தாந்தில்லை தன்னுட் டிசழ்ந்நிசற் றம்பலத்தே
னிருத்தான் காணவேண்டி நேர்பட வந்தவாறே.

விளம்பரம்.

விநாயகர் சதுர்த்தி விரதம்.

சிவபெருமான் கங்கையை கல்யாணம் செய்துக்கொள்ளுகையில் முன்னையத் தம்மைமச் செய்துக்கொள்ளவேண்டுமென்னும் கருத்தி னுனி தன்தைபாகிய பர்வதராஜனையடைந்து தமதிண்ணத்தைதபரி விக்க இது நிறைவேறத்தக்க ஓர் விரதத்தை புனர்த்தவேண்டு மென்ற விஷ்ணு அகஸ்ய மஹாமஹபசன் கேட்டனு மனமகிழ்ந்து அதற்குத்தக்கபடி ஓர் விரதத்தை பாபாய்ந்துணர்ந்து சொலலுவா ரானார். தாமே பிரிக்க பிரச்சிறப்பையுடையதும் விரைவில் நற்பயன் கனியளிப்பதும் இந்திரன்சாபத்தை நீக்கியதும் பிரமனுயிற்குஞ் சிருட்டியாதி தொழில்களைத் தந்தும் சகலவிடர்களை நீக்கத்தக்க தும் சகல பொருள்களையுமளிக்கத்தக்கதும் இன்னுமிவை முக் லான அளவற்ற மகிமைகளையுடைய ஒரு விரதமிருக்கின்றது அவ் விரதம் தேவதேவாத்தியாகியும் மூவர் முதல்வராகியும் முத் தொழிற்குக் காரணராகியுமிருக்கின்ற யானைமுகக்கடவுளுடைய சதுர்த்தி விரதத்தையும் அனுட்டிக்கு முறைமையுஞ் சொல் லத்தொடங்கினர்.

ஆவணிமாதம் பூர்வபட்சத்தில் வருகின்ற சதுர்த்திதினத்தில் அவ்விரதத்தையாரம்பிக்கவேண்டும் அவ்வண்ணமாரம்பிப்பவர்கள் அத்தினம் அதிகாலையிலெழுந்து ஸ்நானம் செய்து நித்தியானுட் டானங்களை நிறைவேற்றி அபிடேகத்திற்குரிய திரவியங்களையும், அருச்சித்தற்கேற்ற மலர்களையும், நிவேதனத்திற்குத்தக்க பதார்த் தங்களையும் தூபதீபங்கட்கு வேண்டும் பொருள்களையுஞ் சேகரித் து ஓர் பூஜா மண்டபத்தை யாதுபொருந்தமைத்து பரிசுத்தமான விடத்தில் மிருத்திகை யெடுத்துவந்து அதில் வேர்கள் செல்லு முதலிய ஜெந்துக்கள், கல்லுகள் என்னு மிக்குற்றங்களில்லாமற் சோதித்து அதனைப் பிசைந்து சிற்பசாஸ்திரத்திற் கூறியிருக்கின்ற

முறையாகப்படி. விக்காயக மூர்த்தியினுடைய திருவுருவ மமைக்க வேண்டும் இதுவன்றியும் பொன்னினாலாகிய திருவுருவமைக்கவேண்டும் செய்யச் சக்தியில்லாதவர்களாயின் ஒருபலம் அல்லதபலம் காற்பலம் எப்படி யிருந்த அளவிலாயினும் சமைத்தல் வேண்டும் பின்னர் ஆசிரியரின் உத்தரவின்படி சுத்த கும்பகையில் ஸ்நானம் செய்து திருவெண்ணீறணிந்து சிரம், கண்டம், கரம், திரி எனும் இவ்விடங்களில் உருத்திராக்ஷ கண்டிகை தரித்து மேற்சொன்ன பூஜாமண்டபத்திற்கு வந்து தன்னிலமை பார்த்தி அதன்மேல் இரு முறை மந்திரபூர்வமாய் பொற்குங்குமத்தை வைத்து முன்னாக சமைத்திருக்கும் பிருத்வீசுரபூர்த்தியையும் பொன் முதலிய தாயபடி அதன் வலதுபாகத்தில் செய்து ஆகர்ஷணிப்படி முதல் தினம் முதல் இரவு நாலு நாழிகை ஆறு எட்டு பத்து பன்னிரண்டு இருபத்திநான்கென்று வெளிமுத்துக்களுள்ள மந்திரங்களுள் ஒரு மந்திரத்தைச் செபிக்கவேண்டும் இவற்றுள் முன்று இரண்டு நாலு என்னுமெழுத்துக்களுள்ள மந்திரங்களை யெல்லாம் செபிக்கவேண்டும். அதற்குக் கூடாமையின் அவ்வெண்ணிற் பாதியாவது செபிக்கவேண்டும். ஐந்து ஆறு எட்டு பத்து பன்னிரண்டு என்னுமெழுத்துக்களுள்ள மந்திரங்களை நூறுமுறை செபிக்கவேண்டும். அதற்குக் கூடாமையின பதினைந்துமுறையாவது செபிக்கவேண்டும். இருபத்திநான்கெழுத்துள்ள மந்திரத்தை குறைவில்லாமற் பதினைந்தாயிரம் உருச் செபிக்கவேண்டும். இவ்வாறு செபிக்கும்காலையிற் பத்துநிகாரு நாலு தருப்பணஞ் செய்யவேண்டும் பத்துத்தருப்பணத்திற்கொருகால் ஒரு ஓமஞ்செய்யவேண்டும். பத்து ஓமத்திற்கொருகால் அறுசுவை பதார்த்தங்களோடி அன்னதானஞ் செய்யவேண்டும். இந்தக்கிரமமாக பூசை செய்து நிறைவேற்றுங்காலத்தில் பொன், பூமி முதலானவைகளை தானஞ் செய்யவேண்டும். அதிற்கமாதஞ் சுக்கிலபக்ஷசதுர்த்தியையில் நான் சொன்னும் மேற்சொல்லிய முறைமைப்படி பூசைசெய்து மிருத்திகையினால் செய்யப்பட்ட விக்காயகமூர்த்தியை நிறுத்தினதொத்திலங்களோடுமெழுந்தருளச்செய்து மடியிலாவது, கடாகத்திலாவது, மடியிலாவது வைத்துவிடவேண்டும்.

இவ்வாறு பூஜை செய்கின்ற முப்பதுநாளும் ஆகாரநித்திரை யில்லாமல் சத்காலவிஷயங்களே. நிக்ரகித்து முப்பத்தோராநாள் விடிந்து, ஸ்நானம், அநுஷ்டானங்கள், பரமதிகிகள் முதலானவர்களோடு போஜனம் செய்யவேண்டும். முப்பதுநாளும் ஆகாரமின்றி யிருக்கச் சக்தியில்லாதவர்கள் இவ்விரதத்தை யாரம்பிக்கு முதல் தினத்திலாவது அவ்வாறிருந்து மறுநாள்தொட்டு அவிசு, பழம், பால் இவைகளிலொன்றைப் புசித்துக்கொண்டு விரதமனுட்டிக்கவேண்டும். முப்பதுநாள் அனுட்டிக்கமாட்டாதவர்கள் ஆரம்பித்த ஒருநாள்மாத்திரமாவது ஆகார முதலியவைகளே நிக்ரகித்து மேற்சொன்ன முறைப்படியனுட்டிக்கவேண்டும். தானஞ் செய்யுமுறைமையில் அவசியர்கள் செல்வத்திற்குத் தக்கபடி செய்யவேண்டும். எவ்விதத்தேனும் இருபத்தோர் பேருக்கு அன்னதானம் செய்துவரவேண்டும். அன்றியும் ஒருநூறுத்திற்பூசிக்கிறவர்கள் தனதாயிய புத்திரசம்பத்துண்டாகி அநேக பந்துவர்க்கங்களோடும் வாழ்ந்திருப்பார்கள். இரண்டுநூறுகளிற் பூசிப்பவர்கள் தங்கள் கருத்தின்படி அளவற்ற காரியங்களெல்லாஞ் சித்தியாகப்பெறுவார்கள். மூன்றுநூறுகளிற் பூசிப்பவர்கள் நவரத்தினங்களு மலை போலக் குவித்திருக்கப்பெறுவார்கள். நானூறுகளிற் பூசிப்பவர்கள் தர்மமுதலிய நான்கு புருஷார்த்தங்களும் கிடைக்கப்பெறுவார்கள். ஐந்நூறுகளிற் பூசிப்பவர்கள் சார்வபௌமராக வாழ்வார்கள். ஆறுநூறுகளிற் பூசிப்பவர்கள் சிருட்டியாதி முத்தொழில்கட்குந் தலைவராவார்கள். ஏழு, எட்டு, ஒன்பது என்னுமிவ்வுறுகளிற் பூசிப்பவர்கள் சர்வஜ்ஞத்துவமுடையவராவார்கள். பத்துபடிகளிற் பூசிப்பவர்கள் நிகழ்காலம் இறந்தகாலம் எதிர்காலமென்னுந் திரிகால ஞானத்தையுடையவராவார்கள். இதைப் பத்நூறுகளிற் செய்யும் பூசாபலத்தினால் சனகராதி முனிவர்களும் விஷ்ணுவாதி தேவர்களும் அளவற்ற அதிகாரங்களைப் பெறுவார்கள். பதினொருநூறுகளிற் பூசிப்பவர்கள் சகல துன்பங்களுந் தொலையப்பெறுவார்கள். பன்னிரண்டுமுதல் நூற்றெட்டுநூறுகள்வரையிற் பூசிப்பவர்கள் ஒன்றுக்கொன்று மேலான பயன்களேயெல்லாங் கிடைக்கப்பெறுவார்கள். ஆயிர வுறுகளிற் பூசிப்பவர்கள் இம்மையில் மலவிருளினின்று நீங்கி மெய்ஞ்ஞான சுகத்தைப்பெற்று

வாழ்வதன்றி மறுமையில் மோகூடி சாம்பிராச்சியத்தை யடைந்து தங்களிருபத்தொரு தலைமுறைகளினுள்ளவர்களையு முத்தியிற் சேர்ப்பார்கள்.

மேலும் ஏழுமூர்த்திகளை மூன்றுவாள் பூசை செய்தால் சகல பிணிகளும் இடர்களுந் தொலையும் ஒன்பதுவாள் பூசை செய்தால் அனந்தகோடி முண்டாகும். ஐந்துபஞ்சாக்கரமுடம்பையில் தரித்தால் எல்லாப் பாதகங்களும் நீங்கும். இடைவிடாது அஞ்சிபஞ்சாக்கரமாயில் தரித்தால் விரையகமூர்த்தியினுடைய சாயுச்சியபதவியை யடைவார்கள். இவ்வாறு அவரவர்கள் சக்திக்கேற்றபடி வித்தியாரம்பம் தரித்தாலும் அப்பூசையில் பிரதமார்த்தம் பிரதிட்சாமார்த்தம் சாபரிட்சாமார்த்தம் என்னும் இம்மூன்றிலொன்றைச் செபித்து முடிவில் கர்ப்பஞ்சுத்திகளை முடித்துச் சுவயதிரவியமாயிற் சிவாக்கினியிலிடுவதாகிய சிவோல்ல அவையபூர்ணாகுதியும் பார்வதி தேவியார் கேட்டு மனமகிழ்ந்து இவ்விரகுகளை முன்னர் பரமனுரைத்திருக்கிறானென்று சிவகட்கப் பரமாசாரியன் சொல்லுகிறார்.

இப்படியிருக்க சகல தேவர்களுடனும் சிவபெருமான் கைலாயத்திலெழுந்தருளியிருக்கின்றபோது சுப்பிரபாணியக்கடவுள் காரணனே பலமுறையும் வணங்கி அளவற்ற விரதங்களையும் மேலான விரதமாகவும் விசையில் சகல பாவங்களையுமபகிக்கவல்லதாகவும் பிறவும் செவ்வையாகவுந் தெரிந்திருந்த ஓர் விரதத்தை அடியேனுக்கு திருவாய்மலர்ந்தருளவேண்டுமென அதற்கு கர்த்தனும் கிருபை சுரந்து வைத்தகீன சகல விரதங்களுக்கு மேலானது விஜயகமூர்த்தியினுடைய சதுர்த்தி விரதமாகும் அதுவே தினைத்த காரியங்களின் விசையில் முடிக்கத்தக்கது. அதுவே யாதெனும் செவ்வையாயிருப்பதென்று சொற்றருளினார். அதனைக் கேட்ட முகடவுள் கேட்டு ஒன்றிருந்த மற்றொன்றைத் தேவரீர் திருவாய் மலர்ந்தருளியது அடியேன் சிறுபிள்ளையென்று நினைத்தோ தேவரீர்து விரதங்களை அளவற்றதாய் நூல்களில் அளற்றுமிலொன்றை யணுக்கிரகம் செய்யாமல் விரதமூர்த்தி யென்ற விரதத்தையே மேலானதாக தெரிவித்தீர் அவ்விரதாயகமூர்த்தி அடியேனுக்கு மூத்தவராயினும் தேவரீருக்கு புதல்வனல்லனோ வென்றும் சகலபுவனமு சொரூபியாயிய

தேவரீரினும் அவர் மேலானவராயிருக்கின் சுவாமிகளுக்கிரகித்த வாறு அவர் விரதம் மேலானதாகவே இருக்கும். ஆதலால் அடியேன் மனதிற் ஒன்றுகியும், பலவாகியும், அருவாகியும், உருவாகியும் எல்லா உலகத்தினும் நீக்க மற்று நிறைந்திருக்கின்ற சுயஞ் சோதி சுவரூபமே உலகமெலாம் உய்யும்பரமாகவும் சகல புவனங்களுந் தமது சரணபங்கயங்களைத் தொழுது முத்தியடையும்படியாகவும் பிரணவத்தினின்றுந் சகளீகரித்தருக் கணபதியென்னுந் திருநாமத்தை வகித்திருக்கின்றது. மேலும் அக்கணபதிமூர்த்தியே முன்னர் யாம் திரிபுரத்தை யெரிக்கத்தக்க மந்திரத்தை யெமக்குபதேசித்தவர் அவரே சிருட்டி, திதி, சங்காரமென்கிற முத்தொழில்களைப் பிரமன் விண்டு உருத்திரனுமிய எங்கள் மூவருக்கும் அருளிச் செய்தவர் இவ்வுலகத்தில் தான்டவ நிர்த்தஞ் சிவதாண்டவ னனுஞ் செய்யும்பொருட்டு அனந்தமுறை வேறு வேறு திருவவதாரங்களைக்கொண்டிருக்கின்றனர். மற்றோரவதாரத்தில் நமக்கு புத்திரராக அவதரித்திருக்கின்றனர். யாங்களிருவரும் உடலுயிரும்போல மருவியிருத்தலினால் சகல வேதாகம புராணங்கள் எங்களிருவரையும் ஒன்றாகச் சொல்லியிருப்பதனால் வேறுபடுத்தாது எங்களைத் தியானிக்கின்ற பெரியோர்களும் அவ்வாறே தியானிப்பார்கள் ஆதலால் அவ்விநாயகமூர்த்தியே மேலான மூர்த்தி அவரது சதுர்த்தி விரதமே மேலான விரதமென்றும் அவ்விரதத்தை யனுட்டிப்பவர்கள் யாவரேயாயினும் அவர்கட்கு மாயாசம்பிரதம், சுத்தசுவ சம்பிரம், யோகினி ஜாலம், மாலினிவித்தை, மகாசம்மோகனம், மனோபேதம், தந்திரபேதம், சூர்யதந்திரம், கலாவாதம், கலாசாரம், சூண்டிகாமதம், அஞ்சனவித்தை, பாதாளவானபாத்திரம், பரகாயப்பிரவேசம், ரசவாதம், பைசிலவாதம், சங்கிராமவிலக்கணம் முதலிய எல்லா வித்தைகளும் கைகூடிவரும்.

திருச்சிற்றம்பலம்.

கேட்டிலேன் கிரே யிரியேன் கேட்குமாகேட்டியாகி
னூட்டினே னின்றன்பாத நம்பப்பட நெஞ்சினுள்ளே
மாட்டினீர் வானோர்பாடு மல்குசிற்றம்பலத்தே
கூட்டமாங் குணமுலீலையால் கூடலீயாமிமாறே.

சிவமயம்.

அனந்த விரதம்.

சுக்கிலாம் பரதரம விஷ்ணும சுர்வர்ணம சதுர்ப்புஜம்
பிரசன்ன வதனம் திபாயேது சர்வவிக்கினோபசாந்தயே.

சங்கல்பம்

சுபமேசோபனே முகூர்த்த ஷ ... குண விசேஷண விசிஷ்ட் டாயாம் கபாதித அஸ்மாகம் சகுடும்...ரும் க்ஷேமஸ்தைரிய விஜய ஆயுராரோக்கிய அபிஸ்வர்யபிவிருத்யர்த்தம் தர்மார்த்த காமமோக்ஷ சதுர்வித பலபுருஷார்த்த சித்தித்வாரா தத்தாநாள சௌபாக்கிய சுபபல அபாததீர்த்தம் வருஷவருஷே பிரயுக்த ஸ்ரீ அனந்தபதமகட தேவதா உத்தேஸ்ய ஸ்ரீ அனந்தபதமகா தேவதா பிரீத்யர்த்தம் பத்மபுராணோக்தபிரகாரேண பாலக்கந்தி தியான ஆவாகனாதி சோடச உபசாரபூஜாகரிஷ்யே.

கலசபூஜாஞ்சகர்மேஷ.

பஞ்சபாண்டவர்கள் தர்மபுத்திரனிடம் சொக்கட்டானாடி தோற்று ராஜியங்களை அவர்களிடம் ஒப்புவித்துவிட்டு வனவாசம் செய்துகொண்டிருக்கும்காலத்தில் ஒருநாள் ஆரண்யபர்வத்தில் பிருந்தவனத்தை யடைந்திருக்கையாயிருந்தபோதில் ஸ்ரீகிருஷ்ணபகவான் பிரசன்னராய் இவ்விரதத்தை யனுஷ்டித்திவருவதால் அனந்தமான பலன்களும் கொடுக்குமென்றும் அவ்விரதம் புரட்டாசிமாதம் சுக்லபக்ஷ சதுர்த்தசியினத்தில் கொண்டாடவேண்டுமென்றும் சொன்னர். விரதத்திற்கு தேவதை யாரென்று கேட்க நான் தவிர வேறு நவருமில்லையென்று சொன்னர் அப்போதும் நம்பிக்கையில்லாதது தெரிந்தவுடன் தன் விராட சொரூபத்தால் காட்டினர். அப்போது பயங்கரமுண்டாய் தான் செய்தது அபசாரமென்றும் வருந்தி கேட்டுக்கொண்டபிறகு மன்னித்து மறுபடி உபதேசம் செய்தார். பூர்வத்தில் இந்த விரதத்தை யார் அனு

ஷ்டித்தார்களென்றும் அதை தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ள தர்மராஜாவுக்கு கிருஷ்ணபகவான் சொல்லத்தொடங்கினர். கிரே தாயுகத்தில் வசிஷ்ட கோத்திரத்தில் உற்பத்தியான மகாசால்ந் ங்களைப் படித்து தீர்ஜன சுமந்தன் என்னும் ஓர் பிராமணரிருந் தார் அவருக்கு பிருகுமகாரிஷியின் குமாரத்தி தீக்ஷாதேவியை வி வாகம் செய்துகொண்டார் பிறகு தன்னுடைய பர்த்தாவை பகவா னாக எண்ணிக்கொண்டு அந்தந்தகாலத்தில் செய்யவேண்டிய சிசு ஷைகளைச் செய்துகொண்டுவந்தாள். அப்படி இருக்குங்காலத் தில் அந்த அம்மாளுக்கு ஓர் பெண் பிறந்தது அந்த பெண்ணின் பெயர் சுசீலை என்று நாமகரணமிட்டார்கள் அந்தப் பெண்ணும் வ யதுவந்ததுமுதல் 12-வயதுவரையில் தாயைப்போல் தகப்பனுக்கு சிசுஷை செய்துவந்தாள். இந்தப் பெண் தாய் தகப்பன் வார்த்தை யை மீறி நடந்ததில்லை. தீக்ஷாதேவி இறந்துவிட்டாள். பிறகு சுமந்தனுக்கு பெண்ணை தக்க புருஷனுக்கு விவாகம் செய்துகொ டுக்கவேண்டுமென்ற கவலை மேலிட்டுகொண்டேயிருந்தது. சா ஸ்திரவிதிப்படி இரண்டாவது கர்க்கசி என்னும் பெண்ணை விவாக ம் செய்துகொண்டார் பர்த்தாவுக்கு தேவிரோதமாயும் கடின சித்தையாயும் சிசுஷைக்கெல்லாம் பிரதிகூலமாய் பிறருமாறுக செய்துகொண்டுவந்தாள் மேலும் சுமந்தன் செய்துகொண்டுவந்த தப த்தால் நூறொன்று கவுண்டினமகரிஷி மேற்படி சுமந்தன் வீட்டி ற்கு தானாய் வந்தார் அப்போது சுமந்தன தன் குமாரத்திக்கு வி வாகமாகாமலிருக்கும் விவரத்தையும் தன்னுடைய குறைகளையும் வரிப்பின் சாமர்த்தியக்கையுமுரைத்து மேலே கவுண்டினமகரிஷி மேலே பெண்ணை விவாகம் செய்துகொண்டார் இவருக்கு கொடுக்க வேண்டிய தீர்க்கா மேலே சுமந்தன் இரண்டாவது சாசகாரா கொடா மல தன் பர்த்தா இஷ்டத்திற்கு தேர்விரோதமாய் நடந்துகொண் டான மேலே சுமந்தன் தன்வசமிருந்த சில தனங்களையும் பொறி, பொரிமாவு முதலிய திண்பண்டங்களைக் கொடுத்து [illegible] னுடு சேர்த்து [illegible] நிலைகளுக்கு அனுப்பிவிட்டார் [illegible] கரிஷியும் அவர் [illegible] வண்டியேறி போகும் [illegible] யில் கவுண்டினமகரிஷி [illegible] தன் பெண்ணை வண்டியை [illegible] றங்க

வேண்டாமென்று சொல்லிவிட்டு ஸ்நானத்துக்குப் போய்விட்டார் நதியிலுண்டான தேவதா ஸ்திரீ கோஷ்டத்தைக் கேட்டுப்போய் பார்க்குமளவி லனேக ஜனங்கள் அனந்தவிரத கோம்பை கொண்டாடுவதைத் தெரிந்து தானும் அவ்விரதத்தை முடித்து தகப்பன் கொடுத்த பொரிமாலை நிவேதனம் செய்து தாரத்தை கழுத்தில தரித்துக்கொண்டு பாத்தா வருவதற்குள் வண்டியிலமர்ந்தவுடன் ஸ்நானத்துக்குப் போன தன்பர்த்தா வந்தவுடன் தகப்பன் கொடுத்த பொரிமாலையும புரித்துக்கொண்டு வீடு போய் சேர்ந்தார்கள் மறுநாள் சுவண்டிகமகரிஷிக்கு முன்னி நந்த வீடு அடையாளம் தெரியாமல் வீடு முழுதும் கொனமயமாயும நகைத்தின மிழுத்ததுபோலி நந்ததைப்பார்த்து நாம் ஸ்தலயாத்திரை செய்த பலனு அலலது தன்மனவியின் தபோபலனு யாதொன்றும தெரியவில்லையே இதுவும் எம்பெருமானிட கடாட்சமேதனிர வேரொன்றுமில்லை என்று நினைத்துக்கொண்டு சந்தோஷமாயிருந்தார்கள். ஒரு நாள் காலையில் ஓமம் நடத்த அக்கினிகொண்டு வரும் படி பரிசையைக்கி ஆக்யாபித்தார் கொண்டுவரும்போது தோரணம் தூக்கிலணிந்து கொண்டிருப்பது தெரிந்து கேட்டபோது நடந்த வாத்தமானத்தை ஒளியாமல்சொன்னதை அதை நம்பாமல் தோரணத்தை பிடுங்கி அக்கினியில் போட்டுவிட்டார் உண்மையை பர்த்தாவிடம் சொல்லியும அக்கினியில போட்டதை நினைத்து உரியில லவத்தாள் அதிலொரு பொறியிருந்து வீடு முழுதும பற்றிக்கொண்டதும் தனிர அன்று ராத்திரி கள்வர்கள் பொருள்களை அபகரித்துப்போய் விட்டார்கள் சுவண்டின மகரிஷி அதிமுதல் புத்திசுவாதீன மில்லாமல் போய்விட்டது பிறகு எம்பெருமான் கடாட்சத்தால் பிறகு சுய புத்தி வந்து அனந்தவிரத பத்மாபரை தூஷித்ததாலிப்படி தெரிந்து உண்டானதென்று அவரை யின்று சூரிய உதயமுதல் அஸ்தமனத்திற்குள் பாராயிட்டால் உயிரை மாற்றிக்கொள்வதென்று மன உருதிசெய்து ஆரண்ணியத்துக்கு புறப்பட்டு விட்டார் நதியில் பெருத்த மாவிருக்ஷத்தைக்கண்டு அதைக்கொத்தி சுயபுத்தியை பார்த்தீசுவரா வென்று கேட்டார். தான பார்க்கியில்லை பானமும் வருஷம் முழுதும் பூ, காய், கனி முதலிய உண்டாயிருக்கும படி முதலணுகாமலிருக்கிறது. இதின்

வர்த்தமானத்தையும் சுவாமியைக்கண்டால் தெரிந்து வரும்படி வேண்டிக்கொள்ள பிறகு சிலதூரம்போனபோது நிலத்தில் எதேஷ்டமாய் பசும் புல்லின் மத்தியில் ஓர் பசு நின்றுகொண்டு புல்லைத் தின்னுமல்நின்றுகொண்டிருந்தது அதைக்கண்டு அனந்தபத்மநாப சுவாமியை பார்த்தேயாவென்று கேட்டார் நான பார்க்கவில்லை சுவாமியைக்கண்டால் என வர்த்தமானத்தையும் தெரிந்துவரும படி வேண்டிக்கொள்ள பிறகு சிலதூரம் போகுமபோது தெப்பக் குளம இரண்டு கவரத்தினங்களால் கட்டப்பட்டதும் தெளிந்த நீருள்ள தடாகத்தின் அழகை வர்ணிக்கமுடியாது இதைக்கண்டு அனந்தபதமநாப ஸ்வாமியை பார்த்தேயாவென்று கேட்க நான் பார்க்கவில்லையெனறும சுவாமியைப்பார்த்தால் ஏன் ஒருவரும் ஜலபானம செய்யாமலிருக்கிற வர்த்தமானத்தையும் தெரிந்து வரு மபடி வேண்டிக்கொள்ள பிறகு சில தூரம் போனபோது கழுதை லையப்பார்த்து அனந்தபத்மநாப சுவாமியை பார்த்தேயாவென்று கேட்டார் நான் பார்க்கவில்லை சுவாமியைக்கண்டால விசேஷமா யுள்ள பசுபுல்லுமேய்த் தின்ன இடம கொடாமலையெரிந்து வரும்படி வேண்டிக்கொள்ள பிறகு சில தூரம் போனவுடன் ஓர் பாரீச யோசனமான பசும்புல்லின் மத்தியிலே நின்றுகொண்டி புசியாமல் நின்றுகொண்டிருந்தது அதைக்கண்டு அனந்தபத்மநாப சுவாமியைப்பார்த்தேயாவென்று கேட்டதில்தான் பார்க்கவில்லை என்றும் சுவாமியைக்கண்டால் தன்வர்த்தமானத்தை தெரிந்து வருமபடி வேண்டிக்கொள்ள இதறகுள் அந்தமனமாகும் சமய மம் சேரிட்டுவிட்டதென்று நர்மதையினுச்சியிலேரி அனந்தபத்ம நாபா அனந்தபத்மநாபா அனந்தபத்மநாபா வென்று மூன்றுதரம் கூப்பிடு மேவை வாராவிட்டால மலையினுச்சியிலிருந்து விழுந்துவிட நிடமனசேகரடி பிரவேசித்தார். தக்ஷணம் கிருஷ்ணபகவான பிரா மணவிருத்தரூபத்தோடு இவரைதட்டியிப்புசமழுத்துவந்து தன் சொரூபத்தை காட்டியபோது மிகவுண்டிக மகாரிஷி ஸ்தோத்திர பாடசெய்ய ஆரம்பித்தார். ஓம். ஹரி, நரி, கரஹரி, முராஹரி, அம்புஜாக்ஷரி, அச்சுதா, உச்சிதா, பஞ்சாயுதா, பாண்டவதூதா, லட்சுமிசரீதா, லீலாவிநோதா, கமலநாதா, ஆதிமூலகிருஷ்ணரி தா, அனந்தாக்ஷரி, அகிலாண்டகோடி பிரமாண்ட . பர

மானந்த முகுந்தா, வைகுந்தா, கோவிந்தா, பச்சைவண்ணா, கார் வண்ணா, கமலக்கண்ணா, ஜனார்த்தனா, கருடவாகனா, ராகூஸமர்த் தனா, காளிங்க நிர்த்தனா, சேஷசயனா, நாராயணா, பிரமபார யணா, வாமனா, கந்தகந்தனா, மதுசூதனா, பரிபூரணா, சர்வகாரணா, வெங்கட்ரமணா, சங்கடஹரணா, சீதாராமா, துளசிதரா, தாமோதரா, பீதாம்பரா மச்சகச்சவராகவதாரா, பலபத்ரா, பரமதயாபரா, பர மேஸ்வரா சங்குசக்ரா, ஸர்வேசுவரா, கருணாகரா, ராதாமனோ கரா, ஸ்ரீரங்கா, பாண்டுரங்கா, லோகநாயகா, பத்மநாபா, நிவ் வியசொரூபா, புண்ணிய புருஷா, புருஷோத்தமா, ஸ்ரீராமா, பரம் தாமா, நரசிம்மா, திருவிக்ரமா, பரசுராமா சகஸ்ரநாமா, பக்தவத்சலா, தேவாதிதேவா, ஆதிமூலா, வேணுகோபாலா மாதவா, யாதவா, ராகவா, கேசவா, வாசுதேவா, தேவ தே வா, ஆதி தேவா, மஹாதேவா, வசுதேவதநயா, மாயாவிலாச வைகுண்டவாசா, சுயம்பிரகாசா, வெங்கடேசா, ருஷிகேசா, சித் விலாசா, கஜபதி, நகுபதி, சீதாபதி, வெங்கடாசலபதி, மாயா, ஐயா, வெண்ணெயுண்டகிருஷ்ணா, அண்டர்கோன்தும்பி தூயா, உலக முண்டவாயா, நாடி உபாயா, பக்தர்கள் சகாயா, சதுர்ப்புஜா, கருடத்துவஜா, கோதண்ட அஸ்தா, புண்டரீகவரதா ஓ விஷ்ணு ஓ பரமாத்மா, பரமதயாளா, அமே கிருஷ்ணு, அமே கிருஷ்ணு வென்று பகவானைத்துதித்து நின்று தான் கண்ட ஐந்து விஷயத் தைப்பற்றி சுவாமியைக்கேட்டார்.

1. மா விருக்ஷத்தைப்பற் சொல்லுகிறார். முன் ஜென்மத் தில் ஓர் பிராமணன் அஷ்ட அயிஸ்வரியத்தோடிருக்க ஒருவருக் காகிலும் அன்னமிட்டாமலும் இன்னுமனேக கெடுதிகள் செய்த படியால் இந்த ஜென்மத்தில் மாவிருக்ஷமாயுற்பத்தியாய் மாகனி வகையராக்களை ஒருவரும் இச்சிக்காமலிருந்தது. உமமிடபார்வை எப்போது பட்டதோ அப்போதே நிவர்த்தியாய்விட்டதாய் சொல்லியருளினார்.

2. பசு விஷயத்தைப்பற்றி சொல்லுகிறார் முன் ஜென்மத் தில் ஓர் இராஜன் கல்லநிலங்களை எல்லாம் வாங்கிக்கொண்டு களர்

நிலங்களைக்கொடுத்தும் இன்னுமனேகவித யிடையூறுகள் செய்து வந்தமையால் இந்த ஜெண்மத்தில் பசுவாகப்பிறந்து பசும்புல்லுகள் எதேச்சையா யிருந்தும் புசியாமல் நின்றுகொண்டிருக்கும்படி கோரிட்டது. உம்முடைய பார்வை எப்போது பட்டதோ அப்போ தே நிவர்த்தியாய்விட்டதாய் சொல்லியருளினர்.

3. தடாகத்தைப் பற்றிச்சொல்லுகிறர் முன் ஜெண்மத்தில் இராஜா மந்திரி செய்த அக்கிரமத்தால் தடாகத்திலொ நுவரும் ஜலபானம் செய்யாமலிருக்கும்படி கோரிட்டது உம்முடைய பார் வை எப்போது பட்டதோ அப்போதே நிவர்த்தியாய்விட்டதாய் சொல்லியருளினர்.

4. கழுதை முன்ஜென்மத்தில் பிராமணனை மதியாமல் சதா நிந்தனை செய்தபடியால் இந்த ஜென்மத்தில் கழுதையாக பிறந்து எதேச்சையான பசும்புல்லுகளிருந்தும் அதன்மத்தியில் நின்றுபுசி யாமல் யிருந்தபடியால் உம்மிட பார்வை எப்போது பட்டதோ அப்போதே நிவர்த்தியாய்விட்டதாய் சொல்லியருளினர்.

5. யானை முன்ஜென்மத்தில் பெரியவாள்செய்த தருமத் தை எல்லாமழித்து வந்ததினால்ந்த ஜென்மத்தில் யானையாகப் பிறந்து எதேட்சையாய் பசும்புல்லுகளிருந்ததின் மத்தியில் நின்று கொண்டிருந்தும் புசியாமலிருந்தபடியால் உம்மிட பார்வை எப் போதுபட்டதோ அப்போதே நிவர்த்தியாய்விட்டதாய் சொல்லி யருளினர்.

6. தேவசொரூபமென்று சொல்லி இந்த அனந்தவிரதத் தை தேவர்களும் பூலோகவாசிகளும் தவராமல்அனுஷ்டித்து வரப் பட்டவர்களுக்கு தனகனவாகளை வஸ்துகளும் புத்திர சந்தான முடனோய்நொடியில்லாமலும் சதா சேஷமத்திலிருந்து பகவானிட பாதாரவிந்தம் சேருவார்களென்று தர்மராஜாவுக்கு கிஷ்ணபகவான் சொல்லியருளினர்.

இப்போது ஏற்பட்டிருக்கிற டெல்லிநகரமானது தர்மராஜா ஆண்டகாலத்தில் அதே அஸ்தினபுரமென்று யோர்ப்பட்டதாயிப் போதும் குறைவில்லாமல் சேஷமகாக்தோடிருக்கிறது.

அனந்தவிரதம் முற்றிற்று.

சிலமயம்

சாஸ்வதி விரதம்.

ஏபங்குண விசேஷனை விசிஸ்டாயாம சுபதினு, மம, தர்மார்த்த, காமமோக்ஷ, சதுர்விக பலபுருஷார்த்த சித்தியர்த்தம், சகல விக்ன, பாரங்க தத்துவ சித்தியர்த்தம் வருஷே, கர்த்தவ்யை தத் வாக்ஷர பிரயுக்தா ஸ்ரீ சரஸ்வதீ தேவதா முத்திஸ்யா, ஸ்ரீ சரஸ் வதீ தேவதா பிரிதியர்த்தம் கல்போகத்தா பிரகாரேண யாவச் சக்தி தியாண வாகனதி சோடசோபசார பூஜாம் கரிஷ்யததங் கத்துவேன கலசபூஜாங்கரிஷ்ய.

இதிசங்கல்பியா

கலசபூஜாங்குரியாத்

சூதமகாமுனிவர் சவுனகாதி ரிஷிகளைப்பார்த்து சொல்லப் போகிறார். மகரிஷிகளே இன்றைய ஒரு யுக்தமான விரதம் சொல் லப்போகிறேன் கேளுங்கள் புரட்டாசி மாதம் (ஆஸ்வயுஜ) சுக்கில பக்ஷம் பிரதமைமுதல் கொண்டு ஒன்பது ராத்திரி துர்க்காலக்ஷ்மி சரஸ்வதிகளை பூஜிக்க வேண்டிய அல்லது மூலநக்ஷத்திர முதற் கொண்டு பூஜைசெய்யவேண்டும். அப்படி செய்கிறதற்கு அசக்த ரையிருந்தால் நவமியன்றைக்காவது பூஜிக்கவேண்டும். இன் னும் இந்த விரதம் ஆசரிக்கப்பட்டவர்களுக்கு இகலோகத்தில் நிறைந்த அரிய்வரிய சமபன்னனுய் பரத்தில் துர்க்காலோகத்தைச் சேர்வார்களென்று சூதமுனிவர் சவுனகாதிரிஷிகளைப்பார்த்து மகா த்துமா முன்பு இந்த விரதத்தை யார் அனுஷ்டித்து சுகத்தை அடைந்த வர்த்தமானத்தை சொல்லுப்படி கேட்டுக்கொள்ள சூத முனிவர் ரிஷிகளே கிரேதா யுகத்தில் மகா தர்மவர்த்தனும் பிரஜை களைப் பரிபாலித்து வந்த சமர்த்தனும் அஷ்ட ஆயிஸ்வரியவந்தனு மாய்ஜகத் துரக பதாதி சேனைகளோடும் சுகித்துக்கொண்டிருந்த சுகேதன் என்னும் இராஜனொருவனிருந்தான். அவனுக்கு அவ னிட சவர்ணவதியாகிய சுவேதி என்ற பெண்ஜாதி ஒருவனிருந் தான் அப்போர்கொத்த பெண்ணுடன் அனுபவித்துக்கொண்டு

தர்மத்தை தப்பாமல் பிறஜா பாலனம்செய்துகொண்டுவந்ததில் க்ஷாமம் சத்துருபய முதலியது இல்லாமலிருந்தான் அப்படியிருக்க அந்த மகா ராஜனுக்கும் அவளுடைய பந்துக்களுக்கும் விரோத முண்டானதினால் யுத்தத்துக்கு தலைப்பட்டு சத்துருக்களிருக்கப் பட்டயிடங்களுக்குப்போய் கதா சக்திமுதலிய ஆயுதங்களால் யுத் தம்செய்தான். அதிகோரமான யுத்தத்தில் சுகேதன் சத்துருக்களால டிக்கபட்டவனஞ நிற்க முடியாமல் ஓடிப்போய்க்கொண்டிருந்தான் அப்போது போய்க்கொண்டிருக்கப்பட்ட சுகேதனி தன்பாரியைப் பார்த்து ஓகோ! தன்புருஷனுடன் செல்லவேண்டுமே தவிர காமிவ் விடமிருக்கத் தகாதென்று அந்த சுவேதனிப்பர்த்தாவையனுசரித் தப்போனள். இப்படி இருவரும் வெகுதூரம்போய் ஓர் வனந்தரத் தில் சேர்ந்துபசியால் வருததப்பட்டுக்கொண்டிருக்க சிலநாட்களுக் கெல்லாம் அந்த ராஜசிரேஷ்டனுக்கு வியாதியுண்டாய் நடக்கசக்தி யில்லாமலிருந்தான். அப்படியிருக்க அந்த ராஜபத்னி வெகு துக்க சாகரத்திலமுந்தி தன் புருஷனை தன்துடைமீதில்வைத்துக்கொண்டு துக்கப்பட்டு அந்த வனத்தில் சஞ்சரித்துக்கொண்டிருக்கையில் அங்கிரஷ மகரிஷி அந்த வனிதாவிடம் வந்து சொல்லத்தொ டங்கினர். ஓ ஸ்ரீமே உனக்கு கேஷம முண்டாகக்கடவது இரண்டு பேருமா யிருக்கப்பட்டவர்கள் யாரென்றும் எங்கே யிருக்கப்பட்டவர்களென்றும் யிந்த யிடத்திற்கு எவ்விதமாய் வந்தீர்களென்றும் ராஜ்யத்தையும் பந்து ஜனங்களையும் விட்டு தனிமையாக பசிபால் வருந்தி கொண்டு யிந்தவனத்தில் யேன் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறீர்களென்று கேட்க அந்த ஸ்ரீ பே சுவதற்கு கூட பசிபால் பேசக்கூட சக்தியில்லாமல் கண்ணீரில் தா ரை தாரையாய் நீர்த்துளி விழவும் விசனித்தழுக ஆரம்பித்தாள். அந்த முனிவர் ஓ! பெண்ணே விசனிக்காதே! லோகத்தில் மனுஷி யால் விசனித்தால் எந்த காரியத்தையும் சாதிக்கமாட்டார்கள் ஆகையால் உங்களுடைய துக்கங்களை நிவர்த்திக்கிறேன் சொல்லு மென்று துக்கத்தை சமனம் பண்ணி கேட்க சுவேதி சொல்லத் தொடங்கினள். முனி நாதா இவர் எல்லுடைய பர்த்தா இவர் ராஜிய பரிபாலனம் செய்துகொண்டிருக்கையில் சில ஜனங்களுக்

கெல்லாம் இவருக்கும் தாயாதிகளுக்கும் விரோதமுண்டாச்சுது. அவ்விருவருக்கும் மகா யுத்தம் நடந்தது. அந்த யுத்தத்தில் எதிரி வெகு பல பராக்கிரமசாலியாயிருந்து ராஜ்ஜியத்தை பிடிங்கிக் கொள்ள வெகு ஆயுதங்களைக்கொண்டு பிரயோகம் செய்ததினாலந்த பாணத்தினிட அடிபொருக்காமல் ராஜ்ஜியத்தின் ஆசையை விட்டு ஓடிவரும்சமயத்தில் நானும்கூடவந்துவிட்டேன் ஆகையால் ஓ மகாத்துமா திரும்ப எங்களுக்கு ராஜ்ஜியமும் புத்திர சந்தானமும் உண்டாகும்படி உபாயம் சொல்லும்படி அநேக விதத்தில் பிரார்த்திக்க அங்கிரஷ மகரிஷி சொல்லத்தொடங்கினார் ஓ புண்ணியவதி நீ என்னுடன் வரவேண்டும் வெகு சமீபத்திலிருக்கிற பஞ்சவடிதடத்தில் துர்க்காகேஷத்திரமிருக்கிறது அந்த இடத்தில் துர்க்காதேவி பிரசன்னமாயிருக்கிறது. அந்த மகாதேவியை பக்தியுடன் பூஜை செய்வாயானால் உனக்கு மறுபடி ராஜ்ஜியமும் புத்திரபவுத்திராதிகளும் சம்பத்துகளும் உண்டாகுமென்று சொன்னார். அந்த சுவேதி பர்த்தாவை முதுகிற்சுமந்து கொண்டு அங்கிரஷ மஹரிஷியுடன்போய் பஞ்சவடிதீரம் சேர்ந்தார்கள் அப்போ அங்கிரஷ மகரிஷி அந்த சுவேதினியைப்பார்த்து பர்த்தாவுடன் ஸ்நானம்செய்யச்சொல்லி அந்த பதிவிரதையும் ஸ்நானம்செய்து மடிவஸ்திரத்துடன்வந்து சுவேதினியால் துர்க்கா சரஸ்வதியை சோடச உபசாரங்களுடன் பூஜை செய்தாள் இப்படி சுவேதனி பாட்டிமை அல்லது பிரதமமுதல்கொண்டு ஒன்பது தினங்கள் பூஜைசெய்து பத்தாவது நாளில் உதய காலத்தில் எழுந்திருந்து ஸ்நானம்செய்து பாயசம் அன்னம் வகையாவுடன் துர்க்காதேவி எல்லாரித்திரத்தை சொல்லிக்கொண்டு ஹவனம் செய்தாள் அங்கிரஷ மகரிஷிக்கு தம்பதி பூஜைசெய்து அவாளுடைய அனுக்கிரகத்தில் தசதானாதி விதானங்கள் செய்து யிடைவிடாமல் விரதத்தை சம்பூரணம் செய்து அங்கிரஷமகரிஷியுடன் ஆசிரமத்துக்கு ராஜா சுவேதினியும்போய் சிலதினங்கள் வாசம்செய்து கொண்டிருக்கையில் துர்க்கா சரஸ்வதி விரதம் செய்த மகாத்மியத்தால் அந்த சுவேதினி கற்பத்தை தரித்து 10 வது மாதத்தில் ஒரு குமாரனை பெற்றாள். அங்கிரஷமகரிஷி அந்தப்பாலனுக்கு ஜாத

கர்மாதிகள் செய்வித்து சூரிய பிரதாபனென்னு பெயர்வைத்து 5-வருஷம் ஆகவே வித்தியாபியாசம் செய்வித்தார். அந்தப்பாலன் சகல சாஸ்திரவித்தைகளோ கற்றுக்கொண்டு எல்லனம் வந்தவுடனே மகரிஷியால் அனுக்ரகம் பெற்றுக்கொண்டு சத்துருக்கள் மேல் யுத்தத்திற்குப்போய் சகல ஆயுதங்களோடும் பிரயோகித்து ஜெயமடைந்து தன்னுடைய தேசத்தைப் பிடித்துக்கொண்டு தாய் தகப்பனையும் கூட்டிக்கொண்டு ராஜ்ஜியத்தில் வந்து சேர்ந்து சுகமாய் தேரி ராஜ்ஜிய பரிபாலனம் செய்துகொண்டிருந்தான். சுவேதினியும் பிரதிவருஷமும் துர்க்கா சகஸ்வதி பூஜை செய்தும். இகலோகத்திலும் புத்திர களத்திராதிகள் சம்பத்துகளுடன் சுகமாயிருந்து அந்தியத்தில் சுவர்க்கலோகம் சேர்ந்தார்கள். ஆகையாலிந்த விரதத்தை பிரம்மகூத்திரிய வைசிய சூத்திரர்களும்மேல்கண்டபலனை அடையவேதாடு கூட இந்தகதையை வாசிக்கப்பட்டவர்களும் கேட்டவர்களும் விரதத்தை அனுஷ்டிக்கப்பட்டவர்களுக்கும் சகலமான பாவங்கள் நிவர்த்தியாயும் இகலோகத்தில் சர்வசுகத்தை அனுபவித்து அந்தியத்தில் பரமபதம் சேர்வார்களென்று பெரியோர்களு மூறத்திருக்கிறார்கள்.

துர்க்கா சகஸ்வதி விரதம் முற்றிற்று.

சிந்தையைத்திகைப்பியாதேசெறிவுடையடிமைசெய்ய
வெந்தைநீயருளிச்செய்யாயாதுநான்செய்வதென்னே
சென்தியார்வேள்வியோவாத்தில்லைசிற்றம்பலத்தே
யந்தியும்பகலுமாடவல்லீணயலசுங்கொல்லோ.

கண்டவாதிரிதுநாளுகருத்தினுண்ணறனபாதங
கொண்டிருந்தாடிப்பாடிக்கூடுவன்குலிப்பினுலே
வண்டுபண்பாடுஞ்சோலைமல்குசிற்றம்பலத்தே
யெண்டிசையோடுமேத்தவிறவாயோமாறே.

பார்த்திருந்தடியமென்னைபரவுவனபாடியாடி
மூர்த்தியேயென்பனுன்னைமூவரின்முதல்வனென்ப
னேத்துவாரிடர்கடீர்ப்பாய்தில்லைச்சிற்றம்பலத்துக்
கூத்தாவுன்கூத்துக்காண்பான்கூடநான்வந்தவாறே.

சிவமயம்.

கேதாரீஸ்வரர் விரத சரித்திரம்.

காரணியகுந்தற்கவுரியியற்றிபதே
தாரணிரதகதையாண்படிக்கச்—சீரிலகும்
ஐந்துகரத்தந்திமுகத்தண்ணலடியர்க்கருளுங்
கந்தமலர்ச்செஞ்சரணேகாப்பு

ஆதிகாலத்தில் ஸ்ரீகயிலாயத்தில் நவரத்தினங்களாலியழைத்த ஓர் சிம்மாசனத்தின்மீது பரமேஸ்வரரும், பார்வதிதேவியும் வீற்றிருக்கையில பிரம்மா, விஷ்ணு, தேவேந்திரன் முதலான முப்பத்து முக்கோடி தேவர்களும், சாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள், அஷ்ட வசுக்கள், கின்னரர், கிம்புருடர், கெருட காந்தருவர், சித்தவித்தியாதரர், ஜெனகர், ஜெனகநந்தனர், ஜெனக்குமாரர், தும்புருநாதர் மற்றுமுண்டான தேவரிஷிகளும் இன்னும் இதர தேவர்களும், பிரதிதினம் வந்து பரமசிவத்தையும், பார்வதி தேவியையும் பிரதக்ஷணம் வந்து நமஸ்காரம் செய்துக்கொண்டுபோவார்கள். இப்படியிருக்க ஒருநாள் பிறங்கி என்ற ரிஷி ஒருவர் மாத்திரம் பார்வதி யம்மனை புறம்பாகத் தள்ளிவிட்டு ஈஸ்வரரை மாத்திரம் பிரதக்ஷண நமஸ்காரஞ்செய்து ஆனந்தக்கூத்தாடினார். அப்பொழுது நூநீ பார்வதி அம்மனுக்கு மஹாகோபமுண்டாய் விஷ்ணு, ருத்திரன், தேவேந்திரன், முதலாகிய முப்பத்துமுக்கோடி தேவர்களும், சாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் முதலானவர்கள் ஈஸ்வரரையும், கம்மையுங் கண்டு வணங்கிப்போவார்கள், இந்த பிறங்கி மாரிஷி வந்து நம்மைப் புறப்பாகத் தள்ளிவைத்து ஈஸ்வரரை மாத்திரம் நமஸ்கரித்து நின்றதென்ன வெகு கோபமுண்டாகி பரமேஸ்வரி கேட்க பரமேஸ்வரர் சொல்லுகிறார். அவன் பிரார்த்தியத்தைக் கோரினவனல்ல. மோக்ஷத்தைக் கோரினவனாகையால் எம்மை மாத்திரம் பிரதக்ஷண நமஸ்காரஞ் செய்தானென்றார். அப்பொழு

முது பரமேஸ்வரிக்கு கோபமூண்டு ஓப் பிரிங்கிமாரிஷியே உன்னிட தோத்திலேயிருக்கிற இரத்த மாங்கிஷம் கம்முடைய கூறுச் சுதே அதை நீ வைத்திருக்க தேவையில்லே கொடுத்துவிடு என்று சொண்ணமாத்திரத்தில் உதரிவிட்ட பின்பு இரத்தமாம்சம் போய் விட்டபடியால் எழுந்திருக்கமாட்டாமலிருப்பதை ஈஸ்வரர் தெரிந்து ரிஷியைக் கேட்க நடந்த வர்த்தமானத்தைச் சொண்ணவுடன் ஒரு தெண்டுகோல் கொடுத்து எழுந்தருளச்செய்தார். பிதன்பேரில் பீல்வரி கோபங்கொண்டு நீர் தானு உபேட்சை செய்யலாமா வென்று கோபித்து கைலாயத்தை விட்டு பூலோகத்திற்கு வந்து வால்மீகரிஷி சஞ்சரிக்கிற பூங்காவனத்தின் ஓர் விருக்ஷத்தினடியில் எழுந்தருளிபிருந்தகாலத்தில் மேற்படி ரிஷி பார்த்து நடந்த வர்த்தமானத்தை தெரிந்துகொண்டு தன் ஆசிரமத்துக்கு அழைத்துப் போய் ஓர் விரதிபிலமர்த்தினர். வால்மீக ரிஷியைப் பார்த்து இந்த பூலோகத்தில் நான் ஒரு விரதம் அனுஷ்டிக்கவேண்டும். நானமாய் மேலான விரதமொன்றிருக்குமானால் அதை எனக்கு நீர் சொல்லவேண்டுமென்று கேட்க வால்மீகரிஷி தொழுது லோகமாதாவே இந்த பூலோகத்தில் ஒருவருக்கும் தெரியப்படாத ஒரு விரதமுண்டு. அந்த விரதத்திற்கு கேதாரி ஈஸ்வர நோன்பென்று பெயர். அதை இதுவரையில் யாரும் அனுஷ்டிக்கவில்லே. நீர் அந்த விரதத்தை அனுஷ்டித்தால் இஷ்டசித்தியாகுமென்று சொன்னர். அதை பரமேஸ்வரி கேட்டு அந்த விரதம் எக்காலத்தில் எவ்விதமாக அனுஷ்டிக்கிறது. எனக்கு நன்றாய் நீர் தெரியப்படச் சொல்லவேண்டுமென்று கேட்க வால்மீகரிஷி சொல்லுகிறார் புரட்டாசிமாதத்தில் சுக்கிலபட்சத் தசமி துடங்கி ஐப்பசிமாதம் கிருஷ்ணபக்ஷம் தீபாவளி அமாவாசை வரைக்கும் இருபத்தொருநாள் பிரதினம் ஸ்நானஞ்செய்து பரிசுத்த வஸ்திரந்தரித்துக்கொண்டு ஆலாவிருட்சத்தினடியில் மண்ணினால் சிவலிங்கம் பிடித்துவைத்து பீல்பராராக பாவித்து அபிஷேகம் செய்து விபூதி, சந்தனம், அட்சதை, புஷ்பஞ்சாத்தி தூப தீப நைவேத்தியஞ் செய்து வெல்ல உருண்டை, சந்தன உருண்டை, மஞ்சளுருண்டை, அதிரசம், தேங்காய்பழம் வகையாரா, வெற்றிலைபாக்குடன் நைவேத்தியஞ்செய்து அர்ச்சித்து நமஸ்காரம் செய்து இருபத்தோரீழையிலே ஒரு

கயிரை முறுக்கி ஒரு முடியாக இருபத்தொருமுடி முடிக்க தினந் தினம் உபவாசமிருந்து கைவேத்தியம் செய்க பக்ஷணத்தைப் புசித்த இருபத்தோராநாள் தீபாவளி அமாவாசையினல்லைக்குப் பரமேஸ்வரர் ரிஷபாரூடராய் எழுந்தருளிவந்து காக்ஷி கொடுத்து கேட்ட வரத்தை கொடுப்பரென்று வால்மீகிரிஷி சொன்னதைக் கேட்டு யிஸ்பரி அனுஷ்டித்தகில அந்தப்படி ரிஷபவாகனரூடராய் பிரமா, விஷ்ணு, தேவேந்திரன் முதலானவர்களுடன் வந்து உமக்கு வேண்டிய வரங்கள் என்னவென்று கேட்க உம்மிட சரீரத்தில் அர்த்தபாகம் வேண்டுமென்று கேட்க அப்படியே அர்த்த நாரீஸ்வரராய் காக்ஷிக் கொடுத்து இன்றுமுதல் இந்த விரதத்தை யாதாமொருவர் அனுஷ்டித்தாலும் அவர்களுக்கு வேண்டிய பாக்கியத்தைக் கெடுப்பரெமன்று சொலலி கயிலாயத்துக்கு எழுந்தருளினர். அப்போக்கொற்ற கேதாரி விரதத்தை தேவதா ஸ்ரீகன் முதலானேரும் அனுஷ்டித்து வேண்டிய வரங்களைப் பெற்றார். பூலோகத்தில் கெங்கைகரையில் தெய்வகன்னியர்கள் முன் சொல்லிய விதிப்படி மண்ணினல் லிங்கம் செய்த விரதத்தை பூர்த்தி செய்வதை, ஓர் ராஜபுத்திரிகளிருவர்கள் அவ்விடம் வந்தார்கள், ஒருத்தி பேர் புண்ணியவதி, ஒருத்தி பேர் பாக்கியவதி, அந்தப் பெண்களுக்கு விவாகமில்லை. தெய்வகன்னிகைகள் நோன்பு நோற்றதைப் பார்த்து கேட்க, விரதத்தின் சங்கதிகளைச் சொல்லி இருபத்தொருநாள் செய்கிறதற்கு முடியாவிட்டால் சதுர்த்தசியிலேஸ்நானம்செய்து ஆலாவிருட்சத்தின்மேற் மணலினல் கேதாரியீஸ்வரரை பாவனை செய்துவைத்து பூஜை செய்து தீபதூபம் கொடுத்து அதிரசம் 21, வெல்லஉருண்டை 21, சந்தனஉருண்டை 21, மஞ்சளுருண்டை 21, பாக்கு 21, வெற்றிலை 21 இருபத்தொரு பிழையிலை கயறு அதிலே இருபத்தொரு முடி முடிந்துவைத்து நைவேத்தியஞ் செய்து தீபதூபங்கொடுத்து அர்ச்சனை செய்து நமஸ்காரஞ் செய்க அதி பண்ணினல் அவர்களுக்கு வேண்டிய பாக்கியத்தை கொடுப்பரென்று சொல்ல இரண்டு கன்னியர்கள் தங்கள் குறைகளையெல்லாம் தெய்வ கன்னியர்களிடம் சொல்ல அவர்களிந்த நோன்பை நோக்குங்களென்று பலவகையிலும்

சொல்லி அவர்களுக்கு தூவில்லாமல் ஆலம்விழுதை வாங்கி 21 முடி முடிந்து தாங்கள் பூஜை செய்வதுடனே கூடவைத்துப் படைத்து அந்த நோம்பு தோரணத்தை இவர்கள் கையிலே கொடுத்து யிக்கப்படி வருஷந்தோறும் அனுஷ்டித்துவரும்படி ஆசீர்வாதம் செய்துவிட்டுப்போனார்கள். இரண்டுபேரும் தங்கள் வீட்டுக்கு வரும்போது தங்கள் வீடு மாடமாளிகையும் சகல ஐசுவரியமுமாக யிருக்கக்கண்டு மயங்கும்போது அவர் தகப்பனார் வந்து பெண்களை அழைத்துப்போய் உபசரித்துவரும்போது இராசகிரியிலிருந்து ஒரு ராஜா புண்ணியவதியை வெகு ஆடம்பரத்துடனே விவாகம் செய்துகொண்டு போனபிற்பாடு அழகாபுரிபட்டணத்து இராஜகுமாரன் வந்து பாக்கியவதியை கலியாணம் செய்துகொண்டுபோனான். பாக்கியவதி தன்னுடைய துர் அதிர்ஷ்டத்தினாலே கோன்பை மறந்து தோரணத்தை அவளைப்பற்றலின்மீது அழித்துப்போட்டுவிட்டாள் அப்படி மறந்துபோனபடியால் வேறுராஜா சதுரங்கசேனையுடன் வந்து அழகாபுரிபட்டணத்தை கொள்ளையடித்து ராஜ்ஜியத்தை பிடித்துக்கொண்டு தரித்திரமவந்து சாப்பாட்டுக்கில்லாமல் அவரைச்செடியண்டை வந்து காய்களைப் பரித்துதிருவிசெய்துகொண்டிருப்பார்கள் பாக்கியவதி எண்ணுதவெல்லாம் எண்ணி இராஜகிரியிலே வாழுகிற தன் தமக்கையிடம் தன் குமாரனுக்கு கட்டமுது கொடுத்து அனுப்பி சில திரவியம் வாங்கிவருமபடி அனுப்பினாள். அந்தப்படி அங்கு சென்று தங்கள் வர்த்தமானங்களையெல்லாம் சொல்ல அவள் விசனப்பட்டு திரவியம், ஆபரணம், வஸ்திரங்களுடன் முடிப்புக்கட்டி அனுப்பிக்கொடுத்தாள், அதை வாங்கிக்கொண்டு சிலதூரம்வந்து ஒரு குளக்கரையிலே மூட்டையை வைத்துவிட்டு கட்டமுது சாப்பிடுகையிலே கருடன் மூட்டையை எடுத்துக்கொண்டு போய்விட்டது. மறுபடி பெரியதாயாரிடம் நடந்த சங்கதியைத் தெரிவித்தான். அப்படியாவென்று மறுபடியும் சில திரவியங்களைக் கட்டிக்கொடுத்தாள் வழியில் திருடன் அடித்து பிடிவைத்துக்கொண்டான். மறுபடி பெரியதாயாரிடம் போய் தாங்கள் செய்த பாபமென்னவோவென்று துக்கப்பட்டான். இப்போது கொண்டுபோன திரவியத்தைத் திருடன் கொண்டுபோனானென்று சொல்லக்கேட்டு உங்கள் தாயார் கோபா

ரீஸ்வரி விரதத்தை அனுஷ்டிக்கிறாளா இல்லையாவென்று கேட்க அந்த நோம்பு இப்போது நோற்கிறதில்லை. முன்னே நோற்ற கயிற்றையும் அவளைபபந்தலின்மேல் போட்டுவிட்டாள். அன்று முதல் இப்படி வந்தாப்போலே காணுதென்று சொன்னன். அப்படியாவென்று அற்பசிமாதம் வரும்வரையிலும் பிள்ளையை வைத்திருந்து தான் நோற்கிற நோன்புடனே பாக்கியவதிக்கும் ஒரு நோன்பு வைத்து நோற்று அந்த நோன்புக்கயிறும், பலகாரமும், பாக்கு, வெற்றிலை, மஞ்சள் இன்னும் சில ஆடை ஆபரணங்களுடன் சில சேவகர்களையுங் கூட்டி இந்த நோன்பை விடாமல் நோற்கச்சொல்லி சில புத்தியுஞ்சொல்லி அனுப்பினாள். வழியிலே வரும் போது முன்னே பறித்துப்போன திருடன் திரவியத்தையும் கொண்டுவந்து கொடுத்தான். கருடனும் மூட்டையைப் போட்டு உன்தாய் விரதம் நோற்காமல் விட்டுவிட்டதினாலே இப்படி வந்தது இனிமேல் பயபக்தியுடனே நோன்பு நோற்கச்சொல்லென்று ஒரு சப்தமுண்டாச்சுது. அது கண்டு இந்த பிள்ளை ஆச்சரியப்பட்டு சந்தோஷத்துடனே தன் வீட்டுக்கு வந்து கொண்டுவந்த தன முதலிய நோன்புக் கயிறையும் கொடுத்து நடந்த வர்த்தமானம் முழுமையும் தன் தாயிடம் சொல்லியபின் தான் ஆங்காரத்தினாலே கெட்டேன் என்று ஸ்நானம் செய்து கேதாரீசுவரரை நமஸ்காரஞ் செய்து கயிற்றைக் கட்டிக்கொண்டாள். அந்த நாழிகைக்கே தங்கள் பட்டணத்தைக் கைப்பற்றிய ராஜா வந்து தங்கள் பட்டத்தையும் சகல ஆபரணங்களுடன் ஆனேசேனைகளையும் ஒப்புவித்து பகுதியுங் கொடுத்துப் போயனிட்டான். ஆகையினாலே இக்கேதாரீஸ்வரர் நோன்பு யாதாமாருவர் தப்பாமல் செய்துவருகிறார்களோ அவர்களெல்லாம் புண்ணியவதி பாக்கியத்தைப்போலவே இம்மையிற் பாக்கியத்தை அனுபவித்து மறுமையில் மோக்ஷத்தையும் அடைவார்களென்று தர்மபுத்திர மஹாராஜனுக்கு நாரதமகாமுனிவர் சொல்ல அப்படியே தர்மபுத்திரமகாராஜாவும் அனுபவித்து சத்துருசெயஞ் செய்து நாடு ராச்சியமும் பெற்று மோக்ஷமடைந்தார்.

கேதாரீஸ்வரர் விரதம் முற்றிற்று.

மதனத் துவாதசி விரதம்.

ஓர் காலத்தில் சூதபுராணிகர் சவுநகாதிமகரிஷிகளைப் பார்த்து சொல்லுத்தொடங்கினர். ஓ முனீஸ்வர்களே மகா சிரேஷ்டமான உத்தமமாயிருக்கப்பட்ட விரதத்தைக் சொல்லுகிறேன். ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியானவர் ஓர்காள் சத்தியபாமையோடு வனத்தில் சஞ்சாரம்செய்து பிருந்தாவனமென்கிற ஓர் சன்னதிக்குப் போனார்கள். அந்தசமயத்தில் நாரதமகாமுனி கிருஷ்ணமூர்த்தியைத் தரிசனம் செய்துகொள்வதற்காக வந்து பிருந்தாவனம் சென்றார். அந்த சமயத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் நாரதமுனிக்கு அமிர்த உபசாரம் செய்து ஓ நாரதமுனிவரே உலகத்திலனேகமான ஆச்சரியங்களுண்டே நீர் லோகசஞ்சாரியானதால விசேஷங்களைச் சொல்லும் எனக்கேட்டார். ஏ யசோதாபுத்திரனே நானிப்போதுதான் பிரமலோகத்திலிருந்து வருகிறேன். பிரம்மாவானவர் தன்னுடைய பத்தினியாகிய சரஸ்வதி தேவிக்கும் காசி சிரேஷ்டமாயிருக்கப்பட்ட மஹா உத்தமமான விரதத்தை உபதேசம் சொன்னார். அந்த விரதத்தின் மகாத்மியத்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள் இந்த விரதத்தை ஆசிரியத்தவர்களுக்கு சர்வ சமயத்துகளும் புத்திரபவுத்திராதிகளும் உண்டாகுமென்று சொன்னார். அந்த விரதமாகப்பட்டது சுக்கிலபக்ஷம் ஏகாதசி முதற்கொண்டு உபவாசமிருந்து மனஸ்தத்திடப்படுத்திக்கொண்டு பிருந்தாவனபூஜை நடத்திவரவேண்டியது. அந்த யிடத்தில் பஞ்சவர்ண கோலத்துடன் புஷ்பாதிகளாலலங்கரித்து தீப தூப சோடசஉபசாரமும் ஐந்து விதகைவேத்தியங்களுடன் பூஜை செய்யவேண்டியது. மேற்படி சுக்கிலபக்ஷம் ஏகாதசி முதல் ஒரு மாதத்திற்கு செய்து வந்து மறுதினம் துவாதசி உதயத்தில் புஷ்பூஜை செய்து ஓருபடி அரிசி எடுத்து மாவாக்கி மூன்றுபாக மாவை நைவேத்தியம்செய்து ஒரு பாக மாவை சுத்தி செய்து அலங்கரித்து வைத்திருக்கும் உரலில் மேற்படி மாவைப்போட்டு பசும்பால் ஊற்றி ஐந்து சுமங்கலியைக் கொண்டு ஐந்து கரும்பினால் பகவத்தியானம் செய்து அவளவாள்

மனோபிஷ்டப்படி பிடிக்கவேண்டியது அதிலிருந்து தெளிக்கும் துளி ஒவ்வொருபெண்கள் பேரிலேத்தனை விழுகிறதோ அத்தனை தரம் சுவர்க்கலோகத்தில் வாசமென்பதாக நாரத மகா முனிவர் சொன்னார் கிருஷ்ணபகவான் நாரதரைப்பார்த்து பூர்வகாலத்தில் நித்த விரதத்தை செய்தார்களே! அவர்கள் எனனபலனை அடைந்தார்களென்று கேட்டார். ஓ தேவரீ புத்திரனே பூர்வகாலத்தில் வடதேசத்தில் வேத சாஸ்திரங்களோப்படித்து தேர்ந்தவராண தேவதத்தன் என்ற பிராமணன் ஒருவனிருந்தான். அவனுக்கு சந்ததியில்லாமலிருந்ததினால் விஷ்ணுவைக்குறித்து தபசுசெய்துங் கொண்டிருந்தார் மகாவிஷ்ணு விருத்த பிராமணரூபமாய் சமீபத்தில் வந்து ஏன் தபசு செய்கிறாய் என்று கேட்டார். பகவானை நமஸ்கரித்து ஓ ஜகன்னாதா தங்களுடைய தரிசனத்தால் என்பாவம் நிவர்த்தியாயிற்று தபசுநிறைவேறி கோரிக்கையை நிறைவேறப்பார்த்திருக்கிறார் ஓ தேவதத்தா நீ சோகமும் வருத்தமும் கேளென்று சொன்னதினாலேபோல் வாசஸ்தீவர் புத்திரனில்லாதவனுக்கு கெதி மோக்ஷமு இல்லை என்று ஏற்பட்டிருக்கிறது. புத்திரபலன் வேண்டுமென்று கேட்டார். பகவான் ஆயுசுயில்லாதகுழந்தை வேணுமா மங்களமில்லாத குழந்தைவேணுமா இதற்கு இரண்டிலொன்றை கேட்கும்படி சொன்னார். தன்பத்தினி வீட்டிலிருப்பதால் தெரிவித்து பதில் சொல்வதாகசொல்லி விடைபெற்றுக்கொண்டு தன்வீட்டிற்குபோய் நடந்த வர்த்தமானங்களை எல்லாம் சொன்னதில் புத்திர ஸ்தானம் உண்டானதே போதுமென்று அற்ப ஆயுசு உள்ள பிள்ளை பிறந்தாலும் போதுமென்று சொன்னபடியே பகவானிடம் வந்து தெரிவித்ததின்பேரில் பகவான் ஓர் பெண்ணைகொடுத்து விட்டு அந்திரனுபாணமாய் போய்விட்டார் தேவதத்தன் பாரியாருடன் வீட்டிலிருக்கும்போது கெற்பம் தரித்து ஓர் பெண் பிறந்தது அந்தப்பெண் நாளுநாள் தேஜஸ்ஸோடு கூடி வாழ்ந்துகொண்டிவரும்பொழுது அந்தப்பெண்ணுக்கு விவாஹம் செய்துவைத்து 2, 3-மாதத்திற்குபிறகு விதவை ஆய்விட்டாள் தாய் தகப்பனிறந்து விட்டார்கள். இவள் ஒருத்தியே தனியாயிருந்தாள். பிச்சக்காரனைக் கண்டால் நாஸ்தி நாராயணனென்ற நாமதேயத்தையே சொல்லிக் கொண்டு வந்தாள் பகவான் ஓர் நாளிவளை பரீக்ஷிக்க இவள் வீட்

டிலுள்ளவர்களிடத்தில் பிட்சைக்கு கேட்டார். அப்போது அங்கப்பெண் நாஸ்தி நாராயணனென்று சொன்னாள். பகவான்பார்த்து தர்மம் கொடாமல் அவமானப்படுத்தி நாஸ்தி நாராயணனென்று சொல்லுகிறாயே உனக்கு தர்மமாயென்று சொன்னார் அந்தப் பெண் அதிக கோபத்துடன் கண்கள் சிவக்க சமயலறையில் போய் சாணித்தணியை எடுத்து வந்து சுவாமியின் பிட்சாபாத்திரத்தில் போட்டாள் அந்த தணியை எடுத்துக்கொண்டு வந்துவிட்டார். அந்த தணியில் எனை யிருக்கிறது என்று பார்த்தார் ஓர் துவரையிருக்கக் கண்டு அதை ஓரிடத்தில் முளைக்க போட்டுவிட்டு அந்தப்பெண்ணுக்கு சாபம் கொடுத்துவிட்டு வைகுண்டத்திற்கு போய்விட்டார் அந்தத் துவரை செடியாய் பூபிஞ்சுடன் இருக்கும்போது இந்தப்பெண் மரத்தடியிலடைந்து இந்த செடிக்கு அடியில் புழுவாய்ப்பிறந்து அந்த இலை முதலியதுகளை தின்றுகொண்டிருந்தாள் ஓர் காள் லட்சுமி சமேதராய் பகவான் இந்த செடிக்கு அருகில் வந்து புழுவைப்பார்த்து சவுக்கியமாக இருக்கிறாயாவென்று கேட்டார் புழுவானது சுவாமியைப்பார்த்து தங்களுக்கு தெரியாதது என்ன யிருக்கிறது. ஜெகதீசாவென்று விசனத்துடன் பகவானைப் பார்த்து ஓ ஆதிகாரணா சர்வபரிபூரணா அனந்த சயனா கமலநயனா பாண்டுரங்கா ஸ்ரீ ரங்கா நாராயணா ஓ வாசுதேவா தேவாதிதேவா ஆதிதேவா மகாஜ்வாலா மாதவா யாதவா ராகவா கேசவா ஓ பகவானே நான் என்ன குறை செய்தேனே என்றுயிவ்விதம் தோத்திரஞ்செய்யத் தொடங்கினாள். மகாலட்சுமி இவளுக்கு இந்த ஜென்மம் இப்படி வந்ததற்கு காரணம சுவாமியைக்கேட்க அவர் சொல்லுகிறார், விதவையாயிருந்த காலமுதலிவள் செய்துவந்த அக்கிரமதோடு பிச்சை கொடாமலே நாஸ்தி நாராயணனென்று சொல்லிவந்தாள் நான் அதை பரீட்சித்தது இவளுக்கு இம்மாதிரி ஜனனம் கிடைத்ததென்று சொல்ல அந்தம்மாள் இவளை யிக்க ஜென்மத்திலிருந்து நீக்கி வைகுண்டத்திலிருக்குப்படி செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தாள். மதனத்துவாதசி விரதம் 108-ல் ஒரு பாகம் கொடுத்தால் உடனே நீவாத்தியாகுமென்று சுவாமி சொன்னார். உடனே புழுவுக்கு ஸ்திரீரூபமாய்விட்டது சுவாமிக்கும் அம்

மனுக்கும் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து ஸ்தோத்திரம்செய்து ஓ லோகமாதா நானிந்த விரதத்தை செய்து வருகிறேன் எனக்கு உபதேசிக்கவேண்டுமென்று லோகமாதாவைக் குறித்து ஸ்தோத் திரம செய்து உபதேசம் பெற்றுக்கொண்டாள். கார்த்திகைமாதம் சுக்கில பக்ஷம் யேகாதேசியன்று உபவாசமிருந்து துளசி பிரதா வன சமீபத்தில்போய் கோலமுதலியன போட்டு சோடசஉபசார ஆலங்கரித்து ஏகாதசி ராத்திரி தூங்காமல் பகவானை ஸ்மரித்துக் கொண்டு மறுதினம் காலையில் ஸ்நானம்செய்து ஒருபடி மாவை மூணுபாகமாக்கி ஒரு பாகத்தை நெய்யேத்தியத்துக்கும ஒரு பாக தத்தை உரலில் போடவும் மற்றொரு பாகத்தை தானதுக்கும் இவ்விதமாய் பூஜைசெய்து உரலில் போட்ட மாவில் பசும்பால் விட்டு இருந்து சுமங்கலியைக்கொண்டு பகவத் நிபானத்துடன் இடித்து பிராமணபூஜைசெய்து தக்ஷிணை தாம்பூலம் கொடுத்து நைவேத்தியங்கள் செய்து இந்த விதமாய் ஐந்து வருஷகாலம் பூஜை செய்து உத்யோபனம் செய்து வைத்தால் நாங்கு வைகுண்ட பதவி உண்டாகுமென்று லட்சுமி சொன்னாள் இந்த விரதத்தை பூலோகத்தில் யார் யார் அனுஷ்டித்து வருவார்களோ அவரவர் கள் மனோபீஷ்டத்தின்படி சிததியுண்டாவதுடன் பகவத் கடாட் சத்தினால் புத்திரசந்தானமுதலிய சகல சம்பத்துகளும் உண்டா குமென்று பகவான் சொல்லியருளினார்.

திருப்பிரமபுரம்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

திருத்தாளச்சதி

பண்-யாழக்குறிஞ்சி (1-ம் திருமுறை).

திருச்சிற்றம்பலம்.

பந்தத்தால் வந்தெப்பால் பயின்றுநின்றுவும்பரப்
பாலேசேர்வாயேனேர்கான் பயில்சணமுனிவர்களுஞ்
சிந்தித்தேவந்திப்பச் சிலம்பின்மங்கைதன்னோடுஞ்
சேர்வார்காணுணீர்கயிலத்திசழ்தருபரிசதெலாஞ்

சந்தித்தேயிந்தப்பாசனங்ணின்றுதங்களுற்
ருமேகாண்வாழ்வாரத்தகவுசெய்தவனதிடம்
கந்தத்தாலெண்டிக்குங்கமழ்ந்திலங்குசந்தனக்
காடாபூவார்சிர்மேவுங்கழுமலவளாகமே. (1)

பிச்சைக்கேயிச்சித்துப்பிசைந்தணிர்தவெண்பொடிப்
பீடார்நீடார்மாடாரும்பிறைநுதலரிவையொடு
முச்சத்தானச்சிப்போருடர்ந்தடர்ந்தவெங்கணே,
ரூராஹூராளீவீதிப்பயில்வொடுமொழிசெயிசை
வச்சத்தானச்சுச்சேர்வடங்கொள்கொங்கைமங்கைமார்
வாராரேரோமாலாகும்வசிவலவனதிடம்
கச்சத்தான்மெச்சிப்பூக்கலந்திலங்குவண்டினங்
காரார்காரார்ளீசாலைக்கழுமலவளாகமே. (2)

திங்கட்கேதும்பைக்கேதிரற்றிலங்குமத்தையின்
சேரேசேரேரோகச்செறிதருசுரந்திபோ
டங்கைச்சேர்வின்றிக்கபடந்துடைந்தவெண்டலைப்
பாலேமேலமாலேபடர்வுறுமவனிறகும்
பொங்கப்போர்ஞசைசேர்புயங்கமங்கள்கொன்றையின்
போதார்காரேதாமேவிப்புரிதருசடையனிடம்
கங்கைக்கேயும்போற்பார்கலந்துவருதபொன்னியின்
காலேவாராமேமேலபாய்கழுமலவளாகமே. (3)

அண்டத்தாலெண்டிக்குமமைந்தடங்குமண்டலத்
தாறேவேறேவானுள்வாரவரவரிடமதெலா
மண்டிப்போய்வென்றிப்போர்மலர்ந்தலர்தவப்பரு
மாறேலாதார்தாமேவும்வளமிகுபுரமெரிய
மூண்டத்தீதவர்ந்திட்டேமுடிந்திடிந்தவிஞ்சுசூழ்
மூவாமூதூர்மூதூராமுனிவுசெய்தவனதிடம்
கண்டிட்டேசெஞ்சொற்சேர்கவின்சிறந்தமந்திரக்
காலேயோவாதார்மேவுங்கழுமலவளாகமே. (4)

திக்கிற்றேவற்றற்றேதிகழ்ந்திலங்குமண்டலச்
சீரார்வீரர்போரார்தாரகனுடலவனதிரே

புக்கிட்டேவெட்டிட்டேபுகைந்தெழுந்தசண்டத்தீப்
போலேபூரீத்திகான்மீப்புணர்தருமூயிர்கடிறஞ
சொக்கத்தேநிர்த்தத்தேதொடர்ந்தமங்கைசெங்கதத்
தோடேயாமேமாலோகத்துயர்கூபவனதிடங்
கைக்கப்பாயுக்கத்தேதகனன்றுமிண்டுதண்டலைக்
காடேயோடாவூரேசேர்கழுமலவளாகரே. (5)

செற்றிட்டேவெற்றிச்சோர்திகழ்ந்ததும்பிமொய்ம்புருஞ்
சேரேவாராரீள்கோதைத்தெரியிழைபிடியதுவா
யொற்றைச்சோர் முற்றற்கொப்புடைத்தடக்கைமுக்கண்மிக்
கோவாதேபாய்மாதானத்துறுபுகர் முகவிறைபைப்
பெற்றிட்டேமற்றிப்பார்பெருத்துதிக்கதுக்கழும்
பேராநோய்தாமேயாமைப்பிரிவுசெய்தவனதிடங்
கற்றிட்டேயெட்டெட்டுக்கலைத்துறைக்கரைச்செலக்
காணுதாரேசேராமெய்க்கழுமலவளாகரே. (6)

பத்திப்போர்வித்திட்டேபரந்தவைப்புலன்கள்வாய்ப்
பாலேபோகாமேகாவாப்பகையறுவகைகிணையா
முத்திக்கேவிக்கத்தீகழடிக்குழுங்குணங்கள்வாய்
மூடாவூடாநாலந்தக்கரணமுமொருநெறியாய்ச்
சித்திக்கேயுப்த்திட்டிக்திகழுந்தமெய்ப்பரம்பொருள்
சேர்வார்தாமேதாஞச்செயுமவனுறையுமிடங்
கத்திட்டோடாசட்டங்கங்கலந்திலங்குறுபொருள்
காலேயோவாதார்மேவுங்கழுமலவளாகரே. (7)

செம்பைச்சேரிஞ்சிச்சூழ்செறிந்திலங்குபைம்பொழிற்
சேரேவாராவாரீசத்திரையெறிகரிறைவ
னிம்பர்க்கேதஞ்செய்திட்டிருந்தமன்பயின்றவெற்
போர்பூநேரோர்பாதத்தெழில்விரலவணிறுவிட்
டம்பொற்பூண்வென்றிக்தோளழித்துவந்தனஞ்செய்தாற்
காராரூர்வாள்வாணுளன்றருள்புரிபவனதிடங்
கம்பத்தார்துப்பித்திண்கவுட்சொரிந்தமும்மதக்
காரார்சேமுர்மாவிக்கழுமலவளாகரே. (8)

சிவ கேஷத்திர யாத்திரை விளக்கம்.

பன்றிக்கோலங்கொண்டிப்படித்தடம்பயின்றிடப்
பாரமாரஞ்சுமேயப்பறவையிருவுகொள
வொன்றிட்டேயம்புச்சேருயர்ந்தபங்கயத்தல
னேதானேதானலீதிணராதுருவினதடிமுடியுஞ்
சென்றிட்டேவர்ந்திப்பத்திருக்களங்கொள்பைங்கணின்
றேசால்வேறோராகர்தெரிவுசெய்தவனதிடங்
கன்றுக்கேமுன்றிற்கேகலந்திலங்நிறைக்கவுங்
காலேவாராமேலேபாய்கழுமலவளாகரே. (9)

தட்டிட்டேமுட்டிக்கைத்தடிக்கிடிக்கிநின்றுணைத்
தாமேபேணுதேதாளுஞ்சமணெடுமுழல்பவரு
மிட்டத்தாலத்தந்தானிதன்றதென்றுநின்றவர்க்
கேயாமேவாயேதுச்சொல்லிலேமளிமருதம்பூப்
புட்டத்தேயட்டிட்டுப்புதைக்குமெய்க்கொள்புத்தரும்
போல்வார்தாமோராமேபாய்ப்புணர்வுசெய்தவனதிடங்
கட்டிக்கால்வெட்டித்தீங்கரும்புதந்தபைம்புனற்
காலேவாராமேலேபாய்கழுமலவளாகரே. (10)

அங்கைக்கேணண்டர்கோகனிக்காவண்டெண்பகக்
காணேதேனேபோராருங்கழுமலகரிறையைத்
தஞ்சைச்சார்சண்பைக்கோன்சமைத்தருங்கலித்துறை
தாமேபோல்வார்தேனேரார்தமிழ்விரகனமொழிக
ளெஞ்சத்தேயின்றிக்கேயிமைத்திசைத்தமைத்தகொண்
டேழேபேழாலேமூன்றியலிசையிசையல்பா
வஞ்சத்தப்பின்றிக்கேமனங்கொள்பத்துவோர்
மார்பேசேர்வாள்வாஞ்சீர்மதிநுதன்மடவரலே. (11)

திருச்சிற்றம்பலம்.

திருவண்ணமலை.

பண்-நட்டபாடை (முதல் திருமுறை.)

உண்ணமுலையுமையாளொடு முடனுகியவொருவன்
பெண்ணகியபெ நமான்மலைதிருமாமணிதிகழ
மண்ணுர்ந்தனவருவித்திரண்மழலைம்முழவதிரு
மண்ணுமலைதாழுவார்வினைவழுவாவண்ணமறுமே. (1)

தேமாங்கனிகடிவன்கொளவிடிகொம்பொடுதீண்டித்
தூமாமழைதுறுவன்மிசைசிறுதுண்டுளிசிதற
வாமாம்பிணையணையும்பொழிலண்ணுமலையண்ணல்
பூமாங்கழல்புணைசேவடிநினைவார்வினையிலரே. (2)

பீலிம்மயில்பெடையோடுறைபொழில்சூழ்கழைமுத்தஞ்
சூலிம்மணிதரைமேனிறைசொரியும்விரிசார
லாலிம்மழைதவழும்பொழிலண்ணுமலையண்ணல்
காலன்வலிதொலைசேவடிதொழுவாரனபுகழே. (3)

உதிரும்மயிரிடிவெண்டலைகலனுவுலகெல்லா
மெதிர்பலியுணலாகவுமெறுதேறுவதல்லான்
முதிருஞ்சடையிளவெண்பிறைமுடிமேல்கொளவடிமே
லதிருங்கழலடிகட்கிடமண்ணுமலையதுவே. (4)

மரவஞ்சிலைதரளம்மிகுமணியுந்துவெள்ளருவி
யரவஞ்செய முரவம்படுமண்ணுமலையண்ண
லுரவஞ்சடையுலவும்புனலுடனுவதுமோரார்
குரவங்கமழ்நறுமென்குழலுமைபுல்குதல்குணமே. (5)

பெருகும்புனலண்ணுமலைபிறைசேர்கடனஞ்சைப்
பருகுந்தினதுணிவார்பொடியணிவாசதுபருகிக்
கருகும்மிடறுடையார்கமழ்சடையார்கழல்பரவி
யுருகும்மனமுடையார்தமக்குறுநோயடையாலே. (6)

திருநாவுக்கரசு நாயனார்.

திருவங்கமாலை - தேவாரம். பண்-சாதாரி.

தலையே நீ வணங்காய் — தலை மாலை தலைக்கணிந்து
தலையாலே பலிதேர்ந்த தலைவனைத்
தலையே நீ வணங்காய். (1)

கண்காள்காண்மின்களோ — கடல் நஞ்சுண்டகண்டன்றன்னைக்
கெண்டோள்வீசி நின்றாடுப்பிரான்றன்னைக்
கண்காள்காண்மின்களோ. (2)

செவிகாள்கேண்மின்களோ — சிவ னெம்மிறைசெம்பவள
மெரிபோன்மேனிப்பிரான்றிறமெப்போதுஞ்
செவிகாளகேண்மின்களோ. (3)

மூக்கே நீ முரலாய் — முதுகாடுறை முக்கணனை
வாக்கேதொக்கியமங்கைமணாளனை
மூக்கே நீ முரலாய் (4)

வாயேவாழ்த்துகண்டாய் — மத யானையுரிபோர்த்துப்
பேய்வாழ்காட்டகத்தாடும்பிரான்றனை
வாயேவாழ்த்துகண்டாய். (5)

நெஞ்சே நீ நினையாய் — நிமிர்புன்சடைநின்மலனை
மஞ்சாடுமமலமங்கைமணாளனை
நெஞ்சே நீ நினையாய். (6)

கைகாள்கூப்பித்தொழீர் — கடி மாமலர்தூவிநின்று
பைவாய்ப்பரம்பரையார்த்தபரமனைக்
கைகாள்கூப்பித்தொழீர். (7)

ஆக்கையாற்பயனென் — னரன் கோயில்வலம்வந்து
பூக்கையாலட்டிப்போற்றியென்றுதவிவ்
வாக்கையாற்பயனென். (8)

கால்களாற்பயனென்—கறைக் கண்டனுறைகோயில்
கோலக்கோபுரக்கோகரணஞ்சூழாக்
கால்களாற்பயனென. (9)

உற்றாராருளரோ—யிர் கொண்டுபோம்போது
குற்றாலத்துறைகூத்தனல்லானமக்
குற்றாராருளரோ. (10)

இருமாந்திருப்பன்கொலோ—வீசன் பல்கணத்தெண்ணப்பட்
சிறுமாமேந்தித்தன்சேவடிக்கீழ்சென்றங் [டுச்
சிறுமாந்திருப்பன்கொலோ. (11)

தேடிக்கண்டுகொண்டேன்—றிரு மாலொடுதான்முகனுந்
தேடித்தேடொணாத்தவனெனுள்ளே
தேடிக்கண்டுகொண்டேன். (12)

திருச்சிற்றம்பலம்.

திருவாசகம்.

பண்-காந்தாரம். (4-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

மாதர்ப்பிறைக்கண்ணியானைமலையான்மகளொடும்பாடிப்
போதொடுநீர்சுமந்தேத்திப்புகுவாரவர்பின்புகுவேன்
யாதுஞ்சுவடுபடாமலையாறடைகின்றபோது
காதன்மடப்பிடியோடுங்களிறுவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (1)

போழிளங்கண்ணியினானைப்பூந்துகிளாரொடும்பாடி
வாழியம்போற்றியென்றேத்திவட்டமிட்டாடாவருவே
னெழிலவனவின்றேத்துமையாறடைகின்றபோது
கோழிபெடையொடுங்கூடிக்குளிர்ந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (2)

எரிப்பிறைக்கண்ணியினீயேந்திழையாளொடும்பாடி
முரித்தவிலயங்களிட்டுமுகமலர்ந்தாடாவருவே
னரித்தொழுகுவெள்ளருவியையாறடைகின்றபோது
வரிக்குயில்பேடையொடாடிவைகிவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (3)

பிறையிளங்கண்ணியினீப்பெய்வளையாளொடும்பாடித்
துறையிளம்பன்மலர்தூவித்தாளைக்குளிரத்தொழுவே
னறையிளம்பூங்குயிலானுமையாறடைகின்றபோது
சிறையிளம்பேடையொடாடிச்சேவல்வருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (4)

ஏடமதிக்கண்ணியானீயேந்திழையாளொடும்பாடிக்
காடொடுநாடுமலியுங்கைதொழுதாட்டாவருவே
னாடலமர்ந்துறைகின்றவையாறடைகின்றபோது
பேடைமயிலொடுங்கூடிப்பிணைந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (5)

கண்மதிக்கண்ணியினீத்தையனல்லாளொடும்பாடி
யுண்மெலிசிந்தையனுகியுணராவருகாவருவே
ணண்ணலமர்ந்துறைகின்றவையாறடைகின்றபோது
வண்ணப்பகன்றிலொடாடிவைகிவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (6)

கடிமதிக்கண்ணியினீக்காரிகையாளொடும்பாடி
வடிவொடுவண்ணமிரண்டும்வாய்வேண்டுவசொல்லிவாழ்வே
னடியிணையார்கருங்கழலானீயாறடைகின்றபோது
விடிகுரலண்ணலதாரேனமிசைந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (7)

விரும்புமதிக்கண்ணியானீமெல்லியலாளொடும்பாடிப்
பெரும்புலர்காலையெழுந்துபெறுமலர்கொய்யாவருவே
னருங்கலம்பொன்மணியுந்துமையாறடைகின்றபோது
கருங்களிபேடையொடாடிக்கலந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (8)

மூற்றற்பிறைக்கண்ணியாணிமெய்குழலாளொடும்பாடிப்
பற்றிக்கயிறறுக்கில்லேன்பாடியுமாடாவருவே
னற்றருள்பெற்றுகின்றோமடைபாறடைகின்றபோது
நற்றுணைப்பேடையொடாடிநாரையருவனகண்டீடன்
கண்டீடனவாதிருப்பாதங்கண்டறியாதனகண்டீடன். (9)

திங்கண்மதிக்கண்ணிபாணத்தீதமொழிபாலொடுபாடி
யெங்கருணல்குங்கோலெந்தையெனக்கினிபென்னுவருவே
னங்கினமல்லகபாலொடுமையாமடைகின்றபோது
பைங்கினிபேடையொடாடிப்பரந்துவருவனகண்டீடன்
கண்டீடனவாதிருப்பாதங்கண்டறியாதனகண்டீடன். (10)

வளர்மதிக்கண்ணிபிஞ்ஞைவார்குழலாளொடுப்பாடிக்
களவுபடாதகாலங்காண்பான்கைக்கணிக்கின்றே
னளவுபடாததாரன்பேடையோடாடைகின்றபோது
விளமனைநாகுதழுவியுறவருவனகண்டீடன்
கண்டீடனவாதிருப்பாதங்கண்டறியாதனகண்டீடன். (11)

திருச்சிற்றம்பலம்.

பெரியபுராணம் (6-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

அரியபிரமனந்தணர்தஞ்சிரதையாணை
யருமறையினகத்தாணையணுவையார்க்குந்
தெரியாததத்துவனீத்தீண்டபாலுத்
திகழ்மழவிளையத்தீதவர்கடங்கோரணமற்றைக்
கரியானோன்முதலாணக்கனலிக்காற்றைக்
கனைகடலிக்குலவுமலையைக்கலந்துநின்ற
பெரியானைப்பெருமற்றப்புலியூராணைப்
பேசாதநாளெல்லாம்பிறவாநாளே.

கற்றாணைங்கைவார்சடையான்றன்னைக்
காவிரிசூழ்வலஞ்சுழியுங்கருதினாணை
யற்றார்க்குமலர்தார்க்குமருள்செய்வாணை
யாரூரும்புகுவாணையறிற்றோமன்றே

மற்றருந்தன்னெப்பாரில்லாதானே
வானவர்களெப்பொழுதும்வணங்கியேத்தப்
பெற்றானைப்பெரும்பற்றப்புலியூரானைப்
பேசாதநாளெல்லாம்பிறவாநாளே.

கருமானினுரியதளையுடையாவீக்கிக்
கனைதழல்கள்கலந்தெளிப்பவனல்கையேந்தி
வருமானத்திரடோள்கண்மட்டித்தாட
வளர்மதியஞ்சடைக்கணிந்துமானேர்நோக்கி
யருமாணவாண்முகத்தாளமர்ந்துகாண
வமரர்கணமுடிவணங்கவாடுகின்ற
பெருமானைப்பெரும்பற்றப்புலியூரானைப்
பேசாதநாளெல்லாம்பிறவாநாளே.

திருமுழுப்பாடி

சுந்தரமூர்த்தி நாயனார்.

பண்-நட்டராகம் (7-ம் திருமுறை.)

திருச்சிற்றம்பலம்.

பொன்னார்மேனியனே புலித்தோலரைக்கசைத்து
மின்னார்செஞ்சடைமேல் மிளிர்கொன்றையணிந்தவனே
மன்னேமாமணியே மலைபாடியுள்மாணிக்கமே
யன்னேயுன்னையல்லா லினியாரைநினைக்கேனே. (1)

னோர்கோவணமுமதிருநீறு மெய்பூசியுன்றன்
றாளேவந்தடைந்தேதன் றலேவ வெவ்வேயென்றுகொண்
வாளார்கண்ணிபங்கா மழபாடியுண்மாணிக்கமே
கேளாய்நின்னையல்லா லினியாரைநினைக்கேனே. (2)

எம்மானெம்மானெயென் றெனக்கெட்டனைச்சார்வாகா
நிம்மாயப்பிறவி பிறந்தேயிறந்தெப்பத்தொழிந்தேதன்
மைம்மாம்பூம்பொழில்சூழ் மழபாடியிலமாணிக்கமே
யம்மாநின்னையல்லா லினியாரைநினைக்கேனே. (3)

பண்டேநின்னடியே னடியாரடியார்கட்கெல்லாம்
தொண்டேபூண்டொழிந்தேன் பெருடராமைத்துரிசறுத்தேன்
வண்டார்பூம்பொழில்சூழ் மழபாடியுள்மாணிக்கமே
பண்டாநின்னையல்லா வினிபாரைநினைக்கேனே. (4)

கண்ணேயுழலுந் கருத்தாயவருத்தமுமாய்ப்
பண்ணேரின்றமிழாய்ப் பரமாயபரஞ்சுடரே
மண்ணேர்பூம்பொழில்சூழ் மழபாடியுள்மாணிக்கமே
பண்ணேநின்னையல்லா வினியாரைநினைக்கேனே. (5)

காளார்வந்தணுகி னளியாமுனநின்றனக்கே
யாளாவந்தடைந்தே னடியேயுமேன்றுகொணீ
மாளாநாளருளு மழபாடியுள்மாணிக்கமே
யாளாநின்னையல்லா வினியாரைநினைக்கேனே. (6)

சந்தாநந்தழையாய் சடைமேற்பிறைதாங்கல்ல
வெந்தார்வெண்பொடியாய் விடையேயறியவித்தகனே
மைந்தார்சோலைகள்சூழ் மழபாடியுள்மாணிக்கமே
யெந்தாய்நின்னையல்லா வினியாரைநினைக்கேனே. (7)

வெய்யவினிசுடரோன் மிகுதேவர்கணங்களெல்லாஞ்
செய்யமலர்களிடமிரு செம்மைபுணின்றவனே
மையார்பூம்பொழில்சூழ் மலபாடியுள்மாணிக்கமே
பைய்யாநின்னையல்லா வினிபாரைநினைக்கேனே. (8)

கெறியேன்கின்மலனே கெடுமாலபன்போற்றிசெய்யுங்
குறியேயோமையனே கொடியேரிடையாடலுவா
மறியேசங்கையனே மழபாடியுள்மாணிக்கமே
யறியேனுநின்னையல்லா வினியாரைநினைக்கேனே. (9)

வாரார்முப்புரமு மெரியச்சிலைதொட்டவனை
வாரார்கொங்கையுடன் மழபாடியுண்மேயவனைச்
சீரார்காவலர்கோ னரணுரைத்ததமிழ்
பாரோரேத்தவல்லார் பரலோகத்திருப்பாரே. (10)

திருச்சிற்றம்பலம்.

ஓ

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீராமலிங்க சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

திருவருட்பா.

சிவனேச வெண்பா.

முன்னவனே யாதியனே முத்தனலஞ் சொன்னவனே
தூய்மெய்ச் சுகத்தவனே-மன்னவனே
சிற்பரனே யெங்கரனே செஞ்சடையஞ் சேகரனே
தற்பரனே நின்னுள் சரண்.

மகாதேவ மாலை.

உலகநிலை முழுதாகி யாங்காங்குள்ள
வுயிராகி யுயிர்க்குயிராமொளிதானாகிக்
கலகநிலையறியாத காட்சியாகிக்
கதியாகிமெஞ்ஞானக் கண்ணதாகி
யிலகுசிதாகாசமதாய்ப் பரமாகாச
வியலபாகியினையொன்றுமில்லாதாகி
யிலகிலறிவானந்தமாகிச்
சச்சிதானந்தமயமாகி யமர்ந்ததேவே.

திருவெண்மறையீடு.

கான்படும்பாடு சிவனேயுலகர் கவிலும்பஞ்சு
தான்படுமோ சொல்லத்தான்படுமோ வெண்ணத்தான்படுமோ
கான்படுகண்ணியின் மான்படுமாறு கலங்கிநின்றே
னேன்படுகின்றனை யென்றிரங்கா யெனைநினென்செய்வனே.

வடிவுடை மாணிக்கமாலை.

கடலமுதே செங்கரும்பே யருட்கற்பகக்கனியே
யுடலுயிரே யுயிர்க்குள்ளுணர்வே யுணர்வுள்ளொளியே

படல்லிடையா சொற்றியாரிடங் கொண்டவருமருந்தே
படலவிழ்ஞானமலரே வடிவுடைமாணிக்கமே.

நமச்சிவாய ஸங்கீர்த்தன லகரி.

சொல்லவாவிய தொண்டர்தம்மனத்திற்
சுகந்தராகொடுத்தோன்றிய ஜீவையைக்
கல்லவாவிய வேலைமீயே கெஞ்சுங்
கலைந்து வந்திடக்கலந்திடுகளிப்பைச்
செல்லவாவியபொழிற்றிருவொற்றித்
தேசினில்சீச்சிற்றம்பலத்தாடு
நல்லபுவினை காண்மறைப்பொருளை
நமச்சிவாயத்தை காண்பறவேனை.

திருவருள் வழக்க வணக்கம்.

தேதாடையார் புலித்தோலுடையார் கடற்றாங்குமொரு
மாதிடையார் மழுமானுடையார் பிரமன்றலையா
மோடுடையாரொற்றியூருடையார் புகழோங்கியவெண்
காடுடையார்கெற்றிக் கண்ணுடையாரெங்கடவுளரே.

அருளியல் விஞ்ஞவல்.

தேனைனினிர்குந்திருவருட்கடலே தெள்ளியவமுதமேசிவமே
வானைலகிற்குந்நயவமே முல்லைவாயில்வாழ்மாசிலாமணியே
யூனைனிலின்றவுணர்விலெனினுமுன்றிருக்கோயில்வக்தடைக்கா
லேனைனகிகளா திருந்தண்ணையா வீதுநினைறிருவருட்கியலமே.

அன்பு மாலை.

அற்புதப்பொன்னம்பலத்தே யாடுகின்றவரசே
யாரமுதேயடியேன்றனன்பே யென்னறிவே
கற்புதவுபெருங்கருணைக்கடலே யென்கண்ணே
கண்ணுதலேயாருந்தக்களிப்பே பெய்க்கதியே
வெற்பதவுபசுங்கொடியை மருவுபெருந்தருவே
வேதவாகமமுடியின் விளங்குமொளிவிளக்கே

பொற்புறவேயிவ்வுலகிற் பொருந்துசித்தனேன்
பொருத்தமுறின்றிருவருளின் பொருத்தமதுதானே.

நிறையணிந்தசிவகாமியேயநிறையொளியே
நித்தபரிபூரணமாஞ் சுதசிவவெளியே
கறையணிந்தகளத்தாசே கண்ணுடையகரும்பே
கற்கண்டேகனியேயென் கண்மணிகண்மணியே
பிறையணிந்தமுடிமலையே பெருங்கருணைக்கடலே
பெரியவரெலலாமவணங்கும் பெரியபரம்பொருளே
குறையணிந்துதிரிகின்றேன் குறைகளெலாந்தவிர்த்தே
குற்றமெலாங்குணமாகக் கொள்வதுனின்குணமே.

திருட்வருட் பெருமை.

அன்பனேயப்பாவம்மையேயரசே
யருட்பெருஞ்சோதியேயடியேன்
துன்பெலாந்தொலைத்ததுணைவனே
ஞானசுகந்திலே தோற்றியசுகமே
யின்பனேயெலலாம் வல்லசித்தாகி
யென்னுளா யிலங்கியபொருளே
வன்பனேன்பிழைகள் பொருத்தருட்
சோதிவழங்கினைவாழிநினபாண்பே.

உபதேச உண்மை.

கண்ணேகண்மணியே கருத்தேகருத்தின்கனிவே
விண்ணேவிண்ணிறைவே சிவமேதனிமெய்ப்பொருளே
தண்ணேரொன்மதியே யெனைத்தந்தபாதியே
யுண்ணேருள்ளொளியே யெனகுண்லமயுரைத்தருளே.

திருத்தணிகைப் பதிகம்.

சீர்கொண்டதெய்வவதனங்களாறுந் திகழ்ந்தடப்பக்
தார்கொண்டபன்னிருதோளகலுந் தமரைத்தாள்களுமோர்
கூர்கொண்டவேலுமயிலுங்குறமகோழிக்கொடியுமருட்
சார்கொண்டவணமை தனிராசலமுமென்கண்ணுற்றதே.

செழுஞ்சுடர் மாலை.

வேணியுடையேபொருளே யென்றருகிமனதுதிமாறி
வீணை தயரத்தழுந்துகின்றேன் வேறோர் துணைநின்னடியன்றிக்
காணைமுதே பெருங்கருணைக்கடலே கனியேகரும்பேசற்
சேணைர்தணிகைமலைமருந்தேதேனைஞானச்செழுஞ்சுடரே.

வேட்கை விண்ணப்பம்.

மன்னேயென்றனுயிர்க்குயிரே மணியேதணிகைமலைமருந்தே
யன்னேயென்னேபாட்கொண்டவரே தணிகையையாலே
பொன்னேஞானப்பொங்கொளியே புனிதவருளேபூரணமே
யென்னேயெளியேயன்றுயருழுத்த லெண்ணியிரங்காதிருப்பதுவே.

பிள்ளைப்பெரு விண்ணப்பம்.

கருணையாரமுதே யென்னுயிர்க்குயிரே
கனிந்தசிற்றமபலக்கனியே
வருணமாமறையின் மெய்ப்பொருளாகிய
வயங்கியவள்ளலேயன்பர்
தெருணிறையுளத்தே திகழ்தனித்தலைமைத்
தெய்வமேதிருவருட் சிவமே
தருணமென்னெருமைத்தந்தையே
தாயேதரிதகருள் திருச்செவிக்கிதுவே.

சரணடைதல்.

எண்ணுகின்றேனெண்ணமெலா மெய்தவருள்செய்கின்றதனித்
தண்ணருமுதே சிற்சபையிற்றனித்ததலைமைப்பெருவாழ்வே
கண்ணுதொளியே யொளியெல்லாங்கலக்த வெளியேகருதருமே
னண்ணுலவயாவம்மாவென்னப்பாயாளுன்னடைக்கலமே.

உத்தரஞான சிதம்பர மான்மியம்.

அருளோங்குகின்றதருட்பெருஞ்சோதியடைந்தென்றன்
மருளோங்குறுமற்றவிர்த்தது கல்லவரமளித்தே
பொருளோங்காணருட் பூமியிலவாழ்புரிந்தென்றுக்
தெருளோங்கவோங்குவதுத் தாஞானசிதம்பரமே.

கைம்மாறின்மை.

கடையேன்புரிந்தகுற்றமெலாங்கருதாதென்னுட் கலந்தகொண்டு
தடையேழுழுதுந்தவிர்த்தருளித் தனித்தஞானவமுதளித்துப்
புடையேயிருத்தியருட்சித்திப்பூவைதனையும்புணர்த்திபருட்
கொடையேகொடுத்தாய்நின்றனக்குக்கைம்மாறேதுகொடுப்பேனே

அனுபவசித்தி.

காட்டினீஞானவமுதளித்தாய்நற்கனகசபை
யாட்டினீயென்பக்கமாக்கினீ மெய்ப்பொருளன்றுவந்து
சீட்டினீயென்றுமழியாவரந்தருதி நின்சபையிற்
கூட்டினீநான்முனஞ் செய்தவம்யாதுகூறுகவே.

அபயங்கூறல்.

இன்பிலேலவயங்குதிவபரம்பொருளே யென்னுயிர்க்கமுதமேயென்ற
வன்பிலேபழுத்ததனிப்பெரும் பழமேயருணடம்புரிபுமென்னாசே
வன்பிலேவிளைந்தநாமையும் வினையுபடிந்தனவிடிந்தசாலிரவுக்
நன்பிலேனினிநானருட் பெருஞ்சோதிச்சூழலிற்று லங்குகின்றே

[னே.

ஆற்றாமை

எண்சீரடியாசிரிய விருத்தம்.

சூலத்திடையுக்கொடிய ஞெநருடித்தனக்குக் கொடியேன்
குறிஞளிலுஞ கொடியனன்றிக் குணவகளிலுங்கொடியேன்
மலத்திடையே புழுக்கறிறு புழுக்களிலுங்கடையேன்
வன்மதத்துப்பெருமபாவி வஞ்சகஞ்சுப்புலியேன்
கலத்திடையோரணுவளவும் நண்ணுநெறிலன் பொலாத
காய்க்குரைகடோன்றநின்றேன்பேய்க்குபிகளிழிந்தேன்
நிலத்திடைநாணேன்பிறக்தேனின் சுநத்தைதபறியே
னிர்க்குணனேகடராஜ நிடுணபணிவிளசமே. (1)

விளக்கறியா விருட்டறையிற் கவிழ்ந்துகிடந்தழுது
விம்முகின்றகுழவியினு மிகப்பெறிதுஞ்சிறியேன்
அளக்கறியாத்துயர்க்கடலிலிழுந்துகெடுங்கால
மலைந்தலைந்து மெலிந்ததுரும்பதனின்மிகத்துரும்பேன்
இளக்கறியாக்கொடுமை பலவாங்கினதுபழமாத்தன்
கெடுமதியேன் கபிலபிரினன் கிரிபசுமலைவிரியன்
களக்கறியாப்புலையிடைநா னன்பிறக்கதனக்கதா
கருணைகடந்தரசே நின்கருத்தை யறியேனை. (6)

அறியாதபொறியவர்க்கு மிழிந்ததொழிலவர்க்கு
மதிகரித்துத்துன்மார்க்கத்தரசுசெயுங்கொடியேன்
குறியாதகொடும்பாவச்சுமை சுமக்குஞ்சிறத்தன்
கொல்லாமையென்பதையோர் குறிப்பாலுங்குறியேன்
செறியாதமனக்கடையேன் றீமையெலாமுடையேன்
சினத்தாலுமதத்தாலுஞ் செறிந்தபுதலனேயேன்
எறியாதபுவியிடைநானேன் பிறந்தேதனுன்ற
னிதயமறியேன் மன்றினினித்தகடத்திறையே. (7)

இனித்தபழச்சாறு விடுத்திழித்தமலங்கொளுமோ
ரிழிவிலங்கினிழிந்து நின்றேனிரக்கமொன்றுமில்லேன்
அனித்தகுறியிடைத்தொடர்ந்து மனித்தவுடம்பெடுத்த
வறக்கடையர்தமக்கெல்லாமறக்கடையனேனன்
பனிதகமனக்குரங்காட்டிப்பலிக்குழலுங்கொடியேன்
பாதகமுஞ்சூதகமும்பயின்ற பெரும்படிறேன்
தனித்தகயிங்குணத்தனு னேன்பிறந்தேனினது
தனிக்கருதையறிந்திலேன் சபைக்கேற்றுமொளியே. (8)

வறுகின்றமெனமனத்தேயிறங்குகின்றகடையே
னேதமெலாநிறைமனத்தே னிரக்கமிலாப்புலையேன்
சிறுகின்றபுலையனேயேன் சிறுதொழிலேபுரிவேன்
செய்வகையொன்றறியாத சிறியரினுஞ்சிறியேன்
மாறுகின்றகுணப்பேதை மதியதனுளிழிந்தேன்
வஞ்சமெலாங்குடிகொண்ட வாழ்க்கையிகவுடையேன்

விறுகின்றவுலகிடைநானேன் பிறந்தேனினது
மெய்க்கருத்தையறிந்திலேன் விளங்குடத்தரசே. (9)

அரசெலாமதித்திடப் போசையிலேயரசோ
டாலெனவேமிகக்கூத்தேனருளியாக்கடையேன்
புரசமரம்போற்பருத்தேனெட்டியனத்தழைத்தேன்
புங்கெனவுபுளியெனவும் மங்கியுதிர்கின்றேன்
பரசும்வகைதெரிந்துகொளேன் தெரிந்தாரைப்பணியேன்
பசையறியாக்கருங்கன் மனப்பாறைசுமந்துழல்வேன்
விரசுநிலத்தேன் பிறந்தேனின்கருத்தையறியேன்
வியக்குமணிமன்றுறைந்தி விளங்குபரம்பொருளே. (10)

பொருளறியேன் பொருளறிந்தார் போன்றுகடித்திங்கே
பொங்கிவழிந்துடைகின்றேன் பொய்யகத்தேன்புலையேன்
மருளறியாத் திருவாளருளங்கயச்சுத்திரிவேன்
வையுண்டுமுழுவுதவா மாடெனவேதடித்தேன்
வெருளறியாக்கொடுமனத்தேன் விழற்கிறைத்துக்களிப்பேன்
வீணர்களிற்றலைநின்றேனவிலக்கணைத்தும்பரிவேன்
தெருளறியேனுலகிடைநானேன் பிறந்தேனினது
திருவுளத்தையறிந்திலேன் தெய்வநடத்தவனே. (11)

தவம்புரியேன்றவம்புரிந்தார் தமைப்போலநடித்துத்
தருக்குகின்றேனுணர்ச்சியிலாச்சடம்போலவிருந்தேன்
பவமபுரிவேன் காரிளிலடப்பால் கனிழ்க்குங்கடையேன்.
பயனறியாவஞ்சனைப்பாறை சுமந்துழலவேன்
அவமபுரிவேன்றிவறிவியனபறியேனன்பா
லேயாகின்னடியடைந்தார்க்கணுத் துணையு முதவேன்
நவம்புரியுமுலகிடைநானேன் பிறந்தேனினது
கல்லதி நுவுமறியேன் ஞானநடத்திறையே. (12)

இறைபளவுமறிவொழுக்கத் திச்சையிலேனரகி
லீநுங்குழன்று வாடுகின்றேறு செல்லார்க்கு மிழிந்தேன்
பொலைபுளவோ நன்மையெலாம் போக்கில் விட்டுத்தீமை
புரிகின்றேனெனிகின்ற புதுவெருப்பிற் கொடியேன்

நிறையளவோ முறையளவோ நிலையளவுந்தவிர்ந்த
நெடுஞ்சாலநெஞ்சகத்தேநீல விடம்போல்வேன்
கறையளவாவுலகிடைநானேன் பிறந்தேனினது
கருத்தறியேன் கருணைகடங்காட்டுகின்றகுருவே. (9)

காட்டுகின்றவுவர்க்கடல் போற்கலிகளிலுஞ்செல்வக்
களிப்பினிலுஞ் சிறந்து மிகக்களித்து நிறைகின்றேன்
நீட்டுகின்றவாபத்திலொரு சிறிதுமுதவேன்
நெடுந்தூரமாழ்ந்ததவாப்பகுக்கிணறு போல்வேன்
ஆட்டுகின்றவருட்பெருமையொரு சிறிதுந்தெரியே
னச்சமிலிஞ்ணமிலே னடக்கமொன்றுமிலேன்
கூட்டுகின்றவுலகிடைநானேன்பிறந்தேனினது
குறிப்பறியேன் மன்றினடங்குலவுதுலமணியே. (10)

திருச்சிற்றம்பலம்.

முறையீடு.

எண்சீரடியாசிரியவிருத்தம்.

மருந்தறியேன்மணியறியேன் மந்திரமொன்றறியேன்
மதியறியேன் விதியறியேன் வாழ்க்கைநிலையறியேன்
திருந்தறியேன் றிருவருளின் செயலறியே னறந்தான்
செய்தறியேன் மனமடங்குந் திறத்தினிலோரிடத்தே
யிருந்தறியே னறிந்தோரையேத்திடவுமறியே
னெந்தைபிரான் மணிமன்றமெய்தவறிவேனே
யிருந்தசைசொலவறியேனெங்ஙனநான்புகுவேன்
யார்க்குரைப்பேனென்னசெய்வேனேதுமறிந்திலனே. (1)

அகங்காரக்கொடுங்கிழங்கை யகழ்ந்தெறியவறியே
னறிவறிந்தவர்தணர்பாற் செறிவுறுறியறியேன்
நகங்கானமுறுதவர்போல் நலம்புரிந்துமறியேன்
நச்சுமாக்கனிபோலே யிச்சைகனிந்துழன்றேன்

மகங்காணும்புலவரெலாம் வந்துதொழுதிக்கும்
மணிமன்றந்தனையடையும் வழியுமறிவேனே
இகங்காணத்திரிகின்றே னெங்ஙனநான்புகுவேன்
யார்க்குரைப்பேனென்னசெய்வே னேதுமறிந்திலனே. (2)

கற்குழறைகற்றறியேன் கற்பனகற்றறிந்த
கருத்தர்திருக்கூட்டத்திற் களித்திருக்கவறியேன்
நிற்குணிலைநின்றறியே னின்ரூரினடித்தேன்
நெடுங்காமப்பெருங்கடலை நீந்தும்வகையறியேன்
சிற்குணமாமணி மன்றிற்நிருநடனம்புரியுந்
திருவடியென்சென்னிமிசைச் சேர்க்கவறிவேனே
இற்குணஞ்செய்துழல்கின்றே னெங்ஙனநான்புகுவேன
யார்க்குரைப்பேனென்னசெய்வே னேதுமறிந்திலனே. (3)

தேகமுறுபூதங்கிலத்திறஞ்சிறிதுமறியேன்
சிதாகாசதங்கிலையறியேன் சித்திகிலையறியேன்
யோகமுறுங்கிலசிறிது முணர்ந்தறியேன்சிறியே
னுலகநடை யிடைக்கிடந்தேயுழைப்பாரிற்கடையேன்
ஆகமுறுதிருநீற்றினொளிவிளங்க வசைந்தே
யம்பலத்திலாடுகின்றவடியையறிவேனே
ஏகவுபவமறியே னெங்ஙனநான்புகுவேன்
யார்க்குரைப்பேனென்னசெய்வே னேதுமறிந்திலனே. (4)

வேதாந்தங்கிலநாடி விசாரந்தமுயன்றறியேன்
மெய்வகையுங்கைவகையுஞ் செய்வகையுமறியேன்
நாதாந்தத்திருவீதி நடந்திடுதற்கறியேன்
நானென்றறியே னெங்கோனுரென்றறியேன்
போதாந்தத்திருநாடு புகவறியேன்ஞான
பூரணகாயமெனும்போதவையறிவேனே
ஏதாந்தியேன் சரிதமெங்ஙன நான்புகுவேன்
யார்க்குரைப்பே னென்னசெய்வேனேது மறிந்திலனே.(5)

கலிமுடிவுகண்டறியேன் கரணமெலாமடக்குங்
கதியறியேன் கதியறிந்த கருத்தர்களோயறியேன்

கொலைபுலைகள் விடுத்தறியேன் கோபமறுத்தறியேன்
கொடுங்காமக்கடல்கடக்குங் குறிப்பறியேன்குணமா
மலைமிசைநின்றிடவறியேன் ஞானநடம்புரியும்
மணிமன்றந்தனையடையும் வழியுமறிவேனே
இலையெனும் பொய்யுலகினிடையெங்ஙனநான் புகுவேன்
யார்க்குரைப்பே னென்னசெய்வே னேதுமறிந்திலனே.

சாதிமதஞ்சமயமெனுஞ் சங்கடம்விட்டறியேன்
சாத்திரச்சேறுகின்ற சஞ்சலம்விட்டறியேன்
ஆதியந்தநிலையறியேனலை யறியாகடல்போ
லானந்தப்பெரும்போகத்தமர்ந்திடவு மறியேன்
நீதிநெறிநடந்தறியேன் சோதிமணிப்பொதுவில்
நிருத்தமிடுமொருத்தர் திருக்கருத்தையறிவேனே
ஏதிலர்சாருலகினிடையெங்ஙனநான் புகுவேன்
யார்க்குரைப்பேனென்னசெய்வே னேதுமறிந்திலனே.

சாகாததலையறியேன் வேகாதகாலின்
தரமறியேன் போகாததண்ணீரை யறியேன்
ஆகாயநிலையறியேன் மாகாயநிலையு
மறியேன் மெய்ந்நெறிதனையோரணுவளவுமறியேன்
மாகாதலுடையபெருந்திருவாளர்வழுத்தும்
மணிமன்றந்தனையடையும் வழியுமறிவேனே
ஏகாயவுலகினிடையெங்ஙனநான் புகுவேன்
யார்க்குரைப்பே னென்னசெய்வே னேதுமறிந்திலனே.

தத்துவமென் வசமாகத்தான் செலுத்தவறியேன்
சாகாதகல்விகற்குந் தரஞ்சிறிதுமறியேன்
அத்தநிலை சத்தநிலையறியேன் மெய்பறிவை
யறியேன் மெய்யறிந்தடங்கு மறிஞரையுமறியேன்
சுத்தசிவசன்மார்க்கத்திருப்பொதுவினிடத்தே
நாயகடம்புரிகின்ற ஞாயமறிவேனே
ஏத்தனையுங்குணமறியே னெங்ஙனநான் புகுவேன்
யார்க்குரைப்பே னென்னசெய்வே னேதுமறிந்திலனே.

வரையபரமார்க்கமொடு பரமார்க்கமறியேன்
மரணபயந்தவிர்த்திடுஞ் சன்மார்க்கமதையறியேன்
திரையறுதண்கடலறியே னக்கடலேக்கடந்தே
தெள்ளமுதமுணவறியேன் சினமடக்கவறியேன்
உரையுணர்வுகடந்ததிருமணிமன்றனிலே
யொருமைநடம்புரிகின்றார் பெருமையறிவேனே
இரையுறுபொய்யுலகினிடையெங்ஙனநான் புகுவேன்
யார்க்குரைப்பேனென்னசெய்வே னேதுமறிந்திலனே.

திருச்சிற்றம்பலம்.

திருவருட்பெருமை.

எண்சீரடியாசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

வெறுத்துரைத்தேதன் பிழைகளெலாம்பொறுத்தருளல்வேண்டும்
விளக்குறிவுக்குறிவாகி மெய்ப்பொருவினடிப்போய்
கறுத்துரைத்தார்தமக்கு மருள்கனிந்துரைக்கும் பெரிய
கருணைமெடுங்கடலே முக்கண்மேணுங்கு கருமேப
பறுத்துரைப்பதெவ னருளீவழங்குகிலு மன்றி
மறித்திடி லு முன்னீயலான் மற்றிருருசார்பறியேன்
செறுத்துரைத்தவுரைகளெலாந் திருவருளேயென்று
நிற்பதல்லாமற் செய்வகையொன்றிலனே.

நிருத்துரைத்தேதன் பிழைகளெலாஞ் சகித்தருளல்வேண்டும்
மெய்யறிவின்புருவாகி வியன்பொருவினடிப்போய்
தெருக்குத்துரைத்த மறைகளும்பின் விரித்துரைத்துங்காணுத்
துரியநடமேவியிருந்த பெரியபரம்பொருளே
புருத்துரைத்த பயனுரைக்கோர்பொருளாகி விளங்கும்
பரஞ்சுடரேபரம்பரனே பசுபதியேயடியேன்
வருத்துரைபதெவனருளீவழங்குகிலுமன்றி
மறுத்திடிலுமுன்னீயலான் மற்றிருருசார்பிலனே.

முன்னவனே சிறியேனுன் சிறிதுமறியாதே
முனிந்துரைத்த பிழைபொறுத்துக்கனிந்தருளல்வேண்டு
மென்னவனேயென்றுணையே யென்னுறவேயென்னை
யின்றவனே யென்றுயே யென்குருவேயெனது
மன்னவனே யென்னுடைய வாழ்முதலேயென்கண்
மாமணியே மணிமிடற்றெர் மாணிக்கமலையே
அன்னவனேயட்பலத்துளாடுகின்றவமுதே
யாறணிந்த சடையாயான்வேறு துணையிலனே.

சினந்துரைத்தென்பிழைகளெலாமனம்பொறுத்தல்வேண்டும்
தீனதயாநிதியே மெய்ஞ்ஞான சபாபதியே
புனைந்துரைப்பாரகத்திதான்றும் புறத்திதான்று நினைத்தே
பொய்புலகராங்கவர்போற்புனைந்துரைத்தேகலவறுள்
இனந்திருத்தியெனையாட்கொண்டெல்லுளமர்ந் தெனைத்தா
னெவ்வுலகுந் தொழுதிலேமெலற்றியசற்குரவே
கனந்தருசிற்பகவமுதங்களித்தளித்த நிறைவே
கருணைநடத்தரசேயென் கண்ணிலங்குமணியே.

ஊடுதற்கோரிடங்காணேனுவக்குமிடமுளதோ
வுன்னிடமுமென்னிடமு மோரிடமாதலினுல்
வாடுதற்குநேர்ந்திடிலோ மாட்டாமையாலு
மனம்பிடியாமையினுஞ் சினந்துரைப்பேன் சிலவே
கூடுதற்குவல்லவனி கூட்டியெனைக்கொண்டே
குலம்பேசவேண்டாமென் குறிப்பறிந்தாய்
நாடுதற்கிங்கென்னிலே முடியாது நீயே
நாடுவித்துக்கொண்டருள்வாய் ஞானசபாபதியே.

திருச்சிற்றம்பலம்.

இராகம்-அடாணை, ரூபகதாளம்.

திருச்சிற்றம்பலம்.

பல்லவி.

எனக்குமுனக்கு மிசைந்தபொருத்த மென்னபொருத்தமோ
இந்தப்பொருத்த முலகில் பிறருக்கெப்தும்பொருத்தமோ.

சரணம்.

தனக்குநிகரிங்கில்லா துயர்ந்ததாபபொன்றீத
தாவிப்போகப்போக மூலின்றாத்தினின்றீத
கனக்கத்திகைப்புற்றங்கே நானுங்கலங்கிவருந்தினேன
கலக்கமீக்கித்தூக்கிவைத்தாய் நிலம்பாருந்தினேன. (எனை)

இங்கேகாமலினடுவிலுயர்ந்த தம்பருகிவே
ளரிப்போகப்போக மூலினிழைபோலு ருகிவே
அங்கேநிலைத்து நடுங்கும்போ திகன்னடுகை நீத்தினேன
யதன்மேலுயர்ந்தகிலையில வைத்தாயடி யைவாக்கினேன. (தாணை)

இராகம்-எதுகுலகாம்போதி, அடதாளம். உசி.

பல்லவி.

ஆணிப்பொன்னம்பலத்தீத கண்டகாட்சிகள்
அற்புதக்காட்சியடி-அம்மா-அற்புதக்காட்சியடி

சரணங்கள்.

சோதிமலையொன்று தோன்றிற்றதிலொரு
வீதியுண்டாச்சுதடி — அம்மா
வீதியுண்டாசசுதடி. (ஆனை)

வீதியிற்சென்றே னவ்வீதியுமிவொரு
மேடையிருந்ததடி — அம்மா
மேலடையிருந்ததடி. (ஆனை)

கலி விருத்தம்.

அற்புதக்கணபதி யமலபோற்றியே
தற்பர சண்முகசாமிபோற்றியே
சிற்பர சிவமகாதேவ போற்றியே
பொற்பமர் கௌரிநிற் போற்றி போற்றியே. (எனை)

வண்ணவெண்பா விருத்தம்.

கலிங்கறை கணபதி சரணஞ் சரணம்
கஜமுக குணபதி சரணஞ் சரணம்
தலேவனி னிணையடி சரணஞ் சரணம்
சரவண பவகுக சரணஞ் சரணம்
சிலைமலை யுடையவ சரணஞ் சரணம்
சிவசிவ சிவசிவ சரணஞ் சரணம்
உலேவறு மொருபரை சரணஞ் சரணம்
உமைசிவை யம்பிகை சரணஞ் சரணம்.

திருச்சிற்றம்பலம்.

[illegible]

ஆரூரானிலியம் ஆனைக்காப்புவாம்
சேரூருமண்ணுமலி செருப்பாம்—சீரூர்
தேவன்காண்காளத்தி திண்ணவண்மாகாயம்
சிவன்காண் கூடற்சிவம்.

பிரிதிவி - திருவாரூர் - மண்
அப்பு - திருவானைக்காவல் - ஜலம்
வாயு - திருகாளத்தி - காற்று
தேயு - திருவண்ணாமலை - நெருப்பு
ஆகாயம் - சிதம்பரம் - வெளி.

சத்தவிடங்கத்தலங்கள் 7.

சத்தவிடங்கத்தலங்கள் சாற்றுங்கால் நள்ளாறு
கத்தளூர்வாய்மூர்காறாயில் - நத்து
நாகைக்காரோணமுடன் நாடுதிருக்கோளிலியும்
ஈகைமறைக்காடுமிசை.

1. திருநள்ளாறு - நகவிடங்கர் - உன்மத்தநடனம்
2. திருவாரூர் - வீதிவிடங்கர் - அசபாநடனம் (வீசி)
3. திருவாய்மூர் - நீலவிடங்கர் - கமலநடனம்
4. திருக்காராயில் - ஆதிவிடங்கர் - குக்குடநடனம்
5. திருநாகைக்காரோணம் - சுந்தரவிடங்கத்தியாகர் நடனம்
6. திருக்கோளிலி - அவனி விடங்கத்தியாகர் - வண்டுநடனம்
7. திருமறைக்காடு - புவனிவிடங்கர் - அமிர்தநடனம்.

ஆபரணத்தலங்கள் 6.

1. மூலமொளிங்கமொடு கணேசனெங்கள் முருகேசன்மூலரு
வாஞ்சோமாஸ்கந்தம்
2. ஞாலமெலாந்துதிசெயநடராஜமூர்த்தசற்ருரைதானையை
டேசனென்றுந்
3. [illegible]

4. ஆலவிடமுண்டிருண்டகண்டத் தெம்மானுபரண
ஸ்தலங்களென்பதையுணர்மின்.

மகாலிங்கம் - திருவிடைமருதூர்
கணபதி - வலிவலம்
சுப்ரமணியம் - சுவாமிமலை
சோமாஸ்கந்தம் - திருவாரூர்
நடராஜர் - சிதம்பரம்
சண்டேஸ்வரர் - திருச்சேய்ஞ்ஞலூர்.

முத்தித்தலங்கள் 4.

தில்லையைக்காணக்காசியிலிறக்கச்
சிறக்குமாரூர்தனிற்பிறக்க
எல்லையில் பெருமையருணையைநினைக்க
வெய்தலாமுத்தி யென்றுரைத்தீ
சொல்லியினுத்தலங்களுந்தம்மில்
ஒக்குமென்றுரைத்திடா தடிகேள்
அல்லிசூழருணேபதிகமென்றுரைத்த
தருளெனவருள் செய்னவனும்.

சிதம்பரம், காசி, திருவாரூர், திருவண்ணுமலை.

சிதம்பரத்தை தரிசனஞ்செய்தாலும், காசியிலே தேகத்தை விட்டாலும், சிறப்புள்ள திருவாரூரிலே பிறந்தாலும், அளவில்லாத பொருமையுடைய அருணுசலத்தை நினைத்தாலும் முகதிகிடைக்குமென்று அருளிசசெய்திருக்கிறார்கள்.

சப்தபுரித்தலங்கள் 7.

அயோத்தியாமதுராமாயா
காசி காஞ்சி அவந்திகா—புரி
துவாரவதிசைவ
சப்தபிதே மோக்ஷதாயகா.

அயோத்தி, மதுரா, மாயா, காசி,
காஞ்சி, அவந்திகா (பாடலீபுரம்,) துவாரவதி (துவாரகை.)

தவதாண்டவத்தலங்கள் 9,

வடாரண்ணியஞ்ச கையிலாசம்
சுவேதாரண்ணியம் சிதம்பரம்
மதுராகும்பகோணஞ்ச
தேவதாரு வனந்ததா

திருபுராணம்வனம் புண்ணியம்
சத்தியஷாடபுரம்ததா

வடாரண்ணியம்—திருவேலங்காடு
கையிலாசம்—வெள்ளியங்கிரி
சுவேதாரண்ணியம்—வேதாரண்ணியம்
சிதம்பரம்—அம்பலம்
மதுரை—மதுரை
கும்பகோணம்—திருக்குடந்தை
தேவதாருவனம்—
திரிபுராணம்—திருவதிகை
சத்தியஷாடபுரம்—

ஷடேஸ்தலங்கள் 6.

சுவேதாரண்ணியம் பஞ்சாதம்
கௌரீமாயூர—மர்ச்சுனம்
சாயாவனஞ்ச ஸ்ரீ வாஞ்சியம்
காசிக்ஷேத்ர சமானஷடி.

திருவெண்காடு
திருவையாறு
மாயூரம்
திருவிடைமருதூர்
திருச்சாயக்காடு
திருவாஞ்சியம்

சப்த வ்ஸ்தலங்கள் 7.

ஸ்ரீசைலம்
கேதாரம்
காசி
குருக்ஷேத்ரம் (டில்லி)
பிரயாகை (அலஹபாத்)
சிதம்பரம்
திருவாரூர்

சப்த ஸ்தலங்கள் 7-க்கு பாட்டு.

காசி பிரயாகை திருவாரூர் கேதாரபொடி கமலாரதன்
பூசனைசெய்திலகு குருகேஷத்திரம் பொன்னம்பலநற்புனிதசிலர்
தேசுடன்வாழ் ஸ்ரீசைலமிவை சத்தபுரி இதனைத்தெரிசித்தார்
கள்
பாசவினைத்தொடர்நீங்கிச் சிவகதிபெற்றுயவரெனப்பகருஞாலே.

ஆயிரத்தெட்டில் விசேஷத்தலங்கள் 8.

மல்லலுற்றிடுகோசியம்பலம் மதுரைசேதுமறைப்புனம்
நல்லஞானிகள் சேர்குடந்தை கன்னகாரிச்சுனபுரமுடன்
செல்லலற்றிடு கமலியம்பதி சோவேகதிசிந்தையோர்
அல்லலுற்றபிறப்பிறப்பிலகன்றிடார் கதியடைவரே.

காசி—காசி
மதுரை—மதுரை
புறைப்புனம்—வேதாரண்யம்
அர்ச்சுனம்—திருவிடைமருதூர் (மத்தியார்ச்சுனப்)
அம்பலம்—சிதம்பரம்
இராமேச்சுரம்—சேது
குடந்தை—கும்பகோணம்
கமலியம்—திருவாரூர்

பஞ்சமகா சபை 5.

திருக்கோயிற் கனகசபை திருவாலங்காடதனில்
செருக்கானரத்தினசபை குற்றாலச்சித்திரசபை
இருக்காதிரியாசப்புறை இடந்தமதுரை வெள்ளிச்சபை
பெருக்காதெல்வேலிசெப்பு போய்ப்பலான் நடனங்களே

கோயில் சிதம்பரம்—கனகசபை (பொன்னம்பலம்)
திருவாலங்காடு—வடாரண்யம் இரத்தினசபை
திருக்குற்றாலம்—குற்றாலம் சித்திரசபை
மதுரை—ரஜதசபை (வெள்ளியம்பலம்)
திருநெல்வேலி—திருநெல்வேலி தாமிர சபை

மூர்த்திகரமுள்ளத்தலங்கள் 14.

சூதமுனிவரால் அருளிச்செய்யப்பட்டது.

அண்ணாமலை திருத்தாசலமாரூ—ருக்காசி
பவ்வூர்பாதாரை சோளத்திசைலம்—பார்காஞ்சி
விண்ணூர்கோயிலாலங்காடு மருதூர்—விடுகும்பம்
கண்ணேருடமூக்குசேதூர் கேதாரக்கண்ணஞ்வெமே.

திருவண்ணாமலை—காஞ்சி திருத்தாசலம்—சிதம்பரம்
திருவாரூர்—திருவாலங்காடு காசி—திருவிடமருதூர்
திரை—கும்பகோணம் சோளத்தி—இராமீச்சரம்

ஸ்ரீ சைலம்—கேதாரம்

தக்ஷிண கைலாசம் 3.

முன்னர்வீழ்ந்திடி கெரிகாளத்தியாமோழிவர்
பின்னர்வீழ்ந்தது திரிசிராமலையெனும்பிறங்கல்
அன்னதின்புறகனமந்தது கோணமாசலம்
இன்னமுன்றையுந் தக்ஷிணகயிலையென்றிசைப்பார்.

1. திருக்காளத்தி, 2. திருச்சொப்பள்ளி, 3. திருகோணமலை

மூவர் அவதார நக்ஷத்திரங்கள்.

ஆவனிமீ திருவாதிரை நக்ஷத்திரம்—திருஞானசம்பந்தர்
ஆவனிமீ உத்திர நக்ஷத்திரம்—சுந்தரமூர்த்திசுவாமிகள்
பங்குனிமீ ரோகணி நக்ஷத்திரம்—திருநாவுக்கரசுசுவாமிகள்

சப்தஸ்தான கேஷத்திரங்கள் 7.

முத்திகொளிக்கேதிவார் திருவையாறு மூவர்தேற்றிருப்பழனம்
திருசெய்த்தானஞ்
சித்தியருள் திருச்சோற்றுத்துறையிலேடு திருவேதிக்குடி
பரன்ருழ்சேருமன்பர்
பத்தியொடுநிறை திருப்பூந்துருத்திநாலும்பாவுதிருக்கண்டியூ
ரிலைகளேழுஞ்
சத்தபுரியாமிதனிற்தொழுமேய்பன்பர் சாரும்பெருவெளை
மன்றுள்சாற்றும்.

1. திருவவினன்குடி,
2. திருப்பழனம்,
3. திருசுசோற்றுத்துறை
4. திருவேரகம்
5. திருக்கண்டியூர்
6. திருப்பூந்துருத்தி
7. திருவேய்க்தானம்.

முருகக்கடவுளுக்கு முக்கியமான படை வீடுகள் 6

பன்னுதிருச்செய்திபுரம்பரங்குன்றேபகர்திருவாவினன்குடி
பாரலைகோர்போற்ற
மன்னுபழமுதிர்சோலையோகம்பாமணங்கமழ்குன்று
தோறுடலென்னத்
தன்னுதவமிலைபஷடவீடாக தேவிச்சுரர்துயர்
தீர்த்தருளுமெங்கள் சுருதிநாதன்
பொன்னடித்தாமரைமலரைவழுத்து மன்பர்பூரணன்வாழ்
கயிலாயம்பொருந்திவாழ்வார்.

1. திருப்பரங்குன்றம்
2. திருச்செந்தூர்—திருச்சீலைவாய்
3. திருவாவினன்குடி—பழனிமலை
4. திருவேரகம்—சுவாமிமலை
5. குன்றுதோறுடல்—
6. பழமுதிர்சோலை—கள்ளழகர்கோவில்

சுப்பிரமணியர் வ்ஸ்தலங்கள் 20.

சோழநாட்டில் 2.

1. திருவேரகம்
2. எட்டிகுடி

பாண்டியநாட்டில் 6.

3. கதிர்காமம்
4. திருச்சீரலைவாய்
5. திருவள்ளியூர்
6. திருவாவினன்குடி
7. பழனி
8. திருப்பரங்குன்றம்
9. சோலைமலை

மகதநாடு அல்லது கோசாட்டில் 1.

14. மயிலம்

தொண்டைநாட்டில் 7

15. திருத்தணி
16. காடாலூர்
17. திருப்போரூர்
18. இளையனூர் வேளூர்
19. செடியம்
20. ஆண்டார்குப்பம்

கொக்குரோட்டில் 4.	குன்றுதோறுடல்.
10. வெண்ணெய்மலை	திருப்பரங்குன்றம்.
11. சென்னிமலை	திருச்சோலைவாய்
12 சிவமலை	திருவாவினன்குடி
13. மருதமலை	திருவேரகம்.

சதாசூர்த்திகரமுள்ளத்தலங்களின் வரலாறு.

ஸ்ரீ ஸ்காந்தபுராணத்தின் ஆறசமுகிதைகளில் சங்கர சமுகிதையின் சிவரகசிய காண்டத்தில் உபதேசகாண்டம் 61-வது அத்தியாயத்தில் சூதமுனிவர்கூறும் சிவபூஜாமகிமையில் ஸ்ரீமகாதேவர் தேவர்களுக்கு திருவாய்மலர்ந்தருளிய மெய் 14-ஸ்தலங்களின்மகிமையை 32-வது சுலோகமுதல 36-வது சுலோகம் வரைக்கும் சொல்லப்பட்டிருப்பதில் சதாசிவத்தில் சாஸ்வதபரமசிவனும் பார்வதியோடுங்கூட எப்பொழுதும் திருஅண்ணாமலை, விருத்தாச்சலம், திருவாரூர், காசி, மதுரை, காளத்தி, ஸ்ரீ சைலம, காஞ்சி, சிதம்பரம், திருவாலவாய், திருவிடைமருதூர், கும்பகோணம், திராக்ஷாராம், கேதாரம் இந்த பதினாலு ஸ்தலங்களில் எப்போதும் வசித்திருப்பாரென்றுபுராணங்களால் தெரியவருகிறது.

முற்றிற்று.

கதிர்காமம் (கண்டி)

கதிர்காமத்துக்கு போகப்பட்டவர்கள் மதுரையிலிருந்து கொளம்புவரையில் ரெயில்சார்ஜ் ஸ்டீமர் சார்சு உள்பட 2-வது கிளாசுக்கு ரூபா 14-8-0-யும், 3-வது கிளாசுக்கு ரூபா 4-8-0-யும் கட்டி ரெயிலேறி வெற்றிலே மண்டபத்திலிருந்து 2-வது கிளாஸ் டிக்கட்டுவாங்கினவர்கள் ஏபர் 1-க்கு 50-ரூபா சொக்கத்திலாகிலும் ஏபர் ஜாமீனிலும் கொடுத்து டாக்டர் பரி சோதனையில்லாமல் உடனே கொளம்புக்கு போகலாம். 3-வது கிளாஸ் டிக்கட்டுவாங்குபவர்கள் வெற்றிலே மண்டபத்தில் 7 நாள் டாக்டர் பரிசோதனையிலிருந்து விட்டு கொளம்புக்கு போகலாம். டெ. 2-வது கிளாஸ் டிக்கட்டுவாங்குபவர்கள் போகப்பட்ட இடத்தில் டாக்டர் பரிசோதனை அவசியம் செய்துகொள்ளுவார்கள். 2-வது கிளாஸ் டிக்கட்டுகாரர்கள் கட்டிய ரூபா 6)-கொளம்பிலிருந்து உடன் வரப்சுபெற்றுக்கொள்ளுகிறார்கள். கொளம்பிலிருந்து ரெயிலேறி காலிவரையில் ஏபர் 1-க்கு ரெயில் சார்சு ரூபா 2 அவிடமிருந்து மாத்திரைவரையில ரெயில் சார்சு 0-10-0 மோட்டார் சார்ஜ் ஏபர் 1-க்கு 1-ரூபா என்றும் அவடமிருந்து தெசமாராவரையில் இரட்டை குதிரைவண்டியில் ஏபர் 1-க்கு ரூபா 8-ம் தெசமாராவிலிருந்து ஹூண்யமார்க்கமாய் 9-மயில் போனால் மாணிக்காதி ஒடுகிறது. அதின் அக்கரையில் கதிர்காம ஆலய மிருக்கிறது. சுவாமி உத்திரவாதின்பேரில் கதிரேசன் மலைக்கு போகவேணும். அக்குன்றின்பேரில் நிறுத்தப்பட்டிருக்கும் வேலயுதத்திற்கு அபிஷேக முதலான திருக்கோடிவைத்து வணங்குகிறார்கள். மேற்படி கதிர்காமக் கோவிலில் 7-திரை போடப்பட்டிருக்கிறது போகப்பட்டவர்கள் 2-வது திரையில் நின்று குருக்களாகிய சிங்களவரைக் கொண்டு தேங்காய்ப்பழமுதலியநெவேத்தியம் செய்துக்கொள்ள வேண்டுமென்றும் சுவாமியை தரிசிக்கமுடியாதென்று மல்லிக ஐதிகம் பேற்பட்டிருக்கிறதென்றும் டெ. இரண்டாவது திரையின் சமீபத்திலிருந்துகொண்டே மனு நியாணம் செய்துக்

கொள்ளவேண்டியதென்றும் கோவில் 5-அக்கணமுள்ளதென்றும், செம்பு, வெள்ளி, தங்கமுதலிய ஓடுகளால் மூடப்பட்டு அதின் பேரில் நாட்டு ஓடுகளால் மூடப்பட்டிருக்கிறது. ஷெ கதிர்காமத்துக்குப் போகப்பட்டவர்கள் பிரதிவருஷம் ஆடிமீ போகலாம் ஷெடிமீ அமாவாசைமுதல் பருவம்வரையில் 15-நாள் உற்சவமும் 16-ம்நாள் தீர்த்தவாரியும் பிரதிதினம் யாகையின்பேரில் ஓர் தங்கபெட்டகம்வைத்து 15-நாளும் உற்சவம் கொண்டாடுகிறார்கள் இந்த உற்சவத்திற்கு இரவு பகல் கிட்டத்தட்ட பதினாயிரூபிமலியில் உற்பத்தியாகும் விபூதியை ஓர் அகண்டத்தில்வைத்து கற்பூரத்தை யேராளமாய் கிட்டியாக உபயோகித்து வருகிறார்கள் ஷெ கதிர்காமத்தில் 16-நாள் உற்சவகாலத்தில் அவிடம் போகப்பட்ட யாவற்றஜனங்களுக்கும் யாழ்பாணம் சங்கு வேலுமார்க்கண்டேய ஸ்ரீனியவர்களால் அமுதளித்தலருவன்தசெல்லி முடியாது இவ்வித பெரும்தர்மத்தைகடத்திவரவேண்டியதற்காகவே ஷெகதிரேசன் சிருஷ்டித்திருப்பதாகவே ஏற்படுகிறது. கதிர ஷெ யாருக்குள்ள 5-கப்பளிலொன்ன்ற கதிரேசனென்ற லீப் பெயரை வைத்து அதின் வரும்படிமுழுவதையும் அதற்கென்றே விட்டிருக்கிறார். 1817-வருஷத்தில் சேலாகர்வாசியாகிய ஷண்முக சுவாமியவர்கள் ஷெ கதிர்காமத்துக்குப்போய் கோயில்பார்த்த சங்கதியை ன்ன் மூல்யமாய் வெளிக்குக்கொண்டுவந்திருக்கிறார் இவர் சொல்லிய சங்கதிபோலனேக பெரியோர்களாலும் இச்சங்கதி தெரியவந்திருக்கிறது நான் கண்டிவரையில் போனவன் சில் அசந்தர்ப்பத்தால் கதிர்காமம்போகவில்லை ஷெ உத்ஸவகாலத்தில் ஜன உபகார நிமித்தம் சில டாக்டர்களையும் போலீஸ் பந்தோபஸ்தும் செய்துகொடுத்திருப்பதாகவும் தெரியவருகிறது.

திருக்கோடிகா.

திருநாவுக்கரசு நாயனார்.

தேவாரசை வெண்பா.

தெற்றிமேற்கண்ணினனே தீறுமெய்பூசினனே
சுற்றறைப்புண் சடையினனே டெல்விடம்புருசினனே
செற்றவர்புரங்கன்மூன்றுஞ் செவ்வழல்செலுத்தினனே
குற்றமில்குணத்தினனே கோடிகாவுடையகோவே.

ஆ.

திருநாவுக்கரசு நாயனார்.

நினைந்த திருநேரிசை.

பொது.

முத்தினை மணியைப்பொன்னை முழுமுதற் பவளமேய்க்கும்
கொத்தினை வயிரமாலைக் கொழுந்தினை யமரர்கூடிப்
பித்தினை வேதவேள்வி கேள்வியை விளங்கதிம்ப
அத்தனை நினைந்த நெஞ்ச மழிதலா னினைந்த வாறே (1)

முன்பனை யுலகுக்கெல்லா மூர்த்தியை முனிகணீத்தும்
இன்பனை இலங்குசோதி இறைவனை யறிவையஞ்ச
வன்பனை தடக்கை வேள்வி களிற்றினீர் யுரித்தவெங்கள்
அன்பனை நினைந்த நெஞ்சமழிதலா னினைந்தவாறே. (2)

கருப்பிலு மினியான்றன்னை காய்கதிர்ச்சோதியானை
இருங்கடலமுதம் தன்னை இறப்பொடு பிறப்பிலானை
பெரும்பொருட் கிளவியானை பெருந்தவ முனிவர்தேரக்கும்
அரும்பொனை நினைந்தநெஞ்ச மழிதலா நினைந்தவாறே. (3)

செறுத்தனை யயுக்திசெய்து செஞ்சரஞ்செலுத்தியூர்மேல்
கருத்தனை கனகமேனிக் கடவுளைக்கருதும் வாணெஞ்சே
கெருக்கனை யொருத்தியாகம் பொருக்கியமருத்திரா
நிருத்தனை நினைந்தநெஞ்ச நேர்படா நினைந்தவாறே. (4)

கூற்றினை யுதைத்தபாதக் குழகனை மழலைவெள்ளே
தேற்றனை யுமையோரேத்த விருஞ்சடை கற்றைதன்மேல்
ஆற்றினையடியேரேத்து மமுதனை யமுதமேயாக
நீற்றனை நினைந்தநெஞ்ச நேர்படநினைந்தவாறே. (5)

தெரண்டனேன்பட்ட தென்னே தூயகாவிரியினன்னீர்
கொண்டிருக்கோதியாட்டி குங்குமக்குழம்புசாத்தி
யிண்டைகொண்டேற நோக்கி யீசனை யெம்பிரானைக்
கண்டனை கண்டிசாதே காலத்தை கழித்தவாறே. (6)

பின்னிலேன் முன்னிலேனான் பிறப்பறுத்தருள் செய்வாயே
யென்னிலே னாயினேனுனிழங்கதிர்ப் பயலேத்திங்கள்
சின்னிலா வெறிக்குஞ் சென்னிச்சிவபுரத்தமாரேறே
நின்னலாற் கிலேகணேறே நீருசேரகலத்தானே. (7)

சாம்பலைப்பூசி தரைபுரண்டு நின்றுழப்பரவி
யேம்பலித்பார்கட் கிரண்டுகண்டா யிருக்கையென்னும்
காம்பலைக்கும்பனே தோழி கதிர்ப்பூன்வனமுலைமேல்
பாம்பலைற்குஞ்சடையா யெம்மையாளும் பசுபதியே. (8)

சிவமயம்.

மாணிக்கவாசக சுவாமிகள்.

திருச்சாழல்

திருச்சிற்றம்பலம்.

1 பூசுவதும்வெண்ணீறு பூண்பதுவும்பொன்னாரவம்
பேசுவதும்திருவாயான்மறைபாலுங்காணேடீ
பூசுவதும்பேசுவதும்பூண்பதுவுங்கொண்டென்ன
பீசனவனெவ்வுயிர்க்குமியல்பானஞ்சாழலோ.

2 என்னப்பனெம்பிரானெல்லார்க்குந்தானீசன்
றன்னுமையேகோவணமாக்கொள்ளுமதுவென்னேடீ
மன்னுமலைதன்னுபொருண்மறைநான்கேவாஞ்சரடாத்
தன்னையேகோவணமாச்சாத்தினனுங்காண்சாழலோ

3 கோயில்சுடுகாடுகொல்புலித்தோலல்லாடை
காயுமிலைக்கையிலித்தான்றனியன்காணேடீ
காயுமிலைக்கையிலித்தான்றனியனையிடங்
காயிலுலகீன்றுமுப்பொடிகாண்சாழலோ.

4 அயனேயனங்கனே யந்தகனேச்சந்திரனே
வயனங்கண்மையா வமிச்செய்தான்காணேடீ
நயனங்கண்மூன்றுடைய நாயகனேதன்னடித்தாற்
சயமண்ணிரவானவர்க்குத் தார்குழலாய்சாழலோ.

5 தக்கனியமெச்சனியற் றலையறுத்துத்தேவர்சனம்
தொக்கனவந்தவர்தப்பைத் தொலைத்தநாதனென்னேடீ
தொக்கனவந்தவர்தம்மைத் தொலைத்தருளியருள்கொடுத்தன்
கெச்சனுக்குமிசைத்தலைபெற் றருளினன்காண்சாழலோ.

6 அரவனுவாலவனு மரியாமேழுலகுருவாய்
நிலமுதற்கீழுண்டுநடு நின்றதுவுமென்னேடீ
நிலமுதற்கீழுண்டுநடு நின்றிலனேலிருவருந்தம்
சலமுகத்தாலாங்காரந் தவிர்ந்தார்காண்சாழலோ.

அட்டவணை.

	பக்கம்.
திருவாசகம். அச்சோப்பதிகம்.	திருச்சாழல்.
மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரம் ...	... 1
திருத்தோணோக்கம் ...	 15
சிவபுராணம் ...	 17
திருச்சதகம் ...	 20
அறிவுறுத்தல் ...	 20
ஆத்மசுத்தி ...	 21
அனுபோக சுத்தி ...	 21
காருணியத்திரங்கல் ...	 21
ஆனந்தத்தழுத்தல் ...	 22
ஆனந்தாதீதம் ...	 22
தீத்தல் விண்ணப்பம் ...	 22
திருவெம்பாவை ...	 23
திருவம்மானை ...	 28
திருப்பொற்சுண்ணம் ...	 29
திருக்கோதும்பி ...	 35
திருத்தெள்ளேணம் ...	 35
திருப்பூவல்லி ...	 35
திருப்பொன்னூசல் ...	 36
குயிற்பத்து ...	 36
திருப்பள்ளியெழுச்சி ...	 37
கோயிற்றிருப்பதிகம் ...	 37
செத்திலாப்பத்து ...	 38
அடைக்கலப்பத்து ...	 38
வாழாப்பத்து ...	 39
அருட்பத்து ...	 42
திருக்கழுக்குன்றப்பதிகம் ...	 42
கண்டப்பத்து ...	 44
பிடித்தப்பத்து ...	 45
திருவேசறவு ...	 48
திருப்புலம்பல் ...	 48

பக்கம்

சென்னிப்பத்து 49
எண்ணப்பதிகம் 49
யாத்திரைப்பத்து 50
திருப்படையாட்சி 50
ஆனந்தமாலை 55
அன்னைப்பத்து 55
திருத்தசாங்கம் 55
பிரார்த்தனைப்பத்து 56
குழைத்தப்பத்து 56
சுட்டறுத்தல் 57
திருவுந்தியார் 58
கோயின்மூத்த திருப்பதிகம் 58
ஆசைப்பத்து 59
அதிசயப்பத்து 59
புணர்ச்சிப்பத்து 60
உயிருண்ணிப்பத்து 60
அச்சப்பத்து 61
திருப்பாண்டிப்பதிகம் 61
குலாப்பத்து 62
அற்புதப்பத்து 62
திருவார்த்தை 63
திருவெண்பா 63
பண்டாயநான்மறை 64
திருவிசைப்பா 64
திருஞாவுக்கரசு நாயனார் 64
காரைக்காலம்மையார் 65
திருப்பல்லாண்டு 65
சமயகுரவர் திருநாமத்திரம் 65
பெரியபுராணச்செய்யுள் 65

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ நடராஜர்.

சிவபெருமான்.

திருச்சிற்றம்பலம்.

தமிழ்வேதமாகிய

திருவாசகம்

மூலம் சிறப்பு.

சேந்தனை வெளிப்படு.

திருச்சிற்றம்பலம்.

தொல்லை யிரும்பிறவித் தோழந் தலைப்பெய்து
அல்லலுறுத் தானந்த மாக்கியமெய்—எல்லில்
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவாச கமென்னுந் தேன்.

திருச்சிற்றம்பலம்.

[illegible]

திருவிலாருளிச செய்யப்பட்டது.

திருச்சிற்றம்பலம்.

கலி விருத்தம்.

முத்திநெறியறியாத மூர்க்கரொடு முயல்வினைப்
பத்திநெறியறிவித்துப் பழவினைகள் பாறுவண்ணஞ்
சித்தமலமறுவித்துச் சிவபரக்கே பேரின்பஞ்சார
வுதவுதன்னைக்கருளியவாறுரைப்பெறுவாரச்சோவே. (1)

நெறியல்லாநெறிதன்னை நெறியாகநினைவேனை
நிறுநெறிகள் சிலசாற்றி நிருவருளே பெருவண்ணம்
குறியொன்றுமில்லாதகுற்றவுன் கூத்தைகையனை
கறியாக்வண்ணமருளியவாறுரைப்பெறுவாரச்சோவே. (2)

பொய்ப்பலவும் மெய்யென்று புணர்முலையார் மேலாகச்சித
லைப்பாசமுறக்கடவேனை மாளாநோய் கரக்குறும்பு
தைப்படுத்திவ்வுடம்பிடைநின்னருளே பெருந்தெய்வமென
வையமெனக்கருளியவாறுரைப்பெறுவாரச்சோவே (3)

மண்ணகமும் விண்ணகமும் மாயமென்றுட் கடைவேனை
யெண்ணவெண்ணாவண்பருவி லெய்தியாய்ந்திட்டென்னையுன்தன்
கண்ணவெனக்கருளினைபோற்பெருவாரச்சோவே. (4)

பஞ்சாயவடிப்படையார் கலடைகண்மறைத்திடப்பட்டு
நெஞ்சாபதுபோற்கூர்ந்தேறுவன்னெருங்கெற்றே,
னுய்ந்தேறுநினைவாகினையடியேயென்னைவருகவென்
றருளினைபோற்பெருவாரச்சோவே. (5)

வெகுளிமுழுமுடற்பிறவிவெம்பெருவிடமெனவே நுகர்ந்திக்
கொகுளுறுநீர்சோர்வினையாற் குளிழிபோலிவ்வுலகிற்றோ
ற்றுவாயுகந்தினையாண்டு பணிசெயுமென்னுமருளுறுத்த
வுதவுதன்னைக்கருளியவாறுரைப்பெறுவாரச்சோவே (6)

தையலார்மையலிலேலுந் தாழ்நரகிற்படிலேனை
யையாவெனக்கொடுபோந்து மாசமெனுஞ்சுழலுஞ்
யுய்யாதெருளுங்காட்டியிந்திட்டோடகலாவுத்தட்பெருளை
யையபெனக்கருளியவாறுரைப்பெறுவாரச்சோவே. (7)

சாதல்பிறப்பென்னுந்தடஞ்சுழியிற்றுரும்பாகி
காதலின்மிக்கவினையிலையாரிலையுமிலேனை
மாதெருகுகருணையபிரான்றன் சரணிலச்சோவண்ணா
மாதியனக்கருளியவாறுரைப்பெறுவாரச்சோவே. (8)

செம்மைமலமறியாத சிதடசொற்றிரிவேனை
மும்மைமலமுணிகுது முதலாயமுதல்வன்றூ
னம்மையுமேயும் பொருளாக்கி நாய்சிவிகை யேற்றுவித்த
வும்மையெனக்கருளியவாறுரைப்பெறுவாரச்சோவே, (9)

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

மாணிக்கவாசகசுவாமிகள்

சரித்திரச் சுருக்கம்.

சைவசமயத்தைத் தமிழ்நாட்டில் நிலைநிறுத்திப் பெரும் புகழ் படைத்த சமயகுரவர் நால்வராவர். திருஞானசம்பந்த சுவாமிள் திருநாவுக்கரசு சுவாமிகள் சுந்தரமூர்த்தி சுவாமிகள் மூவரும் தாம் அருளிசெய்த தேவாரத் திருமுறையால் தம் பெயர் விளக்கினர். மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத் திருமுறையைத் திருவாய்மலர்ந்தருளினர். திருவாசகத்தின் பெருமை சிவப்பிரகாச சுவாமிகள் அருளிசெய்த நால்வர் நாணமணிமாலையுள் முழக்கப்பட்டது. சின்னாள்முன் இருந்த தமிழறிந்தார் ஒருவரும "மனங்கசைந்து பலங்கெடுக்கும் வாசகத்தின்மாண்டோர்கள், கனஞ்சடையென் றருளேற்றிக் கண் மூடிக் கதறுவரோ" என்று அதனைப் புகழ்ந்தனர். மாணிக்கவாசக சுவாமிகள் பெருமையைப் பற்றியோ, விரித்துரைத்தில் முழுதும் அபாவரிபகம். சைவனுவான் ஒவ்வொருவனுளத்தும் குடிகொண்டிருக்கும் அம்மூர்த்தி தம் அன்பின் பெருமையால மற்றை யடியார்களே யெல்லாம் கடந்துசென்று சிவனுக்குச் செல்வப்பிள்ளையானது மட்டுமேயன்றித் தமிழ்ச் சைவர் மனத்தையுங்கவர்ந்தார். இலக்கணக்கொத்தடைய ஈசானன் தேசிகர், "மாணிக்கவாசகர் அறிவாற் சிவனே யென்பதும் திண்ணம்" என்றார். மஹா பக்தசிரோமணியாகிய முத்துத் தாண்டவர் "மாணிக்கவாசகர் பேரெனக்குத் தரவல்லாயோ அறியேன்" என்று பாடினர். சைவப் பெரியாருட் பட்டினத்தடிகள், "திருந்திய அன்பிற் பெருந்துறைப் பிள்ளை" என்று அவரை வாழ்த்தினர். சிவஸ்தலங்களிலெல்லாம் மார்கழி மாசத்து அவர் பொருட்டுத் திருவிழா நடத்தப்படுகின்றது.

இத்தகைப் பெருமைகொண்ட மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரம் பெரியபுராணத்தில் காணப்பட வேண்டியதன்று. ஆயினும் நம்மால் இக்காலத்தறியப்படாத காரணத்தால் ஆண்டு அது விடப்பட்டது. மற்றுக் கடவுள் மாமுனிவர் என்பவர் செய்த திருவாதவூரடிகள் புராணம் என்னும் பிரபந்தமொன்றுண்டு. அது அவரைப்பற்றி மட்டுமே கூறுவது. திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணமும் பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடற் புராணமும் அடிகள் பிறந்தது முதல் பூமிலிங்கம் வரையுள்ள காலத்தை நிகழ்ந்தவற்றையே விரிவாகக் கூறும். அவரது சரித்திரம் திருப்பெருந்துறைப் புராணத்தும் திருவுத்தரகோசமங்கைப் புராணத்தும் பிரஸ்தாபிக்கப்பட்டுமுளது. ஊடபொழியிலும் ஸ்ரீமணிவாக்க சரித்திர மொன்றுளதாகத் தெரிகின்றது.

முன்னூலில் பூமியில் பௌத்தமதம் அதிகரித்ததனால் வேதாசம ஒழுக்கங்குன்ற அதை நிவர்த்திக்குப்படி வந்து முறையிட்ட தேவர் வேண்டுகோட்கிரங்கிச் சிவபெருமான் திருவுத்தரதேவரை ஏவ அவர் மாணிக்கவாசகராய் வந்தவதரித்தனர் என்பது வடநூல் கூறுவது. திருவுத்தரசுவாமிகள் "குராமலர் சோடராமதியஞ் சடைமேற் கொண்டார் குடமூக்கீசனே வாசகனுக் கொண்டார்" என்றருளிய தேவாரம் இக்கருத்தையே கொண்டதுபோலும்.

பாண்டிவள நாட்டிலே, வாயுபகவானற் பூசிக்கப்பெற்ற தன்மையால் ஸ்ரீ வாதபுர மெனப்பட்ட திவ்விய தேஷத்திரத்திலே, மானமங்கலத்தார் மரபிலே ஆமாத்திபர் குலம் விளங்க ஸ்ரீ சம்புபாதசிருதரென்றும் பிரமதர்மசிரத்தருக்கும் அவர் பத்தினியார் சிவஞானவதியார்க்கும் புத்திரராகக் மாணிக்கவாசகப்பெருமான் வந்தவதரித்தனர். வாதவூரென்பது இவர்க்குப் பின்னைத்திருநாமம். வைதிகச் சடங்குகளெல்லாம் கிரமப்படி நடத்தப்பெற்று, வித்தையை விசேஷ ஆசையோடு கற்கப் புகுந்த வாதவூரர் பதினாறண்டு நிரப்பு முன்னமே வேதாகமஞானமும் சகல கலா ஞானமும் ஒருங்கேயடைந்து விளங்கினர். இவரைக் குறித்துக் கேள்வியுற்ற பாண்டிய ராஜனும் ஆளவைப்பி இவரை

வரவழைத்து நோக்கிச் சுந்தரமூர்த்திகளவனுக்குப் பலவகைப்பணிகள் அளித்து இவரைக்களிப்பித்துத் தம்பக்கலிலேயே இருத்தினான். இருவரும் அமைச்சர்க்கெல்லாம் முகமைச்சராஞர். ராஜகாரியங்களெல்லாம் வெகுநேர்த்தியாகவும் மனத்திற் சிறிதும் பற்றிலாது சிலநாள் அரசனுக்குத் திருப்தி அதிகரிக்கும்படி நடத்திவந்தார். ஞானகுருவை அடையவேண்டுமென்று ஆசை பொன்னம்மட்டும் அடிக்கடி அவர் மனத்தில் கிளர்ப்பதுண்டு ஒருநாள். குதிரைப்பாகர் அரசனிடத்துக்குவந்து "குதிரைகளிற் பலவும் சேராய் பிடித்துப்போயின" என்றும், "புதுப்பரிகள் கொள்ளுதல் நலம்" என்று எடுத்துக்கூறினர். அரசனும் வாதவூர் வள்ளலைபழைத்துக் குதிரைகள் கொள்ளவேண்டியதைப்பற்றிக் கூற, அவர் பண்டாரத்தைத் திறந்து வேண்டிய அளவு பொன் வாரிக்கொண்டு குதிரைகள் வந்திறங்கும் கடற்றுறைக்குச் செல்ல ஆயத்தப்பட்டனர். மதுரைக் கோயிலுட் சென்று கடவுளை ஏத்தி நற்சகுனங் கண்டு வழிக்கொண்டவர் திருப்பெருந்துறை யடையுமெல்லையில் தம்பிரான் அழகிய சுணங்கள் வெளிப்படுதலைக் கண்டார். கண்ணீர் வாரும் மெய்ம்மயிர் சிலிர்த்தலும் நாத்தழுதழுத்தலும் கைகள் தாமே குவிதலும் தினைப் சேர்ந்த மொழிகள உருக்கமுண்டாதலும் இதுவரை சீவிறத்தலத்தும் தமக்கு நிகழ்ந்தாலுமை அமைச்சர்பிரானுக்கு மனப்பற்று அறிவு மொழிய, அவர் தம்மூடன் வந்தவரை யழைத்து, "துறைகளிற் குதிரைகள் வந்திறங்க ஒருமாசம் செல்லும், நீங்கள் தாமதியாது ஊர்போய்ச் சேருங்கள், குதிரைகளை யான் கொண்டு வருகின்றேன்று அரசனிடஞ் சொல்லுங்கள்" எனச் சொல்லிப் போகவிடுத்தனர். அவர்கள் போயபின் அவர் கோயிலுட்சென்று தம்மை யாட்கொள்ளுதற் கென மாணாட வடிவங் கொண்டு குருந்த மரத்தடி நிழலில் சுந்தரமூர்த்திகளோடு வீற்றிருந்த பெரிய வாசனுகிய சிவபெருமானைக் கண்டார். பலவாறு பணிந்துநின்ற அடிகளிவர பக்குவராகிய வாதவூரைக் கடவுள் தம் கடைக்கண்ணுஞ் சோக்கி பாண்டி அவர்க்குத் தீக்கைகள் செய்து பஞ்சாக்ஷரத்தை யுபதேசித்தார் மலர் கலகலப்பெற்றமுனிவர் சிவாஞ்ஞைப்படி திருப்பாடல்கள் பாட ஆரம்பித்தனர். சென்னிப்பத்தும் ஆச்சோப்பதிகமும் அவர்

மூகியிற் பாடியன. அப்புறம் பாடியது அதிசயப்பத்து. "மாணிக்கவாசக இங்கு கில்" என்று சொல்லிச் சிவன் தம் மாணாக் கரினவரோடு மறைதலும், வாதவூரடிகள் அடைந்த துயர்க்களவில்லை. தங் குருவை நினைந்து நினைந்து கண்ணீர் பெருகத் திருவாசக மோதத் தொடங்கினர். கோயிற்பத்து, புணர்ச்சிப்பத்து செத்திலாப்பத்து, பிரார்த்தனைப்பத்து, ஆசைப்பத்து, உயிருணிப்பத்து, திருப்புலம்பல், வாழப்பத்து, எண்ணப்பத்து, என் பன இவ்வமயத்து அவர் ஓதினன. பின் நகருட் புகுந்தவர் அங்குத் திகழ்வனவற்றைக்கண்டு திருவம்மானை, திருப்பொற்சுண்ணம், திருகோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருப்பூவல்லி, திருவுந்தியார், திருத்தோணோக்கம், திருவெம்பாவை, திருச் சதகம் என்பவற்றை யோதினர். இவற்றைக்கேட்ட தொண்டர் அதிசயித்து அவரைச் சூழ்ந்து போற்ற. குதிரை கொளற்காகக் கொண்டுவந்து பொன்னெல்லாம் வாரி வாரிக் கொடுத்தார். இதனை யறிந்த அமைச்சர் அரசனிடத்துச் சென்றுரைப்ப அரசன் மனம் புழுங்கிச் சினமிக்கனப் ஓர் ஓலை யெழுதி விடுத்தான் அவ்வோலையை வாங்கிப் படித்து மன மூளர்ந்த மாணிக்கவாசகர் சிவபெருமானை நினைந்து வருந்தினர். வருந்தித் திருப்பள்ளியெழுச்சி பாடி முடியுமுன், "நினக்குபாம் உண்டு அஞ்சேல்! பாண்டியனுக்குக் குதிரை வருமென்று எழுதி அனுப்பிவிடு" என்று ஆகாசவாணி கூறிற்று. அவரும் ஓலையெழுதி விடுத்து வளாவிருந்தனர். சிவன் கனவினுஞ் சென்று உறுதியுரைத்தார். இவ்வாறிதை யாதாரமாகக் கொண்டு மதுரை சென்ற அமைச்சர் தலைவர் தம்மோலை கண்டு கோவந்தணிந்த அரசனைக்கண்டு வரிசைகள் பெற்றார். அவர் குறித்த நாளில் பரிகள் வராதிருக்கவே, அரசன் வாதவூரை வருத்தித் திரவியங் கொள்ளுமாறு தண்டற்காரரை விடுத்தான். வருத்தம் பொறுக்கமாட்டாமற் புலம்பும் வாதவூரடிகட்காக இரங்கிச் சிவபெருமான் மிழலைநாட்டு நரிக்குடி பென்னுமூரில் நரிகளையெல்லாம் அழைத்து பரிகளாக்கித் தானும் கனாதருமாக அவைகளை நடத்தி மதுரை நோக்கி வந்தனர். குதிரைகள் வரவு

கண்ட நோக்காத சேவகர்சொல்லுகளேடு, "மந்திரித்தவர் பொய்ம்மொழிந்தனர்; புளிமாறுகளாகப்படுவனவற்றை வேல னாகிய கொணர்ந்து அவர்முதுகிடைப் போக்குங்கள், என்று ஆஞ் ஞாபித்த அரசன் ஆஞ்ஞையின்படி அடிபட விருக்கும்பொழுது அடிகள் அடைக்கலப்பத்து முதலான வாசகங்களோதினர் சிறைக்கூடத்து அருகாகச் சென்ற குயிலொன்றைக் கண்டவு டன் குயிற்பத்து மொழிந்தார், இது சொல்லி முற்று முன்ன மே குதிரைகள் மதுரை வாயிலை யடைந்தன. அரசன் மகிழ்ந்து வாதவூரரை யுபசரித்தான். அரசனும் வாதவூரரும் குதிரை வாயு நோகினார். மதுரை வீதி வழிவந்த சொக்கர் அழகினைக் கண்டித் தம் கற்பிழந்து புலம்பு மங்கையர் நிலையை நோக்கி மாணிக்கவாசகர் அன்னைப்பத்துச் சொலலினர் அரசன் குதிரை களே நோக்கி அளவற்ற ஆனந்தங்கொண்டான். பின் இரா வுத்தர் அவற்றைக்கொண்டு பலவித விநோதங்கள் காட்ட மகிழ்ந்து குதிரைகளேபெருஞ்சாலம் தன்னரிமையாக்கி அவருக்குப் பரிசுகள் தந்து உபசாரத்தோடு போகவிடுத்தான். அன்றிரவே பரிகளெல்லாம் நரிகளாகி முன் லாயத்திலிருந்த குதிரைகளே யும் தன்புறத்திக்கொன்று ஊளையிட்டுக்கொண்டு விடியுமுன் ஊரைவிட்டோடின. இதனைத் தன் மந்திரிசெய்த வஞ்சகமென் று கொண்ட அரசன் அடங்காச்சினத்தனாகி "வாதவூரரைச் சிறையறையில் வைத்து பொருளனைத்தும் பெருக," எனத் தண் டக்காரரை ஏவினன் சிறையிற் றன்பம் சகியாது அடிகள் திருவே சறவு பாடினர். சிவபிரான் கருணைகூர்ந்து வருணனே ஏவ, அத்தேவன் இரவிலேயே வையையைப் பெருகிவரச்செய் தான். வெள்ளத்தால் ஊர் அழியுமோவென அரசனும் ஊரா ரும் அஞ்சினர். "எவ்வபராதத்தினால் இது வந்தீதோ," என மனக்கலங்கிய அரசன் "ஊர் முழுதும் உடன் நின்றுதவிபுரிந்து வெள்ளத்தைத் தடுக்க வேண்டுமென்று ஆஞ்ஞாபித்தான். "ஒவ் வொருவீட்டினிருந்தும் ஒவ்வொரு ஆள் வந்து வேலைசெய்ய வேண்டும்" என்று கட்டளையிட்ட அரசன் சொல்லாற் கலியுற் றவள் அப்பதி எழைக்குடி யொருத்தி பிட்டு வாணிச்சியே. அவள் சந்ததியற்றவள் அவர் தடியாற்றத்தையறிந்த சொக்கர்

தாம் ஒரு கூலியாள் வேடம் பூண்டு அவள் முன் வந்தார். "நீ ஏன் பறந்து திரிகின்றனை? என்போல் உனக்குக் கொற்றாள் கிடையாது; வேண்டுமானால் சொல்லு; யாராலேலாமோ அழைத்தனர்; போகாது உன்னை நாடிவந்தேன்," என்று சொல்லிய பெருமான் வார்த்தையைக்கேட்டு, "என் சொக்கரே இவ்வாறு வந்தார்," எனச் சொல்லி மகிழ்ந்து மண் சுமந்ததற்குக் கூலியாகப் "பிட்டுத்தந்தாற் போதுமோ," என்றனள். அவரும் சம்மதிக்க அவள் வேண்டியமட்டும் பிட்டைச் சுட்டுக்கொடுத்தனள். அவர் அவற்றைப்பெற்று நிவேதித்த போதெல்லாம் தின்றுகொண்டு வைகைக்கரையை யணுகினர். அங்குத்தாம் செய்யவேண்டிய லீலையைச் சரியாகச் செய்யாமல் உழத்தியை அடித்ததைக்கண்ட அரசனுட்கள் வந்து தண்டாதிகாரியிடத்துச்சொல்ல அவன் அவர் திருமேனிப் பொலிவைக் கண்டு மன மயங்கினனாயினும் தன்கடன்செய்யாது நின்றான். அவ்வமயத்து, பெருமான் வேலைக் குறையால் வையை பெருகியோடிற்று. "அரசன ஏவலால்வந்த முறைசெய்வோர் கரையெங்கும் உயர்ந்திருக்க இத்தாழ்ந்த கோலமறை எவரது?" என, அங்கு நின்றார் இது பிட்டோணிச்சி கோலமறை? அவளாற்பிழை பிற்றாள் விசாரடித் திரிகின்றான். என்றுரைப்ப, அவர்கள் பெருமானை அழைத்து "நீ விரைவிலெழுந்து மண் சுமவாயாயின் அடிப்போம்," என, அவரும் பயந்தார்போலெழுந்து கூடையைத் தலைமேற்றுங்கி மெல்ல நடந்தார். அது பொறுக்க அதிகாரிகள் "இவன் பயன்படான்," என நடி முதுகிற் விலக்கும்படி பலமாயடித்தனர். "என்னையேன் அடிக்கின்றீர்? என்று சொல்லிச்சொக்கர் மாயமாய் மறைந்தனர். அவ்வடியால் தேவர் மனிதர் விலங்கு முதலிய பல உயிர்களின் முதுகிலும் புடைப்புக்காணப்பட்டது இதன் காரணமறியாது திகைத்து நின்ற அரசன் முதலிய யாவரும் கேட்க அப்பொழுது விசும்பில் ஒரு வாக்கெழுந்து, "வாதவூரன் நம் அருமைத்தொண்டன் அவன் முகத்தால் நமக்கு வேண்டியவர்களுக்கு உண் பொருளினத்தும் செலவிட்டோம். வேண்டிய குதிரைகளை கொண்டு வந்தோம்; அவனை விடுவித்ததற்காக மண் சுமந்து அடியும் பிட்

நிழல்போலும்; இனி அவனை யமதூதர் கைபாய்த் இரியுப்போது விட்டுவிடல் நினக்குங்கடன்," என்றது. அக்கணத்தேயே அரசன் மாணிக்கவாசகரை சிறைபகற்றி அவர் காலில்விழுந்து வணங்கினான். அவரும் அரசனை வாழ்த்தி, "நமச்சிவாயவாழ்க" என்றெடுத்துச் சிவபுராணத் தகவலை யோதிச சென்றனர். அரசன் சிறிதுதூரம் பின்சென்று மீண்டான் வாதவூர் அன்புமிக்குச்சொக்காலபஞ்சென்று தமக்காகச் சிவன் செய்த திருவிளையாடல்களை வியப்பு ஆசாரவாணி, உத்தரகோச மங்கையிலும கழுக்குன்றிலும் உருவங்கொண்டு கோலைபாடித் தில்லையம்பலத்துவர," என்றுரைத்தது. தன்பெருமான் கட்டளைப்படி அவர் அங்கிடங்கட்குச்சென்று பத்தையும் வாதில் வெண்றுயாவரும் போற்றத்தக்க சாயுச பதவியையும் இறைவிபெற்றார். —இவ்வரலாறு திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணப்போக்கையொட்டி எழுதப்பட்டது. மற்றுமுள்ள திருவிளையாடற்குப்பிறகு வாதவூரடிகள் சரித்திரம் புராணத்தில் மிகச்சுருங்கியிருத்தல் இயல்புதானே. இப்புராணம் பதினான்றும் நூற்றாண்டின் தொடக்கத்தில் செய்யப்பட்ட பலசமயபரமான நூல்களாலும் திருவாதவூரடிகள் புராணம் இதற்கு முற்பிறகென்று சொல்லத்தக்க காரணம் புலப்படவில்லையாயினும் இதனுடனும் வரலாறு முதலிற் கூறப்பட்டது. பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்துக்காணும் வேறுபாடுகள் கவனிக்கத்தக்கனவல்ல மாணிக்கவாசகர் அரிமர்த்தன பாண்டியன்காலத்திருந்தனர் என்பதை அவர் முதலையாகக்கூறியது.

திருவாதவூர் புராணத்துச் சில மாறுபாடுகள் உண்டி வாதவூரர் மந்திரியாய் ராஜகாரியம் நடத்திக்கொண்டு ஞான குருவை நாடிக்கொண்டிருக்குஞ் சமயத்தில் தூதர் வந்து சோழநாட்டுக் கடற்துறைகளில் ஆரிய தேசத்தார் குதிரைகள் கொண்டுவந்திறக்கியிருக்கின்றனர்," என்றாசனிடத்துக்கூறினர். சிவபெருமானிடத்து உபதேசம்பெற்ற பிறகு மாணிக்கவாசகர் தாங் குதிரைகொள்ளுதற்கெனக் கொண்டுவந்த பொருளனைத்தையும் தம் ஆசாரியர் பாதத்தில் வைத்து வணங்கினர்; அவர் தம் அடி-

யார்களுளொருவரை நோக்கி, " இப்பொழுதெல்லாம் சிவாலயத்திருப்பணிக்குப், தவஞ்செய்வோர்க்கும், வறியவர்க்கும்கொடும்," என்றருளிச்செய்தனர். அவரும் அவ்வாறே செய்தனர் பாண்டியன் பொருள் இவ்வாறுபோனதையும் மாணிக்கவாசகர் தவக்கோலம் பூண்டதையும் கண்ட அரசஞ்சுட்கள் அரசனிடத்துப்போய்ச்சொல்ல, அவன்கோபித்து திருமுகமொன்றெழுதி அனுப்பினன். அதற்குத்தாமாக " ஆவணிமூலத்துக்குதிரைகள்வரும்," என்று இவர் எழுதி அனுப்பினர். பிறகு மந்திரிக்கோலம்பூண்டு வாதவூர் சிவன்கொடுத்த மாணிக்கத்தை கையுறையாகவைத்து அரசனைப்போய்க்கண்டு அவன் கோபத்தைமாற்றினர், வையை பெருகி வருதலைகண்டுஞ்சி அரசன் மறுகிய காலத்து மந்திரிமார்வந்து, " திருவாதவூரைக் கோட்டினிறுத்திவருத்துவதை நீக்கி அவரை மனமகிழ்வித்தால் இப்பெருக்கு ஊரையடித்துக்கொண்டு போகாது," என்றுஆலோசனை கூறினர். அரசனும் வாதவூரை யழைத்து வணங்கி வெள்ளத்தைத் தடுக்குமாறுவேண்டினன்; வாதவூர் அணைசெய்தற்கு ஊரைக்கூவி முரசறைதல் முதலிய ஏற்பாடு செய்தனர். சொக்கர் அடிபட்டு மறைந்தவுடன் பாண்டியராஜன் திருவாதவூரடிகளை வணங்கித் தான் அதுவரைசெய்த பிழைகளை யெடுத்தக்கூறிப் பொறுக்குமாறு வேண்டித் தான் பணிவிடைசெய்ய உலகை யாளுமாறு அவரைப் பிரார்த்தித்தான். "தண்ணீத்திருப்பெருந்துறைக்குப் போக விடுப்பதே தனக்கு உலக ஆட்சியைக் கொடுத்ததாகும்" என அடிகள் கூற, அரசனும் மனமுவந்து "அங்ஙனமேயாகுக" என்றான். இவர் திருப்பெருந்துறைக்கு இப்பொழுது போகுமளவும், முன் இவரைக் குருவாய் ஆளவந்த மூர்த்தி தம் சிஷ்யவர்க்கங்களோடு அத்தலத்தை விட்டகலாதிருந்தார். வாதவூரடிகள் வந்து வணங்கியபின், சிவபெருமான் தாம் கைலாசத்திற்குப்போகவேண்டுமென்று சிஷ்யர்களிடத்துக்கூற, அவர்கள் மிகவருந்தினர்கள். "இக் குருந்தமர நிழலில்லே தெய்வபீடமொன்று செய்து அதனமல் நம்முடைய திருவடிகளைச் செய்துவைத்து வணங்குங்கள்; சின்னாட் கழிபுமுன் இப்பொய்கையில்

நெருப்புண்டாகும்; நீங்கள் எல்லீரும் அதனுள் விழுந்து கவலையை யொழியுங்கள்,'' என்று சொல்லித் தேற்றிய சிவன் வார்த்தையைக் கேட்டுச் சிஷ்யர்கள் அடங்கியிருப்ப, அடியார் சிவனுடைப் பின்தொடர்ந்து சென்றனர். சிவன் அவரைத் தனிவைத்து ''இவ்விடத்தில் அடியார்களோடு அளவளாவிச் சிலகாலிருந்து இவர்களோடு பொய்கை நெருப்பில் விழாமல் உத்தரகோச மன்னனை முதலிய தலங்கட்குச் சென்று புத்தனை வாதில் வென்று அப்புறம் சாயுஜ்ய மடைவாய்'' எனக்கூறி மறைந்தார். அதைக் கண்டிருந்திய அடியார் அடியார் கூட்டத்தை யடைந்து அவருடன் தாமுமாய்த் திருவுளங்கள் செய்து பீடத்து வைத்து வணங்கிவந்தனர். அந்நாளிலே, ''நமச்சிவாய'' எனத் திருவாசகம் செப்பத்தொடங்கி, அற்புதப்பத்து, அதிசயப்பத்து, குழைத்தபத்து, சென்னிப்பத்து, ஆசைப்பத்து, வாழாப்பத்து, அடைக்கலப்பத்து, செத்திலாப்பத்து, புணர்ச்சிப்பத்து, அருட்பத்து என்ப வைகளை அருளிச்செய்த பிறகு, திருவார்த்தை, எண்ணப்பதிகம், திருப்பள்ளியெழுச்சி, திருவேசறவு, உயிருண்ணிப்பத்து, பிரார்த்தனைப்பத்து, திருப்பாண்டிப் பதிகம் என்பவற்றையும் அருளிச்செய்து அடியார்களோடு தங்கியிருந்தார். சூதித்தநாள் வருதலும் அடியார்கள் பொய்கைத்தியில் விழுந்து கணநாதருருவம்பெற்று விண்ணேகினர். இப்பொழுது தனியே விடப்பட்டு அளவிலாத் துன்பத்துளாழ்ந்திய வாதவூரர் பூமியில் விழுந்தழுது புலம்பித் தெளிந்து திருச்சதகம் சொல்லினர் பின் திருவுத்தரகோசமங்கையிற்போய்க் குருவருட் காரணமாய் வருந்தி நீத்தல் விண்ணப்பம் பாடித் தம் விருப்பம் நிறைவேறப் பெற்றனர். அப்புறம் சுவாமி கட்டளைப்படி திருவிடைமருதூரை வணங்கித் திருவாரூருக்குச்சென்று திருப்புலம்பற்பாடி, சிகாழியில் இறைவன் திருவடியைப் பிடித்துக்கொண்டே பிரத்தபத்துப்பாடித் திருவண்ணாமலையில் நெருங்கி வந்தனைத்தைத் தரிசித்து, திருவாதிரை நாளில் மாகர் அருள் செய்வதை நோக்கி அவர்கள் சொல்லியதாக திருவெம்பாவையும், அப்பதிகமும் மங்கையர்ப்பார்த்துத் திருவண்மாலைப்பாடிக்கொண்டு திருக்கழுக்குன்றத்துச்சென்று திருக்கழுக்குன்றப்பதிகம் பாடிப் பின் தில்லையையடைந்து சபாநாதர் திரு

வருவைத்தல்லிடு ஆருத்தக் கண்ணீரொழுகக் கண்டபத்து அருளிச் செய்தனர். இல்லை மூவாயிரவர் வீதியில் போகும் போது குலாப்பத்து, தோயிற்றிருப்பதிகம் கோயின்மூத்த திருப்பதிகம் கோத்தித் திருவகவல், திருவண்டப்பகுதி, போற்றித் திருவகவல் என்பவைகளோப்பாடி, சுண்ணமிடிக்கு மாதரைக்கண்டு திருப் பொற்சுண்ணம் பாடித் திருத்தெள்ளேணம் முதலியன்வைகளை யும் பாடினர். பின் அங்கர்ப் புறத்து ஒரு பண்ணசாலைய மைத்து அதில் தங்கியிருந்தனர்.

திருவாசகப் பதிகங்கள் பாடிய சந்தர்ப்பமுரைக்கும் விஷ யத்தில், வேம்பத்தூரார் புராணத்திற்கும் திருவாதவூரர் புராணத்திற்குமுள்ள மாறுபாடுகள் உற்று நோக்கின் நன்கு புலப்படும். அவை மேலே குறிக்கப்பட்டன. உதாரணமாக: வேம்பத்தூரார் புராணத்துக் கோயிற்பத்தும் திருப்புலம்பலும் திருப்பெருந்துறையில் அருளிச்செய்தனவாகக் கூறப்பட்டன. திருவாசகப் பதிப்புகளுள் திருவாதவூர் புராணத்து வகுத்த முறைப்பற்றிப் போலும் அவை தில்லையிலும் திருவாரூரிலும் அருளிச்செய்தனவாகக் காணப்படுகின்றன. கோயிற்பத்து விஷயம் சந்தேகத்திற் கிடனில்லை. பாட்டுத்தோறும் திருப்பெ ருந்துறைப் பிரஸ்தாபமுள்ளது, தில்லைப் பிரஸ்தாபம் யாண்டு மில்லை. திருப்புலம்பல் மூன்று பாடல்களும் முதற்பாட்டுத் திருவாரூரையும், இரண்டாவது திருப்பெருந்துறையையும், மூன்றாவது திருக்குற்றாலத்தையும் குறிக்கும். பாடல்களுக்குச் சந்தர்ப்பம் கூறும் விஷயம் அவ்வளவு முக்கியமென்றெண்ணப் படாது. அதேகமாய் உத்தேசமத்தான்.

இனி, வாதவூரடிகள் சிதம்பரத்து வசிக்கு காலிலே, ஒரு பகுதார் ஸ்தலயாத்திரை செய்பவர் ஈழதேசத்துச்சென்று அத் தேசத்தரசன் வாழுமூரிற் றங்கியகாலத்துச் சிதம்பர மான்மியத் தைப் பலவாறுகச் சொல்லிக்கொண்டிருந்தனர். இதனைப் பொ றாத புத்தர்கள் சொல்லிக்கேட்ட அரசன் அவரைத் தன் சபைக் கு வரவழைத்தான். அங்குச்சென்ற அவர் "திருவம்பலம்" என்று சொல்லி இருக்க, அரசன் காரணங்கேட்டான். அப்

பொழுது அவர் தில்லையைப் பற்றிப் பிரஸ்தாபித்தார். அரசனது
இனிருந்த புத்தகருது வெகு கோபங்கொண்டு அரசனிடம் பரி
வாரங்களோடும் உடனே புறப்பட்டுத் தில்லைக்கு வந்து ஆலயத்
தை பெய்தி புத்தசமயத்தி னுயர்வைப் பிரசங்கித்தற்குச் சித்
தப்பட்டிருந்தான். இவ்விருபத்தை யுணர்ந்த தில்லைமூவாயிரவர்
மனங்கலங்கிப் பின்னர் "மாணிக்கவாசகர் புத்தரை வாதில்வெல்
லுவர்," என்று சிவன் கனவில் வந்து தேற்றத்தெளிந்து மொழுது
புலர்ந்தவும் சிவிகைபோடி அடிகளிருக்கும் இடஞ்சென்று அவ
ரை அழைக்க, அவரும் சிவபெருமான் குறிப்புணர்ந்து புறப்
பட்டு வந்தார்.

புத்தகுரு பிரசங்கத்தைச் சாஸ்திர பூர்வமாய்க் கண்டித்
துத் தஞ்சமயமாகிய சைவசமயத்தின் பெருமையை நன்
கெடுத்துக் கூறினர். புத்தர் கொடுஞ் சொற்களைக் கேட்ட அடி
கள் நாமகளைச் சினந்து அவர்கள் நாவையிட்டகலுமாறு ஆஞ்
ஞாபித்தனர். பின் அரசன் வேண்டுகோட்கிணங்கி அவன்
ஊமைப்பெண்ணைப் பேசவைத்து அவளைக்கொண்டே புத்தர்
கேட்ட அக்கிரமவினாக்கட்கு விடையளித்து அரசனைச் சந்தோ
ஷிப்பித்தனர். வணங்கின புத்தர்களையும் சைவராக்கி யாட்
கொண்டார். வினாக்களையும் ஊமைப்பெண் கூறிய விடைகளை
யும் திருச்சாழலாகச் செய்தனர். பின் சபாநாதரை வணங்கி
எல்லாரும் அவரவரிடஞ் சேர்ந்து சுகமாக வாழ்ந்திருந்தனர்.

மாணிக்கவாசகர் இதன்பின் திருப்படையாட்சி, திருப்
படைபோழசி, அச்சோப்பத்து, யாகதிரைப்பத்து என்பவை
களைப் பாடிச் சிவானந்தப்பெருவாழ்வில் மூழ்கியிருந்தனர். அந்
நாளிலே ஒருநாள் சபாநாயகர் வேதியருருக்கொண்டு இவர்முன்
வந்து நின்றனர். இவரும் அவரை இருக்கச்சொல்லி யுபசரித்
து, அவரிருக்குமிடமென்ன, வந்தகாரண மென்னவென்று விசாரித
தபோது, அவர், "போன் பாண்டிநாட்டிலுள்ளவன்; தம்மைச்
சிவன் ஆண்டுகொண்டருளினமுதல் சிவதலங்களுக்குத் திருவிளை
யாடல்கள் செய்தவிதமும், தாம் சிதலயாத்திரைசெய்து இத்
தில்லைக்கு வந்து புத்தரை வாதில்வென்ற வரலாறும் அறிந்து

